மால்கோஷ்

(வங்காளச் சிறுகதைகள்)

மொழிபெயர்ப்பாசிரியர்:
த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை

[ரூ. 2-4-0

பொருளடக்கம்

முகவுரை

சில நாட்களுக்குமுன் தமிழ் நாட்டுக் "கதைக் கோவை"யை அல்லயன்ஸ் கம்பெனியார் வெளியிட்டுள்ளார்கள். இப்பொழுது, அக்கம்பெனியார் வங்காளத்துச் சிறந்த ஆசிரியர்களின் கதைகளை வங்காள பாஷையில் பழுத்த அனுபவமுள்ள ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ., அவர்கள் மூலம் மிகக் கவின்பெறத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்கள்.

தமிழ் அணங்கிற்கு நம் காவின் மலர்களைக் கொண்டு மாலைகள் தொடுத்துச் சூட்டலாம்: அன்னிய நாட்டு மலர்களைக் கொண்டு மணம் மாறாதபடி அலங்கல்கள் புனைந்து அம்மைக்கு அணிந்தாலும் அவள் அவைகளில் திகழ்ந்து தோன்றுவாள் என்பதில் சந்தேகமில்லை.

"மால்கோஷ்" என்ற பெயரையுடைய இச்சிறுகதைக் கொத்தில், "மால்கோஷை"ச் சேர்த்துப் பதினைந்து மலர்களைப் பார்க்கிறோம். மலர்கள் வேறு வேறு விதமாகக் காட்சி அளித்தாலும், எல்லாவற்றிலுமிருந்தும் ஒரேவிதமான மணம் கமழ்கிறது. ஏதோ ஒரு சோகம் கலந்த மணம் அடிக்கிறது, ஒவ்வொரு கதையிலும்; இதிற் சந்தேகமில்லை.

உடைந்த உள்ளத்தில் பொங்கி எழுந்த வெம்பழியைத் தன் சோகம் பிழியும் ஸிதாரின் மூலமாய்த் தீர்த்துக் கொண்ட அகமதின் உள்ளக் கிளர்ச்சியை "மால்கோஷ்" சித்திரிக்கிறது.

கலப்பையைப் பிடித்து உழுகிறபொழுது ஒரு சுண்டெலியின் வங்குகள் அடைபட்டுப் போகின்றன. அப்பொழுது அதைக்கண்டு பர்ன்ஸ்(Burns)உள்ளம் நைந்து, "குளிர் காலத்துக் கடு வாடையில் எங்கே போய்த் தங்குவாய்" என்று அச்சுண்டெலியை விளிக்கிறார். அது போலவே, "குருவியின் ஸம்ஸாரம்" என்ற கதையில் ஆசிரியர் குருவிகளுக்கு இரங்குகிறார்.

குருவிகள் கூடு கட்டி முட்டையிடுகின்றன. கூடு கலைந்து முட்டைகள் பையன்களின் கைகளில் சிக்கிவிடுகின்றன; அவற்றை வைத்துக்கொண்டு கோலி விளையாடுகிறார்கள். "'கடைசியில் இவர்கள் கையில் சிக்கியா நீங்கள் சாகவேண்டும்! என்னால் சகிக்க முடியவில்லையே இந்தத் துக்கத்தை' என்று புலம்பி ஆண் குருவியின்மீது சாய்ந்தது பெண் குருவி." இதோடு கதை முடிந்திருந்தாலே போதும். ஆனால் மேலும் ஆசிரியர் செல்லுகிறார்.

"அப்புறம் அந்தச் சிட்டுக்குருவிகள் இரண்டின் கதி என்னவாயிற்றோ நமக்குத் தெரியாது. அவை மறுபடியும் எங்கேயாவது வீட்டின் கூரையிலோ, மரத்தின் பொந்திலோ கூடுகட்டிக் கீச்சுக் கீச்சென்று கூவி ஒன்றொடொன்று இழைந்து பழைய துக்கங்களை மறந்துவிட்டுச் சுகமாகக் காலங் கழிக்கின்றனவோ என்னவோ?" இவ் விஷயங்களை வாசகர்களின் கற்பனைக்கு விட்டிருக்கலாம் ஆசிரியர்.

படித்துறை சொல்லும் முறையிலே குஸுமாவின் சோக நாடகத்தைப் புனைந்துவிட்டார் கவி ரவீந்திரர். கதை முடிவில் எழுகிற சோக ஒலிக்கு நம் உள்ளமும் பிரதியொலி கொடுக்கிறது:

"சிறு பிராயத்திலிருந்து என்மேல் குதித்து ஓடி விளையாடின அந்த மாசற்ற குஸுமம் கடைசியாக இந்த வேடிக்கையைக் காட்டிவிட்டு என் மடியிலிருந்து எங்கேயோ நழுவிவிட்டது."

தன் அருமைச் சேயின் பொருட்டு மையிருட்டில் செங்குத்தான மலையைக் கடந்த தாயின் உள்ளத்தைச் சித்திரிக்கும் "ஹிராகுணி" நம் மனத்தைக் கவராமற் போகாது:

"அஸ்தமிக்கும் பிறைச் சந்திரன் சற்றே வெளிச்சம் தந்தது: கீழே நோக்கினால் அகாத பள்ளம். ஒரு தீர புருஷ

னுடைய உள்ளமும் நடுங்கக் கூடிய பாதாளம். எப்படி ஹீரா இறங்கப்போகிருளோ ? ஆனல் சிசுவுக்காகப் பரிதவிக்கும் தாயின் உள்ளம் அந்தப் பயங்கரத்தைச் சற்றும் பொருட் படுத்தவில்லை."

அன்பின் அறிகுறியாக அளிக்கப்பட்டதை உணராது வெறுத்துத் தள்ளினுள் அபர்ணு: பிறகு அதைத் தன் தலையில் தாங்கி மதனமோஹனனின் கழலடியில் வைத்து வணங்கினுள். அவள் உள்ளத்தை உணர்த்துகிற "இஷ்ட தெய்வம்" என்கிற கதையின் கடைசி வரிகள் நம் சிந்தைச் செவியில் சதா ஒலிக்கும் என்பதில் சந்தேகமில்லை:

"நான் வெறுத்துத் தள்ளிய இதை நீயாவது பெற்றுக் கொண்டு திருப்தியடைவாயாக !"

பிரிந்தவர் கூடிப் பேசுவதே போலச் சாந்தி பிளாட் பாரத்தில் பொம்மை, சீப்பு விற்கிற பத்ரி என்ற பையனிடத்தில் தன் மனத்தைக் கொட்டிவிடுகிருள், "யாரோ" என்ற கதையில்.

"ஆப்பிள் பழ"த்தில் ஒரு குடும்பத்தின் ஏழைமை, தகப்பன் பரிவு, தகப்பன் வரவு காணுது சிந்தை தேக்கிய முகத்தோடு நிற்கின்ற குழந்தையின் ஆவல், தாயின் இன்சொல் எல்லாம் நம் கண்முன் வந்து நிற்கின்றன.

"ஸ்வப்ன யாத்திரை" ஓர் உருவகக்கதை; ஆத்மாவின் தொலையாத யாத்திரையைச் சுட்டுகிறது. வறட்டு வேதாந்திகள் கூறும் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் முதலிய அருவ தத்துவங்கள் இங்கே ஒரு மணமும், ஓர் ஒளியும், ஓர் உருவமும் பெற்று விளங்குகின்றன.

"சிறைப் பறவைகள்" சிறையிலே நடக்கிற கோரமான செயல்களையும், பரிதாபகரமான காட்சிகளையும் நமக்குத் தருகிறது. டாஸ்டஎஸ்வக்கி (Dostoevsky) எழுதிய

The House of the Dead

'மாண்டோர் வீடு' (The House of the Dead) என்ற கதையின் சாயை இதில் அடிக்கிறது.

சிறைச் சாளரங்களுக்கப்பால் வெண்ணிலா வீசுகிறது. எல்லாம் நிலவு வெள்ளத்தில் தோய்ந்து நிற்கின்றன. இளவேனிற் காலம். ஆனல் கைதிகள் புழுங்குகின்றனர். சிறையில் அடைபட்ட அமல் கைதிகளைக் காவல்காக்கும் சிப்பாய்களுக்கு இரங்குகின்றான் என்று கதை முடிகிறது. இம்முடிவு ஆசிரியனின் சித்திரிக்கும் திறனைக் காண்பிக்கிறது.

"........அவர்களுடைய மனைவி மக்கள் வேறோர் இடத்தில். நித்தியம் துப்பாக்கியைத் தோளில் சுமந்து கொண்டு திரிவதுதான் அவர்கள் கண்ட ஸுகம்! அவர்கள் அல்லவோ உண்மையான கைதிகள்?"

"பாலை மலர்கள்", "முடிவில் காதல்" இவ்விரு கதைகளிலும் காதல் வெற்றியைத்தான் காண்கிறோம்:

"இருட்படலங் கிழித்துக் கீழ்வான் நுதலில் சினந்தெழுகின்றான் சூரியன். எங்கே பார்த்தாலும் மணல், மணல், மணல். ஒரே கடற்போற் பரந்த மணற் காடு. ஆனல் திடீரென்று சுழற்காற்றுக் கிளம்பி மணற் குன்றுகளை எழுப்புகிறது. ஆனல், "இளங் காதலர் இருவரும் இன்னும் போய்க்கொண்டிருக்கின்றனர்" என்று "பாலை மலர்கள்" என்னும் கதை முற்றுகிறது.

"முடிவில் காதல்" என்னும் கதையில் ஸ்வரூபனும் வாதாஸியும் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு சீறி ஓடுகிற ஆற்றிலே படகோடு மறைகின்றனர்.

இக்கதைகளை வாசிக்கிறபொழுது நம் மனம் பிரௌனிங் (Browning) எழுதிய "இணை பிரியாக் கடைசிப் பிரயாணம்" (The Last Ride Together) என்ற பாட்டிற்கு ஓடுகிறது. காதலனும் காதலியும் விரைகின்றனர்: அவர்கள்

நின்றபாடில்லை, திரும்பினருமில்லை. நீள விரிகின்ற நெடு வழியே செல்வாராயினர்: அன்பிற்கு அவதி உண்டோ!

இவ்விரு கதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு நடையில் பாலையில் அடிக்கிற சூறைக்காற்றின் சீற்றத்தையும், இருண்டு அழித்தோடுகிற ஆற்றின் வேகத்தையும் பார்க்கிறோம்.

காதல், வெள்ளத்தை எதிர்க்கிறது; புயலை நகுகிறது. காதலின் ஆழத்தையும் உயர்வையும் விரிவையும் குறுந்தொகையில் காண்கிறோம்:

> "நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
> நீரினு மாரள வின்றே."

காதல் நரகத்திலும் கனிக்கின்றது. பிரான்ஸிஸ்காவும் அவளுடைய காதலனும் நரகத்தில் போடப்பட்டார்கள். விடிவிலா வெந்நரகத்திலும் அவர்கள் இணைபிரியவில்லை என்று டான்டே (Dante) கூறுகிறார். இச்சித்திரத்தைக் கண்ட கார்லயில் (Carlyle) இன்கவிதைச் சொற்களில் பின்வருமாறு நவிலுகிறார். பிரான்ஸிஸ்காவின் (Francesca) காதலை என்னென்று இயம்புவேன்! இருள் செறிந்த அந்நரகத்திலே வான வில்லைக்கொண்டு சமைத்ததுபோல் அக்காதல் பாவுகின்றதம்மா!

ஆனல் இக்கதைகளைப்பற்றி ஒன்று உணர்த்துவேன். வாழ்க்கைச் சித்திரங்களின் மண்ணும் மணமும் இவைகளில் வீசவில்லை. தேன் பிழி ஸிதாரின் மதுர ஒலி, விழிக்கு விருந்து செய்கிற காட்சிகள், பழுத்த வெண்ணிலா, காதற் பேச்சுக்கள் எல்லாம் இவைகளில் கலக்கின்றன. கவிகளின் கற்பனைக் கிழியில் எழுகிற ஒவியங்களே இவை: எனினும் வாழ்க்கைப் புயலில் அடிபட்டவர்களுக்கு இவைகளும் தேவை யல்லவா?

2-10-1941. ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

நன்றி

இதில் வந்துள்ள கதைகளிற் சில 'ஆனந்த விகடன்', "கலைமகள்" ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தவை. அவைகளைத் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க அனுமதித்ததற்கு அவ்வாசிரியர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

த. நா. கு.

(194110227.)
மாடல் பிரஸ், சென்னை.

மால்கோஷ்

சாரு சந்த்ர தத்

அந்தக் காலத்தில் நடந்துவந்த ஸர்க்கஸ்களுக்குள்ளே பாபு சாகேப் கோக்லே என்பவரின் ஸர்க்கஸ்தான் மிகவும் பிரக்கியாதி பெற்றிருந்தது. மேல்நாட்டு ஸர்க்கஸ்களில்கூட அந்த மாதிரி அபூர்வமான வித்தைகளும், குதிரை செய்யும் அபாரமான வேலைகளும் கிடையாவாம். பாபு சாகேப் கோக்லே ஒரு மராட்டியர். மனிதர்களையும் மிருகங்களையும் பழக்குவதில் அவர் நிபுணர். ஸர்க்கஸில் அரிய வித்தைகள் செய்பவரும் அவரே.

கோக்லே மாலை உடுப்பு அணிந்து, தலையில் சரிகை வேலைப்பாடு உடைய 'வெல்வெட்' தொப்பியுடன் நீண்ட சவுக்கு ஒன்றைக் கையிலேந்தி வேடிக்கை காட்டுவதற்காக அரங்கத்தினுள் புகும் காட்சியே விசித்திரமானது. அவரது சரீர வர்ணம் தங்கச் சாயலாக இருக்கும். நல்ல தேகக் கட்டமைந்தவர். ஆஜானுபாகுவா யிருப்பவர். பார்ப்பவர் கண்களைப் பறிக்கும்படியான ஸௌந்தர புருஷர். அவருக்கு எந்த வேஷமும் பொருந்தியிருக்கும். பெரிய அரபிக் குதிரைகள் அவருடைய கண் ஜாடையிலேயே ஓடும், எகிறும், பந்தங்

* நம்முடைய ஹிந்தோளம், ஜயந்தஸ்ரீ இந்த ராகங்களின் சாயலையுடைய வடநாட்டுப் பண்.

களைத் தாண்டும், வளையங்களினுள் ஆட்டுக் குட்டியைப் போல் தாவிப் புகும். அந்த ஆட்டம் முடிந்ததும் பாபு சாகேப் குதிரைவீரன் வேஷத்தில் தோன்றி அடங்காப் பிடாரியான குட்டைவகைக் குதிரை ஒன்றைப் பிடித்துக் கொண்டு, பல விந்தைகள் புரிவார். அப்போது அவர் கையில் அதை அடக்கச் சவுக்கோ கடிவாளக் கயிறோ இராது. வில்லைப்போல் வளைந்து, குதிரை 'பல்டி' அடிக்கும்போது அதன்மேலே வீற்றிருக்கும் பாபு சாகேப் நிச்சலமாய் இருப் பார். வேடிக்கை பார்ப்பவர்கள், அதுவும் விசேஷமாகக் 'காலரி'யில் உள்ளவர்கள், கைதட்டிப் பலவிதமான கோஷங் கள் புரிந்து, கோக்லேயை உத்ஸாகப்படுத்துவார்கள்.

கோக்லேயின் ஸர்க்கஸில் பிடரியடர்ந்த ஒரு பெரிய ஆப்பிரிகச் சிங்கம் இருந்தது. அதைப் பழக்கியவரும் ஸர்க்கஸ் கர்த்தாவாகிய அவரே. அந்த விளையாட்டுத்தான் எல்லாவற்றையும்விட அதிசயமும் பயங்கரமுமானது. பாபு சாகேப் அரை நிஜார் போட்டுக்கொண்டு, பளபளப் பான தங்கப் பித்தான்களையுடைய செந்நிற 'வெல் வெட்' அங்கியைத் தரித்து, தலையில் ஆகாசவர்ண 'முரெட்டா' என்னும் விசிறிப் பாகையுடன், ஸிதார் வாத் தியத்தை மீட்டிக்கொண்டே சிங்கம் இருக்கும் கூண்டினுள் நுழைவார். சிங்கத்திற்கு அவர் ஒரு ஸலாம் போடும்போது, அந்தக் காட்டு மிருகமும், சோம்பல் முறித்துக்கொண்டே எழுந்துவந்து தன் முன்னங்கால்களை நீட்டித்தலையைத் தரை யோடு தரையாக வைத்துப் பதிலுக்கு வணங்கும். அப்புறம் அவரும் சிங்கமும் நெருங்கி என்னவோ பேசிக்கொள்வார் கள். ரகசியம் பேசுவது முடிந்தவுடன் கோக்லே ஸிதார் வாசிக்க ஆரம்பிப்பார். மிருக ராஜனான அந்தச் சிங்கம் ஸிதாரில் எழும் இனிய நாதத்தைக் கேட்டுக்கொண்டு அசை யாமல் இருக்கும். ராகத்தின் பல்லவியைப் பல தாள வேறு பாடுகளுக்கிசைய அந்த அபூர்வ ஸ்வரசில்பி வாசிக்கும் போது சிங்கம் எழுந்திருந்து தன் யஜமானனைச் சுற்றிச் சுற்றி நடனமாடும். அதன் பயங்கரமான பிடரியும், அலை பாயும்; அப்பிடரியில் கட்டப்பட்டிருக்கும் சிறிய கிண்கிணி களும் தாளக்கட்டிற்கேற்பக் கலீர் கலீரென்று ஒலிக்கும். இக் காட்சியைப் பார்த்து யார்தாம் திக்பிரமித்துப் போக மாட்டார்கள்? சிற்சில தினங்களில் நாட்டை, கௌளை போன்ற வீர ரஸம் பொருந்திய ராகங்களை எடுத்துவிட வேண்டியதுதான்; அப்போது சிங்கம் செய்யும் கூத்தைக்

கண்டு நடுங்காதவரே இரார். அந்த வனப்பிராணி குலே நடுங்கும்படி கம்பீர முழக்கத்துடன் முக பாவங்கள் காட்டும்.

பாபு சாகேப் ஒரு மாந்திரிகர் என்று சொல்லுகிறுர்கள். அதெல்லாம் நமக்குத் தெரியாது. அவர் ஸிதாரோ வேறு எந்த வாத்தியமோ வாசிக்கத் தொடங்கிவிட்டால் விலங்கு கள் ஏன், பகுத்தறிவுடைய மனிதர்கள்கூடத் தம் நினைவை இழப்பார்கள். அவ்வளவு ஸங்கீத நுட்பம் வாய்ந்ததாயிருக்கு மாம் அவர் நடத்தும் இசை விருந்து!

இந்த மாதிரி சரீர வியாயாமங்கள், மிருகங்களைப் பழக்கி ஆட்டுவிக்கும் வித்தைகள் முதலியவற்றைக் காட்டிக் கொண்டே தம் கோஷ்டியினருடன் உலக முழுவதும் சுற்றி ஞர் கோக்லே. நடு நடுவே ஒவ்வொரு சமயம் அவர் விடாய்க் காகத் தம் சொந்தக் கிராமமான தேவகட்டிற்கு வந்து சில நாட்கள் தங்குவது வழக்கம். பீஷ்வாக்கள் காலத்தில் கிடைத்த பிதுரார்ஜிதமான ஓர் இடிந்த வீடும் பழைய ஸிதா ருமே அவருடைய ஆஸ்தி. அவருடைய தந்தை நாஞ சாகேப் கோக்லே ஒரு பெரிய ஊதாரி. சொத்து யாவற்றையும் போக விலாஸங்களில் கரைத்துவிட்டார். அவருடைய ஒரே புதல் வரான பாபு சாகேபின் ஆசை என்னவென்ருல், குதிரை களைப் பழகிக் வேடிக்கை காண்பித்து மீண்டும் தம் குல கௌரவத்தை நிலே நிறுத்த வேண்டுமென்பதே. வர வர அந்த ஆசையும் அவருக்கு அற்றுப்போய்விட்டது. உலகம் முழுவதும் சுற்றினவருக்கு எல்லா இடமும் தம் வீடே, எல்லோரும் தம்மவரே.

* * *

லாஹோரில் இந்த ஸர்க்கஸ் கோஷ்டியார் தங்கியிருக் கும்போது முக்கியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. ஒரு நாள் இரவு, ஆட்டம் முற்றுப்பெற்ற பின்னர் பாபு சாகேப் சாப்பிட்டுவிட்டுத் தம் கூடாரத்தில் நித்திரைக்குச் செல்லு கையில் யாரோ ஸிதாரில் வாசிப்பது அவர் செவிகளுக்குப் பட்டது. திறம்பட ஒருவன் இழைக்கும் அபூர்வ கானமென்ரு தம். உடனே அவர் வேலைக்காரனைக் கூப்பிட்டு, "அடே! யார் அங்கே ஸிதார் வாசிப்பது? போய்ப் பார்!" என்ருர்.

வேலைக்காரன் திரும்பிவந்து, "சாகேப், பக்கத்து டேரா விற்கு வெளியே ஒரு பக்கிரி பழைய ஸிதார் ஒன்றை வைத்துக்கொண்டு வாசிக்கிறான்" என்றான்.

கையில் விளக்கு எடுத்துக்கொண்டு கோக்லே வெளியேவந்து பார்க்கையில் ஸ்பஷ்டமாக ஸிதாரில் மால் கோஷ் ராகம் இழைப்பது கேட்டது. கிழிந்த ஆடையுடன் ஒரு பிச்சைக்காரன் கண்களை மூடியவண்ணம் ஸ்வா ரஸ்யமாக வாத்தியத்தை வாசித்துக்கொண்டிருந்தான். அவ னுடைய தலைமயிர் சிக்குப் படிந்து பரட்டையாக இருந்தது. கோக்லே அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்து, "யாரடா நீ? இங்கே எதற்காக வந்தாய்? எழுந்திரு!" என்று அதட்டிச் சொல்லியும் பிச்சைக்காரன் மெய்ம்மறந்து அந்த உருக்க மான மால்கோஷ் ராகத்தை ஸஞ்சாரம் செய்துகொண்டிருந் தான். "ஜல்தி! எழுந்திருக்கிறாயா இல்லையா?" என்று இடிமுழக்கம்போல் பாபு சாகேப் கூறவே, அந்த எளிய காயகன் கண் விழித்து அலறிப் போட்டுக்கொண்டு எழுந் தான். "ஐயா, நான் ஏழை. என்னை ஒன்றும் செய்யாதீர் கள்" என்று அவன் தீனமான குரலில் மொழிந்து ஸிதார் வாசிப்பதை நிறுத்திவிட்டான். அந்த மால்கோஷ் ராகம் அன்று அரைகுறையாகவே நின்றது.

பாபு சாகேப் பார்த்தார். எலும்பெடுத்த அந்தப் பிச்சைக்காரனின் சரீரம் பார்க்கப் பரிதாபகரமா யிருந்தது. குழிவிழுந்த அவன் கண்களில் பசியின் வெம்மை. அவன் கை கூப்பி, "ஐயா! நான் ஓர் ஏழை. என் பெயர் அஹமத்கான். தயைசெய்து இன்று இரவை நான் இங்கே கழிக்கும்படி அனுமதி தாரும். நாளைக்கே நான் போய்விடுகிறேன். எனக்குப் போக்கிடம் வேறில்லை, பிரபுவே!" என்றான்.

"உனக்கு ஸிதார் நன்றாக வாசிக்கத் தெரியுமா?"

"என்னவோ கொஞ்சம் வரும். பாட்டுப் பாடித்தான் நான் ஜீவிக்கிறேன்."

"இனிமேல் வயிறு பிழைக்க நீ எங்கும் போகவேண் டியதில்லை. என்னுடனேயே இருந்துவிடு. உனக்கு உயர்தர ஸங்கீதப் பயிற்சி அளிக்கிறேன். என்ன சொல்லுகிறாய்?"

அஹமத் தலையசைத்து, "ஜனாப், வேண்டாம். நான் ஒரே இடத்தில் கட்டுப்பட்டு இருக்கமாட்டேன். தெருத்

தெருவாக அலேவதே எனக்கு மிகவும் இஷ்டம். என்னை வற்புறுத்தாதீர்கள்" என்ருன்.

"நானுந்தான் உன்னைப்போல் ஊர் ஊராகத் திரிகிற வன். அஹமத்! உன்னை நான் விடமாட்டேன். என்னுடன் தான் நீ இருந்தாகவேண்டும், வா — ஸிதாரை எடுத்துக் கொள்!" என்று பாபு சாகேப் ஆக்ஞையிட்டுவிட்டு விளக்கு வெளிச்சத்தில் அஹமதின் முகத்தைச் சற்று நேரம் வரை ஊன்றிக் கவனித்தார்.

அஹமதிஞல் ஒன்றும் மறுத்துக் கூற முடியவில்லை. ஸிதாரைக் கையில் எடுத்துக்கொண்டு பாபு சாகேபின் பின்ஞலேயே சென்ருன்.

தம்பிடத்திற்கு வந்ததும் பாபு சாகேப் அஹமதின் புரா தனமான ஸிதார் வாத்தியத்தை இப்படியும் அப்படியும் புரட்டிப் பார்த்துவிட்டு அதன் [1]'பர்தா'வைச் சரிப்படுத்தி இரண்டொரு '[2]கத்' வாசித்துவிட்டு, "அப்படி ஒன்றும் நேர்த்தியான ஸிதார் இல்லை இது. ரொம்பப் பழசுதான்" என்ருர். ஆனல் அதைக் கிளறும்போது ஒலிக்கும் நாதம் இனிமையாகத்தான் இருந்தது!

"அஹமத்! நான் உன் பெயரை மாற்றி வேறு பெயர் வைக்கப்போகிறேன். உன் புதுப் பெயர் ஷெர்தில் கான். நீ தாடி வளர்க்கவேண்டும். அதனல் உன் உருவம் முழுவதும் மாறிவிடும். உனக்கு அறிமுகமானவர்கள் யாராவது பார்த்தால்கூட அடையாளம் கண்டுபிடித்துக்கொள்ள முடியாது" என்ருர் கோக்லே.

"நீங்கள் சொல்வது சரிதான், மகராஜ்! எனக்கும் என்னைச் சேர்ந்தவர்களின் முகத்தில் விழிக்கப் பிடிக்க வில்லை" என்ருன் அஹமத்.

"ஏன் ஷெர்தில்? உனக்கு அவர்களால் என்ன தீங்கு நேரிட்டது? உன் சமாசாரத்தைச் சொல்லமாட்டாயா?"

"அந்தப் பழைய துக்கங்களை ஏன் எடுக்கவேண்டும்? அந்தச் சைத்தான்தான் என்னை இப்படி உருக்குலேத்து விட்டது."

"அப்படியா? சரி. நீ யாரிடம் ஸிதார் வாசிக்கக் கற்றுக் கொண்டாய்? மால்கோஷ் ராகத்தை நீ வாசிப்பது முற்றும்

1. மேளக்கட்டு 2. வர்ணம்

புது ரீதியாகவே இருக்கிறது. இந்த மாதிரி யார் வாசித்தும் நான் கேட்டதில்லை."

"மால்கோஷ்தான் எனக்குப் பிடித்த ராகம். என் துக்கம் அதன் மூலமாகத்தான் வெளிக் கிளம்புகிறது. அந்தப் பழைய வேதனையை மறந்து இதனால்தான் நான் புத்துயிரும் பெறுகிறேன்."

"நீ யாரிடத்தில் சிக்ஷை சொல்லிக்கொண்டாய்? அவர் எங்கே இருக்கிறார்?"

"அவர் இப்போது இந்த உலகத்தில் இல்லை. துயரம் என்னை வாட்டும்போதெல்லாம் அவரையே நான் நாடுவேன். அவர் புதுப் புது ராகங்களைக் கற்பித்து எனக்குச் சொல்லி வைப்பார். என் குருநாதர் திடீரென்று தேக வியோக மானார்." — இதைச் சொல்லுகையில் அஹமத் தன் கண்களில் ஊறும் நீரைத் துடைத்துக் கொண்டான். மீண்டும் மெதுவாகப் பேசலானான்: "அதற்கு அப்புறம் நான் நடுத்தெரு மனிதனாகி விட்டேன். ஜனாப்! எனக்கு இனி வாழ்வில் வேண்டியது ஒன்றுமில்லை. அந்தப் பழைய கதை இப்போது எதற்கு? பணி ஏதாவது எனக்கு அருள் கூர்ந்து இடுங்கள். இனி நீங்களே என்னுடைய குரு; என் யஜமானரும் நீங்களே."

"சரி. ஆனால் அதைப்பற்றி இனிமேல் விசாரிக்கமாட்டேன். ஒன்றுமட்டும் கேட்க விரும்புகிறேன்: உன் சங்கீத போதகருக்கு எல்லா ராகங்களையும்விட இந்த மால்கோஷ் மட்டும் ஏன் அதிகமாகப் பிடித்திருந்தது?" என்றார் கோக்லே.

"எனக்கென்ன தெரியும், சாகேப்? நான் அவருக்குச் சிஷ்யன் ஆவதற்கு முன்னமேயே அவர் இந்த ராகத்தை அப்யஸித்து வந்தார். எனக்கும் —" என்று என்னவோ சொல்ல வாயெடுத்த அஹமத் சட்டென்று அடக்கிக் கொண்டான்.

கோக்லே சிரித்துவிட்டுத் தம் புதிய சீடனின் சிரஸில் கை வைத்து, "பகவான் உன்னை சுகத்தில் வைப்பார். ஷொர்தில்! ஆனால் ஜாக்கிரதை! நான் சொல்வதை மட்டும் கேள். மால்கோஷ் ராகத்தைப் பழகினால் அது பயங்கரத்தையே விளைவிக்கும். அந்த வழிக்குப் போகவேண்டாம்!" என்றார்.

அஹமத் இதைக் கேட்டதும் சற்று நாழிகை மௌனமாயிருந்த பிறகு எழுந்து கோக்லேயின் பாதங்களைத் தொட்டு, "ஜனுப்! நீங்கள் என்னுடைய யஜமானர். எந்த வழியைக் காட்டுகிறீர்களோ அதைப் பின்பற்றுவதே என் கடமையாகும்" என்றான்.

*   *   *

ஐந்து வருஷ காலம் கழிந்தது. கோக்லேயுடன் அஹமத் தேச தேசாந்தரங்கள் சுற்றினான். சுகமாகவே அவனுடைய காலமும் செல்லத் தொடங்கியது. அவனுடைய உலர்ந்த உடலிலும் சதை பிடித்தது. நேர்த்தியான உடுப்பிற்கும் நல்லுணவிற்கும் ஒரு குறைவுமில்லை அவனுக்கு. எப்போதும் பாபு சாகேபின் சமுகத்தில்தான் இருப்பான். பிரதி தினமும் காலையில் பாட்டுக் கச்சேரி செய்ய வேண்டியது. ஓய்வு நாட்களில் சாயங்காலங்களில்கூடப் பாட்டுச் சர்ச்சைதான். அடிக்கடி கோக்லே தம் சிநேகிதர் வீடுகளுக்கு அவனை அழைத்துச் சென்று அவனுடைய திறமையைக் காண்பிக்கச் சொல்லுவார். அவனுடைய சாரீர ஸம்பத்து யாருக்கும் லபிக்காது; அவ்வளவு ஸ்வர சுத்தமாகப் பாடுவான். அவனுக்கு 'உஸ்தாத்' (வித்துவான்) என்ற பெயரும் வந்தது. ஆனால் கோக்லே இன்ன பாட்டு, இன்ன ராகம் பாடு என்றால்தான் பாடுவான். யதேச்சையாகப் பாட அவனுக்கு அவர் அவகாசம் கொடுப்பதில்லை. கோக்லே தம் மிருகங்களைப் பழக்குவது போலவே தம் இடத்திலுள்ள மனிதரையும் பழக்கி வைத்திருந்தார் — உரிமையற்றவர்களாகத்தான்!

அஹமதின் பழைய ஸிதார் — அவனுடைய குருவின் சங்கீதக் கருவி — பெட்டியிலேயே தூங்கியது. அதை எடுத்து வாசிக்க ஒரு நாள்கூட அவன் அனுமதிக்கப்படவில்லை. அவனுக்கு மிகவும் இஷ்டமான அந்த மால்கோஷ் ராகத்தை வாசிக்கக் கோக்லே அனுமதித்தால்தானே? இந்தக் குறையே அனுதினமும் அவன் மனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகத் துளைக்கத் தொடங்கியது. அடிக்கடி அவன் கண்கள் கலங்கும். ஆனால் கோக்லே மட்டும் இதைக் கவனியாமல் இல்லை. அவர் அவனைத் தனிமையில் அழைத்து,

"ஷேர்தில்! உனக்கு என்ன வருத்தம சொல்? அந்தப் பழைய ஸிதாரைத்தொடக்கூடாது என்றேனே அதனுலா?" என்று விசாரித்தார். தக்ஷணமே அஹமத், "எனக்கு ஒரு கவலையும் இல்லே. உங்கள் கட்டளையின்படி நடப்பதே எனக்குச் சுகம்" என்பான். இதைக் கூறும்போது அவனுடைய கண்கள் நீர்த்தேக்கத்திஞல் பளபளக்கும்; தன் யஜமானன் பார்க்காதவாறு முகத்தைத் திருப்பிக்கொள்வான்.

வெண்ணிலவு மகிழ்விரிக்கும் இரவுகளில் மட்டும் அவன் உள்ளம் மால்கோஷ் ராகத்தைப் பாடுவதற்காகக் கதறியழும். தன்னேயும் மீறி அந்த ராகம் அவன் வாயினின்று பொங்கி வரும். நிலவு தோய்ந்த வானில் உலவும் மேக சிசுக்கள்கூட அதைப் பாடிக் களிப்பதுபோல் அவனுக்குத் தோன்றும். 'அதைக் கேட்டு நான் ஆனந்திக்கமாட்டேன்.........மேக அலேகளின் நடுவே ஓர் இன்முகம் தோன்றுதே.........என்னே மயக்கி நில்லாதே போ! கெட்ட நய வஞ்சகமே?' என்று தனக்குள் நினேந்து யாரையோ வெறுத்துக்கொள்வான்.

கொஞ்ச நாளாகவே அவன் இளேத்துப் போவதைக் கூர்மையான புத்திபடைத்த கோக்லே தெரிந்து கொள்ளாமல் இல்லே. அவர் அவனேக் கூப்பிட்டு, "ஷேர்தில்! உனக்கு இங்கே என்ன குறைவு, சொல்லு? ஏன் இப்படி உருகிப் போகிருய்? உன் வாழ்க்கையில் நடந்த பெரிய இன்னலே நீ மறைக்கப் பார்க்கிருய். அதை என்னிடம் சொல்லு" என்ருர்.

"எனக்கொன்றுமில்லே, மகராஜ்!" என்று மழுப்பினன் அஹமத்.

"ஆனல் சரி. நீ நன்ருகப் பாடுகிருய். இரு, எனக்கு ஒரு யோசனே உதிக்கிறது: உன்னேப்போன்ற 'உஸ்தாது'கள் அரசர்கள் எதிரில்தான் பாடத் தகுதியுள்ளவர்கள். நீ ஏன் நம்முடைய சிங்க மஹாராஜாவின் எதிரே பாடக் கூடாது? உன் இன்னிசையைக் கேட்டு அது ரஸிக்குமே?" என்ருர் கோக்லே.

"அதற்கென்ன? உங்கள் ஆக்ஞையின்படியே நடக்கத் தயார். அதன் எதிரே பாடுகிறேன்."

"கூண்டினுள் சென்று, அதன் பக்கத்தில் உட்கார்ந்து பாடவேண்டும் — தெரியுமா? பயப்படமாட்டாயே!"

" நீங்கள் இருக்கும்போது எனக்கு என்ன பயம், அதனண்டை? இப்பொழுதே சொல்லுங்கள். நான் பாடுகிறேனு இல்லையா பாருங்கள்!"

" வேண்டாம். நீ தனியாகச் செல்லவேண்டியதில்லை. நானும் துணையாக வருகிறேன். நான் வாசிக்கும் பிரகாரமே நீயும் ஸிதாரை வாசிக்கவேண்டும். சிங்கத்தின் கூண்டினுள் யாரை வேண்டுமானலும் என்னல் அழைத்துச் செல்ல முடியுமென்பதை ஜனங்களுக்கு ரூபிக்கவேண்டும். என்னுடைய ஸிதாரில்தான் நீ வாசிக்கவேண்டும். அந்தப் பாழாய்ப் போன மால்கோஷ் ராகத்தை அதன் எதிரே பாடக்கூடாது. அந்தப் பழைய ஸிதாரையும் எடுக்கக்கூடாது. நீ பாடும் ராகங்கள் ஸந்தோஷ உணர்ச்சியையே தரக்கூடியவையாக இருக்கவேண்டும். த்ருத கதியில் பாடினல்தான் நம் சிங்க ராஜாவுக்கு இஷ்டமா யிருக்கும். மால்கோஷ் போன்ற உருக்கமான, வருத்தங்களை நினைப்பூட்டும் ராகங்களைக் கட்டிவைத்து விடு!" என்றார் பாபு சாகேப்.

" எஜமான் சித்தப்படி நடக்கிறேன் " என்றான் அஹமத்.

* * *

மேலும் இரண்டு வருஷங்கள் சென்றன. அஹமத் இப்போதெல்லாம் ஸர்க்கஸில் தன் யஜமானருடன் சிங்கத்தின் முன்னிலையில் பாடி வருகிறன். இந்த அதிசயத்தைப் பார்க்க ஜனங்கள் வரத் தவறுவதில்லை. அஹமதிற்கும் இந்தப் புதுத் தொழிலில் ஒருவித உத்ஸாஹம் பிறந்தது. அவன் ஸிதார் வாசித்து வாயால் பாடும்போது சிங்கம் குதித்து விளையாடும். ஜனங்கள் தேகம் தெரியாமல் அதற்கேற்பத் தாளம் போடுவார்கள். அந்த ஸிம்ஹ நடனம், ஸிம்ஹானந்த தாளத்தில் தானங்கள் வாசிக்கும்போது அற்புதமாக அமையும். ஆனல் அந்தச் சிங்கத்திற்கு மட்டும் தெரியும், தன்னெதிரே ஸிதார் வாசிக்கும் அஹமத் தன்னைப்போல ஒரு கைதி யென்று. அதனல் அதற்கு ஓர் அந்தரங்க அன்பு அவனிடம் ஏற்பட்டது. சிங்கம் ஓரக் கண்ணல் அவனைப் பார்ப்பதைக் கவனித்த பாபு சாகேப் ஒரு நாள் அஹமதை நோக்கி, ' ஷெர்தில்! நான் ஒரு பெண் சிங்கம் கொண்டுவரப் போகிறேன். அதை நீ மணந்து கொள்கிறயா?" என்று வேடிக்கையாகக் கூறினர். ஆனல் அந்த வார்த்தைகள்

அஹமதின் மனத்தில், கூரிய வேல்போல் பாய்ந்ததை யார் அறிவார் ?

ஆக்ராவிற்கு ஸர்க்கஸ் ஒரு சமயம் சென்றிருந்தது. ஒரு நாள் சாயங்காலம் வேடிக்கை பார்க்க அபூர்வ லாவண்யம் வாய்ந்த ஒரு யுவதி வந்திருந்தாள். தனவந்தர்கள் உட்காரும் ஆசனத்தில் அவள் இருப்பதைஅஹமத் கவனித்தான். அவளை விட்டு அவனுடைய பார்வை திரும்பவில்லை. தன் அருகி லிருந்த 'பாண்ட் மாஸ்டரை'ப்பார்த்து, "இந்த அழகி யார்? " என்று கேட்டான். 'பாண்ட் மாஸ்டர்' சிரித்துவிட்டு, "இவ ளைத்தெரியாதா, உனக்கு? எத்தனையோ பேர் தங்கள் உயிரை யும் உடைமையையும் இவள் கண் வலையில் சிக்கி இழந்து விட்டார்களே ! இவள்தான் ஆக்ரா நகரத்துச் சிறந்த நடிகை குல்பதன் பாயீஜீ. அப்பா ! ஜாக்கிரதை, நீயும் இவளுடைய மோகத்தில் சிக்கி மடியப்போகிறாய் !" என்றான்.

"குல்பதனா ? எந்தக் குல்பதன்? ஆம், என் வாழ்க்கை யைப் பாழாக்கிய அந்தச் சைத்தான் குல்பதன்தான் ! அது தான் அவளைப்பார்த்ததும் எனக்குத் தலை சுழன்றது ; என்று மிராத எரிச்சல் ஏற்பட்டது !" — தனக்குள்ளேயே இதைச் சொல்லிக்கொண்டு ஆடரங்கை விட்டு ஷெர்தில் வெளியே ஓடினான். "இவள் போகிற இடத்தைக் கவனிக்கவேண் டும்" என்று தன்னுள் கூறிக்கொண்டு, ஒரு 'டாங்கா' வண் டியை வாடகைக்குப் பேசி அதில் உட்கார்ந்துகொண்டான். 'ஆனால் பாபு சாகேபின் உத்தரவில்லாமல் வந்துவிட்டேனே, அவர் கோபிப்பாரே' என்ற யோசனை உண்டாயிற்று.

உடனே, 'ஏன், அஹமத் அவர் விலைக்கு வாங்கிய அடி மையா என்ன ?' என்ற எண்ணமும் வந்தது அவனுக்கு.

சாந்தினி சௌக் என்ற பெயர்பெற்ற நான்கு பெரிய வீதிகள் கூடுமிடத்தில் ஒரு பிரம்மாண்டமான வீடு. அவ்வீட் டின் ஒவ்வோர் அறையிலும் அலங்கார தீபங்கள் ஒளிர்ந்தன. இரட்டைக் குதிரைகள் பூட்டிய ஒரு பெரிய வண்டி அவ் வீட்டு வாயிலில் வந்து நின்றது. குல்பதன் பீபீ கீழே இறங்கினாள். அதே சமயம் ஒரு பயித்தியக்காரன் ஓடிவந்து அவளுடைய சரிகை மேலாடையின் தலைப்பைப் பிடித்துக் கொள்ளவே அவள் திரும்பிப் பார்த்து, "நீ யார் ? " என்று கேட்டாள். அவன் மூச்சு வாங்க, "பீபீ......பீபீ, குல்பதன் ! என்னைத் தெரியவில்லையா ?" என்று குழறினான்.

குல்பதன் அவனுடைய முகத்தை உற்றுக் கவனித்து விட்டு, "உஸ்தாத் ஷெர்தில்கான் அல்லவா நீ? பாபு சாகேப் அனுப்பினரா உன்னை?" என்றாள்.

"இல்லை, நான் ஷெர்தில் அல்ல. என்னை யாரும அனுப்ப வில்லை. நான் இன்னரென்று உனக்கு இன்னுமா தெரிய வில்லை......குல்? இதோ காலடியில் உன் அடிமை அஹமத் கான். ஏழு வருஷங்களுக்கு முன் லக்னேவில்......ஞாபகம் இருக்கிறதா? குல்பதன்!" என்று அவளைப் பார்த்து ஏக்கத்துடன் கேட்டான்.

இதைக் கேட்டதுமே குல்பதன் தன் தலைப்பை வெடுக்கென இழுத்துக்கொண்டு, "ஆமாம். ஞாபகம் இருக்கிறது. அம்மா அடித்துத் துரத்தினளே, அவன்தானே நீ? மறுபடியும் உதை வாங்கிக்கொள்ளவா இங்கே வந்திருக்கிருய்? காவல்காரனைக் கூப்பிடட்டுமா?" என்ருள்.

"வேண்டாம்."

ஷெர்தில் மார்பில் தன் கையை வைத்து அழுத்திக் கொண்டு உடைந்த குரலில், "வேண்டாம் குல்!......நான் போய் விடுகிறேன்" என்று சொல்லும்போது அவன் உடல் நடுக்கமுற்றது. தாஸி குல்பதன் சற்று நேரம் ஒன்றும் தோன்ருமல் அங்கேயே நின்றிருந்தாள். தன் பழைய காதலனை நாயினும் கடையனுக நடத்தியதைக் குறித்து அவள் மனம் வெந்து துடித்ததோ என்னவோ?

அப்போது ஒரு கோச்சு வண்டி தடதட வென்று அவள் வீட்டு வாயிலில் வந்து நின்றது பாபு சாகேப் அதினின்று இறங்கினர். குல்பதன் வாயிலில் நிற்பதைப் பார்த்து அவர் சிரித்த முகத்துடன், "பீபீ, உன்னிடந்தான் வந்தேன். உன் பாட்டைக் கேட்டு வெகு நாட்களாயின. இன்று நீ பாட வேண்டும்" என்ருர்.

"ஏதோ இத்தனை நாட்கள் கழித்து என்மீது கருணை பிறந்தது. உள்ளே வாருங்கள், ஜனுப்" என்று சொன்னுள்.

சிரிப்பும் கேளிக்கையுமாக அவ்விருவரும் உள்ளே சென்றனர். இந்த அதிசயத்தை ஓர் உருவம் இருட்டில் மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருந்தது. அது அஹமத்கான் என்று சொல்லவேண்டியதில்லை.

பாபு சாகேப் தாஸி வீட்டிலிருந்து திரும்பி வர மறு தினம் அதிகாலை யாகிவிட்டது. அன்று மத்தியான்னம் தன் யஜமானனின் எதிரே வரும்படி அஹமதுக்கு உத்தரவு வந்தது. அவனும் பயப்படாமல் ஆஜரானான். கோபத்துடன் அவனைப் பார்த்துக் கோக்லே, "நீ நேற்று இரவு உத்தர வில்லாது ஏன் வெளியே போனாய் ?" என்றார்.

அஹமதிற்குத் தைரியம் வந்துவிட்டது. சற்றும் தயங்காமல் தன் யஜமானனை நேராக நோக்கி, "என் சொந்த விருப்பத்தின்படிதான் வெளியே சென்றேன்" என்றான்.

அப்போது கோக்லே ஒரு ஸிம்ஹகர்ஜனை செய்து, "உன் இஷ்டம் என்றுகூட ஒன்று இருக்கிறதா என்ன?" என்றார்.

"நேற்று வரையில் இல்லைதான். இன்றுதான் அது தோன்றியிருக்கிறது. நீங்கள் ஏன் நேற்று இரவு குல்பதன் பீபீயிடம் சென்றிருந்தீர்கள்?...சொல்லுங்கள் ?" என்றான். பாபு சாகேபுக்கு கோபத்தின் வேகம் அதிகரிக்கவே அவரால் ஒன்றும் பேச முடியவில்லை. அஹமதின் தோள்களைத் தம் வஜ்ர முஷ்டியினால் அழுத்தி எரிவிழியுடன் அவனை நோக்கினார். அஹமத் தோள்களைச் சுளித்துக்கொண்டு ஏளனச் சிரிப்புடன், "ஜனாப்! இனி உங்கள் அதிகாரம் என்னிடம் செல்லாது!" என்றான்.

"அஹமத்! குல்பதனை உனக்குத் தெரியுமா என்ன?" என்று சற்று வியப்புடன் கேட்டார் கோக்லே.

"எனக்குத் தெரியுமாவா? பாபு சாகேப்! புல்புல் பக்ஷிக்கு ரோஜாப்பூ எவ்வளவு பிரியமோ, பூச்சிகளுக்குத் தீபக் கொழுந்து எவ்வாறு பிடித்தமோ, குல்பதனிடம் அத்தகைய பற்றுதல் இருந்தது எனக்கு. அவள் பதினாறு வயது இள நங்கையாய் இருக்கையில் அவளுடைய காதலை நான் பெற்றிருந்தேன். எங்கள் இருவர் வீடுகளும் பக்கத்தில் பக்கத்தில். மாடிமீது நிலவொளியில் நாங்கள் காதல்புரிந்த விமரிசையை இப்போது உங்களுக்குச் சொல்லி என்ன பலன்? தேவர்களும் பொறாமை கொள்ளக்கூடியதா யிருந்தது எங்களுடைய பரஸ்பரமான பிரேமை. இளமையின் முழு ஆவேசத்துடன் இருந்தது எங்களுடைய இந்தக் காதற் களிப்பு!" இதைச் சொல்லுகையில் அஹமதினுடைய கண்களின் கடையில் நீர் மணிகள் துடித்தன.

"என்னை மன்னிக்கவேண்டும், ஜனுப்! இந்த மாதிரி ஒரு மயக்கத்தில் — ஓர் இன்பக் கனவில் மூன்று மாதங்கள் சென்றன. குல் என்னைப் பார்த்து, 'என்னை விட்டு நீ என்றும் பிரியக்கூடாது' என்று சொல்லுவாள். அந்தத் தேன் மொழிகள் இப்போது விஷமாகவல்லவோ மாறிவிட்டன! என் தாய் தந்தையரின் உத்தரவைப் பெற்று அவளை மணந்துகொள்ள இருந்தேன். அத்தகைய கட்டழகியை அவர்கள் தடுக்கமாட்டார்கள் என்றே எண்ணியிருந்தேன். ஆனால் அவர்கள் அதற்கு இணங்கவில்லை. என் சங்கடத்தைக் குல்பதனிடம் சொல்லி முறையிட்டேன். அவள் அதற்கு, 'அஹமத்! உனக்கு ஒன்றுமே தெரியவில்லை. இப்படி நாட்களை ஓட்டாதே. நான் உன் பிடியிலிருந்து நழுவிப் போய் விடுவேனோ என்னவோ? சீக்கிரம் என்னை உன் பொருளாக ஆக்கிக்கொள்' என்றாள். அவள் கூறிய தன் அர்த்தம் எனக்கு அந்தச் சமயம் விளங்கவில்லை. ஒரு நாள் சாயந்திரம் வேலைக்காரன் ஒருவன் என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதில், 'நீ இன்று இரவே பதினோரு மணிக்கு எங்கள் வீட்டு மாடி வழியாகக் கீழே இறங்கிவந்தால் நான் தயாராக இருப்பேன். இதுவே தக்க தருணம்; நாம் இருவரும் ஓடிவிடலாம்' என்று எழுதியிருந்தது. குல்பதனுடைய எழுத்துத்தான்; அதில் சந்தேகமில்லை. அன்று இரவு அவள் சொன்னவிதமே நான் மாடி வழியாகக் கீழே அவள் இருக்கும் அறைப் பக்கமாகச் சென்றேன். உலகமே தூங்கிக்கொண்டிருந்தது, என்னைச் சுற்றிலும். கால் பெருவிரலால் நடந்து சென்றேன். என் கெட்ட காலம் பிலுபிலுவென்று இரும்பு போன்ற ஏழெட்டுக் கைகள் என்னை இறுகப் பிடித்துக்கொண்டன. அன்று அவர்கள் என்னை உயிரை வைத்துக் கொன்று போட்டார்கள். நான் ஸ்மரணை இழக்கும்போது இரு ஸ்திரீகள் என் நிலைமையைப் பார்த்து நகைப்பதை மட்டும் உணர்ந்தேன். அவர்கள் குல்பதனும் அவள் தாயுந்தான். ஏ அல்லா! இந்த உலகில் யாரையும் நம்பக்கூடாது — அதுவும் இந்தப் பெண் இனத்தை! எனக்கு நினைவு வந்தபோது ஆற்றங்கரையில் நான் விழுந்திருப்பதாகத் தெரிந்தது. நான் மெல்ல எழுந்து உட்கார்ந்து பலவித யோசனைகளுக்கு ஆளானேன். எந்த முகத்தை வைத்துக்கொண்டு என் பெற்றோர்களை நான் பார்ப்பேன்? வீட்டைத் துறந்தேன்; ஆனால் என் வாழ்க்கையை நிர்மூலமாக்கிய பாதகியின்மீது வஞ்சம்

தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஆவல் பிறந்தது" என்று தன் கதையை முடித்தான்.

பாபு சாகேப் நீண்ட பெருமூச்சு விட்டு, "ஆனால் கட்டாயம் பழி தீர்த்துக்கொள்வதென்று உறுதி கொண்டு விட்டாயா?" என்றார்.

'யார்மீது தீர்த்துக்கொள்வது? குல்பதனின் தாய் தான் இதற்கு மூலகாரணம். அவள்தான் இறந்துவிட்டாளே."

"இவை யாவும் லக்னோவில் அல்லவா நடந்தவை?"

"ஆமாம் ஜனாப்! இது எப்படி உங்களுக்குத் தெரியும்? குல்பதன் சொன்னாளா! என்ன?"

"இல்லை. அஹமத், உன் கதையை நீ சொல்லிவிட்டாய். என் கதையைச் சற்றுக் கேள்: உன்னை நையப் புடைத்தவர்கள் யார் தெரியுமா? அவர்கள் என் ஆட்களே. என் உத்தரவின்பேரில்தான் அவர்கள் அப்படிச் செய்தார்கள். அஹமத்! நான் சொல்வது அவ்வளவும் உண்மை. குல்பதன்மீது என் நாட்டம் விழுந்தது. அவளுடைய தாய் எவ்வளவு சரிப்படுத்தியும் அவள் எனக்கு மசிவதாகக் காணோம். என் வழியில் குறுக்காக நீ இருந்தபடியால் உன்னை அகற்ற இவ்வாறு செய்ய நேர்ந்தது. உலகத்தில் அநீதங்கள் நடப்பது ஸகஜமே. நீ பொறுத்துக்கொண்டுதான் ஆகவேண்டும்" என்றார் பாபு சாகேப்.

அஹமத் எழுந்து நின்று, "ஸலாம் பாபு! நான் போய் வருகிறேன். நான் உங்களிடம் வந்து சேருமுன்பு உங்களுக்கு என்னைப்பற்றித் தெரியுமா?" என்று கேட்கவே, அவர், "உன்னைப்பற்றி இதற்கு முன் எனக்கு ஒன்றுமே தெரியாது. இப்போது உனக்கு எல்லாம் தெளிவாகிவிட்டதா? என்மேல் எந்தவிதமாகப் பழி தீர்த்துக் கொள்ளப் போகிறாய் சொல்லு, அஹமத்?" என்றார்.

"மஹாராஜ்! என்னால் என்ன செய்யமுடியும்? எனக்கு விடைதாரும். நான் உங்கள் உப்பைத் தின்றிருக்கிறேன்."

"உன்னை இப்போது அனுப்ப முடியாது. ஒருவேளை குல்பதனுக்கு உன்னால் ஏதாவது தீங்கு நேர்ந்தால்? ஒரு வருஷ காலம் என் கண் பார்வையிலேயே நீ இருக்கவேண்டும். அதற்குள் உன் பழைய காயங்கள் ஆறிவிடும்."

அஹமத் தலை தரையில் படும்படி கோக்லேயை வணங்கி விட்டு, "என்னைக் கைதியாக வைத்துக்கொள்ளப் போகிறீர் களா? உங்களால் முடியும். ஆனால் என்னால் உங்களை மீறி ஓடிவிடவும் முடியும். தற்சமயம் உங்கள் சொற்படி நடக் கிறேன்" என்றான்.

இதைச் சொல்லிவிட்டு அஹமத், சிங்கம் அடைபட்டி ருக்கும் கூட்டின் அருகிற் சென்று அதைப் பார்த்து, "தம்பி, இந்த உலகத்தில் நீ ஒருவனே என் உண்மையான நண்பன். நான் இந்த இடத்தை விட்டுப் போய்விடலாமென்றிருந் தேன். ஆனால் ஒரு காரணத்தினால் இருக்கும்படி என் மனம் தூண்டுகிறது. இன்று சபையில் உனக்கு மால்கோஷ் ராகம் வாசித்துக் காட்டுகிறேன். என் குருநாதரின் பழைய ஸிதா ரில்தான் வாசிப்பேன். அவர் சாகும்போது இதை எனக்குக் கொடுத்துவிட்டு என்ன சொன்னார் தெரியுமா? 'அஹமத், இந்த வாத்தியம் உன் பரமசத்துருவையும் கொல்லும்' என்று தான். அதற்காகவே இங்கே நான் தங்குகிறேன். பார், இன்றைக்கு நடக்கப் போவதை. அவருடைய வார்த்தை ஒருநாளும் பொய்யாகாது. நீதான் இந்த விஷயத்தில் எனக் குச் சகாயம் புரியவேண்டும். உன்னை நம்பியிருக்கிறேன்" என்று அதனுடன் ஸங்கேத பாஷையில் பேசித் தன் குறையை வெளியிட்டான். சிங்கமானது கிராதிக்கு வெளியே தன் முன்னங் காலொன்றை அஹமதை நோக்கி நீட்டியது. அஹமத் அதைப் பிடித்துக் குலுக்கினான். அது என்ன சபதமோ? அவ்விருவருக்கு மட்டுமே தெரியும்!

இரவு ஆட்டம். ஸர்க்கஸ் அரங்கில் சொல்லமுடியாத அளவு கூட்டம். 'டாங்' என்று மணி பத்தடித்ததும் விசித்திர வர்ண உடைகள் அணிந்த ஆட்கள் பெரிய கூண்டு வண்டியைத் தள்ளி வந்தனர். 'பாண்ட்' வாத்தியம் இங்கிலீஷ் 'நோட்' ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தது. வர்ண விதானங்களும் திரைகளும் படபடவென்று காற்றில் அசைந்தாடின. சிங்கராஜா மட்டும் சோர்வுற்றுக் கூண் டின் ஒரு மூலையில் படுத்துக்கொண்டிருந்தது. வேடிக்கை பார்க்க வந்தவர்கள் மூச்சு விடாமலிருந்தனர். 'காலரி'யில் இருந்த ஓர் அதிகப்பிரஸங்கி மட்டும், "பாவம்! சிம்மராஜா ரொம்ப அபினி உருண்டை அடித்துவிட்டாற்போல் இருக் கிறது; அதுதான் இன்றைக்கு உறங்குகிறது" என்று உரக்கச்சொன்னான்.

ஆட்டம் ஆரம்பிக்கும் மணி அடித்தவுடன், கோக்லே சாகேப், ஹாஸ்ய வதனத்துடன் நேர்த்தியான உடையில் அரங்கினுள் நுழைந்தார். அவருடன் 'உஸ்தாத்' அஹமத் கான் வந்தான். அவன் கையில் உறையில் மூடப்பட்ட ஒரு ஸிதார் வாத்தியம். 'பாண்ட் வாத்தி'யம் ஒய்ந்தது. பாபு சாகேப் கம்பீரமாகக் கூண்டின் கிராதிக் கதவைத் திறந்து உள்ளே சென்றார். அஹமத் அவரைப் பின்தொடர்ந்தான். இவர்களைப் பார்த்தும் சிங்கம் எழுந்திருக்கவில்லை. ஜனங்கள் யாவரும் அதிசயப்பட்டனர். கோக்லேயும் அஹமதும் சேர்ந்து, "ஸலாம் ஆலேகும், ஷேர் மஹராஜ்!" என்ற போது, சிங்கம் சோம்பல் முறித்துவிட்டு எழுந்து வந்தது. பாபு சாகேபிற்குப் பதுங்கி வணங்கிற்று. அஹமதின் கரத்தில் தன் முன்னங்காலை வைத்தது. அஹமதும் கோக்லேயும் கீழே உட்கார்ந்தனர். உறையிலிருந்து அஹமத் அந்தப் பழைய ஸிதாரை மெல்ல வெளியே எடுத்தான். வாத்தியத்தைப் பார்த்ததும் பாபு சாகேப் திடுக்கிட்டார். அஹமதின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, பற்களை நறநற வென்று கடித்து, "சைத்தான்! உன்னை யார் இதை எடுத்து வரச் சொன்னது? என் ஸிதார் எங்கே?" என்று உறுமினார்.

அஹமத் அவருடைய வார்த்தைகளை லக்ஷ்யம் செய்யாமல் சிரித்துக்கொண்டே, "இந்த ஸிதாரில்தான் நான் இன்று வாசிக்கப் போகிறேன். இவ்வளவு பெரிய சபையில் நாம் இப்படி நடந்துகொண்டால் விரஸமாகி விடும். வேண்டுமானால் என்னை நாளைக்கே தள்ளிவிடுங்கள்" என்றான்.

பாபு சாகேப் அஹமதைச் சுட்டுவிடுவதுபோல் நோக்கினார். ஆனால் அவர் வாயினின்று ஒரு சப்தமும் வரவில்லை.

அஹமத் 'டும்...டும்......த்ரிம்...த்ரிம்' என்று ஸிதாரில் சுருதி கூட்டிக்கொண்டு மால்கோஷ் ராகத்தை அதில் இழைக்க ஆரம்பித்தான். சிங்கம் பிடரியை அலப்பிக் கொண்டு எழுந்து நின்றது. அதன் கண்களில் ஓர் அபூர்வ ஒளி திகழ்ந்தது. பாபு சாகேபிற்குப் புத்தி ஸ்வாதீனத்தில் இல்லை. ஆனால் அவர் சட்டென்று நிதானித்துக்கொண்டு உரத்த குரலில், "டே சைத்தான்! நிறுத்து உன் பாட்டை! அந்தப் பயங்கர ராகத்தை வாசிக்காதே!" என்று கூவினார். ஆனால் அஹமத் கதி கலங்காமல், "கபர்தார் (ஜாக்கிரதை), சாகேப்!" என்றான். அவனுடைய ஸிதார் முதலில் அதிக

விளம்ப காலத்திலும், வரவரத் துரிதத்திலும் ஜங்காரம் செய்தது. சிங்கமும் பரவசமாகிக் குதிக்கத் தொடங்கியது. சபையோரும் உத்ஸாஹம் தாங்கமுடியாமல் கைகளைக் கொட்டினர். ஆனால் கூண்டில் நடக்கும் விவாதம் அவர்கள் செவிக்கு எப்படி எட்டும்?

தம்மை மீறிச் செல்லும் அஹமதின்மீது, உக்ரமூர்த்தியான கோக்லே பாய்ந்து அவனுடைய ஸிதாரைப் பிடுங்கப் போனார். "அடே! நிறுத்துகிறாயா, இல்லையா? உன்னைக் கொன்று போட்டுவிடுவேன்!" என்று உறுமினார்.

அஹமத் பயமடைந்தவனாய்ச் சிங்கத்தைப் பார்த்து, "ஷெர் பாயி! (தம்பி சிங்கம்!) என் ஸிதார் உடைந்து போய் விடுகிறதே, என்னைக் காப்பாற்றேன்......காப்பாற்றேன்" என்று அபயக் குரலில் முறையிட்டான்.

இமை கொட்டும் நேரத்திற்குள் மேக முழக்கம்போல் குலை நடுங்கும்படியான ஒரு ஹுங்காரம் கேட்டது. சிங்கம் ஒரே பாய்ச்சலாகப் பாபு சாகேபின்மீது விழுந்து அவருடைய தலையைக் கௌவிக்கொண்டது. அப்போது திடநெஞ்சம் படைத்த கோக்லே தம் இடுப்பிலிருந்து பிஸ்தலை எடுத்துச் சிங்கத்தின் மார்பிற்கு நேராகச் சுட்டார். சிங்கமும் பாபு சாகேபும் சற்று நேரம் வரை தரையில் புரண்டனர். ஜனங்கள் வெருண்டு, திக்குக்கு ஒருவராகச் சிதறுண்டனர். அப்புறம் பார்த்தபோது பாபு சாகேபும் சிங்கமும் பிணமாகிக் கிடந்தனர். அந்தப் பழமையான ஸிதார் வாத்யம் நூறு சுக்கலாக உடைந்து கிடந்தது. கண்களில் நீர் வந்து மறைக்க, கைவிரல்கள் உதற, உயிரை ஈந்து தனக்குப் பேருதவி புரிந்த அச்சிங்கத்தின் சிரத்தைத் தொட்டு அஹமத் ஸலாம் செய்துவிட்டுக் கீழே சின்னபின்னமாகிக் கிடக்கும் ஸிதாரின் துண்டுகளை வாரி மடியில் வைத்துக் கொண்டு விகாரமாக அலறிக்கொண்டே ஓடினான்.

*　　*　　*　　*

இப்போது நௌபாரா என்னும் ஊரில் அஹமத் பயித்தியக்கார விடுதியில் இருக்கிறான். அவனுக்கு வேண்டிய சௌகரியங்களை ஆக்ராவிலுள்ள பெயர்போன நாட்டிய மாது குல்பதன் பீபீதான் செய்துவருகிறாள்!

குருவியின் ஸம்ஸாரம்

அச்யுத ராய்

முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்க வசதியான இடம் அகப்படாமல் ஆணும் பெண்ணுமாகிய சிட்டுக்குருவிகள் இரண்டு அலைந்துகொண்டிருந்தன. கடைசியில் குறுகிய சந்திலுள்ள ஒரு பாழடைந்த வீட்டின் முன்பக்கத்திலிருக்கும் பக்ஷிக் கூட்டில் வந்து அவை குடிபுகுந்தன. இரண்டும் எங்கெங்கிருந்தோ குப்பையையும் கூளத்தையும் சேகரித்துக்கொண்டு வந்து நிச்சிந்தையாகக் கூடுகட்டுவதில் மனத்தைச் செலுத்தின. பெரிய ரஸ்தாக்களில் நடமாடும் துஷ்டப் பிள்ளைகளின் தொந்தரவு இங்கே இல்லை; பருந்து போன்ற கொடிய பக்ஷிகளின் உபத்திரவமும் இல்லை. இந்தப் பாழும் வீட்டில் இராக் காலங்களில் மட்டும் படுத்துக் கொள்ள வரும் ஒரு பரம ஏழையான மாணவனைத் தவிர்த்து வேறு ஜன சந்தடியே இல்லை. அவனும் பொழுது விடியும்போதே எங்கோ போய்விடுவான். முட்டை இட்டுக் குஞ்சு பொரித்து வாழ்வதற்கு இதைக் காட்டிலும் சுகமான இடம் வேறு எங்கே அவைகளுக்கு அகப்படப்போகிறது?

பார்த்துக்கொண்டிருக்கையிலேயே காகிதத் துண்டுகளும், எரிந்து கருகிய தீக்குச்சிகளும், சருகுகளும், மயிர்ச் சுருள்களும், அந்தக் கூட்டில் வந்து குவியலாயின. இன்னும் பல்வேறு வர்ணிக்க முடியாத சாமான்களைச் சேர்த்துக் கொண்டு குருவிகள் அழகான தம் கூட்டை அலங்கரித்தன. அன்றைப் பொழுது முழுவதும் கூடு கட்டுவதிலேயே

கழிந்தது. மத்தியான்னம் சற்று ஓய்வு ஏற்பட்ட நேரத்தில், அவை இரண்டும் விர்ரெனப் பறந்து சென்று, பக்கத்திலுள்ள ஒரு பலசரக்குக் கடையிலிருந்து கீழே சிந்திக் கிடக்கும் பருப்பு, தானியத் தினுசுகளைக் கொத்தித் தின்று பசியாறின. கொஞ்சம் கூட்டிற்குள்ளும் கொண்டுவர அவை மறந்து போகவில்லை. அருகில் மளிகைக்கடை இருக்கும் போது அவைகளுக்கு என்ன குறைவு? ஆண் குருவி வெகுதூரத்திலிருந்து சிரமப்பட்டுக் குப்பையும் கூளமும் பொறுக்கிக் கூட்டை நிரப்பியது. பெண் குருவியோ அழகிய வஸ்துக்களைச் சம்பாதித்து வந்தது. இப்படியே தம் இல்லத்தை அவை செவ்வையாக்கின.

ஒவ்வொரு தினம் வானம் இருண்டு காற்றும் மழையும் கலந்து அடிக்கும். ஆனால் அவைகளுக்கு அதனால் என்ன பயம், சொஸ்தமாக இந்தப் பாழடைந்த வீட்டில் குடியிருக்கும்போது? காற்று வாடையோ மழைச் சாரலோ சற்றேனும் அவைகளின் கூட்டைக் கலைக்கவில்லை. இரண்டும் ஒன்றோடொன்று ஒன்றிக்கொண்டு கும்மென்றிருக்கும்; தம் கூட்டிலேயே வீற்றிருக்கும். பெண் குருவி இந்த இன்பக் கொள்ளையில் கண்ணை மூடிக்கொண்டு கனவு காணும்: 'நம்முடைய ஸம்ஸாரம் வரவரப் பெருகுகிறது. முட்டை இட்டதும், கொஞ்ச நாளைக்கெல்லாம் குஞ்சும் பொரித்து விடுவேன். அவைகளுக்குமே இறகு முளைத்துவிடும்; அப்புறம் பறக்க ஆரம்பித்துவிடும். இந்தப் பட்டணத்தில் வீடுவீடாக, மரம் மரமாக அவை உலவி விளையாடும். இதோ பக்கத்திலிருக்கும் மர நிழலில் வெயிலுக்காக மனிதர் வந்து தங்குகிறார்கள். இரவானால் இம் மரத்தடியிலே பாட்டும் கதையுந்தான். நம்முடைய வாழ்க்கையின் சுகமே சுகம்!'

ஒருநாள் பெண் குருவி தன் புருஷனைப் பார்த்துச் சொல்லியது:

"நீங்கள் கவனித்தீர்களா? கொஞ்ச நாளாக அந்த ஏழைப் பிள்ளையாண்டான் இங்கு வருவதே இல்லை. அவனுடைய படுக்கையோ துணிமணியோ ஒன்றுமே காணோம். எனக்கென்னவோ பயமாயிருக்கிறது. இந்த இடத்தை விட்டு வேறு எங்காவது போனால் தேவலை."

"உனக்கு எப்பொழுதும் திகில்தான். வேறு எங்கே இப்படிப்பட்ட இடம் கிடைக்கப்போகிறது? பாட்டையோரத்

திலுள்ள வீடுகளில் தங்கினுல் பையன்கள் கல்லே எறிந்து நம்மைத் துரத்தி விடுவார்கள். பருந்தின் கண்ணில் பட்டோமோ நாம் உயிர் தப்புவது முடியாத காரியம். அந்தக் கஷ்டமெல்லாம் இந்த இடத்தில் இல்லேயே; நீ எதற்காக இப்படி அதைரியப்படுகிருய்?'' என்றது ஆண் குருவி. இதைச் சொல்லிவிட்டு அது மளிகைக்கடைப் பக்கமாகப் பறந்து சென்றது. பெண் குருவி தனிமையில் இருக்கவே அதற்குத் தன் சிறு வயதுக் கவனங்கள் ஒவ்வொன்ருக வந்தன. இங்கிருந்து வெகுதூரத்திலிருக்கும் ஒரு வீட்டின் கூரையில் அதன் பிறந்தகம். அது தன் ஒரே தம்பியுடன் தாய்தந்தையரின் ஆதரவில் எவ்வளவு கவலேயின்றிக் காலம் கழித்தது! இறகு முளேத்து அது பறக்கும்போது, தம்பிக்கு மட்டும் பறக்கத் தெரியவில்லே. பாவம்! துளியுண்டு முளேத்த இறக்கையை வைத்துக்கொண்டு அதற்கு எப்படிப் பறக்கத் தெரியும்? அப்போது ஒருநாள் சாயந்திரம் எங்கிருந்தோ பாழாய்ப்போன பாம்பு ஒன்று வந்து அதன் தம்பியை...... இவ்வாறு பழைய நினேவுகள் வந்துகொண் டிருக்கையில் கடைக்குச் சென்றிருந்த ஆண் குருவி வந்துவிடவே, "என்ன கொண்டுவந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டது பெண்குருவி ஆவலுடன்.

"நீ இனிமேல் வெளியே போகவேண்டிய அவசியமே இல்லே. உனக்கு நாளாகிவிட்டது. பாதிவழியில் எங்கேயாவது உனக்குப் பிரசவ வேதனே கண்டால் என்ன பண்ணுகிறது? உனக்கு வேண்டிய உணவுப் பொருள்களேக் கொண்டுவந்திருக்கிறேன்."

"ஆமாம், நீங்கள் இந்தச் சமயத்தில் என்னேத் தனியாக விட்டுச் செல்லவேண்டாம். எனக்கென்னவோ பயமாயிருக்கிறது."

"அடி அசடே! நீ ஏன் இப்படிச் சின்னக் குஞ்சுபோல் பயந்து சாகிருய்? பருந்தினுல் இங்கே வரமுடியுமா என்ன? அப்படி வந்தால்கூட அதற்குத் தகுந்த பாடம் நான் கற்பிப்பேன்."

"அம்மாவிடம் என் நிலேமையைப்பற்றிச் சமாசாரம் எட்டவிட முடியுமா?"

"அவள் இப்போது எங்கிருக்கிருளோ? கொஞ்ச நாளாகவே அவளே நான் காணவில்லே."

"நான் இடம் சொல்லுகிறேன்: நேர் வடக்கே போனால் எல்லாவற்றையும்விட ஒரு பெரிய பூந்தோட்டம் தென்படும். அங்கே தோட்டக்காரனுடைய விடுதியின் கூரையில் தென்னண்டைப் பக்கம் அம்மாவின் இருப்பிடம். இரவு நேரங்களில்தான் அவள் அங்கே வந்து தங்குவாள். பகற் பொழுதில் அவளை உங்களால் காணமுடியாது. அவளுக்கு எத்தனையோ தொல்லைகள். சாப்பிடுவது ஓர் இடம், படுப்பது ஓர் இடமாயிற்றே. இன்று சாயங்காலம் கட்டாயம் போய்ப் பாருங்கள் அவளை."

"சரி."

"நம் வீட்டுப் பக்கமாகக் கொஞ்ச நாளாகவே அதிக மனித நடமாட்டமா யிருக்கிறதே. இந்தக் குருட்டுச் சந்தில் கூடவா இவ்வளவு ஜன சந்தடி? நீங்கள் வெளியில் போயிருக்கிறபோது அவர்கள் என்ன என்னவோ சாமான்களையும் கம்பு கழிகளையும் கொண்டுவந்து நிரப்புகிறார்களே."

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அவர்கள் தங்கள் காரியமாக என்னவோ செய்கிறார்கள். நமக்கென்ன அதனால் இடையூறு?"

"நீங்கள் எப்பொழுதும் இப்படித்தான் பேசுவீர்கள்! நேற்று மத்தியான்னங்கூடச் சிலர் இந்த வீட்டின் சுவர்களை அளந்துகொண்டு போனார்களே. அது எதற்காக? எனக்கென்னவோ திகிலாகத்தான் இருக்கிறது."

"சே! இதெல்லாம் வீண் கிலி. நீ தனியாக இருக்கையில்தான் உனக்கு இந்த மாதிரிக் கலவரம் ஏற்படுகிறது. இன்று சாயந்தரமே உன் அம்மாவை அழைத்துக்கொண்டு வருகிறேன். அவள் வந்துவிட்டால் உனக்கு இந்தப் பயமெல்லாம் பறந்தோடிவிடும்."

"பக்கத்து வீட்டுப் பெண்கள் அன்று குழாயடியில் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டிருந்தால் நீங்களே திகிலடைந்து போயிருப்பீர்கள். நாம் இருக்கும் இந்த வீட்டை இடித்துவிட்டுப் புதுத்தெரு ஒன்று போடப்போகிறார்கள் என்று அவர்கள் பேசிக்கொண்டார்களே. அது கூடவா பொய்யாக இருக்கும்?" என்று பெண் குருவி கேட்டது. "பேஷ், இதெல்லாம் பெண்களின் வம்பளப்பே ஒழிய வேறொன்றுமில்லை. இந்த வீட்டை இடித்துத் தள்ளிப் புதிய

தெரு உண்டாக்குவ தென்றுல் நடக்கிற காரியமா என்ன? எல்லாம் சுத்தப் பொய்! யாரோ கயிறு திரிக்கிருர்கள்!" இவ்வாறு ஆண் குருவி அதை ஆசுவாசப்படுத்தியது.

இன்னும் இரண்டு தினங்கள் சென்றன. ஆண் குருவி தன் பேடையின் தாயிடம் சென்று அதன் நிலைமையைச் சொல்லிவிட்டு வந்தது. ஆனுல் குருவியின் தாய் வருவ தாகக் காணவில்லை. ஒரு வேளை அதுவும் கூடு கட்டுவதில் ஈடுபட்டிருந்ததோ என்னவோ?

உணவுப் பொருள்களைக் கொத்திக்கொண்டு ஆண் குருவி தன் இருப்பிடத்திற்கு வந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்ததோ இல்லையோ பெண் குருவி ஓலமிட்டு, "ஐயோ! எல்லாம் பாழாகிவிட்டதே. இன்று மத்தியான்னமே இந்த வீட்டை இடிக்கப் போகிருர்களாமே! இப்போதுதான் பக்கத்து அறைகளைப் பார்வையிட்டுவிட்டுச் சில மனிதர்கள் சென்ருர்கள். அதோ! உங்கள் கண்ணுலேயே பாருங்கள். பெரிய பெரிய கடப்பாரைகளைச் சுவர் மூலைகளில் சாய்த்து வைத்திருக்கிருர்களே. இப்போதுகூடவா என் பேச்சில் நம்பிக்கை விழவில்லை?" என்று கூவிற்று.

"உம். சரிதான்" என்றது ஆண் குருவி திக்பிரமித்து.

"இப்போது என்ன செய்வது?"

"வீட்டை இடித்துவிடுவார்கள்போலத்தான் தோன்று கிறது."

"ஐயோ! நாம் போகிற கதி?" என்றது பெண் குருவி.

ஆண் குருவி அலகினுல் தன் பேடையைத் தடவிக் கொடுத்துச் சமாதானப்படுத்தியது. 'யாதொரு பயமு மில்லை. முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துப் பெரிதாகி, இறகு படைத்துப் பறக்கும்வரை ஒரு கேடும் விளையாது. அப்படிக்கூடவா மனிதர்கள் கிராதக எண்ணம் உடையவர் களா யிருப்பார்கள்? குருவிக்கூட்டைக் கலைப்பது மகா பாபமாயிற்றே! குஞ்சுகளுக்குப் பறக்கத் தெரிந்ததும் வேறு இடம் தேடிக்கொண்டால் போகிறது. இதற்குள் என்ன அவசரம்? இந்தப் பெண் ஜன்மங்களே இப்படிச் சீக்கிரத் தில் இடிவிழுந்து போகின்றன!'—இவையெல்லாம் ஆண் குருவியின் மனேபாவங்கள். ஆனுல் அதன் பேடை ஒன்றுக்கும் திடமடையாமல் தன் புருஷனின் இறக்கையில்

முகத்தை வைத்துக்கொண்டு குலுங்கக் குலுங்க அழத் தொடங்கியது.

வெளிப்பக்கம் ஒரே கோஷமாயிருந்தது. கடப்பாரைகளின் தாக்குதலினுல் அந்தப் பாழடைந்த வீடு அதிர்ந்தது; அதோடு அந்த அற்பமான பக்ஷிக்கூடும். கூலியாட்கள் ஜன்னல்களையும், வாயிற் கதவுகளையும் பெயர்க்கலாயினர். கர்ப்பிணியான பெண் குருவி இதைக் கண்டு அலறி, "இன்னுமா அத்தாட்சி வேண்டும்? இப்போதே போய்விடலாமே! கடைசியில் நம் தலைவிதி சுவரின்கீழ்ச் சிக்கிக் குமைந்து போகவேண்டியதுதானு?" என்றது.

குருவிகள் இரண்டும் தற்காப்பிற்காகப் பறந்து சென்று பக்கத்து வீட்டின் மாடிக் கைபிடி சுவரில் வந்து அமர்ந்து அந்தப் பாழடைந்த வீட்டில் நடப்பவற்றையெல்லாம் கண்கொட்டாமல் கவனித்துக்கொண்டிருக்கையில் சிரமப்பட்டு அவை நிருமித்த அழகிய இல்லம், கீழே சுவர் சரியும்போது சின்னபின்ன மாகிவிட்டது. பெண்குருவி இந்தக் காட்சியைப் பார்க்கத் தாளாமல் ஆண் குருவியின் மார்பில் தன் முகத்தைப் புதைத்து, "இனி நம் கதி என்ன?" என்று கேட்டது. "ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை. இன்றைக்குள்ளேயே நான் வேறு இடம் தேடி உன்னைப் பத்திரமாக வைக்கிறேனு இல்லையா பார்! இதற்கு முன் கட்டிவைத்ததைக் காட்டிலும் அழகான கூடு கட்டித்தரேன் உனக்கு. அழாதே, என் கண்ணே! இந்தப் பாழும் பட்டணத்தைத் தாண்டிச் சென்ருல் நெருங்கி அடர்ந்திருக்கும் மர வரிசைகளின் மறைவில் ஒரு பெரிய வீட்டில் நேர்த்தியான இடம் பார்த்திருக்கிறேன். அங்கே போய்விட்டால் நமக்கு யாதொரு தீங்கும் நேரிடாது. இடம் கொஞ்சம் தொலைவே தவிர வேறொரு கஷ்டமும் இல்லை. அங்கும் உணவுக்கு ஒரு குறைவும் இராது. வா, நாம் அங்கே போகலாம் — பேஷான இடம் அது" என்றது ஆண் குருவி.

இரண்டும் விர்ரெனப் பறந்து தென்திசையே சென்றன.

பாதி வழியில் பெண் குருவி சொல்லிற்று:

"இன்னும் எத்தனை நாழிகை பறக்கவேண்டும்? என் வயிற்றை என்னவோ வேதனை செய்கிறது. என்னுல் வெகு நேரம் இந்த நோவுடன் பறக்கமுடியாது. இன்று சாயங்திரமே நான் முட்டையிட்டாலும் இட்டுவிடுவேன். இங்கே

எங்கேயாவது தங்கிவிடலாமே. என்னல் பறக்க முடியவில்லையே."

"இங்கேயா தங்குவது? இன்னும் கொஞ்ச தூரந் தான்."

"கிட்ட இருந்தால்கூட என்னல் ஆகாது. இப்படியே சற்றுநேரம் பறந்தால் தலை சுழன்று நான் கீழே விழவேண்டியதுதான். அப்படி இருக்கிறது என் உடம்பின் பாதை, அம்ம...அம்ம!"

"சரி, ஆனல் இறங்கிவிடலாம்."

ஒரு வீட்டின் ஓரமாயுள்ள, இலைகள் தழைத்திருக்கும் மரமொன்றில் அவை இரண்டும் வந்து தங்கின. ஆண் குருவி பரபரவென்று சருகுகளையும் கூளங்களையும் திரட்டிக் கொண்டு வந்து கூடுகட்ட ஆரம்பித்தது. பெண் குருவி ஓய்ந்துபோய் உட்கார்ந்துகொண்டிருந்தது. அதற்குப் பெருமூச்சும் வேதனையும் உண்டாயின. அதற்குள் பொழுது சாயும் சமயமாகிவிட்டது. அவ் வீட்டில் மரத்திற்கு அருகிலுள்ள அறைகளில் விளக்கேற்றப்பட்டது. பாவம், அந்த மாலை மங்கலில்கூட ஆண் குருவி கூட்டைப் பாங்காக அமைத்துக்கொண்டிருந்தது. எவ்வளவு ஆசை அதற்குத் தன் பேடையின்மீது! ஆகாயத்தில் சந்திரனும் கிளம்பிவிட்டது. நிலா வெளிச்சத்தில் கண் தெரிந்தால்தானே? கூடு கட்டுவது அரைகுறையாக நின்றுவிட்டது. அதே சமயம் மரத்தின் பக்கமாக உள்ள அறையின் சாளரத்தைத் திறந்து ஒரு யுவதி, "இந்தப் பாழும் பறவைதான் சாகாதோ! நிலவைப் பார்த்ததும் பாட்டை ஆரம்பித்துவிட்டதே மறுபடியும்" என்று பெருமூச்சு விட்டு விரகதாபத்தினல் சொல்லிக்கொண்டாள். பக்ஷியின் இன்னிசை, பிரிவாற்ருமையிலிருக்கும் அவளுக்கு எரிச்சலையும் துன்பத்தையும் தந்ததுபோலும்! அன்று நள்ளிரவாயிற்று, கூட்டை ஒருவாறு கட்டி முடிப்பதற்கு. "இப்போது உடம்பு எப்படி யிருக்கிறது?" என்று விசாரித்தது ஆண் குருவி.

"உம்...ஐயோ...உம்..."

"உனக்கென்ன உடம்பு, சொல்லேன்?"

"ஒன்றுமில்லை. உங்கள்பாட்டிற்கு இருங்களேன்."

"தலைவலி எப்படியிருக்கிறது?"

"சுமார்தான். ஆம்...ஊம்."

"கூட்டைக் கட்டிவிட்டேன். வந்துபார், என்ன அழகாயிருக்கிறது! நிம்மதியாக அதனுள் போய்ப் படுத்துக்கொள். இனிமேல் ஒரு பயமும் இல்லை."

"எல்லாம் நன்ருகத்தான் அமைந்திருக்கிறது......உம்......உம்......"

"ஆனுல் இந்த மனிதர்களுக்கு மூளையென்பதே இல்லை. எங்கேயாவது வீட்டை அண்டினுற்போல் மரத்தை வளர்ப்பார்களா?"

"எனக்கும் அதுதான் பயமாயிருக்கிறது."

"எதற்காக?"

"என்னவோ பண்ணுகிறதே என் உடம்பை. அம்மாவைச் சீக்கிரம் அழைத்துவர முடியுமா?"

"ராத்திரி இத்தனை நாழிகைக்கு மேலா?"

"ராத்திரியானுல் என்ன? நன்ருக நிலவு காய்கிறதே. போய்ப் பாருங்கள்: நான் சொன்ன இடத்தில் அம்மா இருப்பாள். பொழுது புலர்வதற்குள் வந்துவிடலாமே."

"சரி, இதோ போய் நொடிப்பொழுதில் வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு ஆண் குருவி ஒரே மூச்சில் அந்தப் பூந்தோட்டத்தை நோக்கிப் பறந்தது.

அந்தக் குருவிகள் கூடு கட்டியிருக்கும் மரத்தின் இலைகள் மிகவும் சின்னஞ் சிறியவை. இன்னும் அடர்ந்த மறைவிலோ கனமான கிளையிலோ அவை கூடு கட்டியிருக்கக் கூடாதா? இந்த மரம் வீட்டிற்குச் சமீபம் இருப்பதால் அவ் வீட்டுச் சிறுவர்களுடைய கண்ணிற்குப் படாமல் போகாது. அவர்கள் என்ன கேடுகள் விளைவிப்பாரோ தெரியாது. ஆண் குருவி திரும்பி வர இன்னும் எவ்வளவு நேரமாகுமோ? பேடைக்கு வயிற்று வேதனை அதிகமாயிற்று. அதனுல் நோவு தாள முடியவில்லை. "ஐயோ! ஐயோ! அம்மா! கண்ணை இருட்டிக்கொண்டு வருகிறதே எனக்கு. யாரும் பக்கத்தில் இல்லையே சகாயத்திற்கு, ஐயோ...இதென்ன! உம் உம்ம்ம். ... அவரை ஏனே இந்தச் சமயத்தில் அனுப்பித்

தொலைத்தேன்? அவர் இருந்தால் மட்டும் பெண்களுடைய இந்த அவஸ்தை எப்படித் தெரியப்போகிறது? என்னை என்னவோ பண்ணுகிறதே. அம்மா......" என்று அரற்றிப் பெண் குருவி மெத்தென்று இருக்கும் கூட்டில் சாய்ந்து விட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் அதன் அருகில் இரண்டு முட்டைகள் இருந்தன.

ஆண் குருவி திரும்பி வந்தபோது கிழக்கு நன்றாக வெளுத்துவிட்டது. "உன் அம்மா எங்கே தேடியும் அகப் படவில்லை. அன்று அடித்த காற்று மழையில் அவள் எங்கோ போய்விட்டதாகக் கேள்விப்பட்டேன். எதற்கும் அவள் வந்தால் இங்கே வரும்படி நம்மவர்களிடம் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்" என்றது ஆண்.

"பார்த்து மெல்ல வாருங்கள், உள்ளே. இடறிவிடப் போகிறீர்கள்" என்றது பெண் குருவி சற்றுக் கூச்சத்துடன்.

"என்ன சமாசாரம்?"

"முட்டைகள் இருக்கின்றன; அதனால்தான் சொன் னேன். அப்ப! என்ன சங்கடப்பட்டேன்! போதும் போதும் இந்தச் சுகம். இந்தப் பெண் ஜன்மமே எடுக்கவேண்டாம்."

"அதை ஏன் நீ முன்னாடியாகவே சொல்லவில்லை? எத் தனை இட்டிருக்கிறாய்? இரண்டா?"

"கூவாதீர்கள் - கீழே பையன்கள் வட்டமிட்டுக்கொண் டிருக்கிறார்கள். நம்முடைய பேச்சைக் கேட்டால் கல் எறிந்து கூட்டைக் கலைத்து, நம்முடைய செல்வமனைத்தை யும் நாசமாக்கிவிடுவார்கள்" என்றது பெண் குருவி, அதன் இனத்திற்கு இயல்பான ஜாக்கிரதை புத்தியுடன்.

குருவிகள் இரண்டும் வெகுநேரம் வரை நிச்சப்தமாக உட்கார்ந்திருந்தன. வழக்கம்போல ஆண் குருவி மீண்டும் பேச ஆரம்பிக்கும். உடனே பேடையின் கண் ஜாடையைப் பார்த்ததும் தன்னைத் திருத்திக்கொண்டு சும்மா இருந்து விடும். இப்படியே அவை முட்டைகளை அடைகாத்து நாட்களைக் கழித்தன.

இப்போது இருக்கும் இடத்திலும் அவற்றின் உண விற்குக் குறைவில்லை. அந்த வீட்டுப் பிள்ளைகள் தின்பண் டத்தைப் பாதி தின்றுவிட்டு எறிந்துவிடுவார்கள். அவற்

றைத் திரட்டிக்கொண்டு வரும் ஆண் குருவி. இரண்டு வயிற்றிற்கு அது எவ்வளவோ அதிகம்!

ஆண் குருவி தன் பேடையைச் இறகாரச் சற்றுப் பறந்துவிட்டு வரும்படி தூண்டும். ஆனால் அதற்கு இன்னும் வெளியேறத் தைரியம் பிறக்கவில்லை. மேலும் முட்டைகளை விட்டு அது எப்படி வரும்?

ஆண் குருவி ஒருநாள் தன் பெட்டையைப் பார்த்து, "குஞ்சு பொறிக்க இன்னும் எத்தனை நாள் ஆகும்?" என்றது.

"ரொம்ப நாள் போகாது. இரண்டு நாளைக்கெல்லாம் குஞ்சுகள் வெடித்து வெளி வந்துவிடலாம். இப்போதே முட்டையினுள் டொக் டொக்கென்று சப்தம் கேட்கிறது."

"ஆனால் நமக்கு இரண்டு குஞ்சுகள்தானா பிறக்கப் போகின்றன?" என்றது ஆண் ஸந்தோஷம் பொங்க.

"இரண்டு முட்டைகளிலிருந்து மூன்று குஞ்சுகள்கூட வருவதுண்டா என்ன? இந்தப் புருஷர்களுக்கே என்ன ஆசையப்பா!"

"ஆனால் அவை எத்தனை நாளைக்குள் இறகு முளைத்துப் பறக்கும்?"

"அதை என்னால் எப்படிச் சொல்ல முடியும்? அம்மா வானால் சொல்லுவாள். அவளுக்கு இதெல்லாம் அனுபவம். அவள் ஏனோ இன்னும் வரவில்லை? நாளைக்கு நீங்கள் போய் இன்னும் ஒரு தரம் பாருங்களேன்."

"போகிறேன்."

மறுதினமே ஆண் குருவி தன் பேடையின் பிறந்தவீட்டிற்குப் பறந்து சென்றது. அது போயிருக்கும் ஸமயம் விஷமக்காரச் சிறுவர்களின் கண்ணிற்கு இக் குருவிக்கூண்டு தென்பட்டு விட்டது. கல்லெறிந்து கூட்டை முட்டைகளுடன் கீழே தள்ளிவிட்டனர். பெண் குருவி வெருவி அந்த வீட்டு மாடியில் போய் உட்கார்ந்து புலம்பிக்கொண்டிருந்தது.

ஆண் குருவி திரும்பிவந்து பார்க்கையில், மரத்தில் கூட்டையும் காணவில்லை, தன் பேடையையும் காணவில்லை. பாவம்! அது கீச்சிட்டுக் கீச்சிட்டு மரத்தைச்சுற்றி அலைந்தது.

கடைசியில் மாடியில் தன் பெட்டை இருபபதைக் கண்டு அங்கே தாவிச் சென்றது.

“நம்முடைய கூடு எங்கே? முட்டைகள் எங்கே?”

“ஐயோ, நான் அப்பொழுதே சொன்னேன்: பையன்களின் கண்ணில் பட்டால் எதுதான் பாழாகாமல் இருக்கும்?”

“கூடு போனால் போகட்டும். முட்டைகள் எக்கதியாயினவோ?”

“அதோ பாருங்கள்; அவற்றை வைத்துக்கொண்டு அந்தக் கிராதகச் சிறுவர்கள் கோலி விளையாடுகிறார்களே. என் செல்வங்களே! கடைசியில் இவர்கள் கையில் சிக்கியா நீங்கள் நசுங்கிச் சாகவேண்டும்! என்னால் சகிக்க முடியவில்லையே இந்தத் துக்கத்தை” என்று புலம்பி ஆண் குருவியின்மீது சாய்ந்தது பெண் குருவி.

அப்புறம் அந்தச் சிட்டுக் குருவிகள் இரண்டின் கதி என்னவாயிற்றோ நமக்குத் தெரியாது. அவை மறுபடியும் எங்கேயாவது வீட்டின் கூரையிலோ, மரத்தின் பொந்திலோ கூடு கட்டிக் கீச்சுக் கீச்சென்று கூவி ஒன்றொடொன்று இழைந்து பழைய துக்கங்களை மறந்துவிட்டுச் சுகமாகக் காலங்கழிக்கின்றனவோ என்னவோ?



படித்துறை சொல்லும் கதை

ரவீந்த்ரநாத் டாகுர்

நடந்த ஸம்பவங்கள் எங்கேயாவது கல்லின்மேல் பதிவதுண்டோ என்று நீங்கள் வினவும் பக்ஷத்தில், மாந்தர் மறந்துபோன அந்தக் கதைகளை என்னுடைய கற்படிகள் உங்களுக்கு எடுத்துச்சொல்லும். பழைய வரலாறுகளைக் கேட்க விரும்புவீர்களானால் இதோ இந்தப் படிக்கட்டில் உட்கார்ந்துகொள்ளுங்கள். கீழே உருண்டுசெல்லும் ஜலராசியின் இனிய ஓசையைக் கூர்ந்து கேளுங்கள். வெகுநாட்களுக்கு முன்பு தோன்றி மறைந்துபோன அதிசயங்கள் உங்கள் செவிகளில் படும்.

முந்தி நிகழ்ந்த ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது: இதுபோன்ற ஒரு தினம்; ஐப்பசி மாதம் பிறக்க இன்னும் இரண்டே நாட்கள் இருந்தன. விடியற்காலை மிருதுவான குளிர்ந்த காற்று வீசி, நித்திரையிலிருந்து விழித்தவர்க்கு மலர்ச்சியைத் தந்தது. மரத்தளிர்கள் மாருதத்தின் ஸ்பர்சம் பட்டுச் சிலிர்த்து அசைந்தன. பூர்ணப் பிரவாஹமாக ஓடும் கங்கை. என்னுடைய நான்கு படிகள் மட்டுமே நீர்மட்டத்திற்குமேல் தலையைக் காட்டின. ஆறும் கரையும் அடிக்கடி ஒன்றாய்க் கூடும் விந்தை. நதிதீரத்தின் அருகிலுள்ள மாந்தோப்புவரையில் கங்கையின் நீர் பரவிவிட்டது. அதோ தெரிகின்றனவே ஆற்றின் வளைவில் மூன்று பழைய சூளை மேடுகள், அவை அப்பொழுது ஜலத்திற்கு மேல் சிறிதளவே எட்டிப் பார்த்தன. கரையிலிருந்து நதியைத்தொடும் வேல

மரங்களின் வேர்களில் வலைஞர் தங்கள் படகுகளைக் கட்டி வைப்பார்கள். காலை வரும் பெருக்கில் அவை தளும்பி மிதந்துகொண்டே இருக்கும். இளமையின் வேகத்தைப் போலவே நதியின் வெள்ளமும் கட்டிற்கு அடங்காமல் இரு கரையும் வழிந்து சென்றது.

சரத்காலமானதால் நீர் நிரம்பி ஓடும் ஆற்றில் படிந்த ரவியின் கிரணங்கள், சண்பக மலரின் பசும் பொன்னிறங் கொண்டு விளங்கின. கதிரவன் விடும் ஒளி அவ்வித வர்ணத் துடன் திகழ்வதை வேறு எந்தக் காலத்திலும் காணமுடி யாது. ஆற்றுத் திடர்களில் நாணற்செடிகளிடையே சூரிய வெளிச்சம் பாய்ந்தது. இங்கொன்று அங்கொன்ருக நாணற் பூப் பூத்திருந்ததே தவிர இன்னும் நன்ருகப் பூ எடுக்க வில்லை.

"ராம ராம" என்று பகவானை ஸ்மரித்துவிட்டு, வலைஞர் படகுகளை அவிழ்த்தனர். ஒளியைப் பருகப் பக்ஷி இனங்கள் இறகு விரித்து நீல விசும்பிடைப் பறந்துசென்றன. தோணி கள், தம் வெள்ளைப் பாய்மரச் சீலைகள் காற்றினால் உப்ப நதியில் புறப்பட்டன. அவை ஆடி அசைந்து செல்வது ஹம்ஸங்களின் நினைவை மூட்டியது; ஆனால் படகுகளின் சீலையிறகுகள் மட்டும் மேலே விரிந்து இருந்தன.

புரோஹிதர், தமது நியமப்படி மடிஸஞ்சி, பூஜைப் பேழை, இவற்றுடன் ஸ்நாநம் செய்யத் துறைக்கு வந்தாகி விட்டது. பெண்டிரும் இரண்டொருவர், குடமும் கையுமாய் நீர்மொள்ள வந்தனர்.

இதெல்லாம் வெகுநாளைய சமாசாரம் அல்ல. உங் களுக்கு அதிக நாட்களாகிவிட்டதாகத் தோன்றும்; ஆனால் எனக்கோ, இது நேற்று நடந்ததுபோலவே இருக்கிறது. என்னுடைய வாழ்நாளெல்லாம், இந்த நதியோடுகூட விளை யாடுவதிலேயே கழிகிறது. என் வரைக்கும், நான் கால வரம்பைக் கடந்துவிட்ட மாதிரிதான். பகலில் என் பிரதி பிம்பமும், இரவில் என் சாயையும் நதிநீரில் விழுந்து எங்கோ மறைந்து விடுகின்றன! இவ்வற்புதத்தை நான் பார்க்காத நாளே இல்லை. என்னுடைய கல்வடிவிற்கு முதுமை வந்துவிட்டபோதிலும் என் ஹ்ருதயத்தில் மட்டும் ஓர் அழியா இளமை திகழ்கிறது. பல ஆண்டுகளின் கலவர

மான நினைவுகள் பாசியாக என்னை மூடியிருப்பினும், என் மீது மட்டும் சூரியகிரணம் பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. அகஸ்மாத்தாகச் சில கவனங்கள் என்னை விட்டு அகலாமல் இருக்கின்றன. கங்கையின் ஓதம் படாத என் படிகளின் இடுக்குகளில் முளைத்திருக்கும் கொடிகளும் குத்துச் செடிகளுமே என்னுடைய பழைமைக்கு அத்தாட்சிகளாகும். அந்த நினைவுகளோடு என்னைப் பிணைத்து, என் ஜீவியதசையைப் புதுமையாகவும் பச்சென்றும் விளங்கும்படி அவை செய்கின்றன. கங்காதேவி படிப்படியாக என்னிடமிருந்து விலகிக்கொண்டே போகிறாள். நானும் ஒவ்வோர் அடியாக ஜீர்ணதசைக்கு வந்துவிட்டேன்!

நீராடிவிட்டு 'வவ்வவ்வவ்' என்று குளிரினால் உடல் நடுங்க நாமாவளியை உச்சரித்துக்கொண்டே அதோ வீடு திரும்புகிறாரே சக்ரவர்த்தி குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர், அவருடைய அம்மாவைப் பெற்ற தாய், 'இவ்வளவுண்டு' பெண்ணாயிருக்கும்போது எனக்குத் தெரியும். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது: அவள் நித்தியம் ஆற்று நீரில் இலையினால் பண்ணின படகை விட்டு வேடிக்கை பார்ப்பது வழக்கம். எனக்கு இடதுபுறமாக இருக்கும் மேட்டில் தடைப்பட்டு அந்த இலைப்படகு சுழன்று சுழன்று நீரின் வேகத்தில் அடித்துக்கொண்டு போகப்படும். இதையே அந்தப் பெண் கண்கொட்டாமல் கவனிப்பாள். எனக்குத் தான் காலம் ஓர் எண்ணிக்கையில்லையே! பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அச்சிறுமி பெரியவளாகி தன் பெண் குழந்தையுடன் ஜலம் கொண்டுபோக ஆற்றுக்கு வந்தாள். அவளுடன் வரும் பாலிகைகள் ஒருவர்மீது ஒருவர் நீரை வாரி இறைத்துக் கூச்சலிடும்போது சிறியவளாயிருந்த அந்தப் பெரிய மனுஷி அவர்களை அதட்டுவாள். முன்னே அவள் இலைப்படகை மிதக்கவிட்டு விளையாடினது அப்பொழுது என் நினைவிற்கு வரும். அவ்வளவு பழைய ஆத்மா நான்!

நான் எதைச் சொல்ல எண்ணினேனோ அந்தக் கதை சீக்கிரம் வரமாட்டேனென்கிறதே; ஏதேதோ வம்பளக்கிறேனே. ஒன்றை எடுக்கும்போது வேறொரு நினைவின் ஓட்டம் அதை இழுத்துச் சென்றுவிடுகிறது. அதைப் பிடித்துவைக்க முடியவில்லையே. இரண்டொரு விஷயம் அந்த இலைப்படகை யொத்துத் தப்பித்தவறி என் மனத்திடைச் சிக்கிவிடுகிறது. அந்தக் கதையின் பீடிகை என்

ளைச் சுற்றிச் சுற்றி மூழ்கியும் வெளித்தோன்றியும் அலை கிறது. படகைப்போலவே கதையும் சின்னதுதான்; அதில் பிரமாதமானதொன்றும் இல்லை; ஸரள பாவமுடைய அச் சிறுமி, இரு மலர்களை ஏந்திய தன் படகு நீரில் மூழ்குவ தைப் பார்த்து எப்படிப் பெருமூச்சுவிட்டுத் தன் வீட்டிற் குச் சென்றாளோ, அதேமாதிரி நீங்கள் இக்கதையைக் கேட்டதும் பெருமூச்சு விடுவீர்கள்; அதில் ஸந்தேஹமில்லை.

1

எதிரே தெரியும் கோயிலுக்கருகில் நான் சொல்லுகிற ஸமயம் கோஸ்வாமி வீட்டாரின் மாட்டுக்கொட்டில் இருந் தது. அது இருந்ததன் அடையாளத்தை அங்குள்ள குட்டிச்சுவர் காட்டுகிறது. கோஸ்வாமிகள் இங்கு வந்து குடியேறுவதற்கு முன்பு அந்த இடத்தில் ஒரு பெரிய வேல மரம் உண்டு. அதனருகில் ஓர் ஓலைக் குடிசையும் இருந்தது.

இன்று என்னுடைய உடலில் ஊடுருவிப் பிரவேசித்து என்னை இன்னும் அழிவிற்கு ஆளாக்கும் இந்தப் பிரம் மாண்டமான அரசமரம் அப்பொழுது மிகச் சிறிய செடி. அது செந்தளிர்கள் விட்டு என்மீது ஸதா அசைந்து கொண்டேயிருக்கும். நல்ல வெயில் வேளையில் என் மடிமீது அதன் நிழல் வந்து விளையாடும். அதன் மெல்லிய வேர்கள் ஒரு சிறுபிள்ளையின் விரல்களைப்போன்றே என் சரீரத்தில் குருகுருக்கும். அதன் இலை ஒன்றை யாராவது கிள்ளி னால் எனக்குக் கண்ணீர் வந்துவிடும். எனக்கு இப் பொழுது வயது அதிகமாகிவிட்டாலும், நான் சொல்லுகிற ஸமயம் என் உடல் பலமாகத்தான் இருந்தது. இன்றோ பத்து இடங்களில் தேய்ந்து வளைந்து கூன் விழுந்து போய் விட்டேன். எத்தனையோ இடங்களில் பாளம் பாளமாக என் சரீரம் வெடித்துவிட்டது. அந்த வெடிப்புக்கள் குளிர் காலங்களில் 'கும்' என்று இருக்கும். அவற்றில் எத்தனை தவளைகள் சுகநித்திரை செய்ய இடம் தேடிக்கொள்கின் றன தெரியுமா? எனது இடது பாரிசத்துச் செங்கற் கட் டிடம் சற்றுக் கலகலத்து விட்டது. அந்த வங்குகளில் நாகணவாய்ப் புள்ளினங்கள் கணக்கில்லாமல் குஞ்சு பொரித் திருக்கின்றன. பொழுது புலர்ந்ததோ இல்லையோ, அந்தப் பொந்துகளிலிருந்து எல்லாப் பறவைகளுக்கும் முன்னராக

வானம்பாடி கிளம்பி ஆகாயத்தில் மறைந்து சீழ்க்கை அடிக்க ஆரம்பித்துவிடும்; அதனுடன் குஸுமா துறைக்கு வரும் வேளையும் நெருங்கிவிட்டதென்று நான் கண்டுகொள் வேன்.

நான் சொல்லுகிற பெண்ணை அவளுடன் வரும் தோழி மார்கள், "குஸுமா" என்று அழைப்பார்கள். அதனல் தான் அவள் பெயர் எனக்குத் தெரியலாயிற்று. ஜலத்தில் குஸுமாவின் சாயை விழும்போதெல்லாம், 'இந்தப் பிரதி பிம்பம் இப்படியே என் ஹ்ருதயத்தில் பதிந்துவிடக் கூடாதா? இதைக் கல்லில் இருத்திவிட முடியாதா?' என் றெல்லாம் ஆவல் கொள்வேன். என்ன அசட்டு எண்ணங் கள்! நான் பார்த்தவற்றுள் எதுதான் நிலையாக நின்றது? பாதசரங்கள் கலீரென்று ஒலிக்கத் தன் கால்களை என்மீது அவள் வைக்கும்போது என்மேல் வளரும் புற்பூண்டுகள் கூடப் புளகமுறும்.

அவளுடன் வரும் சிறுமிகளும் அவளைப்போலவேதான் விளையாடுவார்கள்; வேடிக்கையாகப் பேசுவார்கள்; சிரிப் பார்கள். ஆனாலும், அவளுக்கு இணை ஆகமாட்டார்கள் மற்றப் பெண்கள். அவளிடத்தில்தான் எனக்குப் பற்றுதல்! அவள் ஸாது, மிகவும் நல்ல பெண் என்று நான் சொல்ல வரவில்லை. அவளும் விஷமக்காரிதான். மற்றவர்களெல்லோ ரும் அவளை, "அடி குஸி, ராக்ஷஸி" என்று கேலி செய்வார் கள். அதற்கு உடனே அவள் வெட்டெனப் பதில் தருவாள். அவளுடைய தாய், "குஸுமி" என்று அவளைச் செல்வ மாக அழைப்பது வழக்கம். அவளுக்கு வேளை ஸமயம் என் பதே இல்லை; ஸதா ஆற்றில் துளைந்துகொண்டிருப்பாள். அவளுடைய ஹ்ருதயத்திற்கும் இதோ செல்லும் நீரோட்டத் திற்கும் ஒருவித ஒற்றுமை இருந்தது. அதற்கேற்றாற்போல ஜலம் என்றால் அவளுக்குப் பிராணன்!

அப்புறம் கொஞ்சநாள்வரை குஸுமாவை நான் காண வில்லை. புவனியும், ஸ்வர்ணாவும் மட்டும் துறைக்கு வந்து கண்ணீர் உகுப்பார்கள். எதற்காகவென்று எனக்குத் தெரிய வில்லை. அன்பார்ந்த ஸகியை விட்டுப் பிரிந்ததனலா?— அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து குஸுமா புக்ககம் போய்விட்டதாக ஏற்பட்டது. அந்த ஊரில் ஆறு என்பதே

இல்லையாம். மனுஷ்யர், வீடு, வாசல் எல்லாம் புதியவை யாம். ஆஹா! ஜலத்தில் பிறந்த தாமரையை நிலத்தில் கொண்டுபோய் வளர்த்தால்?

2

ஒருவாறு நானும் குஸுமாவை மறந்துபோகலானேன். ஒரு வருஷம் ஆயிற்று. துறைக்கு வரும் பெண்கள் அவளைப் பற்றியே பிரஸ்தாபிப்பதில்லை. கடைசியாக, ஒருநாள் ஸாயங்காலம் சட்டென்று மிகப் பரிசயமான யாருடைய காலடியோ என் மார்பில் பட்டது. எனக்குச் சிலிர்த்தது. குஸுமா வந்துவிட்டாளா? ஆம்! அவளுடைய பாதஸ்பர் சமே. ஆனால் அவளுடைய சதங்கை ஏன் சப்திக்க வில்லை? அவள் பாதங்கள் இழைக்கும் மதுரநாதம் எங்கே? குஸுமாவின் மெல்லடியும் அந்தச் சதங்கையின் ஓசையும் என்னுடைய ஒவ்வோர் அணுவிலும் பதிந்து அழியாத ஒரு ஞாபகத்தை மூட்டியிருக்கின்றன. அதை அனுபவித்த பிறகு எனக்கு ஜலத்தின் குளிர்ந்த ஸ்பர்சமும், மதுரகல்லோலமும் பிடிக்கவில்லை. கரையிலுள்ள மாமரத் தளிர்களின் சல சலப்பு, காற்றுவாக்கில் 'ஐயோ, ஐயோ' என்று ஓலமிடு வது போல் இருந்தது. இது என்ன பிரமை!

குஸுமா விதவை யாகிவிட்டாள். அவளுடைய புரு ஷன் வெளியூரில் எங்கோ பெரிய உத்தியோகஸ்தனா யிருந்தா னாம். அவனுடன் அவள் கூடிக் குலாவினதெல்லாம் இரண்டே நாள்தான்; அப்புறம் அவள் தன் கணவனைப் பார்க்கவே யில்லையாம். கடித மூலமாகப் புருஷன் இறந்து போன செய்தி தெரிந்ததாம். எட்டு வயதான இச் சிறு பெண்மலர், பாவம், நெற்றியிலுள்ள குங்குமத்தை அழித்து விட்டு மாங்கல்யம் இழந்தவளாய்த் தன் பிறந்தகத்திற்கே — இந்த நதிக்கரைக்கே — வந்துவிட்டாள். அவளுக்கு இப் போது தேறுதல் சொல்ல அந்தத் தோழிகள் எவருமே இல்லை. புவனி, ஸ்வர்ணு யாவரும் புக்ககம் போய்விட்டனர். சரத் மட்டும் இருந்தாள். அவளுக்கும் தை மாதம் கல்யா ணம்; சீக்கிரம் புக்ககம் போய்விடுவாள். இனிமேல் குஸுமா தனியாகத்தான் இருக்கவேண்டும்.

அது கிடக்கட்டும். அவள் இப்போது தலையில் கையை வைத்துக்கொண்டு என் மடிமீது உட்கார்ந்துகொண்டாள்.

நதியின் சிறு வெள்ளலை கைகொட்டி, "குளி, ராக்ஷஸி" என்று பழையபடி விளையாட்டிற்கு அழைப்பதுபோல் இருந்தது அவளுக்கு. குஸுமாவினுடைய தீராத்துயர் அந்தச் சஞ்சல ஸ்வபாவமுடைய அலைப்பிள்ளைகளுக்கு எப்படித் தெரியப்போகிறது? ஒரே இடத்தில் அசைவற்றிருக்கும் இயல்புடைய நான் இந்தத் துக்கத்தைக் கண்டு சகிக்க வேண்டியிருக்கிறதே! அவைகளோ எதையும் பொருட்படுத்தாமல் வேடிக்கைமீதே கவனமாக ஓடிக்கொண்டிருக்கின்றன.

3

மழைத்தொடக்கத்தில் இருந்தாற்போலிருந்து கங்கையின் ஜலம் கபகபவென்று ஒவ்வொரு படியாக ஏறிற்று. குஸுமாவும் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே மதமத வென்று வளர்ந்து அழகிய யுவதியாக மாறிவிட்டாள். ஆனால் அவளுடைய எளிய உடையும், வேதனையுற்ற வதனமும் அவள் யௌவனத்தின் வனப்பை மறைக்க முயன்றன. குஸுமா பெரியவளாகிவிட்டதை யாராவது கவனித்தார்களா? — விதவையைப்பற்றி யாருக்குக் கவலை? ஸதா அவளைப் பார்ப்பதனாலேயோ என்னவோ அவளிடத்தில் ஒரு வித்தியாஸமும் எனக்குத் தெரியவில்லை. அவளுடைய கால்களில் பாதசரம் இல்லாது போனாலும் அதனுடைய ஓசை மட்டும் என் செவிக்குக் கேட்டது. பழைய நினைவுகள் மாறுவதென்றால் லேசா? பத்து வருஷகாலம் இப்படியே ஸ்வப்னம்போல் பறந்து சென்றது அந்த ஊரார் யாருக்குமே தெரியாது. இன்றைக்கு உங்களை எப்படி உயிருடன் உண்மையாகப் பார்க்கிறேனோ, அவ்விதமே அவளையும் ஒரு நாள் பார்த்துக்கொண்டிருந்தேன்.

இன்றைத் தினம்போலவே நான் சொல்லுகிற ஸமயத்தில் ஒரு நாள் வந்தது. இன்று திகழும் இயற்கையின் அழகை நீங்கள் பார்த்து அனுபவிப்பதுபோலவே உங்களுடைய பாட்டிமார்களும், அதி காலையில் இளஞ் சூரியன் மதுரமான கிரணங்களைப் பொழிவதைக் கண்டு களித்தனர். அப்பொழுது யுவதிகளாயிருந்த அவர்கள், குடங்களில் நீர் கொண்டு *'கோம்டா'வைச் சரியாக இழுத்து முகத்தை மூடியவண்ணம் மேடும் பள்ளமுமான கிராமப் பாதையில்

* முக்காடு

வேடிக்கையாக ஸம்பாஷித்துக்கொண்டு வருகையில் தங்கள் வயிற்றில் நீங்கள் எல்லோரும் உதிப்பீர்களென்று கனவிலாவது எண்ணியிருப்பார்களா? உங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரியப்போகிறது? என் கண்ணெதிரே, ஒரு காலத்தில் உயிர்பெற்றிருந்த அந்தச் சித்திரங்கள் வந்து நிற்கின்றன. அவர்களும் ஒரு ஸமயம் பல சுகதுக்கங்களை யனுபவித்து வாழ்க்கைப்போரில் ஈடுபட்டிருந்தனர். முன் அவர்கள் கண்டு மகிழ்ந்த ஓர் அழகிய சரத்கால தினம், பல ஆண்டுகள் கழித்து மீண்டும் அதே பொலிவுடன் விளங்கப்போவதை அவர்கள் எங்ஙனம் அறிவார்கள்?

அதே மாதிரி ஸமயம். காலைப்பொழுதில் வாடைக்காற்றுக் கொஞ்சங் கொஞ்சமாக அடிக்க ஆரம்பித்தது. நன்றாக அலர்ந்து உதிரும் வேலம் பூக்கள் காற்றில் பறந்து வந்து என்னுடைய படிகள்மீது குவிந்தன. முத்துப் போன்ற பனித்துளிகள் என்மீது படிந்திருந்தன. அன்று எங்கிருந்தோ தங்கச்சாயலாக, விசாலமான நெற்றிக்கட்டையுடைய பால ஸந்யாஸி ஒருவர் எனக்கு நேராகவுள்ள சிவாலயத்தில் வந்து தங்கினார். ஸ்வாமிகள் வந்த ஸமாசாரம் ஊர்முழுதும் எட்டிவிட்டது. துறைக்கு வந்த பெண்மணிகள் குடங்களை வைத்துவிட்டு அவரை ஸேவிக்க ஆலயத்தை நோக்கிச் சென்றனர்.

கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்தது. ஒரு யதி, அதுவும் மஹாதேஜஸ்வி என்றால் கேட்கவும் வேண்டுமா? நெருக்கம் அதிகமானாலும் யாரையும் அவர் கடிந்துகொள்வதில்லை. அவர் குழந்தைகளைக் கண்டால் கொஞ்சுவார். ஸம்ஸார சுகதுக்கங்களைப்பற்றிப் பெண்டுகளை விசாரித்ததனால் அவர்கள் அவர்பால் அதிக சிரத்தை செலுத்தலாயினர். புருஷர்களும் ஏராளமாக வர ஆரம்பித்தனர். நவீன ஸந்யாஸி சில தினங்கள் பகவத் கீதைக்கு வியாக்கியானம் பண்ணி உபந்யாஸம் நிகழ்த்துவார். அவருடைய வாயினின்று வரும் பாகவதக் கதைகளின் புதிய தாத்பர்யத்தைப் பண்டிதர்களும் பாமரர்களும் மெய்ம்மறந்து கேட்பார்கள். அவர் செய்யும் சாஸ்திர புராண ஆராய்ச்சிக்கோ அளவில்லை. பலர் அவரிடம் உபதேசம் பெற்று இகபர பயத்தைப் போக்கிக்கொண்டனர். தீராத வியாதிகளுக்கு அவரிடம் சிலர் மருந்து யாசித்தனர். ஆஹா! என்ன வசீகரமான தோற்றம் அவருடையது! ஒருவேளை ஈசுவரனே இந்தக்

கோயிலில் ஆவிர்ப்பவித்திருக்கிருனே? — இம்மாதிரியான ஸந்தேகம் எனக்கு ஏற்பட்டது.

தினந்தோறும் உஷக்காலத்தில் அந்தத் தபஸ்வி, துறையை அடைந்து நதியில் தீர்த்தமாடி இடுப்பளவு ஜலத்தில் நின்றுகொண்டு, எதிரே சுக்ர நக்ஷத்திரம் ஆகாய நுதலில் ஜ்வலிக்க, கம்பீரத்வனியில் ஸந்த்யாவந்தனம் செய்வார். அப்பொழுது நான் தன்மயமாகி அதையே சிரவணம் செய்வேன். என்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதுகூட எனக்குத் தெரியாது. வானம் ரத்தவர்ணமாக மாறிவிடும். மேகவிளிம்புகளில் அச்செந்நிறம் மறைந்து எப்பொழுது வெளுக்குமோ எனக்குத் தெரியாது. வான், நதி, திக்கு, கரை யாவும் இந்த வர்ணமாயையில் லயித்து விளங்கும். அம் மஹாபுருஷரின் மந்திர சக்தியினுலோ, இம்மாதிரி இந்திர ஜாலம் இயற்கையில் தோன்றுகிறது? நிசி யென்னும் அரக்கர் ஆட்சி சிதைந்து போவது அவர் விடும் அர்க்கியத்தின் மகிமையினுலோ? ஞாயிறு கோவைப்பழம்போல் ஆகாயத்தில் கிளம்பியது. இயற்கையின் படம் முற்றும் புதுமையாக மாறிக்கொண்டே வந்தது. அம்மஹா புருஷரும் ஸ்நானம் செய்துவிட்டு, தீக்கொழுந்தெனத் தூய்மையை நாற்றிசையும் வீசிக்கொண்டே ஆலயத்தை நோக்கி நடந்தார்.

4

அந்த மாதம் இப்படியே கழிந்துவிட்டது. பங்குனி மாதத்தில் ஒரு சூரிய கிரஹணம் வந்தது. புண்ணிய ஸ்நானம் செய்ய ஜனங்கள் நதிக்கரையில் கூடினர். இதுவே அயலூரார் அனைவரும் ஸந்யாஸியைத் தரிசிக்க ஏற்ற ஸந்தர்ப்பமாக இருந்தது. வேலந் தோப்பினுள் கடைகள் விழுந்தன. அந்தத் தடவை குஸுமாவின் புக்ககத்துப் பெண்டிரும் வந்திருந்தனர். அன்று என்னுடைய கடைசிப் படியில் உட்கார்ந்தவண்ணம் இளம் துறவி தியானத்தில் ஆழ்ந்திருந்தார். தொலைவிலிருந்து அவரைச் சுட்டிக்காட்டி ஒரு பெண் தாழ்ந்த குரலில் மற்றவளிடம், "அடி, இவர் நம் குஸுமாவின் புருஷனைப்போலே இல்லை?" என்று கேட்டாள்.

மற்றவள் முக்காட்டைச் சற்று விலக்கி அதன் இடுக்கு வழியாக அவரைப் பார்த்துவிட்டு, "ஆமாண்டீ, நம்ம சட்டர்ஜீ அகத்துப் பிள்ளைதான்!" என்றுள். இன்னும் ஒருத்தி, "அடியம்மா! அதே ஜாடை; அதே கண்; மூக்குக் கூடவா

அப்படியே இருக்கவேணும்!" என்ருள். வேருெருத்தி — ஸங்யாஸியின்மீது அவ்வளவாகக் கவனம் செலுத்தாதவள் — "நம் குஸுமிக்கு இனிமேல் ஏதடி நல்லகாலம் பிறக்கப் போகிறது? — செத்தவனுவது திரும்பி வருகிறதாவது!... இதெல்லாம் சுத்தப் பைத்தியக்காரத்தனம். அவ்வளவு பாக்கியம் அவள் பண்ணியிருந்தால் இப்படியெல்லாம் ஏன் நடக்கிறது?" என்று பெருமூச்சுடன் மொழிந்தாள்.

அப்பொழுது அங்கே இருந்த ஒருத்தி, "மாமி, குஸுமி அகமுடையானுக்குத் தாடையில் இவ்வளவு மயிர் இல்லை. உயரங்கூட இவ்வளவு இல்லை. இவர் வேறு யாரோ!" என்ருள். இவர்களுடைய ஸம்சயங்கள் ஒருவாறு நீங்கின. அதற்குமேல் வம்பளப்பும் ஓடவில்லை.

கிராமத்தில் குழந்தை முதல் கிழம் உட்பட எல்லோரும் ஸ்வாமிகளை ஸேவித்தாகி விட்டது. குஸுமா ஒருத்திதான் பாக்கி. அவள் இன்னும் இந்த மஹானை வந்து தரிசிக்கவில்லை. புருஷன் இறந்த துயரினுல் அவள் இங்கு வரவில்லையா? ஒரு வேளை புக்ககத்து நாத்திமார் எதிரில் தான் வரக்கூடாது என்று இருக்கிருளா?

5

ஒரு நாள் சாயந்திரம். அன்று பௌர்ணமி திதி. அவளுக்கு என்மீது நினைவு வந்துவிட்டாற்போல் இருக்கிறது. துறையில் அப்பொழுது ஈ காக்கை இல்லை. 'ரிங்ரிங்' என்று சிள்வண்டுகளின் இறகுகீதம் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆலயத்தில் மணி அடித்து அப்போதுதான் ஓய்ந்தது. அதனுடைய ஒலிஅலை நதி நீரின்மேல் பரவித் தூரத்தில் மங்கலாகத் தெரியும் வனரேகையுடன் கலந்துவிட்டது. ஸ்வர்ணத் தகடுபோல் வட்ட மதியும் முளைத்தது. நதியில் பூர்ணப் பிரவாஹம். காற்றே இல்லையென்று சொல்லலாம். அந்த வேளை, மரம் செடிகள்கூட ஏதையோ உற்றுக் கவனிப்பது போல் அசைவற்று நின்றன. எதிரே, அகன்ற ஆற்றின் மணல் திடர்மீதும், தோப்பு, கோயில், சிகரம் இவற்றின் மேலும் நிலவின் வெள்ளிச் சலாகை, நிழலும் ஒளியும் கலந்த ஒரு மாயக்காட்சியைத் தீட்டியது. இருளானது ஒளிக்குப் பயந்து, வெகு தூரத்தில், பனந்தோப்பினுள் போய்ப் பதுங்கிக்கொண்டது. ஏழிலைப்பாலை விருக்ஷத்தின் கொப்புகளில் வௌவால்கள் 'கிர்-கீச்' என்று அரற்றித் தலைகீழாக ஊச

லாடின. வயல்களிடையே நரிகளின் ஊளை கொஞ்சங் கொஞ்சமாக அடங்கிவந்தது.

கோயில் மண்டபத்தைவிட்டு ஸந்யாஸி மெல்ல எழுந்து வெளியே வந்தார். கால்களை அலம்பிக்கொள்ளத் துறையில் இரண்டு படிகள் இறங்கும்போது, கீழ்ப்படியில் ஒரு யுவதி வீற்றிருப்பதைப் பார்த்துத் திரும்பிப் போக யத்தனித்தார். அதே க்ஷணம் குஸுமா, முகத்தில் சந்திரிகை பிரதிபலிக்க நிமிர்ந்து ஸந்யாஸியை நோக்கினாள். அவரை அவள் பார்ப்பது இதுவே முதல் தடவை. அவள் தலையி லிருந்த முட்டாக்குப் பின்புறமாக நழுவி விழுந்துவிட்டது. இருவருடைய கண்களும் சந்தித்தன. ஒருவரை யொருவர் எங்கோ கண்டிருப்பதுபோல அவர்களுக்குத் தோன்றியது. ஒரு வேளை முன் பிறப்பில் அது நேர்ந்திருக்குமோ?......

அதே ஸமயம் அவர்களுடைய தலைக்கு நேராக ஆந்தை 'கிக்' என்று ஒற்றைச்சொல் கூவிச் சென்றது. குஸுமா வுக்குத் தூக்கி வாரிப்போட்டது. தன் ஸ்மரணை வந்து முட்டாக்கைச் சரிப்படுத்திக்கொண்டு எழுந்து யௌவன ஸந்யாஸியின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்தாள்.

ஸந்யாஸி அவளை ஆசீர்வதித்து, "உன் பெயர் என்ன, தாயே?" என்று கேட்டார்.

"குஸுமா" என்றாள் அவள்.

அன்று அவ்வளவோடு பேச்சு நின்றுவிட்டது. குஸு மாவின் வீடு துறைக்கு வெகு ஸமீபத்தில்தான். அவள் மெல் லத் தன் வீட்டை அடைந்தாள். இரவு முழுதும் ஸந்யாஸி என்னுடைய படியின்மீதே உட்கார்ந்திருந்தார். என் னென்ன எண்ணங்கள் அவர் மனத்திடைச் சுழன்றனவோ யாருக்குத் தெரியும்? அவருடைய கண்கள் இமையோடு இமை மூடவில்லை. பூர்ணசந்திரன் மேற்குவானில் தாழ்ந்து, அவருடைய நிழலுருவம் என்மீது விழும்போதுதான் ஸந்யாஸி எழுந்து ஆலயத்திற்குச் சென்றார்.

மறுதினம் முதற்கொண்டு குஸுமா தவறாமல் வந்து ஸந்யாஸியைத் தரிசித்துவிட்டுப் போவாள். அவர் சொல்லும் புண்ணியக்கதைகளைக் கோயிலிலுள்ள ஒரு தூணின் மறைவி லிருந்து கேட்டு இன்புறுவாள். ஸந்யாஸி தம் காலைக் கடன் களை முடித்துவிட்டுக் குஸுமாவை அருகில் அழைத்து அவ

ளுக்கு ஸத்உபதேசம் செய்வார். ஆனால் அவையெல்லாம் அவளுக்குப் புரிந்திருக்குமா? குருவின் ஆக்ஞைப்படி ஊக்கமாக மட்டும் நடந்துவந்தாள். சிவபூஜைக்காகப் பனிமலர் கொய்வது, புனிதமான கங்கை நீரினால் கோயிலை மெழுகி இழை கோலமிடுவது போன்ற ஸேவைகளை அவள் செய்யத் தவறுவதில்லை. ஆனாலும் இவற்றால் அவள் மனத்திற்குச் சாந்தி ஏற்பட்டதா? ஸந்யாஸியின் உபதேசமொழிகளை, என் மடி மீது இருந்துதான் அவள் ஆராய்ந்து பார்ப்பாள். இதனால் அவளுடைய அகக்கண் விசாலமாயிற்று. அவள் முகம் அடிக்கடி பிரகாச மடைவதிலிருந்து காணுதற்கரிய உண்மைகளை அவள் காண்பதுபோல எனக்குத் தோன்றும். முன்பு அவளுடைய முக லாவண்யத்தை மங்கச் செய்த அந்தக் கவலைக்குறிகளெல்லாம் இப்பொழுது எங்கே? விடியற்காலையிலே பக்தி நிரம்பிய உள்ளத்துடன் ஸந்யாஸிக்குத்தொண்டு செய்யும்போது தேவனுக்கே உரியவளாகத் தோன்றுவாள், அந்தப் பாவை. சொல்லுக்கடங்காத ஒரு தெய்விக அம்சம் அவள் எல்லா அவயவங்களிலும் படர்ந்து ஒளிரும்.

௬

சீதகால முடிவு. வாடைக்காற்று மாறி, வஸந்த ருதுவின் வரவை அறிவிப்பதுபோலத் தென்றல் அடிக்கடி உலாவிச்சென்றது. பனி விழுவதும் நின்றுவிட்டது. பருவ மாறுதலினால் மக்களிடையே புத்துணர்ச்சி மூண்டது. படகோட்டிகள் தங்கள் தொழிலையும் மறந்து தெம்மாங்கு பாடுவதில் காலங்கழித்தனர். கவையிலிருந்து கிளைக்குத் தத்தித் தத்திச் சிறு புள்ளினம் பேருவகையுடன் ஒன்றையொன்று கூவியழைத்தன. இம்மாதிரியாகத் தெரியாமலே மாறியது காலமும். இளவேனிலின் உஷ்ணக்காற்றுப் படவே என் பாறை ஹ்ருதயத்திலும் இளமையின் உணர்ச்சி உண்டாயிற்று. என்மீது முளைத்திருக்கும் செடி கொடிகளும் இந்தப் பூரிப்பினால் செழிக்க ஆரம்பித்தன. ஆஹா! இந்த வஸந்த ருதுவின் கவர்ச்சிதான் என்னே! சின்னச் சின்னப் பூக்கள் பசும்புல்மீது பதித்தாற்போல் விளங்கின. ஆனால் இத்தகைய அழகான காலத்தில் குஸுமா ஏனோ இங்கே வருவதில்லை? கொஞ்சநாளாகவே அவளைக் கோயிலில் காணவில்லை; ஸந்யாஸியிடமும் வருவதில்லை. அவளுக்கு என்ன .....? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நான் வெறும் மட்டிக் கல்தானே!

சில தினங்களுக்குப் பின் குஸுமாவும் நவீன தபஸ்வியும் என்னுடைய படிமீது ஒரு மாலை வேளை ஸந்திக்க நேரிட்டது. குஸுமா தலை குனிந்தவாறு "நீர் என்னைக் கூப்பிட்டீராமே?" என்றாள். "ஆமாம், தாயே, நீ ஏன் முன்போல் என்னெதிரே வருவதில்லை? உன் பார்வையில்லாமல் கோயில் பாழடைந்து கிடக்கிறதே! உன்னுடைய விரல்கள் தொடுக்கும் மாலை இல்லாது என் பூஜை குறையாக நின்று விடுகிறது. இது ஏன், அம்மணி?" என்றார் ஸந்யாஸி.

அதற்குக் குஸுமாவினிடமிருந்து பதிலே வரவில்லை.

"உனக்கு என்ன மனக்கிலேசம்? அதை என்னிடம் சொல்லு."

குஸுமா முகத்தைச் சற்று நிமிர்த்தி, "ஸ்வாமீ, அடியாள் மஹாபாபிஷ்டி. அதனாலேயே இந்தமாதிரி..." என்று அரைகுறையாக வார்த்தையை நிறுத்திவிட்டாள்.

ஸந்யாஸி மிகவும் வாத்ஸல்யத்துடன், "குஸுமா, உன் மனஸை ஏதோ கலவரம் வருத்துகிறது. இது நன்றாகத் தெரிகிறதே" என்றார்.

குஸுமாவுக்குத் 'திக்' என்று வாரிப்போட்டது. ஒரு வேளை, ஸந்யாஸி தன் அந்தரங்க விஷயத்தை ஊகித்துக் கொண்டார் என்று எண்ணினாரோ?—அவள் கண் இதழ்களில் நீர் துளித்தது. முகத்தை மேலாடையினால் மூடிக் கொண்டு ஸந்யாஸியின் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்தபடி விம்மி அழலானாள்.

ஸந்யாஸி சற்று விலகி நின்றார். "அம்மா, உன்னை வாட்டும் வேதனையை என்னிடம் பயப்படாமல் சொல்லு. உனக்கு நிச்சிந்தையைத் தரும் மார்க்கத்தை நான் காட்டுகிறேன்" என்றார் அந்த மஹான். குஸுமா பக்தியின் ஆர்வத்துடன் பேச ஆரம்பித்தாள். ஆனால் தன் மனக்குறையை முற்றும் வெளிக்கூற முடியாதவாறு இடையிடையே என்னவோ ஒன்று அவளைத் தடைசெய்தது. "உங்கள் ஆதேசத்தின்படியே நான் சொல்ல முயல்கிறேன். ஆனால் என் மனஸைவிட்டு அந்த ஒரு விஷயம் மாத்திரம் வர மறுக்கிறது. நான் எப்படி வெள்ளையாகச் சொல்லுவேன்?

......தாங்கள் தீர்க்கதரிசி ; அதைத் தாங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்...ஸ்வாமீ, நான் ஒருவரைத் தெய்வம்போலவே பாவித்து என் மனஸில் பூஜை செய்துவந்தேன். அதனுல் உண்டான ஆனந்தமே என் ஹ்ருதயத்தில் பூரணமாகக் குடிகொண்டது. ஒரு நாள் கனவில் — அதைச் சொல்ல என் வாய் கூசுகிறது — என்னுடைய ஹ்ருதயவாஸியான அந்தப் புருஷருடன் நான் ஒரு மகிழ மரத்தினடியில் பிரேம ஸம்பாஷணையில் ஈடுபட்டிருப்பதுபோல் கண்டேன். அது அஸம்பாவிதம் என்று எனக்கு அப்பொழுது தோன்றவில்லை. நான் கண்டது என்னவோ கனவுதான் — ஏன் எனக்கு அம்மாதிரித் தோன்றவேண்டும்?...கனுக் கலைந்தது. ஆனுல் அதன் மயக்கம்மட்டும் இன்னும் என் மனஸைவிட்டு நீங்கின பாடில்லை. விதவையான நான் இந்தமாதிரி பிரமைகொள்வது பாபமல்லவா?...மறுதினம் என் காதலனைப் பிரத்யக்ஷத்தில் கண்டேன் ; என்றும் பார்ப்பதுபோலவே பார்த்தேன். அதற்கப்புறமே நான் அவர் கண்களுக்குத் தென்படாமல் இருக்க உத்தேசித்தேன். கனவில் தோன்றியவை யாவும் இன்னும் என் கண்முன்னே உயிர்பெற்று நிற்கின்றன. என் பாப எண்ணங்கள் அவரை அணுகவொட்டாமல் நான் அந்தப் பரிசுத்த ஆத்மாவிடமிருந்து விலகிநின்றேன். என் பாழும் மனம்மட்டும் அதை மறக்கவில்லையே. இந்த வேதனையே என்னை உருக்குலைக்கிறது. என் வாழ்வு பாழாகி விட்டது. ஐயோ...!"

அவள் கண்ணீர் உதிர்த்து இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது, ஸந்யாஸி தனது இடதுகாலினுல் படியை அழுத்தினதை எனது கல்உள்ளமும் உணர்ந்தது. அவர் எதற்காக அங்ஙனம் செய்தார்? — தம் மனத்தில் எழுந்த கிளர்ச்சியை அடக்கவோ?......

குஸுமா பேசி முடித்ததும் ஸந்யாஸி, "கனவில் நீ கண்ட மனுஷ்யர் யார்?" என்ருர். அப்பொழுது கைகளைக் கூப்பியவண்ணம் குஸுமா மிகவும் கஷ்டத்துடன், "அவர் யாரென்று சொல்லவேண்டுமா?" என்ருள்.

"ஆமாம்."

"ஸ்வாமி, என்னை மன்னிக்கவேண்டும். அந்தப் புருஷர் நீரே!" — அவள் வார்த்தைகள் அவள் காதிலேயே விழுந்

தனவோ இல்லையோ, குஸுமா மூர்ச்சையாகி என் கடினமான மடிமீது சாய்ந்தாள். ஸங்யாஸி கற்சிலைபோல் திடுக்குற்று நின்றார். பிரக்ஞை வந்ததும் குஸுமா எழுந்து உட்கார்ந்தாள். அப்பொழுது அந்த அதிசய ஸங்யாஸி, "அம்மா, நீ இதுவரை என்னுடைய உபதேசங்களைச் சரிவரப் பரிபாலித்து வந்திருக்கிறாய். இன்னும் ஒருதரமும் என் ஆதேசத்தின்படி நீ நடக்கவேண்டும். இன்றே நான் இவ்விடத்தை விட்டுச் செல்லுகிறேன். என்னை நீ மறந்துவிடவேண்டும். ஸத்யம் பண்ணு; இதுவே என் கடைசி உபதேசம்!" என்றார் மிகவும் உருக்கமாய். குஸுமா ஸங்யாஸியின் முகத்தை ஒருதரம் நன்றாகப் பார்த்துவிட்டுத் தன் இச்சை பூர்த்தியானதும், நிதானமாகவே, "தேவரீர் அப்படியே. உமது கட்டளைப் படி......" என்று கூறி நீண்ட பெருமூச்சுவிட்டு அவரை வணங்கினாள்.

ஸங்யாஸி, "ஆனால் நான் போகிறேன்" என்றார். மேலே ஒன்றும் கூறாமல் குஸுமா அவருடைய பாததூளியைச் சிரமேற் கொண்டாள். அந்த மஹான் அப்பொழுதே அவ்விடத்தை விட்டு அகன்றார்.

"அவருடைய சொற்படியே நான் நடப்பேன், நடப்பேன். நான் அவரை மறந்துவிடவேண்டும்..." என்று சித்தப்பிரமை பிடித்தவள்போலச் சொல்லிக்கொண்டே விசையாக இழுத்துச்செல்லும் ஆற்று நீரில் இறங்கிவிட்டாள் குஸுமா. அவளுக்குச் சிறு வயது தொட்டு இன்பத்தைத் தந்த இந்தக் கங்கையா அவள் சாந்தியைக் கோரி வரும்போது இடங்கொடுத்து ஆதரிக்க மறுப்பாள்! அம்புலியும் அஸ்தமித்துவிட்டது. அச்சத்தைத் தரும்படி இருந்தது அந்தகாரம். அவள் ஜலத்தில் மூழ்கின சப்தங்கூடக் கேட்கவில்லை. தன் குழந்தைமீது கங்கைத் தாய்க்கு எவ்வளவு அன்பு! — காற்று என்னைப்போல இதற்குச் சாக்ஷியாகி ஸகிக்கமுடியாத வேதனையுடன் 'உச் உச்' என்று அலறிற்று. நக்ஷத்திர தீபங்கள் அவள் போனதும் ஒவ்வொன்றாக அணைந்துபோய் வானம் வெறிச்சென்று இருந்தது. சிறு பிராயத்திலிருந்து என்மேல் குதித்து ஓடி விளையாடின அந்த மாசற்ற குஸுமம் கடைசியாக இந்த வேடிக்கையைக் காட்டிவிட்டு என் மடியிலிருந்து எங்கேயோ நழுவிவிட்டது!

இஷ்ட தெய்வம்

சரத் சந்த்ர சட்டர்ஜி

1

ஒரு கிராமத்திலுள்ள நதிக்கரையோரத்தில் இரண்டு குயவர் குடும்பங்கள் வசித்துவந்தன. அவர்கள் ஆற்றுக் களி மண்ணை எடுத்துப் பொம்மைபண்ணிச் சந்தையில் போய் விற்று வருவார்கள். வெகுநாட்களாக இந்தத் தொழில் அவர்கள் வயிற்றுக்கு அன்னமும், உடுப்பதற்கு உடையும் அளித்துவருகிறது. ஜலம் தூக்குவது, குழந்தை குட்டிகளுக்குச் சோறு போடுவது, சூளையில் வெந்த பொம்மைகளையெல்லாம் எடுத்துத் தூசுபோகத் தட்டி வர்ணம் பூசுவதற்காகப் புருஷர்களிடம் கொடுப்பது, இவையெல்லாம் அவர்கள் வீட்டுப் பெண்டுகளின் வேலை.

சக்திநாத் என்ற நோஞ்சலான பிராம்மணச் சிறுவன் இந்த மண்பொம்மைமேல் கொண்ட மோகத்தினால் ஒரு நாள் தன் படிப்பு விளையாட்டை யெல்லாம் விட்டுவிட்டு, குயவர்களுடனேயே ஸதாகாலமும் வாசம் செய்யத் தொடங்கினான். அவர்களுக்கு உதவியாக மூங்கில் கொம்புகளைக் கூராகச் சீவிவைத்து, பொம்மைகளை யெல்லாம் மழமழவென்று தேய்த்துக் கொடுத்து, அவர்கள் அசட்டையாக வர்ணம் தீட்டுவதை மிக்க வெறுப்புடன் பார்த்துக்கொண்டிருப்பான். பொம்மைகளுக்குக் கறுப்புவர்ணத்தினால் புருவம்

கண்கள் இவற்றை எழுதுவார்கள். சிலவற்றின் புருவம் பட்டையாகவும், சிலவற்றின் உடையது அரைகுறையாகவும், சிலவற்றின் மோவாயில் கறுப்பு வர்ணம் அதிகமாகவும் தீட்டப்பெற்று விகாரமாக விளங்கும். சக்திநாத், "கிழவா, இப்படி அசட்டையாக ஏன் வர்ணம் தீட்டுகிறாய்?'' என்று கேட்பான். அதற்குக் கிழக்குயவன் அன்புடன் சிரித்துக்கொண்டே, "ஸ்வாமீ, நன்றாக வர்ணம் தீட்டுவதென்றால் அதிக விலையாகுமே. அவ்வளவு கொடுத்து யார் வாங்கப் போகிறார்கள்? காலணா பொம்மை ஓரணாவுக்கு எப்படி விலைபோகும்?'' என்று பதில் கூறுவான்.

2

இந்தச் சாமான்யமான வார்த்தைகளைப்பற்றி எவ்வளவு சிந்தித்துப் பார்த்துங்கூடச் சக்திநாதனுக்கு இவற்றின் அர்த்தம் ஏதோ கொஞ்சந்தான் புரிந்தது: புருவம் இருந்தாலும் இராவிட்டாலும் அதன் விலை என்னவோ காலணாதான். ஒரு கண் சின்னதும் இன்னும் ஒன்று பெரிதுமாக இருந்தாலும் அதே விலைதான். இதற்காக யார் வீண் சிரமப்படுவார்கள்? பொம்மையைச் சிறு குழந்தைகள் வாங்கி, இரண்டொரு மணிநேரம் அதை இடுப்பிலும் பக்கத்திலும் வைத்துக்கொண்டு விளையாடிவிட்டுப் பிறகு அதை உடைத்துவிடப் போகின்றன. இவ்வளவுதானா? — சக்தி நாத் அதிகாலையில் வீட்டிலிருந்து தோசையை மடியில் கட்டிக்கொண்டு வந்திருந்தான். அதில் சாப்பிட்ட மீதி இன்னும் இருந்தது. வேறு ஏதோ கவனமாய் அதை மென்றுகொண்டும் கீழே இறைத்துக்கொண்டும் தன் இடிந்த வீட்டுத் தாழ்வாரத்தை வந்தடைந்தான். வீட்டில் யாருமில்லை. நோயுற்ற அவன் கிழத் தகப்பனார், ஜமீந்தார் வீட்டிலுள்ள மதனமோஹன ஸ்வாமிக்குப் பூஜை செய்யப் போயிருந்தார். தினமும் வாழைக்காய், அரிசி முதலிய வாயனம், பிரஸாதம் இவைகளைப் பெற்றுவருவார். அப்புறம் சமைத்துப் பையனுக்குப் போட்டுத் தாமும் சாப்பிடுவார். வீட்டுமுற்றத்தில், மல்லிகை, செவ்வலரி, பாரிஜாதம் முதலிய புஷ்பச் செடிகளும் தருக்களும் நிறைந்திருந்தன. கிருஹலக்ஷ்மி இல்லாத அவ்வீட்டில் ஒழுங்கென்பதே காணப்படவில்லை. கிழ மதுஸூதன் பட்டாசாரி எப்படியோ நாட்களைக் கழித்துவந்தார். சக்திநாத் புஷ்பங்களைப் பிய்த்து, இலைகளைக் கிள்ளி முற்றமுழுதும் இறைத்துத் திரிவான்.

இப்போதெல்லாம் அவனே வர்ணம் தீட்டும் வேலைக்கு அதிகாரியாகிவிட்டான். கிழக்குயவன் பொம்மைகளுள் சிறந்ததைப் பொறுக்கிக்கொடுத்து,"எடுத்துக்கொள்ளுங்கள், ஸ்வாமி, நீங்கள் உங்கள் இஷ்டப்படி தீட்டிக்கொள்ளுங்கள்" என்பான். சக்திநாதனுக்கு இதைச் செய்துமுடிக்க வெகு நேரம் பிடிக்கும். அவன் கைவேலை மிக நன்றாகத்தான் இருக்கும். ஆனால் ஒரு காலணாவுக்குமேல் அது விற்பனை யாகாது. ஆயினும் கிழக்குயவன் வீட்டிற்கு வந்ததும், "ஐயர் வர்ணம் கொடுத்த பொம்மை இன்றைக்கு இரண்டு பைசாவுக்கு விற்றது" என்பான். சக்திநாத் அதைக் கேட்டு மகிழ்வெய்துவான்.

3

அந்தக் கிராமத்து ஜமீந்தார் ஒரு காயஸ்தர். பிராம்மண விசுவாஸி; பகவத்பக்தி கொண்டவர். அவர் வீட்டில் உயரமான இடத்தில் அமைந்த பூஜாக்ருஹத்தில் கறுப்புச் சலவைக்கல்லால் நிருமிக்கப்பட்ட மதனமோஹன ஸ்வாமி விக்ரஹமும், அதன் பக்கலில் ஸ்ரீராதையின் ஸ்வர்ண வடிவமும் வெள்ளி மந்தஹாஸத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன. பூஜையறைச் சுவர் முழுதும் பிருந்தாவன லீலைகளைக் காட்டும் சித்திரங்கள். மேலேயுள்ள வெண்பந்தலிலிருந்து நூறு கிளைகளுடைய லஸ்தர் விளக்குத் தொங்கிக்கொண்டிருந்தது. ஒரு புறம் சலவைக்கல் மேடைமீது பூஜாத்ரவ்யங்கள். அறை முழுவதும் கமழ்ந்த சந்தனுதி புஷ்பவாசனை ஸ்வர்க்கத்தின் நினைவை மூட்டியது.

4

வெகுநாட்களுக்கு முந்திய ஸமாசாரம்: ஜமீந்தார் ராஜநாராயண் பாபு முதுமை வரவரத் தம் தன ஜன யௌவனமெல்லாம் மங்கிவருவதை உணர்ந்தார். அவர் பூஜாக்ருஹத்தில் பக்தி பரவசமாய்க் கண்ணீர் உகுத்த அன்றைத்தினம் நிகழ்ந்ததைக் கூறுகிறேன் : அவருடைய ஒரே பெண்ணான அபர்ணு அப்பொழுது ஐந்து வயது பாலிகை. மதுஸூதன் பட்டாசார்யார் அக்கறுப்பு விக்ரஹத்திற்குச் சந்தனுபிஷேகம் செய்து மலர்கொண்டு மந்தஹாஸத்தை அலங்கரிப்பதைத் தகப்பனருகில் நின்றவண்ணம் ஏகாக்ர சித்தத்துடன் கவனித்துக்கொண்டிருந்தாள் அபர்ணு. புஷ்பங்ளின் நறுமணம் அவளை ஆசிர்வதித்துச் செல்வதுபோல்

இருந்தது. அன்று முதல் பிரதிதினமும் தவருமல் அபர்ணு தன் தந்தையுடன் பூஜையைப் பார்க்க வருவாள். மெய்ம் மறந்து அதில் லயித்திருப்பாள்.

அபர்ணு பெரியவளாகிக்கொண்டு வந்தாள். தகப்பனுருடைய பூஜாக்ருஹத்தைத் தன் கண்ணுகவே பாவித்து வந்தாள். விளையாட்டின்போதுகூட அதை அவள் மறப்பதில்லை. நாள்முழுதும் அங்கேயே இருந்துகொண்டு சுத்தமாகத் தும்புதூசு இராதவாறு பார்த்துக்கொள்வாள். ஒரு பொட்டு ஜலம் கீழே சொட்டியிருந்தாலும் அதைப் புடைவைத் தலைப்பினுல் துடைத்துவிடுவாள். தகப்பனுர் தெய்வ பக்தியுடையவர் என்று பெயரெடுத்தபோதிலும், அபர்ணுவின்தேவஸேவை அவருடையபக்தியைக்காட்டிலும்உன்னதமாயிருந்தது. பகவானுக்கு நடந்துவரும் உபசாரங்கள் இப்பொழுது முன்னைவிடப் பன்மடங்காகிவிட்டன. பழைய சந்தனக்கிண்ணம் போதவில்லை. புஷ்பங்கள் ஏராளமாகிவிட்டன. நைவேத்யான்னத்தின் வகைகளும் அதற்கேற்றபடி அதிகமாயின. நித்யமும் விதவிதமான பூஜை ஏற்பாடுகள் செய்து, அவை சரிவர நடக்கின்றனவா என்று மிகுந்த அக்கரையுடன் அவள் கவனித்துவந்ததால், பட்டாசாரியார் உள்பட யாவரும் சிரத்தையுடன் தத்தம் காரியத்தைச் செய்யவேண்டியதாயிற்று. ராஜநாராயண் பாபு இவற்றையெல்லாம் பார்த்து, 'பகவான் தமக்குத் தொண்டுபுரிய இந்த மஹாலக்ஷ்மியை நம் கிருஹத்திற்கு அனுப்பியிருக்கிருர் போலும்!' என்று பூரிப்புக்கொள்வார்.

5

தக்க வயதில் அபர்ணுவுக்கு விவாகம் நடந்தேறியது. தம் அருமையான தேவஸந்நிதானத்தை விட்டு அவள் இப்பொழுது செல்லவேண்டியிருக்கிறதே!—இந்தச் சஞ்சலமே அவள் முகத்தில் ஒளிரும் இன்முறுவலை மறைத்துவிட்டது. புக்ககம் செல்ல நாளும் பார்த்தாகிவிட்டது. மழை பொழியுமுன் மேகம் ஒன்று மின்னெளியை ஏந்தி நிற்பதுபோல், அபர்ணு அந்தத் தினத்தன்று கண்களில் நீர்ததும்ப நின்ருள். தகப்பனுரிடம் சென்று, "அப்பா, நான் இருக்கும்போது எப்படிப்பார்த்துக்கொண்டேனே அவ்விதமே ஒரு குறைவும் ஏற்படாதபடி நீ கவனித்துக் கொள்ளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். கிழத்தந்தை, "உன் இஷ்டம்

போலவே, அம்மணி!" என்று சொல்லி உடல் குலுங்க அழத்தொடங்கினர். பெண்ணை விட்டுப் பிரிவதனுலுண்டாகும் துயரின் சாயை அதில் கலந்திருந்தது. அபர்ணு மௌனமாக அவ்விடம் விட்டு வந்தாள். தன் துக்கத்தை வெளிக்காட்ட அவளுக்குத் தாய் இருந்தால்தானே? ஒரு யுத்த வீரன், பல வேதனைகள் தன் மனத்தை வருத்திப் பின்னுக்கிழுத்த போதிலும் அதையெல்லாம் அடக்கிக் கொண்டு திடசித்தனய்ப் புரவி மீதேறிப் போர்முனைக்குச் செல்வதுபோல், அபர்ணுவும் தான் அறியாத புதியதொரு வாழ்க்கையைநடத்த மனஉறுதியுடன் சிவிகையில்ஏறித் தன் பிறந்தகத்தை விட்டுச் சென்ருள். பொங்கி எழும் கண்ணீர் வெள்ளத்தை அடக்கிக் கொள்ளும்போது, 'தகப்பனருக்கு ஆறுதல் கூற இனி யார் இருக்கிருர்கள்?' என்ற எண்ணம் தோன்றி அவள் ஹ்ருதயத்தை வாட்டியது. செல்லும் வழியில் தூரத்தில் ஏதோ ஒரு கிராமத்து ஆலயத்தினின்று வரும் மணியோசையானது குழந்தைப் பருவமுதற்கொண்டு பரிசயமான அவள் இஷ்டதெய்வத்தின் ஞாபகத்தை மூட்டி விட்டது. சட்டென்று அவள் சிவிகையின் எழினியைத் திறந்தாள். தூரத்தில் ஓங்கி வளர்ந்து, அந்தி மங்கலில் இருண்டு தெரியும் ஒரு தேவதாரு விருக்ஷத்தை தேவாலயமாகப் பாவித்து விக்கி விக்கி அழத்தொடங்கினள். சிவிகையோடு வரும் புக்ககத்துப் பணிப்பெண் ஒருத்தி அதைப் பார்த்து, "சுபமாக மாமியார் வீடு செல்லும்போது அழலாமா என்ன?" என்று தேறுதல் கூறினள். அபர்ணு கண்களைத் துடைத்துக்கொண்டு சிவிகையின் திரையை மூடிவிட்டாள்.

அதே சமயத்தில், பூஜையறையில் மதனமோஹன ஸ்வாமிக்கருகில் வணங்கி நிற்கும் ராஜநாராயண் பாபுவின் நீர்திரையிட்ட கண்களுக்குத் தூபத்தின் மங்கலில் தெரியும் தேவியின் வதனம் தம் அருமை மகளின் சாயலாகவே தோன்றியது!

௬

இப்பொழுது புருஷன் வீட்டில் இருக்கிருள் அபர்ணு. தன் கணவனுடன் சம்பாஷிப்பதில் அவள் எள்ளளவும் பிரியம் கொள்ளவில்லை. தாம்பத்ய வாழ்க்கையின் ஆரம்ப தசையில் ஏற்படும் புதிய உணர்ச்சியும் அவள் முகத்தை

விட்டு மறைந்துபோன பழையபொலிவை மீண்டும் கொண்டு வரவில்லை. புருஷனும் மனைவியும் ஒருவரோடொருவர் ஒற்றுமையுடன் இருந்தாலும் விவரிக்க இயலாத ஒருவித மன வேற்றுமையுடன் வாழ்ந்துவந்தனர். வெள்ளம் கரை புரண்டு செல்லும்போது நதிக்கு அணைபோடுவது கடின மாக இருப்பதுபோலவே, அவர்கள் வாழ்க்கையும் சிக்க லான ஸமஸ்யைகள் நிறைந்திருந்தது.

ஒரு நாள் நள்ளிரவில் அமரநாதன் நிதானமாக, "அபர்ணு, உனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லையா சொல்?" என்று கேட்டான். அபர்ணு, "ஆமாம்" என்ருள்.

அமரநாதன்: அப்பா வீட்டிற்குப் போகிருயா?

அபர்ணு: போகிறேன்.

அமரநாதன்: நாளைக்குப் போகிருயா?

அபர்ணு: போகிறேன்.

எதிர்பாராத இப்பதிலைக் கேட்டதும் அமரநாதன் திடுக்குற்ருன். சற்றுநேரம் மௌனமாயிருந்து, "அனுப்பா விட்டால்?" என்று கேட்க, "இப்பொழுது இருப்பதுபோல வே இருந்தால் போகிறது" என்று பதிலளித்தாள் அபர்ணு. மறுபடியும் இருவரும் கொஞ்சநாழி வரை நிச்சப்தமாக இருந்தனர். பிறகு அமர், "அபர்ணு!" என்று கூப்பிட் டான். "ஏன்?" என்ருள் அபர்ணு, வேறு சிந்தையில் ஈடுபட்டவளாய்.

"என்ருல் ஒருவிதப் பிரயோஜனமும் இல்லையே உனக்கு?" என்று கேட்டான் அமர்.

அபர்ணு போர்வையை நன்ருக இழுத்துப் போர்த்துக் கொண்டு, "இந்தமாதிரி வார்த்தைகளுக்குப் பதிலளித்தால் வீண் சச்சரவுதான் ஏற்படும்" என்ருள்.

"சச்சரவு நேரிடும் என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"எங்கள் அப்பா வீட்டிலே என் சின்ன அண்ணுவுக்கும் மதனிக்கும் சதா இதுமாதிரி சண்டை நடக்கும். எனக்குச் சண்டை சச்சரவு என்ருல் பிடிக்காது."

இதைக் கேட்டதும் அமரநாதனின் சரீரத்தில் ஒருவித உணர்ச்சி உண்டாயிற்று; அவ்வாறு நேரவேண்டும் என்பது

தான் அவன் எண்ணம்! இன்று அச்சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், "வா அபர்ணு, நாம் இருவரும் இப்படி இருப்பதைவிடச் சண்டை போட்டுக்கொண்டிருப்பதே மேல்" என்ருன். அபர்ணு, "சே, எதற்காகச் சண்டை? நீங்கள் தூங்குங்கள்" என்ருள்.

அதற்குப்பின் அபர்ணு தூங்கிக் கொண்டிருந்தாளா விழித்திருந்தாளா என்பதை அமரநாதனுல் அறிந்துகொள்ள முடியவில்லே.

காலேயில் எழுந்ததுமுதல் சாயந்திரம்வரை ஜபதபத்திலேயே காலத்தைக் கழித்துவருவாள் அபர்ணு. கேலி தமாஷாக்களில் கலந்துகொள்ளாதிருப்பதைக் கண்டு அவள் வயதுக்கீடான பெண்கள் அவளேத் திட்டினபோதிலும், நாத்திமார்கள் 'பண்டாரச்சி' என்று ஏளனம் செய்தபோதிலும், அபர்ணு அவர்கள் கோஷ்டியில் சேருவதில்லே. தன் வாழ்க்கை வீணுகச் செல்கிறது என்று ஸதா அவளுக்குத் தோற்றியது. இதனிடையே தன் இஷ்ட தேவதையின் ஞாபகம் வந்துகொண்டிருக்கும். பௌர்ணமியன்று கொந்தளித்தெழும் கடல்போல், தன் தகப்பனுர் பிரதிஷ்டை செய்த அந்தப் பகவானுடைய ஸாந்நித்யத்தை என்று அடைவோம் என்ற தீவ்ர ஏக்கமே அவள் ரத்தம் முழுதும் பரவியிருந்தது. இதை எப்படி அவளால் ஆற்ற முடியும்? வீட்டுக் காரியங்களிலும், சில்லறை விளேயாட்டுக்களிலும் கவனம் செலுத்துவதனுலா? இப்பேர்ப்பட்ட ஒரு மகத்தான மாயையில் அவள் மனம் மூழ்கி அலேயும்போது புருஷனுடைய அன்போ பந்துக்களின் கூட்டுறவோ அவளே எவ்வாறு அண்டும்? கன்னியாகவே இருந்து தேவஸேவையில் ஈடுபட விரும்பும் அவள், பெண் ஜன்மமெடுத்ததன் பயனே எங்ஙனம் அறிவாள்?

7

அமரநாதன் ஒன்றும் அறியாத இயல்புடையவன். அவன் தன் மனேவிக்குப் பிரீதியாக அளிக்கவேண்டுமென்று ஏதோ ஒன்று எடுத்து வந்திருந்தான். அப்போது காலே ஒன்பது அல்லது பத்துமணி இருக்கும். ஸ்நாநத்தை முடித்து விட்டுப் பூஜை செய்யச் சென்றுகொண்டிருந்தாள் அபர்ணு. அமரநாதன் அவளிடம் வந்து, மிருதுவான குரலில், "அபர்ணு,

ஒரு வஸ்து கொண்டுவந்திருக்கிறேன். தயைசெய்து அதை வாங்கிக்கொள்வாயா?" என்று கேட்டான். அபர்ணு சிரித்த முகத்துடன், "வாங்கிக் கொள்ளாமலென்ன" என்ருள். அமரநாதனுக்கு வந்த ஆனந்தத்திற்கு எல்லேயேஇல்லே. தன் மனோரதம் முற்றும் ஈடேறிவிட்டதாகப் பிரமைகொண்டான். பெருமிதத்துடன் ஸொகுஸான கைக்குட்டையில் கட்டப்பெற்ற ஒரு சிறிய பெட்டியைத் திறந்தான். அதன் மூடிமேல் அபர்ணுவின் பெயர் பொன்னுல் பொறிக்கப்பட்டிருந்தது. நிமிர்ந்து பார்த்தான் அமர். சூன்யதிருஷ்டியுடன் அபர்ணு அப்பெட்டியை நோக்குவதைக் கண்டான்! அவன் உத்ஸாஹமெல்லாம் குன்றிப்போயிற்று. அர்த்தமற்ற ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். வெட்கம் கொண்டுபோக, தலே நிமிராமல், பெட்டியிலிருந்து சில 'குந்தலீன்' ஸீஸாக்களேயும் மற்றும் எதெதையுமோ வெளியே எடுக்கப் போனபோது, அபர்ணு அவனேத் தடுத்து, "இவற்றையா எனக்காகக் கொண்டுவந்தீர்கள்?" என்ருள். கள்ளம் கபடற்ற அமரநாதன், "ஆமாம், உனக்காகத்தான் இவற்றையெல்லாம் கொண்டு வந்திருக்கிறேன். இந்த விலாசத் திரவ்யங்கள்—" என்று மிகுதியும் சொல்லி முடிப்பதற்குள் அபர்ணு, "பெட்டி கூடத்தானே எனக்குக் கொடுக்கிறீர்கள்?" என்ருள். "ஆமாம்" என்ருன் அமர். "அப்படியானுல் இவற்றையெல்லாம் வீணுக வெளியிலெடுப்பானேன்? பெட்டியிலேயே அவை இருக்கட்டுமே?" என்ருள் அபர்ணு.

"அது இருக்கட்டும். நீ இதை உபயோகிப்பாயா?"

அபர்ணுவின் புருவங்கள் சுளித்தன. உலக வழக்கிற்கே எதிர்ப்பாக இருக்கும் அவளுடைய இந்த வைராக்ய வாழ்க்கைக்கு இவ்வன்பு நிறைந்த வேண்டுகோள் முரண்பட்டதாகத் தோன்றியது. அவள் சஞ்சலமுற்று உடனே, "அது ஒன்றும் பாழாகிவிடப் போகிறதில்லே. வைத்துவையுங்கள். என்னேத் தவிர்த்து எத்தனேயோ பேருக்கு அது உபயோகமாக இருக்கும்" என்று கூறிவிட்டு அவனுடைய பதிலுக்காகக் காத்திராமல் பூஜையறையை நோக்கிச் சென்ருள்.

அமரநாதன் ஒன்றும் தோன்ருதவனுய் மறுதளிக்கப்பட்ட அப்பெட்டியின் பேரில் கையை வைத்துக்கொண்டு கீழே உட்கார்ந்துவிட்டான். தன்னேத் தானே ஆயிரந்தடவை "முட்டாள், முட்டாள்" என்று வைதுகொண்டான். வெகு

நேரம் கழித்து ஓர் ஆழ்ந்த பெருமூச்செறிந்தான். "அடி கல்நெஞ்சக்காரி!" என்ற பதங்கள் அவன் வாயினின்று வெளிவந்தன. கண்களில் நீர் நிரம்பியது. அதைத் துடைத்துக்கொண்டான். அபர்ணா தெளிவாக 'அது வேண்டாம்' என்று கூறியிருந்தால்கூட விஷயம் வேறு விதமாக முடிந்திருக்குமே! ஆனால் வாயால் சொல்லாமல் இப்படிச் செய்தது அவன் உள்ளத்தில் ஆழப் பதிந்து வாட்டியது. இதற்குப் பதில் எப்படித் தீர்த்துக்கொள்வான்? 'அபர்ணாவைப் பூஜையறையிலிருந்து இழுத்து வந்து, அவள் வெறுத்த இந்த வஸ்துவை உடைத்துப் போட்டு, அவள் மூஞ்சியில் இனி விழிக்கப் போவதில்லை என்று பிரதிஜ்ஞை செய்து கொண்டு விடலாமா?...இப்பொழுது நாம் என்ன செய்வது? எந்த நோக்கமுமின்றி எங்கேனும் ஓடிப் போய்விடலாமா? அப்படியிருந்தால் என்றாவது அபர்ணா கஷ்ட தசையிலிருக்கும்போது ரக்ஷிக்க முடியும்'—இம்மாதிரி நடக்கக்கூடியதும் கூடாததுமான எண்ணங்கள் மூண்டு அவன் மூளையைக் குழப்பின. ஆனாலும் அவன் முன்போலவே அழுதுகொண்டு தான் இருந்தான்; ஒரு முடிவிற்கும் வந்தபாடில்லை.

8

இரண்டு இரவுகளாக அவன் படுக்கையறையில் வந்து படுப்பதில்லை. அவன் தாய் இதையறிந்து மருமகளைக் கண்டித்து, பிள்ளைக்கும் புத்தி சொல்லி ஒரு வழியாக இருவரையும் சமாதானப்படுத்தி வைத்தாள். அபர்ணா ராத்திரி புருஷனிடம் வந்து, "உங்கள் மனத்தைப் புண்படுத்தி இருந்தேனால் தயைசெய்து என்னை மன்னியுங்கள்" என்று இறைஞ்சி வேண்டிக்கொண்டாள். அமரநாதனால் ஒன்றுமே பேச முடியவில்லை. படுக்கையின்மேல் விரித்திருந்த வெண்மையான துப்பட்டியைச் சரியாகப் பரப்பிக்கொண்டிருந்தான். அபர்ணா அவனெதிரில் நின்றவண்ணம் மறுபடியும், "என்னை மன்னிக்க மாட்டீர்களா?" என்றாள். அமரநாதன் தலை நிமிராமல், "எதற்காக உன்னை மன்னிப்பது? உன்னை மன்னிக்க எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?" என்றான்.

அபர்ணா புருஷனின் இருகரங்களையும் தன் கையில் பற்றிக்கொண்டு, "அம்மாதிரி சொல்லவேண்டாம். நீங்கள் என் புருஷர். என்பேரில் கோபித்துக்கொண்டால் நான்

என்ன செய்வது ? நீங்கள் என்னை க்ஷமிக்காவிட்டால் நான் எங்கே செல்வேன்? எதற்காக என்மீது கோபம்?'' என்ருள். கம்மின குரலில் அமரநாதன், “ உன்பேரில் என்ன கோபம், ஒன்றுமில்லையே !'' என்ருன்.

“ இல்லையா ? ''

“ இல்லை. ''

அபர்ணுவுக்குச் சண்டை யென்ருல் பிடிக்காது. அதனுல் அவன் சொன்னதை நம்பியே தீரவேண்டியிருந்தது. பிறகு மனச்சஞ்சலம் நீங்கினவளாய்ப் படுக்கையின் ஓர் ஓரத்தில் படுத்துக்கொண்டாள். அமரநாதனுக்கு இது பெரிய ஆச்சரியமாயிருந்தது! வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டு, ‘ நாம் சொன்னதை இவள் எப்படி நம்பினுள் ? இவ்வளவு பிரமாதமான விஷயம் இத்தனை சீக்கிரமாகச் சரிப்பட்டு இப்படி வீணுய்ப் போய்விட்டதே ' என்றெல்லாம் எண்ணமிட்டவண்ணம் இருந்தான்.

பிறகு அபர்ணு உண்மையிலேயே நிச்சிந்தையாகத் தூங்குவதைக் கண்டு எழுந்து உட்கார்ந்து உரத்த குரலில், “ தூங்குகிருயா என்ன, அபர்ணு ?'' என்று கேட்டான். அவள் விழித்துக்கொண்டு, “என்னைக் கூப்பிட்டீர்களா என்ன ?'' என்று எழுந்திருந்தாள்.

“ ஆமாம். நாளைக்கு நான் கல்கத்தாவுக்குப் போகப் போகிறேன்.''

“ இதைப்பற்றி ஏன் இதுவரை பிரஸ்தாபிக்கவில்லை ? இதற்குள் உங்களுக்குக் காலேஜ் திறந்துவிட்டார்களா என்ன ? இன்னும் இரண்டு நாளாவது இருக்கமாட்டீர்களா ?''

“ முடியாது.''

அபர்ணு சற்றுச் சிந்தித்தவளாய், “ நீங்கள் என்மீது கோபித்துக்கொண்டா போகிறீர்கள் ?'' என்று கேட்டாள். அவள் சொன்னது வாஸ்தவந்தான். ஆனுலும் அமரநாதன் அதை ஒப்புக்கொள்ளவில்லை. எங்கிருந்தோ சங்கோசம் வந்துவிட்டது அவனுக்கு. அபர்ணுவின் உயர்ந்த நோக்கத்திற்கு நாம் தடையாக இருக்கப்போகிருேமே என்ற பயம் அவனுக்கு. புருஷனுக்குள்ள ஸ்வதந்திரத்தைக் கொஞ்சங்

கொஞ்சமாக இழுத்துக்கொண்டு விட்டாள் அபர்ணா. அவன் எந்த விதத்தில் தன் கோபத்தை வெளிக்காட்டு வான்? அபர்ணா மீண்டும், "கோபித்துக்கொண்டு எங்கும் போகவேண்டாம். அதனால் என் மனம் மிகவும் அல்லல் படும்" என்றாள்.

அமரநாதன் நிஜமும் புளுகும் கலந்து பதில் கூறினான். தனக்குக் கோபமில்லை யென்றும் அதற்கு அத்தாட்சியாக இன்னும் இரண்டுநாள் இருந்துவிட்டுப் போவதாகவும் சொன்னான்; தங்கவும் தங்கினான். தான் தோல்வியுற்றதை எண்ணி அவமானங்கொண்டு மனத்திற்குப் பிடிக்காமல் அந்த இரண்டு நாட்களையும் வீட்டில் இருந்து தொலைத்தான்.

௯

ஆடைமழை பொழிவதால் ஒரு நன்மை இருக்கிறது. ஆகாயம் நிர்மலமாகி விடுகிறது. ஆனால் சிறு தூறல்களி னால் மேகங்கள் கலைவதில்லை. சேறும், சதசதப்பும், அதனால் மனத்திற்கு அஸந்துஷ்டியும் ஏற்படுவதைத் தவிர வேறொரு பயனுமில்லை. புண்பட்ட மனத்துடன் கல்கத்தாவிற்கு வந்தான் அமர். அவ்வளவு விசாலமான நகரில்கூட அவனுக்கு மனச்சாந்தி ஏற்படவில்லை. முன்புஅவன் இங்கு அனுபவித்த சுகங்களை இப்பொழுது அவன்மனம் சற்றும் ஏற்றுக்கொள்ள வில்லை. படிப்பின்மேலாவது மனம் சென்றதா? அதுவு மில்லை. திரும்பி வீட்டிற்குப் போகவும் பிடிக்கவில்லை. இதயத்தில் வேதனை குமுறியது. அவன் அதை அகற்றப் பாடுபட்டான். ஆனால் அது முடிந்தால்தானே?

இம்மாதிரி மனநோய்க்காளாகி ஒருநாள் கடும் ஜுரத் தில் வீழ்ந்தான். அந்தச் செய்திகேட்டு உடனே தாயும் தகப்பனாரும் வந்தார்கள். ஆனால் அபர்ணாவை அழைத்து வரவில்லை. அவள் வரமாட்டாள் என்று அமரநாதனுக்குத் தெரிந்திருந்தபோதிலும் ஏனோ அவனுக்குத் 'திக்' என்றது! நோய் வரவர அதிகமாகிக்கொண்டே வந்தது. இப்பொழுது அபர்ணாவைப் பார்க்கவேண்டுமென்று உண்மையில் ஆசைமூண்டது அவனுக்கு. ஆனால் அதை வாய்விட்டுச் சொல்ல முடியவில்லை. தாய் தந்தையரும் அதை அறிந்து கொள்ளவில்லை. திருப்பித் திருப்பி மருந்தும், பத்யமும்,

டாக்டருந்தான். ஆனால் அவையெல்லாம் எத்தனை நாள்? கடைசியாக ஒருதினம் அமைதி நிலவும் உலகிற்கேகினான் அமர்.

அபர்ணா கதிகலங்கி நின்றாள். அவளுடைய கோரிக்கையை இவ்வாறு இறைவன் அர்த்தம் புரிந்து கொண்டான்? இதையா அவள் இத்தனைநாள் மனத்தினுள் எதிர்பார்த்திருந்தாள்? எவ்விதமோ, பகவான் அவளுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்து விட்டார்!— வெளியில் தன் தந்தை அழுவதுகேட்டது — இதெல்லாம் கனவோ? அவர் எப்போது இங்கே வந்தார்? — அபர்ணா ஜன்னலைத் திறந்து பார்த்தாள்; வாஸ்தவமாகவே ராஜநாராயண்பாபு தரையில் புரண்டு ஒரு குழந்தைபோல் அழுதுகொண்டிருந் தார். அவளும் கீழேவிழுந்து கண்ணீர் வெள்ளம் புரளப் புலம்பத் தொடங்கினாள்.

அந்திப்பொழுது நெருங்கிவிட்டது. தந்தை, "அம்மா, அபர்ணா!" என்று அவளை மார்போடு அணைத்துக்கொண்டு கதறினார்.

"உன் மதனமோஹனன் மறுபடியும் உன்னைப் பூஜா க்ருஹத்திற்கு அழைக்கிறான், அம்மா."

"சரி, அப்பா, போகலாம்."

மறுநாள் பெண்ணை அழைத்துக்கொண்டு தம் வீட்டுக்கு வந்துசேர்ந்தார் ராஜநாராயணபாபு.

அபர்ணா கட்டியிருக்கும் வெள்ளாடையும், வாராமல் விரித்த கூந்தலும் அவளுக்கு ஒத்திருந்தன. கடவுள்தான் இவ்விதம் செய்து தன்னை அழைத்துக்கொண்டார், அதனால் தான் அவர் முகத்தில் முறுவல் விளையாடுகிறது, என்றெல் லாம் எண்ணி, இஷ்டதெய்வத்திற்குத் தொண்டு செய்யத் தன்னை எதேச்சையாக விட்டுச்சென்ற கணவன், நித்ய சாயுஜ்ய பதவியடையுமாறு மனப்பூர்வமாகப் பகவானைப் பிரார்த்தித்தாள்.

10

சக்திநாத் ஒரே கவனத்துடன் ஸ்வாமி பொம்மை பண்ணிக்கொண்டிருந்தான். பூஜை செய்வதைக் காட்டிலும் ஸ்வாமி பண்ணுவது அவனுக்கு அதிகம் பிடித்திருந்தது.

எப்படி மூக்கு வைப்பது, கண் எவ்விதம் இருந்தால் நன்ருயிருக்கும், எந்த வர்ணம் தீட்டினால் ஒத்திருக்கும், இவை தாம் அவனுடைய சிந்தனைகள். எப்படிப் பூஜைசெய்வது, எப்படி மந்திரம் சொல்வது, இந்த விஷயங்களில் அவன் மனஞ்செல்லவில்லை. இப்பொழுது சக்திநாத் பெரிய பையனாகி விட்டான். அதனால் அவனுடைய கிழத்தந்தை, “அப்பா, சக்தி! இன்றைக்கு எனக்கு உடம்பு சரியாக இல்லை. ஜமீந்தார் வீட்டுக்குப்போய் பூஜை செய்துவிட்டு வா” என்றார்.

“ஸ்வாமி பண்ணிண்டிருக்கேனே?” என்ருன் சக்தி.

கிழவர் எரிச்சலுடன், “விளையாட்டெல்லாம் அப்புறம் ஆகட்டுண்டா. போய்ப் பூஜை பண்ணிவிட்டு வா!” என்று ஆக்ஞாபித்தார் பலஹீனமான குரலில்.

சக்திநாதனுக்கு அதில் கொஞ்சமேனும் இஷ்டமில்லை. ‘விதியே’ என்று ஸ்நானம் செய்து விட்டு ஜமீந்தாரின் பூஜாக்ருஹத்திற்கு வந்தான். இதற்கு முன்புகூட இரண்டொரு தடவை பூஜை பண்ண அங்கே வந்திருக்கிருன். ஆனால் இப்போதிருந்த மாதிரி ஆடம்பரத்தை அவன் எப்பொழுதும் பார்த்ததில்லை. ‘எவ்வளவு வாசனை? நைவேத்யான்னத்தில் எத்தனை வகைகள்! இவ்வளவையும் வைத்துக்கொண்டு என்ன பண்ணுவது? எப்படி, யாருக்குப் பூஜை செய்வது?’ என்றெல்லாம் அவனுக்கு யோசனை மூண்டது. எல்லாவற்றையும்விட அபர்ணாவைப் பார்த்துத்தான் அவன் மிகவும் ஆச்சரியமடைந்தான். — இவள் யார்? எங்கிருந்து வந்தாள்? இத்தனை நாட்களாக எங்கே இருந்தாள்?

அபர்ணா அவனைப் பார்த்ததும், “பட்டாசாரியாரின் பிள்ளைதானே அப்பா நீ?” என்று கேட்க, சக்திநாத், “ஆம்” என்ருன்.

“அப்படியானால் கை காலை அலம்பிக்கொண்டு பூஜை செய்ய வா!”

பூஜை செய்ய உட்கார்ந்த சக்திநாத் கொஞ்சம் தெரிந்த மந்திரத்தையும் மறந்துவிட்டான். அதன்பேரில் அவன் கவனம் செல்லவேயில்லை. ‘இந்தத் திவ்ய ரூபிணி யார்?’ என்றயோசனை ஒன்றுதான் அவன் மனத்தில். பூஜைசெய்யும்

முறையும் தாறுமாருக இருந்தது. புஷ்பம் அர்ச்சிக்க வேண்டிய சமயத்தில் மணியடித்தும், நைவேத்யான்னத்தின் மேல் ஜலத்தைச் சுற்றுவதற்குப் பதிலாக அதன்மேல் நினைத்தபோதெல்லாம் தெளித்தும் இந்த மட்டிப் புரோகிதச் சிறுவன், பூஜை செய்வதுபோல் பாவனை பண்ணுவதை, பூஜா விதிகளில் தேர்ச்சிபெற்ற அபர்ணு கவனித்துவந்தாள்.

பூஜை முடிந்ததும் அவள், "பிராமணனுடைய பிள்ளை யாயிருந்து உனக்குப் பூஜை செய்யக்கூடத்தெரியவில்லையா?" என்று கடிந்து கூறினாள். சக்திநாத் அதற்கு, "தெரியும்" என்ருன். "என்னத்தைத் தெரியும்? மண்ணுங்கட்டிதான் தெரியும் உனக்கு!" என்ருள் அபர்ணு.

சக்திநாத் ஒன்றும் தோன்ருது அவள் முகத்தை நோக்கி விட்டு வெளியே செல்ல யத்தனித்தான். அபர்ணு, "இந்தா, இவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு போ! நாளைக்கு நீ வரவேண்டாம். உன் தகப்பனுருக்கு உடம்பு சொஸ்தமான தும் அவர் வரட்டும்" என்று கூறி அவனிடம் வாயனம், பிரஸாதம் இவைகளைக் கொடுத்தனுப்பினாள்.

பூஜாக்ருஹத்திலிருந்து வெளிவந்தான் சக்திநாத். அவன் உடல் சிலிர்த்தது.

அவன் சென்றதும் அபர்ணு வேறு பிராமணர் ஒருவரைக் கூப்பிட்டுப் பூஜையைச் சரிவரச் செய்துமுடித்தாள்.

11

ஒருமாதம் கழிந்தது. ஒருநாள் ஆசார்ய யதுநாத், ஜமீந் தார் ராஜநாராயண் பாபுவைப் பார்த்து, "நீங்கள் ஸமஸ்த மும் அறிந்தவர்கள். இப்பேர்ப்பட்ட பெரிய பூஜாக்ருஹத்தில் மதுஸூதன் பட்டாசாரியின் பிள்ளையை வைத்துக் கொண்டு பூஜை நடத்தினுல் போதாது" என்ருர். ராஜ நாராயண் பாபு, "அதைத்தான் அபர்ணுவும் சொன்னுள்" என்று அவர் சொன்னதை ஆமோதித்தார். அதற்குப் புரோகிதர், "ஆமாம்ணு, ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மியே உரு வெடுத்து வந்ததுபோலிருக்கிருளே, அவளுக்குத் தெரியாதது ஒன்றுண்டோ!" என்று கூடத் தாளம் போட்டுவிட்டு, "பூஜை நான் பண்ணுலும் சரி, யார் பண்ணுலும் சரி, சுத்த மாகச் செய்யவேண்டு மென்பதுதான் என் கோரிக்கை.

அவர் செத்தபிற்பாடு அவர் பிள்ளை வரவேண்டியது நியாயந்தான். இருந்தால்கூட அவன் அதற்கேற்றவனல்ல. விளையாட்டில் காலங்கழிப்பதனுல் பூஜை அர்ச்சனை ஒன்றும் பண்ணத் தெரியவில்லை" என்ருர்.

"சரிதான், நீங்களேதான் பூஜை செய்யுங்களேன்" என்று சொல்லிவிட்டு ராஜநாராயண்பாபு, "எதற்கும் அபர்ணுவை ஒரு வார்த்தை கேட்கவேண்டும்" என்ருர்.

தகப்பனுர் கூறிய யோசனைக்கு அபர்ணு சம்மதியாமல், "அப்படிச் செய்யலாமா என்ன? பிராம்மணப் பையன், அதிலும் திக்கற்ற சிறுவன். அவனுக்குத் தெரிந்த வரையில் செய்யட்டும். அதிலேயே திருப்தியடைவார் பகவான்" என்ருள்.

பெண் சொன்னது உசிதமென்றே பட்டது ராஜநாராயண் பாபுவுக்கும். "உன் இஷ்டம் எப்படியோ அவ்விதமே செய்யம்மா" என்ருர்.

அபர்ணு சக்திநாதனை வரவழைத்து அவனையே பூஜை செய்ய ஏற்பாடு செய்தாள். அவள் கடிந்துகொண்ட அன்றைத் தினத்திலிருந்து அவன் வரவே இல்லை. இதனிடையே அவனுடைய தகப்பனுர் இறந்துவிட்டார். அவனுக்கும் உடம்பு சரியாக இல்லை. துயர் நிறைந்து வாடிய அவன் முகத்தைக் கண்டதும் அபர்ணுவிற்கு அவன்மீது ஒருவிதப் பாசம் ஏற்பட்டது. "உனக்குத் தெரிந்தவரை செய்" என்று வாஞ்சையுடன் கூறினுள். அதைக் கேட்டதும் அவனுக்குப் புதியபலம் உண்டானது போலாயிற்று. பூஜையில் மனம் ஊன்றியவனுய் உட்கார்ந்துகொண்டான். அது முடிந்ததும் அபர்ணு பிரஸாதம் முதலியவற்றைத் தானே கட்டிக் கொடுத்து, "இன்றைக்கு நன்ருகப் பூஜை பண்ணினுய்—நீயே சமைத்துக்கொள்கிருயா என்ன?" என்று கேட்டாள். "முடிந்த அன்று சமைத்துக்கொள்வேன். முடியாவிட்டால் கம்மென்றிருந்துவிடுவேன்" என்ருன் அவன்.

"உனக்கு யாருமே திக்குக் கிடையாதா?"

"இல்லை."

அவன் போனதும் அபர்ணு கைகுவித்து, "பகவானே அவன் குழந்தை. செய்யத்தெரியாவிட்டாலும் அவன் பூஜையை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று மனமாரப் பிரார்த்

தித்தாள். அபர்ணு அன்றுமுதல் சக்திநாத் சாப்பிட்டாறு இல்லையா என்று வேலைக்காரி மூலமாக அறிந்துகொள்வாள்.

அதிலிருந்து சிறுவனும் யுவதியும் ஒரே மனதாக இறைவனுக்குரிய தொண்டில் ஈடுபட்டனர். அவன் பூஜை செய்கையில் அவள் அவனுக்குத் தெரியாதவற்றைக் கற்றுக் கொடுப்பாள். அவன் புஷ்ப சந்தனத்தைக் கையில் எடுத்துக் கொண்டதும் அபர்ணு அவற்றை எங்கெந்தச் சமயங்களில் போடவேண்டும் என்று சொல்வாள். இவற்றையெல்லாம் பார்த்துவந்த யதுநாத் ஆசார்யர், "என்ன இது, சிறுபிள்ளை விளையாட்டாயிருக்கிறதே?" என்பார். கிழ ஜமீந்தார், "எப்படியானுல் என்ன? அவள் துக்கத்தை மறந்து நிம்மதியாக இருந்தால் போதும்" என்பார்.

12

சினிமாவில் ஒரு காட்சியைப் பார்த்த மறுவிளுடி அது மறைந்து வேருென்று வருவதுபோல், இந்த லோகத்தில் சுகபோகத்தினிடையே எளிமை, துக்கம் யாவும் மறைந்துவிடுகின்றன. சக்திநாதனின் வாழ்க்கையும் அவ்விதமே மாறிவிட்டது. நடுநடுவே அவன் மனத்தில், முன்னர்ப் பொம்மை பண்ணிக்கொண்டு யதேச்சையாயிருந்த நினைவெல்லாம் ஞாபகத்திற்கு வரும். இப்போதோ அபர்ணு அவனை விலைகொடுத்து வாங்கினமாதிரி ஆகிவிட்டது. அவளுடைய அன்பானது அவனைக் கவர்ந்துகொண்டது.

திடீரென்று ஒருநாள் சக்கிநாதனின் அம்மான்சேய் வந்தான். மாமா கல்கத்தாவில் வசிப்பவர். இப்போது சௌக்யமான நிலையிலிருப்பதால் தங்கையின் பிள்ளை ஒருவன் இருக்கிறுன் என்ற நினைவு வந்து தம் பெண்ணுடைய கல்யாணத்திற்கு அவனை அழைத்து வரும்படி தம்முடைய பிள்ளையை அனுப்பியிருந்தார். இந்தச் செய்தி கேட்டதும் சக்திநாத் மிகுந்த சந்தோஷமடைந்தான். அன்றிரவெல்லாம் அம்மான் சேயிடமிருந்து கல்கத்தாவிலுள்ள ஒவ்வோர் அதிசயத்தையும்பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டான். மறுநாள் கோயிலுக்குச் செல்ல அவனுக்கு இஷ்டமில்லை. பூஜை நேரமாகியும் அவன் வராதிருப்பதைக் கண்டு அபர்ணு அவனை ஆளைவிட்டு அழைத்துவரச் சொன்னுள். சக்திநாத் வந்து, "நான் இன்று கல்கத்தா போகிறேன். என் மாமா பெண்ணுக்குக் கல்யாணம்" என்று சந்தோஷம் பொங்கச் சொன்னுன்.

அபர்ணு சற்று நேரம் மௌனமாயிருந்து, "எப்பொழுது திரும்புவாய்?" என்று கேட்டாள்.

சக்திநாத் பயத்துடன், "மாமா எப்பொழுது அனுப்பு கிருரோ அப்பொழுது வருகிறேன்" என்ருன். அபர்ணு பதிலொன்றும் கூறவில்லை.

மறுபடியும் அந்த யதுநாத் ஆசார்யரே பூஜை பண்ண வந்தார். அபர்ணு பழையபடி அதைப் பார்த்துக்கொண்டு மட்டும் இருந்தாள்; தான் சொல்லவேண்டியது இப்போது ஒன்றுமில்லை.

கல்கத்தாவுக்கு வந்து பல்வேறு அதிசயக் காட்சிகளைப் பார்த்தும் சக்திநாதனின் மனம் தன் வீட்டை எண்ணியே ஏங்கியது. அவனுக்கு அந்நகரில் இருக்கப் பிடிக்கவில்லை. இரவில், அபர்ணு தன்னை அடிக்கடி கூப்பிடுவதுபோலவும், தான் பதில் சொல்லாதிருப்பதால் அவள் கோபம் கொள்வது போலவும் கனவு காண்பான். ஒரு நாள் மாமாவிடம் வந்து, "நான் அகத்துக்குப் போகவேண்டும்" என்ருன். அவர், "அந்தப் பட்டிக்காட்டில் என்னடா வைத்திருக்கிறது? இங்கேதான் இரேன். நன்ருக எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டால் உன்னை வேலையில் அமர்த்துவேன்" என்ருர். சக்திநாத் 'மாட்டேன்' என்னும் பாவனையாகத் தலையசைக் கவே அவர் கோபத்துடன், "எப்படியாவது ஒழிந்துபோ!" என்று சொல்லிவிட்டார்.

வீட்டுப் பெரிய மருமகள் சக்திநாதனைக் கூப்பிட்டு, "நாளைக்குப் போகப்போகிருயா என்ன, ஊருக்கு?" என்று கேட்டாள். சக்தி, "ஆமாம்" என்ருன். "அபர்ணுவை நினைத்துக்கொண்டு விட்டாயா? அவள் உன்னிடத்தில் ரொம்பப் பிரீதியா யிருக்கிருளாக்கும்" என்ருள் வீட்டு மரு மகள். இதற்கு முன்பே அவள் அபர்ணுவைப்பற்றிக் கேள் விப்பட்டிருக்கிருள். "அப்படியாஞல் அவளுக்குப் பிடித்த வஸ்துவைத் தருகிறேன். அதை எடுத்துக்கொண்டுபோய் அவளிடம் கொடு" என்று கூறிவிட்டு ஒரு சிறிய வாசனைத் தைல ஸீஸாவை அவனிடம் கொடுத்தாள்.

13

சக்திநாத் மறுநாள் தன் வீட்டிற்குத் திரும்பிஞன். அச் சிறிய ஸீஸாவை மடியில் வைத்துக்கொண்டு பூஜையறைக்கு வந்திருந்தான். பூஜை முடிந்ததும் அதை அபர்ணுவிடம்

கொடுக்கலாம் என்று எண்ணியிருந்தான். ஆனால் தைரியம் வரவில்லை. இந்த மாதிரியே ஒரு வாரம் கழிந்தது. பிரதி தினமும் அவன் அதைக் கொண்டுவருவதும் கொடுக்காமல் திருப்பி எடுத்துப்போவதுமாக இருந்தான். முன்போல் அபர்ணா அவனை அழைத்துப் பேசினாலாவது அதை அவளிடம் கொடுத்திருப்பான். இப்பொழுது எவ்வாறு முடியும்? இரண்டு தினங்களாக அவனுக்கு ஓயாமல் ஜுரம் அடித்துக் கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் பூஜை செய்யத் தவறுவதில்லை. தன்னை அறியாது ஏதோ பயத்தினால், தனக்குக் காய்ச்சல் என்றுகூட அவன் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனாலும் அபர்ணாவுக்கு இது எப்படியோ தெரிந்துவிட்டது.

"உனக்கு ஜுரமாமே! ஏன் என்னிடம் சொல்லவில்லை? ஏன் பிரதிதினமும் ஸ்நானம் பண்ணிவிட்டுப் பூஜைசெய்ய வருகிறாய்?" என்று கேட்டாள்.

ஜுரவேகத்தினால் சக்திநாதனின் கண்கள் சிவந்து நீர் கசிந்தது. க்ஷணநேரம் எல்லாவற்றையும் மறந்து, மடியிலிருந்த ஸிஸாவை எடுத்து "இதை உனக்காகக் கொண்டு வந்தேன்" என்றான்.

"எனக்கா?"

"ஆமாம், உனக்குத்தான். வாசனை என்றால் உனக்கு ரொம்ப இஷ்டமாமே?"

அபர்ணா அதில் என்ன இருக்கிறது என்று அறிந்து கொண்டவளாய் முகம் கடுகடுக்க வெளியில் வாடிப்போன நிர்மால்யங்கள் கிடந்த இடத்தில் அதை விட்டெறிந்தாள். பயத்தினால் சக்திநாதனின் ரத்தம் பனிக்கட்டிபோல் உறைந்துவிட்டது!

அபர்ணா கடினமான குரலில், "அடே! உனக்கு இவ்வளவு எண்ணமா? இனி என்னெதிரில் நிற்காதே! வெளியே போ!" என்று வெளிப்பக்கத்தைச் சுட்டிக் காட்டினாள்.

* * *

சக்திநாத் போய் மூன்று தினங்களாகிவிட்டன. பழைய படி யதுநாதரே பூஜை செய்துகொண்டிருந்தார். பூஜை முடிந்ததும் பிரஸாதத்தை அங்கவஸ்த்ரத்தில் முடிந்து கொண்டே, பெருமூச்சுடன், "பாவம், ஒரு வைத்தியமும் பார்த்துக்கொள்ளாமல் பையன் அநியாயமாகச் செத்துப் போய்விட்டான்" என்றார்.

அபர்ணு திடுக்கிட்டு, "யார் போய்விட்டார்கள்?" என்று கேட்டாள்.

"உனக்குத் தெரியாதா, அம்மா? மது பட்டாசாரியின் பிள்ளை சக்திதான்."

அபர்ணு ஒன்றும் தோன்ருமல் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். யதுநாதர், "பகவத் ஆராதனையைக் கேவலம் சிறுபிள்ளை விளையாட்டாகக் கருதலாமா என்ன. அந்தப் பாபந்தான்" என்று சொல்லிக்கொண்டே வெளியே சென்ருர்.

அவர் போனதும் அபர்ணு, பூஜையறைக் கதவைத் தாழிட்டுவிட்டுத் தன் தலையைத் தரையில் இடித்துக்கொண்டாள். கண்ணீர் சொரிந்த வண்ணம், "பகவானே! இது யாருடைய சாபம்?" என்று வினவலாளுள். வெகுநேரங் கழித்து அவள் எழுந்து வெளியே வந்து நிர்மால்யங்களிடையே கிடக்கும் அந்தக் 'குந்தலீன்' புட்டியை, அன்பின் அறிகுறியாக அளிக்கப்பட்டுத் தன்ஞல் இருமுறை மறுதளிக்கப்பட்ட அந்த வஸ்துவை — எடுத்துத் தன் சிரஸின் மேல் வைத்துக்கொண்டாள். மறுபடியும் ஸந்நிதானத்தையடைந்து மதனமோஹனனின் கழலடியில் அதை வைத்து வணங்கி வேண்டிஞள்: "ஸ்வாமீ, நான் வெறுத்துத் தள்ளிய இதை நீயாவது பெற்றுக்கொண்டு திருப்தியடைவாயாக! நானே உன்னை என்றும் பூஜை செய்ய அருள்தருவாய். இதைத் தவிர வேறு பிரார்த்தனை ஒன்றுமில்லை."



ஹீ ரா கு ணி

அவனீந்த்ரநாத் டாகுர்

ஹீரா பால் விற்கும் ஓர் இடைச்சி. குணி என்ற நல்ல ஜாதிப் பசு அவளிடம் இருந்தது. ஹீராவுக்குக் கையில் ஒரு மாதத்துப் பச்சைக் குழந்தை. பசுவும் கன்று போட்டு ஒரு மாதமே ஆயிற்று.

ராய்கட் மலையைத் தாண்டி, மராட்டிய அரசர் சிவாஜிக்கு அவள் பால் கொண்டு தருவது வழக்கம். புல்லையே மேய்வதனால் குணி என்ற ஆவின்பால் அம்ருதம்போல் ருசியாக இருக்கும். சிவாஜி அந்தப் பாலையே பருக விரும்புவார். இதனால் பால்காரி ஹீராவுக்கும் தகுந்த காசு கிடைத்தது. ஆனால் சிவாஜியின் வேட்கை தீர்ந்ததே ஒழியக் குணியின் கன்று மட்டும் சற்றும் தன் தாய் மடியில் ஊறும் பால் இல்லாமல் பட்டினி கிடந்தது; அதனால் இளைத்தும் வந்தது. ஹீரா இதைக் கண்ட பின்னரும் கொஞ்சமேனும் இரங்கவில்லை. தன் கன்றை அடைய 'அம்பா' என்று அலரும் குணி. கட்டுண்ட இடத்திலேயே மக்கச்சக்கரம் பண்ணிக்கொள்ளும். பாலுக்கு ஏங்கி மண்டை வீங்கக் கன்று தன் தாயின் மடியை நோக்கிவர யத்தனிக்கும். ஆனால் கயிறு அதன் கழுத்தை இறுக்கும். ஹீரா பால் கறந்துகொள்ளும்போது கன்றை அவிழ்த்துச் சிறிது நேரமே ஊட்டவிடுவாள். அதற்கு ஒரு சொட்டுப் பால்கூட விடாமல் பசுவின் மடி சுருங்கும்படிக் கறந்துகொண்டு விடுவாள். கன்று பாட்டிற்குச் சுற்றிச் சுற்றிக் குரல் தடுமாறக் கதறும், ஒருவாய்ப்பாலுக்கு. பசுவும் திரும்பித் திரும்பித் தன் கன்றை நக்கிக்கொடுக்க அலைபாயும். ஹீரா கன்றுக் குட்டியை ஏன் கவனிக்கப் போகிறாள்?

சிவாஜி ராஜாவுக்குக் காலேயும் மாலேயும் நிறையப் பால் தர வேண்டுமே! கோட்டைக்குச் சென்று பாலே ஊற்றிவிட்டுக் காசுடன் வீட்டிற்குச் சீக்கிரமே திரும்பிவந்து விடுவாள் ஹீரா. கைக்குழந்தை பசி தாளுமா? முதலில் தன் குழந்தையை எடுத்துவிட்டு அதைத் தூங்கப் பண்ணியதும், கன்றுக்குட்டியை அவிழ்த்து அதன் தாயிடம் விடுவாள். ஆனல் பால் எங்கிருந்து பசுவின் மடியில் சுரக்கும்? கன்று வெறும் காம்புகளேயே சப்பிக்கொண்டிருக்கும். பசுவும் அதை ஆதரவுடன் நக்கிக்கொடுக்கும். ஆனல் வெகுநேரம் கன்றை விட்டுவிட்டால் மறுநாள் காலேயில் பால் இல்லாது போய்விடுமே யென்று ஹீரா அதை உடனே வேறொரு இடத்தில் கட்டிவிடுவாள். சிவாஜி மன்னனுக்கு அன்ருடம் சுவைமிகுந்த பால் கிடைத்துக்கொண் டிருந்தது.

ஒருநாள் மாலே, வழக்கப்படி பாலேக்கொண்டுதர மலேயிலுள்ள கோட்டைக்குச் சென்றிருந்தாள் ஹீரா. அன்று அரண்மனேக் கணக்கன் பால் பணத்தைத் தீர்த்துக்கொடுக்க சற்று நாழிகை ஆகிவிட்டது. பொழுது சாய்ந்து இருட்டி விட்டது. கோட்டையில் இரவு மணியும் அடித்துவிட்டது. கீங் கீங் என்று கோட்டையின் வாயிற்கதவும் மூடப்பட்டது.

ஹீரா துவாரபாலகனேப் பார்த்து, "அப்பா, கதவைத் திற, நான் போகவேண்டுமே" என்ருள்.

"அம்மா, உத்தரவில்லேயே" என்ருன் காவலாளி.

ஹீராவின் மனது தன் குழந்தைக்காக அடித்துக்கொண்டது. அவள் கண்ணீர் பெருக்கி, "அப்பா! என் குழந்தை பட்டினி கிடக்கிறதே நான் போய்ப் பால் கொடுக்க வேண்டுமே. கதவைத் திறந்துவிடேன். உன் காலேப் பிடித்துக் கொள்கிறேன்" என்று மன்ருடினுள்.

ஆனல் சிவாஜியின் உத்தரவின்றிக் கதவைத் திறந்து விடக் காவலாளி அவ்வளவு தலே படைத்தவனு என்ன? ஹீராவின் வேண்டுகோள் ஒன்றும் பலிக்கவில்லே. இரவு அதிகரிக்க அதிகரிக்க ஹீராவின் இதயம் வேகமாகத் துடித்தது. அவளுடைய மார்பு குழந்தைக்குப் பால்தர விண் விண்ணென்று வேதனேப்பட்டுத் துடித்தது. கோபமும் துக்கமும் ஒருங்கே கலந்துவரத் தன் பலம் கொண்டவரை கதவின் சங்கிலியைக் குலுக்கி, "கதவைத் திறக்கிருயா இல்லேயா?" என்று கூவினுள். அது எஃகுச் சங்கிலி

யாயிற்றே! "உத்தரவு இல்லை" என்று சொல்வதுபோல் சங்கிலியும் சலுங்கென்றது.

இரவு அதிக நேரமாகிவிட்டது. சுக்ர நக்ஷத்திரம் கோட்டையிலுள்ள பவானி தேவியின் ஆலயத்தின் கோபுர உச்சியில் தொங்கிக் கொண்டிருந்தது. நிசாசர பக்ஷிகள் விகாரமாகக் கூச்சலிட்டு இங்குமங்கும் பறந்து சென்றன. அவற்றின் விகடரவம் கோட்டையின் மதிலைத் தாக்கி எதிரொலிக்கும். அப்போதெல்லாம் ஹீராவின் இதயம் படபடவென்று திடுக்கிடும். உடல் வேர்க்கும். 'ஐயோ! எனக்கு இறகு இருக்கக் கூடாதா? என் குழந்தையின் கதி என்னவாயிற்றோ?' என்று ஏங்கும் அவள் நெஞ்சம்.


மலையின் அடிவாரத்தில் ஹீராவின் குடில். இந்த மைச் சிமிழ் இருட்டில் எப்படிப் போவது? கோட்டையை விட்டு வெளியேற வழிதான் எங்கே? அவளுக்கு என்னவோ தோன்றிற்று. பால் குடுவையை மதில்சுவரின்மேல் வீசி எறிந்தாள். அது நூறு சுக்கலாக உடைந்தது. அந்த ஸாஹஸக் காரி வெளியே போவதற்கு வழிதேடப் புறப்பட்டுவிட்டாள். ராய்கட் கோட்டையின் ஒருபுறம் செங்குத்தான மலையே அரணாக இருந்தது. அந்தப் பக்கமாகக் கீழே இறங்குவதோ நடக்காத காரியம். முதலையின் கூரிய பற்களை யொத்துப் பாறைகள் பல இடங்களில் இருந்தன. கீழே இறங்குவதற்கு அங்கே யாதோர் ஆதாரமும் இல்லை, அந்தப் பாறைப் பற்களைத் தவிர. மதி எங்கேயோ அங்கேதான் வழியும்! அஸ்தமிக்கும் பிறைச் சந்திரன் சற்றே வெளிச்சம் தந்தது. கீழே நோக்கினால் அகாத பள்ளம். ஒரு தீர புருஷனுடைய உள்ளமும் நடுங்கக்கூடிய பாதாளம். எப்படி ஹீரா இறங்கப் போகிறாளோ? ஆனால் சிசுவுக்காகப் பரிதவிக்கும் தாயின் உள்ளம் அந்தப் பயங்கரத்தைச் சற்றும் பொருட்படுத்தவில்லை. துர்க்கத்தின் தேவதையான பவானியை ஸ்மரித்து இறங்க ஆரம்பித்தாள் ஹீரா. தன் குடிலை அடைந்தபோதுதான் அவளுக்கு ஸ்மரணை வந்தது.

குழந்தை அழுது அழுது அயர்ந்துபோய்த் தூங்கிவிட்டது. நடுநடுவே பசியின் மிகுதியால் விக்கல் அதைக் குலுக்கிப் போட்டது. குணியின் கன்று பசி தாளாமல் கயிற்றை அறுத்துக்கொண்டு தன் தாயின் இனிய பாலை ஊட்டிக் கொண்டிருந்தது. பால் நுரை அதன் வாய் வழியாகக் கீழே வழிந்தது. ஆனால் இதை ஹீரா கவனிக்கவில்லை. ஓடிப்

போய்த் தன் குழந்தையை மார்போடு அணைத்துக்கொண்டு கண்ணீர்த் துளி பெருகப் பால் கொடுத்தாள். குழந்தையும் ஆத்திரம் ஆத்திரமாகப் பாலைப் பருகவே அதற்குப் புரை யேறிற்று. கன்றுக்குட்டியை அவள் அன்று அதன் தாயிட மிருந்து பிரித்துக் கட்டவே இல்லை. கன்றும் என்றுமிராத இந்தப் பாக்கியம் கிட்டவே தொழுவத்தில் அந்நள்ளிரவில் குதித்து விளையாடியது. அதன் நெடுநாளைப் பசியும் அடங்கியது.

காலை புலர்ந்து வெகு நேரம் ஆகிவிட்டது. ராய்கட் டின் அரசருக்கு இன்னும் பால் வரவில்லை. பால் வரும் வருமென்று எதிர்பார்த்து ஏமாந்தார். கோட்டைக்கும் ஹீரா போகவே இல்லை. அரசருடைய பசியைத் தணிக்க ஏவலாட்கள் ஹீராவின் குடிலை நோக்கிப் பறந்து வந்தனர். அவர்கள் பாலைப்பற்றிக் கேட்டபோது "இன்றைக்குப் பால் கிடையாது. மாடு உதைத்துவிட்டது" என்றாள் ஹீரா சற் றும் தயங்காமல். "அதெல்லாம் தெரியாது. நேரே மஹா ராஜாவிடம் வந்து பதில் சொல்!" என்று கிங்கரர்கள் ஹீரா வைக் கோட்டைக்கு இட்டுச் சென்றனர். அந்தத் தீர ரமணி யும் நடுங்காமலே மஹாராஷ்டிர சிங்கத்தின் எதிரே நின்று நடந்ததைக் கூறிவிட்டாள்.

சிவாஜி அவளுடைய ஸாஹஸத்தை மெச்சி ராய்கட் டைச் சுற்றியுள்ள ஜாகீரை அவளுக்குப் பரிசிலாக அளித் தார். எந்த் வழியே உயிரைத் திருணமாக எண்ணி ஹீரா அன்றிரவு வெளியேறினளோ, கடத்தற்கரிய அம்மலை வழிக்கு, மொகலாயப் படையை வென்ற சத்ரபதி சிவாஜி ஹிராகுணி என்று பெயர் சூட்டினர்.



பாலை மலர்கள்

சரதிந்து பானர்ஜி

மத்திய ஆசியாவின் எல்லையற்ற பாலை. அங்கு மணலை வாரி இறைக்கும் சூருவளியின் பேய்க்கூத்திற்கு வேளை சமயமே இல்லை. சாதாரணமான காற்றின் விளையாட்டல்ல; சாவு பிழைப்புத் தெரியாமல் குதிக்கும் முரட்டுப் பிள்ளைகளின் விளையாட்டைப் போன்றது, மிகவும் கொடுமையைச் செய்யும் அந்த இயற்கையின் நிருத்யம். மனிதனின் முயற்சி யாவும் அதன் எதிரில் வியர்த்தமே. அவ்வளவு சக்தி வாய்ந்தது அந்தக் கடுவளி. பிராணனைக் கொடுத்த இயற்கை அன்னை, ஈவு இரக்கமின்றி அதை மதியாமல் துவம்ஸமாக்கி விடுகிருள் அரைக்கணத்தில். அவள் இயற்றும் இந்தக் கொடூரத்திற்குக் கேள்வி முறை ஏது? அந்த அகன்ற பாலைவெளியில் சிதறிக் கிடக்கும் பசுமையான திட்டுக்கள், அடிக்கடி காற்றும் மணலும் ஒன்று கூடிச் செய்யும் துராக்ரமிப்பினுல் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகின்றன. ஊற்றுநீர் பெருகியோடும் ஓர் அழகிய பாகம் வெம்மையைத் தரும் வறண்ட பாலையாகத் திரிந்துவிடுகின்றது. ஒருசமயம் மணற் காடாக இருந்த நிலங்கள் புதிய பசுமையுடன் செழித்துத் தோன்றுகின்றன. இயற்கையின் அழித்தலும் ஆக்கலுமாகிய இந்த லீலைக்கு ஓர் அர்த்தமே இல்லை. அது நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது, இன்றளவும்.

ஆசியப் பாலை வெளியிலும் ஒரு பச்சை நிறத் திட்டு. மணல், மணல், மணல். எங்கும் நரகவேதனையே தரும் அப்

பயங்கரமான மணற்காட்டின் நடுவில் ஸ்வர்க்கத்தின் ஒரு பாகம் நழுவி விழுந்தாற்போல் இருந்தது அந்தத் திட்டு. பேரீச்சந் தோப்புக்களின் இருண்ட நிழலின்கீழ் வளைந்து வளைந்து செல்லும் தெள்ளிய ஊற்றுநீர்க் கால்வாய்கள். அத் திட்டின் நடுமையத்தில் கருணைக் கடவுளான புத்தரின் ஸங்காச்ரமம் துங்கசிகரத்துடன் சிறந்திருந்தது.

இந்தப் பாலைத்திட்டு ஒரு சமயம் ஜனசந்தடியுள்ள ஊராக இருந்தது. வாரந்தோறும் இங்கே கூடும் சந்தைக்கு நூறு குரோச தூரத்திலிருந்துகூட ஒட்டகங்களின்மீது பொருள்களைச் சுமத்தி வரிசையாக வணிகர்கூட்டம் நெடு வெஞ்சுரத்தைக் கடந்துவரும். ஆனால் இப்போதோ அங்கே ஒன்றுமே இல்லை. வெளியுலகின் தொடர்பு வெகுநாட் களுக்கு முன்பே அற்றுப்போய்விட்டது. இருபது வருஷங் களுக்கு முன்னர் அடித்த ஒரு சண்ட மாருதத்தினால் இந்த ரம்யமான ஸ்தானம் மனிதர் வசிப்பதற்குத் தகுதியற்ற தாகிவிட்டது. பாலைக்காடு விடும் வெம்மையான மூச்சைத் தாளாது வதங்கி மாண்டன பேரீச்சந் தோப்புக்களெல்லாம். பசுமையான புல்தரைகள் தீய்ந்துவர ஆரம்பித்தன. நீர் நிலைகள் யாவும் வறண்டுபோயின, ஏதோ ஒன்றிரண்டைக் தவிர்த்து. பத்து ஆண்டுகள் இம்மாதிரியான தாபம் நீடிக் கவே, அத்திட்டில் வசித்தவர்கள் பெரும்பாலோர் வேறு இடங்களைத் தேடிக்கொண்டு போயினர். புத்த பகவான் கோயில் கொண்டிருக்கும் இந்த ஸ்வர்க்கமும் வரவரப் பாலை யின் பசிக்குப் பலியாகியது. ஒரு தலைமுறை இந்த ஸ்திதியில் கழிந்தது. மற்றொரு சமயம் காற்று ஏவிய மணற்குவியல் களின் பயங்கர தாண்டவத்தின்கீழ், மிருந்திருந்த மனி தர்கள் அவர்களுடைய உடைமைகளுடன் ஸமாதி செய்யப் பட்டனர். அக்கடும்போரில் தப்பி நின்றது அந்தப் பௌத்த மடாலயம் ஒன்றே. அதுவும் பாதிப்பாகம் வரை மணலில் புதைந்து கிடந்தது.

* * *

இயற்கையின் சினம் அடங்கி, என்றும்போல அந்தப் பாலை வெளி மணற்படலத்தின் இருள் நீங்கிக் கதிரவனின் சுடர்பட்டு ஒளிர்ந்தது. பேரீச்ச மரங்களில் பெரும்பான்மை பட்டுப்போயின. எங்கும் குன்றளவு மணற்குவியல்கள். இரண்டோர் ஈச்சமரங்கள் வாடித் தலைகாட்டிப் புத்தனின் ஆலயத்தைச் சுற்றி நிற்கும் காட்சி, மயானத்தில் யாரோ

சிலர் தமக்கு உயிரினும் இனிய ஒரு பொருளைப் பறிகொடுத்து விட்டு அழுவதுபோல் இருந்தது. மனிதனுடைய சின்னம் எங்குமே தென்படவில்லை.

அன்று மாலை மணலால் மூடப்பட்ட அந்த மடால யத்தின் ஒரு சாளரம் மெல்லத் திறக்கப்பட்டது. மணலைத் தள்ளிக்கொண்டு ஒணுணைப்போல் இரு உருவங்கள் வெளி யேறின. உண்மையில் அவை மனித வடிவங்களே. இரு வருள் ஒருவர் கிழவர்; மற்றவன் நடுவயதினன். அவன் நல்ல பலம் வாய்ந்த சரீரம் உடையவன். நடுவயது ஆள் அந்தக் கிழவரை மணலில் இழுத்துக்கொண்டே வந் தான். நடுநடுவே இளையவனுக்கு ஆயாசத்தினுல் மேல் மூச்சு வாங்கியது. ஒரு வாரமெல்லாம் காற்றின்றி உள்ளே அடைபட்டுத் திணறிக்கொண்டிருந்தால் ஏன் ஆயாசம் இராது? கிழவருக்குப் பிரக்ஞையே இல்லை. மறுபடியும் இளையவன் மணலில் அவரைச் சுமந்துகொண்டே கீழே இறங்கினுன். ஐயோ! ஊற்று இருந்த இடம் ஒன்ருவது தெரியவில்லையே! இளையவனுடைய கண்கள் நாலு பக்கமும் எதையோ கூர்ந்து கவனித்தன. ஒளியிழந்து சுருங்கியிருந்த அந்தக் கண்கள் சற்றுநேரம் பிரகாசமடைந்தன. மண லில் ஓர் இடம் ஓதமாக இருந்தது. கீழே இருக்கும் ஊற்று வெளியே பீறிக்கொண்டுவரப் பிரயத்தனப்படுவது தெரிந் தது. பலம் இழந்து இருந்தபோதிலும் அந்த நடுவயதினன் சட்டென்று பாய்ந்து பரபரவென்று மணலைத் தோண்டினுன். முத்துப்போன்று நீர் சுரக்க ஆரம்பித்தது. இரண்டுவாய் அள்ளிக் குடித்துவிட்டுத் தன் முகத்திலும் கொஞ்சம் வாரி இறைத்துக்கொண்டான். கிழவருடைய வாயை நீக்கிக் கொஞ்சம் தண்ணீரை வார்த்தும் அவர் முகத்தில் தெளித் தும் உணர்வை எழுப்பிக் கொண்டிருந்தான். கிழவர் கண் களைத் திறந்தார் அம்ருதம்போன்ற அந்த ஊற்றுநீர் அவரது வறண்ட தொண்டையில் இறங்கவே அவரும் நினைவு வந்து எழுந்து உட்கார்ந்தார். மௌனமாகவே தம்மைச் சுற்றிச் சூறுவளி துவம்ஸம்செய்த சின்னத்தைப் பார்த்தார். அனைவரும் மாண்டுபோய்த் தாங்கள் இருவர்மட்டும் உயிர் பிழைத்து இருப்பதை நினைந்து கண்ணீர் பெருக்கினுர். ஆனுல் அவ்விருவரும் தற்செயலாக அல்லவோ பிழைத்திருக்கும் படி நேரிட்டது! எதற்கும் யாராவது மணலின்கீழ் உயிருக்குப் போராடுகிருர்களோவென்று பார்க்க ஆவல்

ஏற்படவே, துர்ப்பலமான தேகநிலைமையிலும் அவர்கள் அந்த மணல் மேடுகளை ஆராயத் தொடங்கினர். மணல் கப்பிய ஓர் ஈச்சமரத்தின்கீழ் இரண்டு குழந்தைகள் ஏழு அல்லது எட்டு வயதுள்ள ஒரு பாலகன் மூர்ச்சித்துச் சாய்ந்து இருப்பதும், அவன் அருகிலேயே இரண்டரை வயதுடைய ஒரு பெண் குழந்தை தனக்குத் தானே சிரித்துக்கொண்டும் கூவிக் கொண்டும் விளையாடுவதும் தெரிந்தன. அவர்களைத் தவிர்த்து வேறு ஒரு பிராணியும் காணப்படவில்லை. என்ன விந்தை! அப்பேர்ப்பட்ட இயற்கையின் உக்கிர ஆவேசத்திற்குத் தப்பி மென்மையான இரு குட்டி ஜீவன்கள்கூடப் பிழைத்திருக்கின்றனவே!

பிக்ஷுக்களில் பெரியவரான பிதுமித்தர் இந்தக் காட்சியைக் கண்டதும் கண்களில் கருணைவெள்ளம் பெருக ஓடிப் போய் அவ்விரு சிசுக்களையும் மார்போடு அணைத்துக் கொண்டு, "ஹே ததாகத! இதுவும் நின் செயலே!" என்று புத்தனை ஸ்மரித்தார்.

அந்தத் திக்கற்ற பாலையில், சுற்றி நிலவும் நிர்மானுஷ்யத்தின் நடுவே, நான்கு ஜீவன்கள் புத்தனுடைய சரண கமலங்களில் புதிதாக வாழ்க்கையைத் தொடங்கின. பிதுமித்தர் சிறுவனுக்கு 'நிர்வாணன்' என்றும், பெண் குழந்தைக்கு 'இதி' என்றும் பெயரிட்டு அழைத்தார்.

* * *

இளவேனிற்காலத்துக் காலை. பிதுமித்தர் பௌத்த மடத்திலுள்ள ஓர் அறையில் பௌத்த அறநூல் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தார். அவருடைய ஸங்கத்தைச்சேர்ந்த ஒரே சிரமணன் — பிக்ஷு உசண்டன் — அவர் எதிரே முதுகெலும்பு கூனாமல் நிமிர்ந்து உட்கார்ந்தபடி பாடத்தைக் கேட்டுக்கொண்டிருந்தான். இருபது வருஷத்திய கடினமான பிரும்மசர்ய ஸாதனை அவன் உடலினை வைரமாக்கிவிட்டது. எல்லாவிதக் கஷ்ட நிஷ்டூரங்களையும் சகிக்கக்கூடிய தன்மை வாய்ந்து விளங்கியது அவன் தேகம். வழுக்கைத் தலையும், தசையற்ற சரீரமும் உடைய பெரியவர் வற்றிச் சுருங்கிய மாதுளங்கனியை ஒத்து இருந்தார். அவருடைய பஞ்சடைந்த விழிகளில் ஒளியே இல்லை. பாலைவிடும் உஷ்ண மூச்சு அம்மாதிரி செய்து விட்டதோ? கூம்பியிருந்தாலும் உசண்டன் பளபளக்கும் எஃகுபோல் உறுதியான தேகக்

கட்டு வாய்க்கப்பெற்றிருந்தான். பல வருஷங்களாக இன்ப வாழ்வை வெறுத்து வந்தமையாலோ என்னவோ, அவனுடைய கண்களில் ஒரு தீவ்ர ஒளி பிரகாசத்துடன், முகத்தில் சூரியனுக்கு நிகரான ஒரு தேஜஸ். அவனுடைய அடர்ந்த புருவங்கள் வைராக்கியத்தைக் காட்டின. திடப்பிரதிக்ஞை யைக் குறிப்பிடும் மோவாய்க்கட்டை. எந்தவிதமான போருக்கும் சளையாத வஜ்ரகம்பீரமான தோற்றம்.

அறநூல் படிப்பது முடிந்தது. சற்றுத் தியானத்தில் ஆழ்ந்துவிட்டுப் பிக்ஷு பிதுமித்தர் தம் சிஷ்யனை நோக்கிக் கேட்கலானார்: "இப்போது, பிக்ஷு, தர்மானுஷ் டானங்களைப்பற்றிக் கேள்விப்பட்டாய். அப்புறம் நிர்வா ணத்தை அடையும் மார்க்கம் போதிக்கப்படும். அதற்கு முன் ஒரு கேள்வி. உன் வாழ்நாளில் நீ மனோவாக்குக் காயம் இவை எதன் மூலமாவது பாபம் செய்ததுண்டா? அப்படி நீ மௌனம் சாதிக்கும் பக்ஷத்தில் நீ பாபம் செய்யவில்லை யென்று நான் அறிந்துகொள்ளுகிறேன்."

பிக்ஷு உசண்டன் தன் வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் மனத்தின்கண் வருவித்துப் பார்த்துக் கண்களில் ஓர் ஒளிபரவப் பேசாமல் இருந்தான்.

அப்போது ஆசாரியர், "ஏ பிக்ஷு! நீ மௌனமா யிருப் பதிலிருந்து ஐம்புலனை வென்றவனென்று தெரிந்துகொள் கிறேன்" என்று கூறிப் பாடத்தைப் பூர்த்திசெய்தார்.

ஆச்ரமத்திற்கு வெளியே படைபடைக்கும் வெயில். அந்த இருண்ட பௌத்தப் பள்ளியிலும் வெளிச்சம் பரவி நின்றது. மத்தியான்ன ஸ்நானம் செய்வதற்கு இருவரும் எழுந்திருக்கையில் உசண்டன் வணக்கத்துடன் தன் குருவை நோக்கி, "தங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன்: நிர்வாண னுக்கு எப்போது தீக்ஷை செய்விக்கலாம்? அவனுக்கு வயது இருபது ஆகிவிட்டதே" என்றான்.

முதிய பிக்ஷு சற்று நிதானித்து, "இருபது முடிந்து விட்டதா என்ன? இதை நான் கவனிக்கவில்லை" என்றார்.

உசண்டன் சற்றுத் தடுமாற்றத்துடன், "ஸத்வ, இந்த விஷயத்தில் அனுமானமே போதுமென்று எண்ணுகிறேன்" என்றான்.

"ஆனால் நிர்வாணனுக்கு இது விருப்பமோ இல்லையோ?"

"அவசியம் இஷ்டப்படுவான். நம்முடைய ஸங்கத்தில் பழகிய பிறகு அவனுக்கு இல்வாழ்க்கையில் பற்று ஏன் ஏற்படும்? நம்முடைய நியமப்படி வளர்ந்தவனை அவனுக்கு இது ஏன் பிடிக்காது போகும்? இந்த ஸங்கத்தைத் தவிர்த்து அவனுக்கு வேறு போக்கிடம் எங்கே?"

கிழவர் கண்ணைக் கூசும்படியான சூரிய வெளிச்சத்தை ஒருதரம் பார்த்துவிட்டு, "சரி, அவனைக் கேட்டுப் பார்ப்போம்" என்றார்.

உசண்டன் தன் குருவை எரிவிழியுடன் நோக்கினான். "உத்தமம். தங்கள் பிரியப்படி அவனை அழைத்து வருகிறேன்" என்று மொழிந்துவிட்டு வெளியே சென்றான்.

இந்த இருபது வருஷகாலமாக அந்தப் பாலைத்திட்டின் தோற்றத்தில் யாதொரு மாறுதலும் காணப்படவில்லை. ஆலயத்தைச் சுற்றியிருக்கும் மணல்மேடு அப்படியே இருந்தது. அதைச் சீர்திருத்துவதென்றால் மனிதனால் ஆகக்கூடிய காரியமா? ஆனாலும் இரண்டோர் அறைகள் மட்டும் மணலிலிருந்து சுத்தப்படுத்தப்பட்டன. அவ்வறைகளையே நிர்வாணனும் இதியும் உபயோகித்துவந்தனர்.

தன் குருவை விட்டு வந்ததும் உசண்டன் நேராக இளம் பேரீச்ச மரங்கள் செறிந்து வளர்ந்திருக்கும் சோலையை நோக்கிச் சென்றான். சலசலவென்று ஊற்றுநீர் பெருகியோடி ஒரு பொய்கையை நிரப்பியது. பளிங்குபோல் இருக்கும் அதன் நீரைப் பார்த்தால் அடியிலுள்ள மணல் தெளிவாகத் தோற்றும். நிர்வாணன் பொய்கையின் பசுமையான தடத்தில் வீற்றிருந்தவண்ணம் தன் சாயலைத் தண்ணீரில் பார்த்தபடியே சிந்தையில் மூழ்கியிருந்தான். ஈஞ்சு ஓலை வழியாக ஊடுருவிவரும் சூரியன் கிரணங்கள் அவன்மேல் படிந்து இயற்கையிலேயே அழகுவாய்ந்த அவன் தேகத்திற்குப் பொன்னிறக் காந்தியை அளித்தன. கறுத்த மயிர்ச்சுருள்கள் அவன் கழுத்தில் புரண்டன. அரையில் துல்லியதோர் வஸ்திரம். வைகறையின் புது மலர்ச்சியையொத்து அவனுடைய இளமையின் முருகு, ஊற்றுநீரில் பிரதிபலித்தது. அவன் நெற்றியில் அபார புத்தியின் தீக்ஷண்யம் உலவியது.

உள்ளழகும் புறக்கவினும் ஒன்றுசேர்ந்து இருப்பது அபூர்வமே. வெளியுலகத்தையே அவன் மறந்து இருந்தான். அவனுடைய மார்பு அடிக்கடி ஏதோ கிளர்ச்சியினால் பெருமூச் செறிந்து விம்மிற்று. சில நாட்களாகவே நிர்வாணனுடைய மனத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டுக்கொண்டிருந்தது. சிறு வயது முதற்கொண்டு ஒன்றாக வளர்ந்தவர்களிடையே பரஸ்பரமான மோஹம் பிறப்பதில்லை. இதி, பெண் ஜன்மங்களுக்குரிய மென்மையோடு நிர்வாணனுடன் ஓடியாடிப் பழகியிருந்தாள். வயது ஏற ஏற அவளிடம் அநேக மாறுதல்கள் தோன்றின. பால்யமும் யௌவனமும் சந்திக்கும் ஸௌந்தர்யத்தை அவள் உடல் எடுத்துக்காட்டியது. ஒரு சமயத்தில் விகற்பமற்று ஒளிர்ந்த கருவிழிகளில், இப்போது மையலை எழுப்பும் ஜ்வாலை. இன்னும் நிர்வாணனுடைய இதயத்தின் ஆழத்தை நாரியின் ரூபமோஹம் தொடவில்லை. திடீரென்று நிர்வாணனுடைய மனமும் காதல் என்ற உணர்ச்சிக்குப் பிறப்பிடம் என்பதைக் காட்டிவிட்டது. பழம் பரிபக்குவமாவதற்குப் பூவின் இதழ் வாடி உதிர்வதுபோல் நிர்வாணனுடைய மனோநிலைமையும் ஆயிற்று.

ஈச்சம் பூவை ஊதும் வண்டினத்தின் களியாட்டம் அன்று அவனுடைய சிந்தனையைக் கலைத்தது. எப்படி அந்தப் பாலையைக் கடந்து வெகுதூரத்திலுள்ள இந்த வண்டுகள் இங்கே வந்தன? ஈஞ்சின் வாசனை அவ்வளவு தூரம் சென்று இவற்றை மயக்கி அழைத்திருக்கும்? ஆம்! அதுபோலவே இதியின் மாதுர்யமும் இந்த நிர்வாணனுடைய வறண்ட மனத்தை மயக்கி அழைக்கிறது. வைசித்திரியமற்ற அவனுடைய இருபது வருஷகால வாழ்வில் இந்தப் புதுப்பித்தம் தோன்றுவானேன்? வண்டினத்தின் கூடல் உவகையை இமைகொட்டாமல் கவனித்தான் நிர்வாணன்.

பின்புறமாக இதி தன் மெல்லிய கரங்களினால் அவன் கழுத்தைப் பிணைத்துக்கொண்டாள். மனத்தின்கண் இரு வெவ்வேறு வெள்ளம் புரளும் சமயம் இப்படித் திடீரென அவள் தொடவே அவன் உடல் சிலிர்த்தது. உசண்டனுடைய கடினமான ஸாதனைகள் அவனைத் திரஸ்கரித்தன. இதி நிர்வாணனின் காதோடு, "ஒரு வஸ்து கண்டுபிடித்திருக்கிறேன்; வருகிறாயா பார்க்கலாம்?" என்றாள் மிகவும் ஆதரவுடன். அப்போதும் நிர்வாணனுடைய கண்ணோட்டம்

அந்த வண்டுகளை விட்டு வரவேயில்லை. "என்ன அது?" என்று கேட்டான் அவன்.

அவன் முகத்தைத் தன்பால் திருப்பி இதி, "வா, போய்ப் பார்க்கலாம்" என்று கூறி அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு மணல் வெளியை நோக்கிக் கவரிமானைப்போல் சென்றாள். அவளுடைய அழகிய விழிகளில் களிப்புக் கூத்தாடியது.

தங்கள் இருப்பிடத்தைத் தாண்டி அவர்கள் வெகு தூரம் வந்துவிட்டனர். தலைக்குமேலே அக்கினியைக் கக்கும் வெய்யவன். காலடியில் கொதிக்கும் மணல்திரள். இருவரும் ஒன்றும் பேசாமல் வழிநடந்தனர். அடிக்கடி இதி மட்டும் நிர்வாணனைக் காதல் மலிந்த பார்வையுடன் நோக்குவாள். இரண்டொரு பிரேம வசனங்களை மிழற்றுவாள். இப்படியே இவர்கள் நேரம் போவது தெரியாமல் நடந்துசென்று ஒரு மணற்குன்றின்மீது ஏறி நின்றனர். திக்கு வளையத்தைச் சுற்றிப் பார்த்தனர். சட்டென்று இதி, "அதோ!" என்று அதிசயம் தோய்ந்த குரலுடன் நிர்வாணனுக்கு ஏதோ ஒன்றைச் சுட்டிக் காட்டினாள். அவள் விரல் காட்டும் திசையை நோக்கியதும் நிர்வாணன் ஆச்சரியத்தினால் நிலைத்து நின்றான்.

வானும் மணலும் தொடும் இடத்தில் கண்களைக் குளிரச் செய்யும் பசுமையான வனம் தென்படுகிறது. அங்குள்ள மரங்கள் அடர்த்தியாக வளர்ந்து காற்றில் அவற்றின் இலைகள் அசைகின்றன. பலவர்ணப் புள்ளினம் அங்கே பறக்கின்றன. இளம் புல்தரைகளில் ஆடுகள் மந்தை மந்தையாக மேய்வதுகூடத் தெளிவாகத் தெரிகிறது. கண்ணிற்கு இனிய ஓர் ஆறு அந்தக் காட்டின் ஓரமே வளைந்த கத்தியைப்போலப் பளபளத்துப் பாய்ந்து செல்கிறது!

நிர்வாணன் உரக்கச் சிரித்தான். இதியைக் காட்டிலும் அவன் அறிவாளி அல்லவா? இதி நிர்வாணனுடைய கழுத்தைத் தழுவிக்கொண்டு தன் முகத்தோடு அவனுடைய முகத்தைச் சேர்த்துக்கொண்டாள். உணர்ச்சியின் மிகுதியால் அவளுக்கு மூச்சுத் தடுமாறியது. "பார்த்தாயா, நிர்வாண! அழகாயில்லை? வா, நாம் இரண்டுபேரும் அந்த இடத்திற்குப் போவோம். நீயும் நானுமே போகலாம்; வாயேன்" என்று வற்புறுத்தி அழைத்தாள். அவளுடைய கமனீய வதனத்தை நோக்கி அவள் பேதைமையை நினைந்து

சிரிக்காது வேறு என்ன செய்வான் நிர்வாணன்? பொழுது தாழத் தாழத் திகந்தத்தில் தோன்றிய கானகம் ஆறு யாவும் மாயமாக மறைந்து போயின. "இதி, தெரிகிறதா இப்போதாவது? அது கானல்நீர் செய்யும் இந்திர ஜாலம். இந்த மாயைக்குச் சிக்கி ஒட்டைகள்மீது செல்லும் எத்தனை பிரயாணிகளின் கூட்டம் திசைதப்பி மணலுக்கு இரையாகியிருக்கின்றன தெரியுமா?" என்றான். இதி ஒன்றும் தோன்றுதவளாய் ஒருவித அச்சத்தினால் நிர்வாணனை மார்புற அணைத்துக்கொண்டாள்.

* * *

அன்று முதற்கொண்டே இருவரிடையே இந்த நட்பு வளரத் தொடங்கியது. ஆனால் உசண்டனுக்குப் பயந்து நிர்வாணன் இதியை விட்டு விலகியே செல்வான். அவளுடன் பேசவேண்டுமென்று ஆசை இருந்தாலும் அதை அடக்கிக் கொள்வான். நரகவேதனையில் துடித்தது அவன் மனம். கட்டிக் கவிய வரும் இந்த மோஹபாசத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள அரும்பாடு பட்டான். ஆனால் எது வெற்றியடைந்து நிற்கும்? இயற்கையே!

மனத்தில் குருத்துவிடும் காதலை நசுக்கி எறிவது இயலாத காரியம். கடினமான நியமங்களைக் கடைப்பிடித்தாலும் இந்தத் தாபத்திற்கு எதிரே தபஸ் ஒன்றும் செய்யாது. இதி அவனுடைய இதய சிம்மாசனத்தில் இடங்கொண்டாள். அவளே இப்போது அவனுடைய மனோபாவங்களில் நிரம்பியவள்.

இருவரிடையே பரவும் இந்த நோய் மூன்றும் மனிதனுக்குத் தெரியாமற் போவதில்லை. பிதுமித்தரும் உசண்டனும் இவர்களின் போக்கைச் சுலபமாகக் கண்டுகொண்டனர். கிழவரின் ஒளியிழந்த கண்களில் கருணை கசிந்துருகியது. அவர் எதைக் குறித்து விசாரப்பட்டாரோ அது இன்று உண்மையாக நடந்துவிட்டது. "ஏ ததாகத! போயும் போயும் இந்தப் பாலையிலா இவ்வழகிய மலர்களை நீ சிருஷ்டிக்க வேண்டும். அவை இங்கே இருக்கும் வைராக்கியத்தின் வெம்மையைத் தாங்குமோ, வதங்கிவிடுமோ?" என்று வருத்தப்பட்டார்.

உசண்டனுடைய நெற்றிக்கட்டில் பாலைவனத்தின் சினம் உலாவியது. 'இந்தப் புனித இடத்திலும் மாரன்

நுழைந்து பாழாக்குகிறானே. அவனைத் தடுக்கவேண்டும்" என்று உக்கிரமான சபதம் செய்துகொண்டான்.

இதியின்மீது உசண்டனுக்கு வெறுப்பும் துவேஷமும் அதிகரித்தன. அவன் நிர்வாணனைத் தன் பிடியில் இழுத்துக் கொள்ளப் பிரயத்தனம் செய்தான். அடிக்கடி கடினமான அனுஷ்டானங்களையும் நியமங்களையும் விதித்து அவனை இதியின் ஸஹவாஸத்திலிருந்து பிரித்துவைத்தான். காதல் இன்பத்தை நுகராது கழிந்த உசண்டனின் இளமையே இப்போது இதியின் உருவாகத் தோன்றி அவனை வாட்டியது போலும்! அந்த முரட்டுப் பிக்ஷுவின் மூளையில் மட்டும், 'மாரனை வெல்வேன்! மாரனை வெல்வேன்!' என்று ஏதோ ஒன்று ரீங்காரம் செய்துகொண்டே இருந்தது

நிர்வாணனும் இதியும் இதுவரையில் பிரிந்திருந்ததே இல்லை. உசண்டனின் ஆக்ஞைகள் நிர்வாணனுக்குத் தழலைத் தின்பதுபோல் இருந்தன. பௌருஷம் பெண்மைக்கு அடங்காது இவ்வுலகில் நிலைக்கும் என்னும் ஸித்தாந்தத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்பதே உசண்டனின் லக்ஷ்யம். ஆனால் இந்த அடக்குமுறையே இயற்கையில் நேர்மாறான பலனைத் தந்துவிடுகிறது. மாரன், ஸங்கத்தைக் கெடுக்க வந்து விட்டதென்னவோ வாஸ்தவம்; ஆனால் அவன் எந்த வழியாக உட்பிரவேசித்தான் என்பதை உசண்டன் அறியவில்லையே!

பாலையில் தோன்றிய இளவேனில் சீக்கிரமே மறைந்து விடுகிறது. ஒரே காம்பில் பூத்த இருமலர்களிடையே வெம்மை பாய்ந்து அவற்றை வதங்கச் செய்கிறது.

நிர்வாணனைப் பிக்ஷுவாக்க முயன்றான் உசண்டன்.

* * *

பொய்கையின் நீரில் ஒரு நிழல் தோன்றியது. பகற் கனவு கலைந்து நிர்வாணன் திரும்பிப்பார்த்தான். இதி வந்து கொண்டிருந்தாள். அவளுடைய சரீரத்தை ஒரு வெண் துகிலே மறைத்திருந்தது. பின்புறம்வரை வழியும் அவளது கூந்தல் வெயிலில் திரிவதனால் பொன்னிறமாக விளங்கியது. துகில்மூடாது இருக்கும் அவளுடைய தோள்களின் வனப்பு அவன் மனத்தை அள்ளும்படியாக இருந்தது.

மெதுவாக நிர்வாணனை அணுகி அவள் தன் கைப்பிடியில் ஒரு வஸ்துவை மறைத்து வைத்துக்கொண்டு, "நிர்வாண! கண்ணை மூடிக்கொள்" என்றாள்.

நிர்வாணன் அப்படியே செய்தான்.

"ஆவென்று வாயைத் திற!"

நிர்வாணன் கண்களை மூடியபடியே வாயைத் திறந்தான். இதி தன் கையிலிருந்த அந்த அரிய பொருளை அவன் வாயில் போட்டாள். "இப்போது அது என்னவென்று சொல்லு பார்க்கலாம்?" என்றாள். நிர்வாணன் அதை மென்று கொண்டே, "தெரியவில்லையே" என்றான். "சர்க்கரை வள்ளிக்கிழங்கு" என்றாள் அவள். "எங்கே கிடைத்தது, உனக்கு?" என்று அவன் கேட்டான். இதி அவனுடைய உடல் தன் உடலில் படும்படி உட்கார்ந்து, அக்கிழங்கு மணலின்கீழ் வளர்ந்திருக்கிறதென்றும், தன் ஒருத்தியால் மட்டுமே அதைக் கண்டுபிடிக்க முடியுமென்றும் சொன்னாள். ஈச்சம் பழத்தைத் தவிர்த்து எதையும் உண்டறியாத நிர்வாணனுக்கு அது அம்ருதத்திற்கும் மேலாக இருந்திருக்கும் அல்லவா? இருவரும் வெகுநேரம்வரையில் பரஸ்பரமான அன்பில் சிக்கியிருந்தனர். நிர்வாணன் தான் செய்யவேண்டிய கடமைகளை மறந்தே போய்விட்டான். இந்த இன்பக்கனவைப் பாதியில் கெடுக்க இடிமுழக்கம் ஒன்று கேட்டது, "நிர்வாண! எழுந்து வா!" என்று.

நிர்வாணன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். தண்டனையே மூர்த்தியாக அவதரித்திருக்கும் அந்த உசண்டனே!

தன் பிழையை உணர்ந்தவனாய் நிர்வாணன் உடலைக் கூசிக்கொண்டு, அந்தத் தீவிழிச் சமணன் எதிரே சென்று கைகட்டி வணங்கி நின்றான்.

"சே, நீ கெட்டாய்!" என்று கர்ஜித்தான் உசண்டன். நிர்வாணனுடைய உடம்பில் ஓடும் ரத்தம் சட்டென்று உறைந்துவிட்டது. வெள்ளைக் கற்சிலைபோல் அவன் மாறி நின்றான். ஸங்காச்ரமத்தைச் சுட்டிக்காட்டி உசண்டன், "போ, அங்கே! பெரியவர் உன்னைக் கூப்பிடுகிறார்" என்றான்.

நிர்வாணன் ஆலயத்தினுள் புகுந்ததும் யமஸ்வரூபியான உசண்டன் இதியை விளித்து, "ஏ பெண்பேயே! நீ ஏன்

நிர்வாணனைக் கெடுக்க வந்தாய்? இனி அவன் எதிரே ந வரக்கூடாது — உன் சாயைகூட!'' என்ற கொடூரமான ஆக்ஞையை இட்டுவிட்டு ஆலயத்தைநோக்கிச் சென்றான்.

பெரியவரான பிதுமித்தரின் முன்னிலையில் நிர்வாணன் நின்றுகொண்டிருந்தான். உசண்டன் உள்ளே நுழைந்ததும் தன் குருவைப் பார்த்து, "ஹே ஸத்வ! இந்த நிர்வாணன் நம்முடைய பரிசுத்தமான ஸங்க நியமங்களைப் பாழாக்கிவிட்டான். அதற்குரிய தண்டனையை நீங்கள் அவனுக்கு விதிக்க வேண்டும். மாரன் நுழைந்த இந்த இடத்தை மீண்டும் நாம் புனிதமாக்க வேண்டும்'' என்றான்.

அதற்கு அந்தப் பெரியார் மறுமொழியொன்றும் தர முடியாமல் விழித்தார். அவருடைய பஞ்சடைந்த கண்களில் கருணை ததும்பிற்று. அவருடைய இதயம் பலவேறு கலவரங்களினால் துன்பமுற்றது. அஜாதசத்ருவான, குழந்தையைப் போன்ற நிர்வாணனுக்கு எப்படித் தண்டனை விதிப்பது?

காதல் இயற்கையிலே விளைவது என்பதை ஞானக் கண்ணையுடைய அந்த உத்தமர் அறிவார். அவர் தீவிரமான சிரமணராயிருந்தபோதிலும், மனிதனின் இயல்பை அவருடைய மெல்லிய அந்தக்கரணம் ஊகித்துக்கொண்டது.

"என்னால் அவனைத் தண்டிக்க முடியாது!'' என்று கிழவர், தம் குரலில் அனுதாபம் தென்படக் கூறிவிட்டார்.

'ஆஹா! என் குருகூடவா இவ்வளவு நாள் பயிற்சி பெற்றும் இந்தத் துச்சமான வாலிபனுக்காகத் தம் மனவலிமையை இழந்துவிட்டார்? இது முதுமையினால் வந்த கோளாறு. நானே இவனைத் தண்டித்துவிடுகிறேன்' என்று மனத்தில் எண்ணி வெளிப்படையாக, "ஐயனே! உத்தரவிட்டால் நானே இதைச் செய்துவிடுகிறேன். நீங்கள் கஷ்டப்பட வேண்டாம்'' என்று சொன்னான். கிழவர், "எது வேண்டுமானாலும் செய். ஆனால் நீ செய்யும் காரியம் பகவானுக்குப் பிரியப்படாதுபோனால் அதன் விளைவை நீ அனுபவிக்க நேரும்'' என்றார்.

"ததாகதருக்கு விரோதமாக நான் ஒன்றும் செய்யவில்லை. மாரனை விரட்டுவது பாபமா? இதனால் ததாகதரின் ஸங்கம் அல்லவோ சுத்தியடைகிறது!'' என்று சமாதானம் கூறிவிட்டு உசண்டன் நிர்வாணனை நோக்கி,

"நிர்வாண! உன் பிழைக்கு என்ன தண்டனை தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியும். இந்த ஸங்கத்தை விட்டு என்றைக்குமே போய்விடுதல்."

"இன்னும் அதிகம். நாளைக்கே நீங்கள் இருவரும் பகலில் இந்தத் திட்டை விட்டு அகலவேண்டும்" என்று வாய்கூசாமல் தண்டனையை விதித்தான் உசண்டன்.

தலை வணங்கி அந்தத் தண்டனையை நிர்வாணன் ஏற்றுக் கொண்டான். கிழவர் வாயடைத்து இருந்தார். அவருடைய உள்ளம் மட்டும் அவர் வளர்த்த இந்த இரண்டு ஜீவன்களைப் பாலைக்குப் பலியாக அளிக்க உடன்படாது துயரக்கடலில் ஆழ்ந்தது. ஸங்கத்தை விட்டுப் பிரஷ்டமாவதென்ருல் குரோசக் கணக்காகப் பரந்திருக்கும் பாலையில் உயிர்மடிவது என்றுதான் அர்த்தம்!

இவற்றையெல்லாம் இதி மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தாள். உசண்டன் விதித்த தண்டனை அவள் இதயத்தையும் வேல்போல் ஊடுருவி வருத்தியது.

நிர்வாணன் பலவிதக் கலவரங்களினுல் நித்திரையின்றித் தன் அறையில் கட்டாந்தரையில் கிடந்தான். வைகறையில் அவன் சற்றுக் கண்ணயர்ந்தான். சில்லென்ற ஒரு கை அவன் கண்ணிதழ்களைத் தடவி எழுப்பியது. இதி அவனைத் தொட்டு, "நிர்வாண! வா வேளையாகிவிட்டது; நாம் போவோம்" என்று அழைத்தாள்.

நிர்வாணன் அவளுடைய மெல்லிய கரங்களைத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டே தேம்பித் தேம்பி அழலானுன். ஆ, புருஷனுடைய தௌர்ப்பல்யமே! அவனைச்சாந்தப்படுத்த இதி, "சீ நிர்வாண! எதற்காகக் கண்ணீர் சிந்துகிருய்? இந்தப் பாலைக்கா நாம் அஞ்சுவது? காதல் மறுமையிலும் வளர்கிறது. அந்தச் செய்தியை நமக்கு அறிவிக்க மறலியே தூதனுக வந்திருக்கிருன். அவனை வரவேற்போம். எழுந்திரு! பொழுது புலர்ந்துவிட்டது, நாம் செய்த பாக்கியத்தால். இன்றே நமக்குக் கல்யாணதினம்" என்ருள்.

இந்த வார்த்தைகள் உடனே என்றுமிராத உரத்தைக் கொடுத்தன நிர்வாணனுக்கு. அவனும் உல்லாஸத்துடன்

இதியின் கையைத் தன் கையில் கோத்துக்கொண்டு எதிரே விறைத்து நிற்கும் எல்லையற்ற பாலைவெளியில் புகுந்தான். வெம்மைக்கும் வேட்கைக்கும் அஞ்சாது அவ்விருவரும் அனந்தமான அந்தப் பாலையில் மணலோடு மணலாகக் கண்ணிற்குத் தெரியாமல் மறைந்தனர்.

அவர்கள் சென்ற பாலை அன்று சொல்ல முடியாத கத கதப்புடன் விளங்கியது. ஒருவித மங்கல் திரையிட்டதுபோல் அப்பாலை வெளியைச் சூழ்ந்திருந்தது. பொழுது ஏற ஏற வெட்மையும் அதிகரித்தது. பழுக்கக் காய்ந்த தகடுபோல் வானம் தோற்றியது. மணல் குப் குப்பென்று நெருப்பை உமிழ்ந்தது. இவ்விதமே இருபது வருஷங்களுக்குமுன் ஒரு தினம் இருந்தது. அன்றுதான் ஒரு பயங்கரச் சூறுவளி இந்தத் திட்டைப் பாழாக்கியது.

வெப்பம் தாளாமல் உசண்டன் மடாலயத்தின் வெளியே வந்து பாலைவனத்தைப் பார்த்தான். அவன் கண்களில் சட டென்று ஒரு மருட்சி தோன்றியது. முகத்தில் திகில் உலா வியது. 'அதென்ன, அதோ தொலைவில் திகந்தத்தில் தெரி கிறதே, அந்தக் கறுப்புப் புள்ளி? ததாகத, மீண்டுமா ....?' என்று எண்ணி ஜீவன் ஒடுங்கினவனுய்த் தன் குருவிடம் சென்று, "ஐயோ! இப்படியும் முடியுமா என் எண்ணங்கள்? ததாகதர் வேறுவிதமாக எண்ணிவிட்டார். பாவியானேன்! அவர்கள் வெகுதூரம் போயிருப்பார்களோ?" என்றெல்லாம் கதறத் தொடங்கினுன்.

"ஏ உசண்ட! கதறினுல் அவர்கள் மீண்டும் வரப்போகி ருர்களா? எதற்காக நீ இப்படிக் கலக்கம் கொண்டாய்?" என்று கேட்டார். அப்போது நடுப்பகலாயிருந்தும் ஆகாச மும் பூமியும் இருட்டிக்கொண்டு வந்தன. தூரத்தில் ஓவென்று நூருயிரம் பேர் அழுது கூவுவதுபோல் ஓர் ஓசை கேட்டது. வரவர அது பயங்கரமாக விருத்தி அடைந்தது. "ஐயனே!......அன்று வந்ததுபோலவே இன்றும் ஒரு பாழுங் காற்று! ஏனே அந்த இளம் பிள்ளைகளை நான் தண்டித்துப் பாலை வெளியில் துரத்தினேன்?" என்று அலறி னுன் உசண்டன்.

மணலைத் தூவும் கடுவளி மும்முரமாக அடிக்க ஆரம் பித்துவிட்டது. பெரியவரான பிதுமித்தர், "ஸங்கம் சரணம்

கச்சாமி” என்று உச்சரித்துவிட்டுக் கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் ஆழ்ந்தார்.

அதேசமயம் உசண்டன் உன்மத்தம் பிடித்து, “நிர் வாண!..........இதி!.........எங்கே நீங்கள் இருக்கிறீர்கள்? எங்கே?” என்று கூவிக்கொண்டே, ஒன்றுமே கண்ணிற்குப் புலப்படாத அந்தப் பாலைவெளியை நோக்கி மணலைப் பொழியும் அந்தக் கடுவளியின் நடுவே பாய்ந்தான். காற் றின் ஒலத்தில் அவனுடைய கூக்குரல் மங்கிவிட்டது.

அன்று முழுவதும் தங்குதடையின்றிச் சூறையாடியது காற்று. பௌத்த ஆலயம் இருந்த இடம் தெரியாமல் மணலில் புதைந்துபோய்விட்டது.

* * *

இளங்காதலர் இருவரும் இன்னும் போய்க்கொண் டிருக்கின்றனர். அவர்களுடைய பிரயாணம் முடிவற்றது.



தங்கச் சிலை

ஸீதா தேவி

மூர்ஷிதாபாத் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு தர்ம சிந்தனையுள்ள தனவந்தர் சில வருஷங்களுக்கு முன் குளம் ஒன்று வெட்டினார். கூலியாட்கள் தோண்டிக்கொண்டிருக்கையில் ஒரு விக்ரஹம் அகப்பட்டது. அந்தச் செய்தியை அறிவிக்கச் சிலர் தனவந்தரிடம் ஓடினர்.

தனவந்தர் புரோஹிதருடன் வந்தார். அதற்குள் அக்கம் பக்கம் எங்கும் செய்தி பரவிக் கும்பல் கூடிவிட்டது. ஜில்லா கலெக்டர்கூட விக்ரஹத்தைப் பார்க்க வரப்போவதாக எல்லோரும் பேசிக்கொண்டார்கள் புரோஹிதர். மந்திர உச்சாடனம் செய்து விக்ரஹத்தை நிறுத்தினதும், தனவந்தர், "ஸ்வாமி, இது எந்த அம்மனுடையது? வெண்கலமா அல்லது வேறேதாவது உலோகமா யிருக்குமா?" என்றார். புரோஹிதர், "எந்த அம்மனுடையதென்று எனக்குப் புரியவில்லை. வெண்கலம் என்று என் மனத்தில் படவில்லை" என்றார்.

அப்பொழுது பின்னாலிருந்து எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவன், "ஸ்வாமி, இது அசல் தங்கம். நான் உறுதியாகச் சொல்லுவேன்" என்றான்.

அதற்குள் கலெக்டர் அங்கு வந்து சேர்ந்தார். அவருடன்கூட வந்த புராதன தத்துவ சாஸ்திரி, "இது எந்த அம்மனுடைய விக்ரஹமுமல்ல. ஒரு பெண்ணின் சிலை" என்றார்.

ஆட்களைக்கொண்டு கலெக்டர் அப்பிரதிமையைத் தம் மோட்டார்காரில் வைத்துக் கூலிகளுக்குக் கால் ரூபாய் வீதம் இனும் அளித்துவிட்டுத் தம் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்

தனவந்தருக்கு இதில் மிக்க மனவருத்தம். அவர் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை யாயினும், அன்றைத் தினத்திலிருந்து குளம் வெட்டும் வேலை ஜரூராக நடக்கவில்லை. கொஞ்ச நாளைக்குள் தத்தம் ஸம்ஸாரக் கவலைகளில் எல்லோரும் அதை மறந்துவிட்டனர். அந்தச் சிலை இப்பொழுது மேனாட்டில் எந்தப் பொருட் காட்சிச் சாலையில் தூங்குகிறதோ!

* * *

வாஸ்தவமாகவே பிரதிமை ஒரு பெண்ணினுடையது தான். அதன் பூர்வ விருத்தாந்தம் இதுவே.

சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன் அந்தப் பிராந்திய மெல்லாம் காடு மூடியிருந்தது. அருகில் பிரஸித்திபெற்ற க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த சிற்றரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அக்காலத்து ஆண் மக்கள் நெஞ்சில் உரமும், தோள்வலியும் கொண்டவர்கள். அவர்கள் புலி கரடி போன்ற துஷ்ட மிருகங்களை வேட்டையாடுவதில் நிகரற்று விளங்கினர். பெண் மக்கள்கூட சஸ்திரப் பயிற்சியில் தேர்ந்து, சந்தர்ப்பம் ஏற்பட்டால் துஷ்ட மிருகங்களையும், துஷ்டர்களையும் எதிர்த்து நின்று உயிரைத் துறக்கவும் சித்தமாயிருப்பர்.

மேற்சொன்ன சிற்றரசரின் பெயர் ராஜவல்லப ராய். அவர் மஹா தைரியசாலி. சீல முள்ளவர். புலி வேட்டையாடச் சென்றபோது அவருடைய மாப்பிள்ளை ஒரு மதயானையால் சொல்லப்பட்டான். அவருடைய ஏக புத்திரன் தேவகீ நந்தனன், பெண் யோகமாயா, மருமகள் பத்மாவதி, பேத்தி சந்திரானனு இவர்களே அவருடைய குடும்பத்தினர்.

தேவகீநந்தனனின் மனைவி பத்மாவதி (சந்திரானனுவின் தாய்) இழுப்பு வியாதியால் பீடிக்கப்பட்டு ஸதா ஸர்வ காலம் படுத்த படுக்கையாகவே கிடந்தாள். பத்மாவதிக்குச் சந்திரானனுவுக்குப்பின் ஒரு குழந்தைகூடப் பிறக்கவில்லை.

சந்திரானனுவின் வயது பத்து. தேவகீநந்தனன் மறு விவாகம் செய்துகொள்ளாவிட்டால் அவனுடைய வம்சம் அதோடு முடிந்தமாதிரிதான். புத்திர ஸந்தானம் இல்லாவிட்டால் ராஜ்யம் வேறு யாரையாவது சேர்ந்துவிடுமே என்று குடிகள் கவலை கொண்டனர்.

தேவகீநந்தனனுக்கு இதெல்லாம் காதில் எட்டவே யில்லை. அவனைவிட வேட்டையாடுவதில் திறமையுள்ளவன் எவனுமே அந்தப் பக்கத்தில் இல்லை. ராஜ்யத்தைப் பார்த்துக்கொள்ளத் தகப்பனுர், குடும்பத்தைக் கவனிக்கத் தமக்கை யோகமாயா, மனைவியைப் பார்த்துக்கொள்ளப் பணிப்பெண்கள்; சந்திரானனுதான் எல்லோருக்கும் கண்ணுக்குக் கண்ணுச இருக்கிருளே — இவ்வளவு பேர் இருக்கும்போது அவனுக்கு என்ன கவலை?

* * *

மழை நாள் ஒய்ந்தது. சரத் காலம் வந்தது. ஷிகாரிகள் தங்கள் துருப்பிடித்த ஆயுதங்களை வெளியிலெடுத்தனர். தேவகீநந்தனன் ஆள் அம்புகளுடன் காட்டுக்குப் புறப்படத் தயாராக இருந்தான். அந்தச் சமயம் சுற்றிலுமுள்ள கிராமங்களில் புலி உபத்திரவம் என்று செய்தி வந்தது. இரா வேளைகளில் குடிசைகளில்கூடப் புகுந்து மனிதர்களைக் கொன்றுவிட்டதாம். பீதி அடைந்த கிராமவாசிகள் அதை ஒரு துர்த் தேவதை என்று எண்ணி, அடித்து விரட்டக் கூடத் தயங்கினர். அவர்கள் அப்படி நினைத்ததற்குக் காரணம் அதன் உருவமே. பத்தடி நீளம்; நெற்றியில் ஒரு பிளவு. அது மூன்றும் கண் மாதிரி தோன்றியது. ஒருவேளை சிவ பெருமானே புலியுருவில் தங்களைத் தண்டிக்க வந்திருக்கிருரோ என்று எல்லோரும் பயந்தனர்.

தேவகீநந்தனனுக்கு இது தெரிந்ததும் அவன் சிரித்துக் கொண்டே, "இருக்கலாம். மழைக் காலம் ஒயட்டும். அந்தச் சிவபிரானை ஒரு கை பார்க்கிறேன்!" என்ருன். அவனுடைய ஸகாக்களும் கூடச் சிரித்தனர்.

துரிதமாக வேட்டைக்குப் புறப்பட ஏற்பாடுகள் நடந்தன. மத்தியான்னம் ஒரே ஒரு தடவைதான்—போஜனத்தின் போது—தேவகீநந்தனன் அந்தப்புரத்திற்குச் செல்வது வழக்கம். சாப்பிட உட்கார்ந்ததும் அவனுடைய பெண் அவன் தோள்களைப் பிடித்துத் தொங்கியவண்ணம், "நானும் வருகிறேன் அப்பா, உன்னேடு" என்று கெஞ்சினுள்.

தேவகீநந்தனன் சிரித்து, "ஸன்யாஸினியாகப் போகிருயா அம்மா?" என்ருன். அதற்குள் யோகமாயா வந்து, "சாப்பிடும்போது அவனைத் தொந்தரவு பண்ணுதே, போ" என்ருள். சந்திரானனு வேறு அறைக்குப் போய்விட்டாள்.

அவள் சென்றதும் யோகமாயா, "தேவா, மன்னி உன்னை வரச்சொல்லிக் கூப்பிட்டாள்" என்ருள். தேவகீநந்தனன், "ஏன்?" என்ருன். யோகமாயா "ஏனு? பெண்டாட்டிக்குப் புருஷனைப் பார்க்கவேண்டுமென்று இராதாடா? நீதான் அவளை மாஸத்தில் ஒரு தரங்கூடப் பார்ப்பதில்லையே" என்ருள்.

"சரிதான் போகிறேன்" என்று கூறி, அவன் மௌனமாகப் போஜனம் அருந்திவிட்டுச் சென்ருன்.

மூன்று வருஷகாலமாகச் சாதமும் சாப்பிடமுடியாமல், தூங்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிருள் பத்மாவதி. அவள் படும் வேதனையைப் பார்க்கச் சகியாமல் எவரும்-வேலைக்காரி, சில சமயங்களில் யோகமாயா இவர்களைத் தவிர்த்து-அவள் அறைக்குப் போவதில்லை.

தேவகீநந்தனன் அவ்வறையில் நுழைந்து படுக்கையருகில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

"கூப்பிட்டாயாமே?" என்ருன்.

எலும்புக்கூடென விளங்கும் பத்மாவதி எழுந்து உட்கார்ந்தாள். முன் இருந்த அந்த ரூபலாவண்யம் இப்பொழுது எங்கே? கண்கள் மட்டும் குழி விழுந்திருந்த போதிலும் பழைய நினைவை மூட்டின. அவள், "அக்கா, அப்பா, எல்லோருக்கும் நீங்கள் மறு கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று ஆசை. நீங்கள் அப்படியே செய்யுங்களேன். நான் இன்னும் எத்தனை நாள்......?" என்ருள்.

தேவகீநந்தனன் வெறுப்புற்றவனுய், "இதற்காகவா என்னைக் கூப்பிட்டாய்? திடீரென்று நீ ஏன் இப்படிப் பேசுகிருய்? நான் அந்தமாதிரி ஏதாவது சொன்னேனு?" என்ருன்.

விடாமல் பேசியதால் பத்மாவதிக்குப் பெருமூச்சு வாங்கியது. அவள், "அதில் என்ன பிசகு? எனக்கு அதனுல் ஒரு

வருத்தமும் இல்லை. வேட்டைக்காரன் மாதிரி நீங்கள் திரிவது நன்றாயிருக்கிறதா? குலத்திற்கு ஒரே புத்திரராயிற்றே நீங்கள் என்றுதான் கேட்கிறேன்" என்று சொல்லி மறுபடியும் படுக்கையில் சாய்ந்தாள்.

"உடம்பை அலட்டிக்கொள்ளாதே. உனக்கு என்ன தெரியும்? புலி வாயில் அகப்பட்டுச் சாவோரெல்லாம் நம் குடிகளல்லவா! அவர்களை ரக்ஷிக்கவேண்டியது என் கடமையல்லவா?"

"அவர்களைக் காப்பாற்ற வேறு ஆட்கள் இல்லையா? நீங்கள்தான் போய் ஆகவேண்டுமா? ஊம், நான் சொன்னால் யார் கேட்பார்கள்?"

"இதுதான் பெண்பிள்ளைகள் பேச்சு என்பது. நடக்கக் கூடாத காரியத்தைச் செய்யச் சொன்னால் யார்தான் கேட்பார்கள்? ராஜவல்லப ராயின் புத்திரனைக் குண்டுசட்டியில் குதிரை ஓட்டிக்கொண்டிருக்கச் சொல்கிறாயா? அது நடவாத காரியம்" என்று கூறி அறையை விட்டு அகன்றான்.

வேட்டைக்குப் புறப்படும்போது தேவகிநந்தனன் சந்திரானனாவை நோக்கி, "சந்திரா, உனக்கு ஒரு புலித்தோல் கொண்டு வருகிறேன்" என்று சொன்னான். விடைபெற்றுச் செல்லும் சமயம் பத்மாவதி எவ்வளவோ தடுத்துப்பார்த்தும் முடியவில்லை.

அந்தக் காலத்தில் புகை வண்டி வசதி இல்லை. தூரத்திலுள்ள இடங்களிலிருந்து செய்தி வருவதே அபூர்வம்; கால் நடையாகச் சென்று ஸமாசாரத்தை அறிவித்தால் தான் உண்டு.

தேவகிநந்தனன் சென்றபின் கொஞ்சகாலம் வரையில் செய்தி ஒன்றும் வரவில்லை. திடீரென்று ஒருநாள் தலையில் இடிவிழுந்தாற்போல் ஒரு பயங்கரமான செய்தி ஊரையே கலக்கிவிட்டது: தேவகிநந்தனன் புலியால் கொல்லப்பட்டான். வேடுவர்கள் துணைக்கு வருவதற்குள் புலி அவனை அறைந்துவிட்டது. மாட்டு வண்டியில் அவனுடைய சவம் வருகிறதென்று தெரியவந்தது!

சவம் வந்ததும் அதை அரண்மனைக்கு எதிரிலுள்ள பெரு முற்றத்தில் வைத்து அதற்கு ஸ்நானம் செய்வித்துப் பூவால் அலங்காரம் பண்ணினர். விம்மியழும் சந்திரானனாவின்

கைகளைப் பிடித்துக்கொண்டு அரசர் முற்றத்தின் நடுவில் நின்ற வண்ணம், "கேளுங்கள், ஜனங்களே! அன்னை பவானி சாட்சியாக ஆணையிட்டுச் சொல்கிறேன்: எவனொருவன் இந்தப் புலியைக்கொல்கிருனே அவனுக்கு, என் ஜாதியானுக இருந்தால் இதோ இருக்கும் என் பேத்தியைக் கன்யாதானம் செய்து கொடுக்கிறேன். அப்படி இதர ஜாதியானுக இருந் தால் இந்த ராஜ்யம் அவனுடையதே. போங்கள். இந்தச் செய்தியை ஊர் ஊராகச் சென்று பரவச் செய்யுங்கள்" என்று இடிபோன்ற குரலில் கூறினுர்.

அங்கே கூடியிருந்தவர்கள் மெதுவாகக் கலைய ஆரம் பித்தனர். மற்றச் சடங்குகளை நடத்தப் பந்துக்கள் எல் லோரும் முன்வந்தனர்.

* * *

கொஞ்ச நாட்களுக்குள் இந்தச் செய்தி — ராஜ வல்லப ராயின் சபதம் — அந்தப் பக்கமெல்லாம் தெரிந்தது. ஷிகாரிகள் எல்லோரும் நித்திரை, பசி, தாகத்தையும் மறந்து அப்புலியைக் கொல்ல அரும்பாடு பட்டனர். அரசரின் ஏக புத்திரனைக் கொன்றபின் அது கொஞ்ச நாள் தலைமறைவாக இருந்தது.

அரசரின் மாளிகை சந்தடியற்று ஸதா மூடப்பட்டிருந் லது. தேவகிநந்தனன் இறந்த கொஞ்ச நாளைக்குள் பத்மா வதியும் அவனைத்தொடர்ந்தாள். அரசர் எப்பொழுதும் பூஜை அறையிலேயே இருந்துவந்தார். யோகமாயா தனிமையில் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பாள். மேகத்தினிடை மின்னற் கொடிபோல் அவ்விருளடைந்த அரண்மனையில் இளங்கொடியாள் சந்திரானனு இருந்துவந்தாள்.

ஒரு வருஷம் கழிந்தது. மறுபடியும் தூரத்திலுள்ள கிராமங்களில் புலியின் அட்டஹாஸம். காலம் ஆக ஆக ராஜவல்லப ராயின் ஆத்திரம் தணிந்து வந்தது. ஒருநாள் சந்திரானனுவை அழைத்து அவளைத் தம் மடிமேல் உட்கார வைத்துக்கொண்டு சிரித்தவண்ணம், "சந்திரா, நம் ராஜ் யத்தில் ஆண் பிள்ளைகளே இல்லை என்று தோன்றுகிறது. நான்தான் போய்ப் புலியைக் கொன்று உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளவேண்டும் போல் இருக்கிறது" என்ருர்.

"சீ, போ தாத்தா! போயும் போயும் உன்னைப்போன்ற கிழத்தையா பண்ணிக்கொள்ள வேண்டும்?" என்று கூறி அவர் பிடியிலிருந்து தப்பிப்போய்விட்டாள் அக்கன்னிகை.

இந்த ஸமாசாரம் எப்படியோ குடிகளுக்குத் தெரிந்து விட்டது. இளைஞர்களின் கண்கள் கோபத்தினுலும் அவமானத்தினுலும் சிவந்தன. ஆனுல் என்ன செய்வது! புலியின் அட்டூழியம் இன்னும் அதிகமாகிக் கொண்டுதான் வந்தது. காட்டில் சுள்ளி ஒடிக்கப் போய் மாண்டவர் சிலர். மாடு மேய்க்கப் போய் மாண்டோர் சிலர். இவ்வாருக எத்தனையோ பேர்.

அந்த வருஷமும் கழிந்தது. சந்திரானனுவின் வயது இப்போது பதினைந்து நிரம்பிப் பதினுறு. யௌவனத்தின் சௌந்தரியம் அக் கன்னிகையின் ஸர்வாங்கத்திலும் திகழ்ந்தது.

நான்காவது வருஷத்துச் சரத்காலம். கிழ அரசர், "இந்த ஆட்டு மந்தைகளுக்கு ஆண்மைத்தனம் வராதோ? தாயே" என்று தம் குல தெய்வமாகிய பவானியைப் பிரார்த்தித்தார்.

அன்னை பவானி அருள் வைத்தால் எதுதான் நடக்காது? அந்த ஆட்டு மந்தையில்கூட இரண்டொரு சிங்கக் குட்டி இருந்தனவென்று தெரியவந்தது. "இந்த மாஸம் முடிவதற்குள் அந்த முக்கண் புலியைத் தீர்த்து விடுகிருேம்" என்று பவானிப்ரஸாதும், நரநாராயண குஹனும் சபதம் செய்துகொண்டார்கள்.

கிழ அரசர் தம் பேத்தியை நோக்கி, "சந்திரா. புராணங்களில் வரும் ராஜ குமாரிகளில் ஒருத்தி யாகிவிட்டாயே. ஸ்வயம்வர ஸபையில் யாருக்கு மாலையிடப் போகிருயம்மா?" என்ருர்.

நாணம் மேலிட, சதங்கைகள் ஒலித்தவண்ணம் சந்திரானனு அந்தப்புரத்திற்கு ஓடிவிட்டாள்.

தேவி பவானிக்கு விமரிசையாக அபிஷேகம் நடந்தது. பிராமண போஜனம் நடந்து தக்ஷிணை வழங்கப்பட்டது. எல்லோர் மனத்திலும் இதுவே ராஜவல்லபர் செய்துவைக்கும் கடைசி உத்ஸவம் என்று தோற்றியது. எல்லாம் முடிந்த

தும் அரசர் அரண்மனைக்கு வந்தார். புலியைக் கொன்று விட்டதாகவும், அதைக் கொன்ற ஷிகாரிகள் மாட்டு வண்டி யில் அதன் உடலை எடுத்துவருவதாகவும் செய்தி வந்தது.

அரசர் ஸ்தம்பித்து நின்றார். முன் ஒரு துர்த்தினத்தில் நடந்த அந்தச் சம்பவம் அவர் நினைவிற்கு வந்தது. இதே மாதிரிதானே தேவகீநந்தனனையும் மாட்டு வண்டியில் எடுத்து வந்தார்கள்? இன்று அவனுடைய வைரியின் தேகம் வரு கிறது. இதனையும் எதிர்கொண்டழைக்கத்தான் வேண்டும்.

இத்தனை நாள் சோகமென்னும் இருளில் ஆழ்ந்திருந்த அந்தப்புர ஸ்திரீகள் ஆனந்தக் கூச்சலிட்டனர். யோக மாயா சந்திரானனுவுக்குப் பட்டாடை உடுத்தி, அவளை ஆப ரணங்களால் அலங்கரித்து, அரண்மனைக்கு எதிரிலுள்ள பெருமுற்றத்திற்கு அழைத்துச் சென்றாள். அந்தப்புர ஸ்திரீ களும் கூட வந்தனர்.

அப்பெரு முற்றத்தின் நடுவில் முக்கண் புலியின் தேகம் வைக்கப்பட்டது. குடிகள் உத்ஸாஹத்துடன் அதன் தேகத்தை மாட்டுவண்டியில் தாங்களே இழுத்துவந்தனர். புலியின் மூன்றும் கண்ணைப் பார்க்க எல்லோரும் ஆத்திரப் பட்டனர். ஒரு பக்கம் ரத்தம் தோய்ந்த ஈட்டியுடன், கட்டை குட்டையான தேகமுடைய நரநாராயணன் நின் றிருந்தான். மறு பக்கம் பவானிப்ரஸாத் நின்றிருந்தான். அவன் நரநாராயணனைவிட வயதில் இளையவன். நெடிய ஆக்ருதியுடையவன்; பலிஷ்டன். சுந்தரமான முகம். மாநிற முள்ள அவன் தேகத்தில் அநேக ரத்த காயங்கள்.

அரசர் அவர்களைப் பார்த்து, "வீரர்களே, என் ராஜ்யத் தின் மானத்தை நீங்கள்தான் காப்பாற்றினீர்கள். ஒரு சமா சாரம் அறிய விரும்புகிறேன். உங்களில் புலியைக் கொன்ற வன் எவன்?" என்று கேட்டார்.

அதே சமயம் அந்தப்புர ஸ்திரீகள் பின்தொடர யோக மாயா சந்திரானனுவை உப்பரிகையின் முன்னணியில் கொண்டுவந்து நிறுத்தினாள். அவளுடைய ரூப ஜோதியினால் அவ்விடம் ஒளியுற்றது போல் இருந்தது. நரநாராயணனும் பவானிப்ரஸாதும் அவளை ஒருதரம் பார்த்துவிட்டு வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டனர். பவானி, "நர நாராயணன் சகாயம் செய்யாமல் இருந்திருந்தால் என் ஒரு வனால் முடிந்திராது. நீங்களே தீர்ப்புச் சொல்லவேண்டும்" என்றான்.

அரசர் தர்ம சங்கடத்தில் ஆழ்ந்தார். இருவரும் க்ஷத்திரியர்கள். பெண்ணை யாருக்குக் கொடுப்பது? ராஜா புரோஹிதரை அழைத்து, "இதற்கு உபாயம் என்ன ஸ்வாமி?" என்றார்.

புரோஹிதர், "ஸ்வயம்வரமே சிரேஷ்டம்" என்றார்.

அரசர் பேத்தியைப் பார்த்தார். அவள் நாணத்தினால் தலை நிமிராமல் நின்றிருந்தாள். அவளால் காரியம் ஆகாது என்று உணர்ந்த அரசர், "ஸ்வாமி, புராணத்தில் வரும் ஸீதை, ஸாவித்ரி, தமயந்தி இவர்களுக்கும் இந்தக் காலத்துப் பெண்களுக்கும் வித்தியாஸமில்லையா? வேறு உபாயம் ஏதாவது சொல்லும்" என்றார்.

புரோகிதர் சற்றுச் சிந்தித்து, "த்வாபர யுகத்தில் ஸத்யபாமை நாரதருக்குத் தன் புருஷனைத் தானம் செய்துவிட்டாளாம். மற்ற மஹிஷிகள் கிருஷ்ணனை விட்டுப் பிரிய மனமில்லாமல் அழவே நாரதர், கிருஷ்ணன் எடைத் தங்கம் கொடுத்தால் விட்டு விடுவதாகச் சொன்னார். அதைப்போலவே நீரும் செய்யும். பேத்தி போலவே ஒரு தங்கச் சிலை வார்த்து ஒருவனுக்குக் கொடும். மற்றவனுக்குப் பெண்ணைக் கொடும். இது சாஸ்திர சம்மதமானது" என்றார்.

"அப்படியே. ஆனால் சிலையைக் கொள்பவன் அதனோடு திருப்தியடையவேண்டுமே" என்றார் அரசர்.

பவானிப்ரஸாத் முன்வந்து, "உம்முடைய பேத்தியே எனக்குப் பெரிய தனம்" என்றான்.

நரநாராயணன் சிரித்துக்கொண்டே, "யௌவன வயதல்லவா, தம்பி!" என்றான்.

ஸ்வர்ணப் பிரதிமை தானமும், கன்னிகாதானமும் ஒரே தினத்தில் நடந்தன. பவானிப்ரஸாதுக்கும் சந்திரானனுவுக்கும் பிறந்த குழந்தைக்கே அரச பட்டம் அளிக்கப் பட்டது. பவானியின் வம்சம் இன்னும் இருக்கிறது. நரநாராயணனுடைய வம்சம் கொஞ்ச நாளைக்குள் க்ஷீணித்து விட்டது. நரநாராயணன் இறப்பதற்குமுன் அந்தப் பொற் சிலையை எங்கே ஒளித்து வைத்தானோ, யாருக்கும் தெரியாது.

யாரோ!

பிரபோத குமார் ஸாந்யால்

கயா மார்க்கத்திலுள்ள ஒரு ஜங்ஷனில் ரெயில்வண்டி ஒன்று வந்து நின்றது. இரவு வெகு நேரமானதால் ஸ்டேஷனில் பிரயாணிகள் அதிகமாயில்லை. மூன்று பேர் இறங்கினர்; நாலைந்து பேர் ஏறினர்; அவ்வளவுதான். "பூரி, மிட்டாயி" என்று வண்டி ஜன்னல்களுக்கு அருகில் வந்து கூவிக்கொண்டே சென்றான் ஒருவன். எட்டு அல்லது ஒன்பது வயதுடைய ஒரு சிறுவன் 'நிணி நிணி' என்று மணியடித்துக்கொண்டே, "சீப்பு, பித்தளைப்பொம்மை, வெற்றிலை பாக்கு, பீடி, சிகரெட்" என்று விற்றுக்கொண்டே போனான். வண்டியினுள் எல்லோரும் அயர்ந்து நித்திரையில் இருந்ததால் அவர்களிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை.

சற்று நேரத்திற்கெல்லாம் ரெயில் வண்டி புறப்பட்டுச் சென்றது. ஸ்டேஷனில் மீண்டும் நிச்சப்தம் குடிகொண்டது. சிள் வண்டுகளின் 'ரிங் ரிங் ரிங்' என்னும் அரவம் அந் நிச்சப்தத்தை அதிகமாக எடுத்துக் காட்டியது. ஸ்டேஷனைச் சுற்றி நாற்புறமும் இருள் சூழ்ந்து இருந்தது. மூன்று பிரயாணிகள் இறங்கினார்களே அவர்களில் பத்து அல்லது பன்னிரண்டு வயதுடைய ஒரு பெண்ணும் இருந்தாள். மற்ற இருவரும் புருஷர்கள். ஒருவன் நடுவயதுள்ள மனிதன்; மற்றவன் இளைஞன். சில்லறைச் சாமான் விற்கும் சிறுவன் அவர்கள் பக்கமாக மணியடித்துக்கொண்டே வந்தான். பாவம், இன்று அவ்வளவாக விற்பனையாகவில்லை போலிருக்கிறது.

ஸ்டேஷன் விளக்கு வெளிச்சத்தில் அவன் மரத்தட்டிலுள்ள கிலுகிலுப்பை, பித்தளைப் பொம்மையெல்லாம் பளபள வென்று மின்னின. பெண் அவற்றையே ஆவலுடன் நோக்கிக்கொண்டிருந்தாள். அதைக் கண்டு நடு வயதுடைய வர், "போடா போ, இத்தனை நாழிகைக்கு மேல் என்னடா விற்பனை? சீ போ!" என்று சிறுவனை அதட்டினார்.

பையன் அவ்விடத்தை விட்டுப் போய்விட்டான். பிர யாணிகள் மூவரும் ஸ்டேஷன் இரண்டாம் வகுப்பு 'வெய் டிங் ரூமி'ல் நுழைந்தனர். உள்ளே வேறு பிரயாணிகள் எவரும் இல்லை. அங்கே இரண்டு பெஞ்சும், ஒரு நாற்காலி யும் ஒரு மேஜையும் இருந்தன. மூட்டைகளை மேஜைமேல் வைத்துக் கதவைத் தாழிட்டுவிட்டுப் புருஷர் இருவரும் பெஞ்சியில் படுத்தனர். வெகு நேரம் ரெயிலில் அடைபட் டுக்கிடந்ததால் சிறுமிக்குச் சலிப்பு ஏற்பட்டிருந்தது. இப் பொழுது கூட்டிலிருந்து விடுபட்ட பக்ஷிபோல் அப்படியும் இப்படியும் ஓடினாள். அவள் கள்ளங் கபடற்ற முகத்தில் குதூஹலம் கூத்தாடியது. நடு வயதுடையவர் பெண்ணைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, "உனக்கென்ன? நீ வழி யெல்லாம் தூங்கிக்கொண்டே வந்தாய்? அதுதான் இப் போது உனக்குத் தூக்கம் வரவில்லை. நாங்கள் சற்று இளைப் பாறுகிறோம். நீ அந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு இரு, அம்மா" என்றார்.

சிறுமி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு கால்களை ஆட்டியவண்ணம், விளக்கு, ஜன்னல், மேஜை, கதவு எல்லா வற்றையும் பார்த்துத் தன்னுள்ளேயே பூரித்துக் கொண் டாள். இம்மாதிரி வெகுநேரம் சென்றது. திடீரென்று அவள் பார்வை அறைக் கதவண்டையில் சென்றது. சுற்று முற்றும் ஒரு தடவை பார்த்தாள். தன் மாமாவும், அம்மான் சேயும் ஆயாஸத்தினால் குறட்டை விட்டுக்கொண்டு தூங்கு வதைக் கண்டு மறுபடியும் தனக்குள்ளேயே சிரித்துக்கொண் டாள். சந்தடி செய்யாமல் அறைக் கதவருகில் வந்து உட் கார்ந்துகொண்டாள். கதவின்கீழ் ஒரு நாய் நுழையக்கூடிய அளவு இடம் இருந்தது. குனிந்து வெளிப்பக்கமாகப் பார்த் தாள். இரண்டொரு படிக்குக் கீழே சில்லறைச் சாமான் விற்கும் சிறுவன் கைபிடி சுவரில் சாய்ந்தவண்ணம் உட் கார்ந்திருப்பதைக் கண்டாள். அவனருகில் சாமான் தட்டு

இருந்தது. கையை நீட்டி ஓர் அழகான பித்தளைப் பொம்மையைச் சட்டென்று எடுத்துக்கொண்டாள். சிறுவன் அதைக் கவனிக்கவில்லைபோல் இருக்கிறது; முன்போலவே உட்கார்ந்திருந்தான்.

சிறுமி அவன் இவ்வளவு அஜாக்கிரதையாக இருப்பான் என்று நினைக்கவேயில்லை. தான் பொம்மையை எடுக்கும்போது கையைப் பிடித்துக்கொண்டு விடுவான்; கொஞ்ச நாழிகை வரை அவன் தன் கையைப் பிடித்து வெளியில் இழுக்கத் தான் உள்ளே இழுக்கக் கடைசியாகத் தான் திமிறிக்கொண்டுவிடலாம்; பையன் கத்திக்கொண்டே அறையில் நுழைவான்; அப்பொழுது தான், 'என்னடா, நான் பொம்மையை எடுக்கும்போது நீ எப்போடா பார்த்தாய்? நான் இந்தப் பக்கத்தில் இருக்கிறேனேடா. திருடினவர்களைப் போய்க்கேட்டுக்கொள்' என்றெல்லாம் சொல்லி அவனை அழவைத்து வேடிக்கை பார்த்துவிட்டு அப்புறம் பொம்மையைத் திருப்பிக் கொடுத்து விடலாம் - இவ்வாறு அந்தக் குறும்பு பிடித்த பெண் எண்ணியிருந்தாள்.

மறுபடியும் மாமாவையும், அம்மான்சேயையும் ஒரு முறை நோக்கிவிட்டு, அவர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறார்கள் என்று அறிந்தவளாய் மெதுவாக எழுந்து சப்தம் பண்ணமல் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள். சுவரின் மேல் சாய்ந்தவாறு பையன் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் மரத்தட்டிலுள்ள சாமான்களெல்லாம் திருட்டுப் போயிருந்தால்கூட எழுந்திருக்கமாட்டான் போல் இருந்தது. அவ்வளவு ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். நாள் முழுதும் வெயிலில் திரிவதால் ஏற்பட்ட களைப்பின் குறி அவனுடைய பரிதாபகரமான முகத்தில் காணப்பட்டது.

அவனருகில் வந்து சிறுமி, "பையா!" என்று கூப்பிட்டாள். சிறுவன் திடுக்கிட்டு எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தான்.

சிறுமி, "சாமான் திருட்டுப் போய்விடுமேடா பையா! தூங்குகிறுயே?" என்ருள்.

சிறுவன், "திருட்டுப் போய்விடுமா? திருடுகிறவன் மண்டையை உடைத்துவிட மாட்டேனு?" என்று கூறி ஒரு ரப்பர்க்கிளியை எடுத்து அழுத்தினன். கீச்கீச் என்று அது கத்தியது. "இந்தா, அரையணு கொடுத்து எடுத்துக் கொள்" என்ருன்.

பெண் சிரித்துக்கொண்டே படியில் உட்கார்ந்து, “எல்லாச் சாமானும் சரியாக இருக்கிறதா, பார்?” என்ருள்.

சிறுவன் ஒரு முறை சாமான்களைப் பார்த்துவிட்டு, “எல்லாம் அப்படியேதான் இருக்கிறது. கிளி வேண்டாம் உனக்கு? இந்தா, இந்தக் கிலுகிலுப்பை காலணு; இந்தப் பொம்மை இரண்டு அணு” என்ருன்.

“அதெல்லாம் எனக்கு வேண்டாம்.”

“பின்னே என்னதான் வேண்டும்? கண்ணுடி வேண்டுமா முகம் பார்த்துக் கொள்ள? உன் முகம் நல்லா இருக்குது.”

சிறுவன் தன் சாமான் விலை போகச் சாதுர்யமாகப் பேசுவதைக் கண்டு அப்பெண் புன்னகையுடன், “உன் மூஞ்சியைப் பார்த்துக் கொள்ளேண்டா” என்று மொழிந்தாள்.

தன் சாமர்த்தியம் பலித்துவிட்டதென்று எண்ணிக் கொண்டு பைய்ன், “அப்படியானுல் உன் கிட்டே எவ்வளவு துட்டு இருக்குது? சொல்லு. அதற்கேற்ற அளவு சாமான் தரேன்” என்ருன்.

“துட்டா? துட்டுக்கு நான் எங்கே போகிறது?”

சிறுவன் அவளையே கொஞ்சநேரம் நோக்கிவிட்டு வெறுப்புடன் வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு, “ஏன் வீணுய்த் தொந்தரவு கொடுக்கிருய்? போய்த் தூங்கு” என்ருன்.

சிறுமி நகரவில்லை. அவள் பார்வையெல்லாம் பளபள வென்று ஜ்வலிக்கும் அந்தப் பொம்மைகளின் பேரிலேயே இருந்தது. எப்படிப் பொம்மையைத் திருப்பிக்கொடுப்பது என்று யோசித்துக்கொண்டிருந்தாள்.

கொஞ்சநேரங் கழித்துப் பையன் திரும்பிப் பார்க்க, அவள் அதே இடத்தில் முன்போலவே உட்கார்ந்திருப்பதைக் கண்டான். சகோதர அன்பையே இதுவரையிலும் அறியாத அவனை ஏதோ ஒரு சக்தி சிறுமியின்பால் இழுத்தது. இருவரும் ஏறக்குறையச் சம வயதுடையவர்கள். சிறுமிக்கு விசாலமான இப் புவி, ஆனந்தமும், விசித்திரமும் நிறைந்த கற்பனு லோகமாகத் தோற்றியது. ஆனுல் சிறுவனுக்கு —

வெயிலிலும், மழையிலும், பனியிலும், குளிரிலும் அடிபட்ட அந்த அநாதைப் பையனுக்கு — இதே உலகம், துக்கமும், வேதனையும், வறுமையும் நிறைந்த நன்றி கெட்ட, கருணையற்ற உலகமாகக் காணப்பட்டது. இருவரும் தாங்கள் இன்னார் என்பதை மறந்துவிட்டனர். தமக்கையும் தம்பியும்போல் அருகருகில் உட்கார்ந்துகொண்டனர்.

சிறுவன் கொஞ்சநேரம் அவளுடைய அழகிய கரு விழிகளைக் கூர்ந்து கவனித்துவிட்டு, "உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"பெயரா? சொல்லட்டுமா? சாந்தி என் பெயர் — உன் பெயர்?" சிறுவன் அந்த ஜனசூன்யமான ஸ்டேஷனையும், தூரத்தில் இருளுடன் கலந்து போகும் ரெயில் பாதையையும் ஒரு முறை பார்த்துவிட்டு, வெறுப்புக் கலந்த சிரிப்புடன், "என் பெயர் தெரிந்து என்ன ஆகப் போகிறது? உங்களாலெல்லாம் அதைக் கவனத்தில் வைத்துக்கொள்ள முடியாது" என்றான்.

சாந்தி, "பின்னே என் பெயரை ஏன் கேட்டாய்? சொல்லு. சொல்லாவிட்டால், விடமாட்டேன்" என்றாள்.

சிறுவன் வெகுநேரம் மௌனமாக இருந்தான். பழைய கவனங்கள் அவன் மனத்தில் திரண்டு வந்தன. போனதையெல்லாம் மறுபடியும் கிளற அவனுக்கு இஷ்டமில்லை. கடைசியாக, "நீ இப்படிச் சாமான் ஒன்றும் வாங்காமல் பேசிக்கொண்டிருந்தாயானால் என் பிழைப்பு எப்படிப் போவது? இன்றைக்கு முழுதும் அலைந்தும் கொஞ்சங்கூட விற்பனை......அது இருக்கட்டும். உங்கள் ஊர் எது?" என்றான்.

"பஞ்சாபில் அம்ருதஸர்."

"இந்தப் பக்கம் ஏன் வந்தாய்? அவர்கள் இரண்டு பேரும் உனக்கு என்ன வேணும்?"

மிகவும் பரிசயமுள்ளவர்கள் கேட்கும் கேள்வியை, ஊர் பெயர் தெரியாத இந்த அநாதைப் பையன் கேட்டிருக்கிறான். என்ன பதில் சொல்வது?

"ஏன் சும்மா இருக்கிறாய்?" என்று கேட்டான் பையன்.

" இதுதான் முதல் தடவை நான் இந்தப் பக்கம் வருவது. பெரியவர் என் மாமா. அவருக்குப் பக்கத்தில் தூங்குவது என் அம்மான்சேய். அவருக்கு என்னை...... என்னை...... "

" அவருக்கு என்னை என்றால்?"

சிறுமிக்குத் தன் இறந்துபோன தாய் தந்தையரைப் பற்றிய கவனம் இறகு முளைத்து வந்தது. அவள் கண்களில் நீர் தோய்ந்தது. அதுமுதல் தனக்குத் துக்கமே தெரியாதவண்ணம் மிக்க வாஞ்சையுடன் மாமா அவளை வளர்த்து வருவது, தன்னை அவர் பிள்ளைக்குக் கல்யாணம் செய்துகொள்ள நிச்சயித்திருப்பது, இதைப்பற்றியெல்லாம் எண்ணும்போது வருத்தக்குறி போய் அவள் முகத்தில் நாணம் குடிகொண்டது.

சிறுவன் வெகு நேரம் தன் சாமான்களையே பார்த்தவாறு என்னவோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். அப்புறம் ஒரு பெருமூச்சு விட்டு, " நான் போகணும். அந்தப் பிளாட்பாரத்தில் ரெயில் வருவதற்காயிற்று — பெயர் என்னவென்று கேட்டாயே. என் பெயர் பத்ரி" என்று சொல்லிக்கொண்டே எழுந்தான்.

அதற்குள் சாந்தி, " ராத்திரியில் யார் உன் சாமானை வாங்குவார்களடா? என்னை இங்கே, தனியாக உட்கார்ந்திருக்கச் சொல்கிறாயா?" என்றாள்.

இதென்ன அதிசயமான கேள்வி? அரைமணி நேரத்திற்குள் தன்மேல் இவ்வளவு அன்பு வந்துவிட்டதா? அவனால் இதை நம்ப முடியவில்லை. பொய், சுத்தப் பொய்! ரெயில் வண்டி வரும்வரை தன்னோடு பேசிக்கொண்டிருப்பாள். வண்டி வந்ததும் மாமாவோடும் அம்மான்சேயோடும் அதில் ஏறிக்கொண்டு போய்விடுவாள். அப்புறம் தான் முன் போலவே இந்தப் பாழான ஸ்டேஷனில் சாமான்கள் விலை போகாமல் அலைந்துகொண்டிருக்க வேண்டியதுதான் — இவ்வாறெல்லாம் எண்ணி அந்தத் திக்கற்ற சிறுவன் ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு சற்று யோசித்து, " இராது" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். பிறகு, "நீ போ உன் மாமா கிட்டே" என்றான்.

"போகமாட்டேன். என்ன பண்ணுவாய்? இங்கேயே தான் உட்கார்ந்துகொண்டு இருப்பேன்."

பத்ரி அவளுடைய அழகிய விழிகளையே வெகுநேரம் வரை நோக்கினன். அவளுடைய கையிலுள்ள பொன் வளையல்கள் விளக்கு வெளிச்சத்தில் மின்னின. இரண்டொரு கருங்குழல்கள் அவள் கன்னத்தருகில் தொங்கிக் கொண்டிருந்தன.

பிரயாணிகளில் எத்தனையோ அழகான பெண்களைப் பார்த்திருக்கிருன் அவன். ஆனல் இந்தப் பெண்ணைப்போல வசிகரமுடையவளை அவன் பார்த்ததே இல்லை. பத்ரி அவளை உற்று நோக்கிவிட்டு, "நான் உன்னை முன்னே எப்பொழுதோ பார்த்திருப்பதுபோலே ஞாபகம் வருகிறது!" என்ருன்.

"எங்கே பார்த்திருக்கிருய்?"

முகத்தைத் திருப்பி வெகுநேரம் ரெயில் பாதையைப் பார்த்தவண்ணம் யோசனையில் ஆழ்ந்திருந்தான். எங்கே பார்த்திருப்பான்? தனக்கு ஞாபகம் தெரிந்தது முதல் நடந்த எல்லாவற்றையும் கவனத்திற்குக் கொண்டுவந்தான். கடைசியாக, "இப்போது ஞாபகமில்லை எப்பொழுதோ உன்னைப் பார்த்துத்தான் இருக்கிறேன்" என்ருன்.

அவன் சொன்னதைக் கேட்டுச் சாந்தி புன்னகை செய்து, "ஒருவேளை போன ஜன்மத்தில் பார்த்திருப்பாய்!" என்ருள்.

இருவரும் ஸம்பாஷிக்கத் தொடங்கினர். "எங்கள் ஊர் அமிர்தஸரில் ஜலியன் பாகிற்குக் கிட்டக் கண்டாகர். அங்கே ஒரு பெரிய குளம் இருக்கிறது. அதன் நடுவே பொன்னுலேயே செய்த ஒரு கோவில். எங்கள் அப்பாவுக்குப் பட்டு நூல் வியாபாரம். குதிரைப் பந்தயம் பார்க்க நாங்கள் ஒரு சமயம் லாஹோர் தெரியுமா — அங்கே போயிருந்தோம்" என்ருள் அவள்.

பத்ரி தன் வரலாற்றை எடுத்து விட்டான்: "இந்த டேஷன் கிட்டேதான் எங்கள் வீடு, இடைத்தெருவிலே. எங்கள் அப்பா பால் விற்கிருர். அதுதான் ஜீவனம். இந்த ஊர் தர்மச் சாவடியில் எங்கள் மாமா காவல் உத்தியோகம் பார்க்கிருர். போனதடவை அடிச்சுதே தெரியுமா, ஒரு பெரிய

காற்று மழை — அதிலே எங்கள் குடிசை வீடு விழுந்து போச்சு. எங்க அம்மாளுக்குப் பயித்தியம் பிடிச்சுப் போய் அலைகிறுள்."

இவ்வாறு இருவரும் தம் சுயசரிதையைச் சொல்லிக் கொண்டனர். புதிதாகக் கிடைத்த ஸ்நேகம் புதுப்புது அனுபவங்களையே தந்தது. ஒருவர் உள்ளத்தை ஒருவர் அறிந்து கொள்ளும் ஆவல் எல்லையை மீறியது. எதிரெதிராக வீற்ற வண்ணம், தங்களுக்குத் தெரிந்த அதிசய சமாசாரங்களைப் பரிமாறிக்கொண்டனர். வழியில் போகும் ஒரு சிறுவனுக்கும் உயர்குலப் பெண்ணுக்கும் இடையே வேற்றுமை என்பதே ஒழிந்து விட்டது. ஸமவயதினரான இருவரும் கூச்சமின்றிப் பேசிப் பேசி, தம் பிரீதியையும் நட்பையும் கொடுத்து வாங்கினர்.

திடீரென்று ஒரு நாய் ஊளையிடும் சப்தம் கேட்டது. இருவரும் சப்தம் வந்த திக்கை நோக்கினர். அந்த நாய் நொண்டிக்கொண்டே பிளாட்பாரத்தில் ஏறுவதைக் கண்டாள் சாந்தி. பாவம்! இறைதேட 'லயனை'க் கடந்து செல்லும்போது ஒரு கூட்ஸ் வண்டி பின்னுக்கு அடித்துக் கொண்டு வந்தது. அதன் சக்கரத்தில் நாயின் கால் அகப்பட்டுக் கொண்டது. அதன் காலிலிருந்து ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. சாந்தி அதை மிகக் கருணையுடன் நோக்கிஞள். இவ்வளவு பெரிய விபத்து நேர்ந்தும் அந்தப் பாழாய்ப்போன கூட்ஸ் வண்டி நில்லாமல் போய்க்கொண்டிருந்தது.

பத்ரி சிரித்துக்கொண்டே, "இது என்ன பிரமாதம்! தினம் இந்தமாதிரி எவ்வளவோ என் கண்ணுலே பார்த்திருக்கிறேன். அன்றைக்குக்கூட ஒரு கூலி மூட்டையைத் தூக்கிக்கொண்டு போகும்போது — பார், பார், அதன் கால் அறுந்து தொங்குகிறது" என்ருன்.

சாந்தி பதில் ஒன்றும் சொல்லவில்லை. நாய் வெகு தூரம் சென்ற பின்னரும் அடிக்கடி அதன் ஓலம் கேட்டுக் கொண்டே இருந்தது. சாந்தியின் கண்களில் நீர் நிரம்பியது. அவள் ஹ்ருதயத்தில் ஊசி பாய்வதுபோல் இருந்தது. மற்றவர்களுக்காகத் துக்கப்படுபவர்கள் என்றும் நிச்சிந்தையாக இருக்க முடியாது. சாந்தியின் வாழ்நாளும் அப்படித்தான் இருக்குமோ? யார் அறிவார்?

பத்ரி மறுபடியும் என்னவோ சொல்ல வாயெடுத்தான் சாந்தியின் மாமா அவளருகில் வந்து நிற்பதைக் கண்டதும் அவன் வாய் அடைத்துவிட்டது. அவர் கண்கள் சிவக்க, "என்னடா கழுதை? மறுபடியும் விற்பனை பண்ண வந்து விட்டாயா? சீ போ!" என்று அதட்டினார்.

"ஏழை, ஐயா! பின்னே பிழைப்புக்கு என்ன பண்ணு கிறது?" என்று கூறிக்கொண்டே பத்ரி சாமான் தட்டை எடுத்துக்கொண்டு சென்றான்.

சாந்தியைப் பார்த்து அவள் மாமா, "அந்த நாயோடே என்ன பேச்சு? போய் அம்மான்சேயை எழுப்பு. ரெயில் வருவதற்கு நாழியாகிறது" என்றார்.

சாந்தி உள்ளே சென்றாள்.

கிழக்கு வெளுக்க ஆரம்பித்தது. மூவரும் மறுபடியும் மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு வாராவதியைக் கடந்து எதிரிலுள்ள பிளாட்பாரத்திற்கு வந்தனர். பழைய பிளாட் பாரத்தின் கோடியில் நின்றிருந்த பத்ரி மின்சார விளக்கின் ஒளியில் சாந்தியின் கண்ணைப் பறிக்கும் பட்டாடையைக் கண்டு பிரமித்து நின்றான். அவள் ஏன் அவனைக் கவனிக்கப் போகிறாள்? அப்படியானால் நடந்ததெல்லாம் வெறும் கனவு தானா? இல்லை, வாஸ்தவமே! அதோ அவள் தெரிகிறாளே. ராஜகுமாரியோடு கேவலம் தன்னைப்போன்ற பிச்சைக்காரப் பயல் எப்படி ஸ்நேகம் வைத்துக்கொள்ள முடியும்?—வெகு நேரம் நின்றவண்ணம் இவ்விதமான யோசனையில் ஈடுபட் டிருந்தான் பத்ரி.

எதிரிலுள்ள பிளாட்பாரத்தில் வண்டி வந்து நின்றது. 'பத்ரி, இன்னும் மூன்றே நிமிஷந்தான். போ போ, ஏதா யினும் கொஞ்சமாவது விற்பனையாகும். போ' என்று ஏதோ ஒன்று அவன் மனத்தினுள் சொல்லியது. பத்ரி மரப்படிகளைத் தாண்டி வாராவதியைக் கடந்து சென்றான். எதிரிலுள்ள பிளாட்பாரப் படிகளில் இறங்கும்போது கால் இடறிக் கீழே விழுந்தான். அவனுடைய சாமான்களெல்லாம் சிதறி விழுந் தன. பிரயாணிகள் சட்டைசெய்யாமல் அவற்றை மிதித்துக் கொண்டே போனார்கள். சிலர், "ஏண்டா மடையா, வர வழியிலே தடையாக நிற்கிறாய்?" என்று திட்டினார்கள். அவசர அவசரமாக மிதிபட்ட சாமான்களை மறுபடியும்

தட்டில் வைத்துக்கொண்டு அச்சிறுவன் பிளாட்பாரததிறகு ஓடினுன்.

ஒரு வண்டியின் ஜன்னலுக்கு அருகில் வந்ததும் ஒருவன் அவனை நிறுத்தி ஒரு சிகரெட்டும், நெருப்புப் பெட்டியும் வாங்கி நிதானமாக நெருப்புக்குச்சியை வெளியில் எடுத்தான்.

"ஐயா, நாழி ஆகிறதையா, துட்டுக் கொடு, ஐயா."

"அடே, உத்தியோகம் முழுகிப்போகிறதோடா! இரு, இரு" என்று கூறிக்கொண்டே பிரயாணி இன்னும் நிதானமாக நெருப்புக் குச்சியைக் கொளுத்திச் சிகரெட்டைப் பற்றவைத்து, "எவ்வளவு கொடுக்கிறது?" என்ருன்.

அப்போது வேருெரு வண்டியிலிருந்து சாந்தி தன்னைக் கை தட்டிப் பெயரிட்டுக் கூப்பிடுவதைக் கண்டான் பத்ரி. 'கூ' என்று கத்திக்கொண்டே வண்டி புறப்பட்டு விட்டது. துட்டுக்கூட வாங்கிக்கொள்ளாமல் சாந்தியின் வண்டிக்கு ஓடினுன். அதன் அருகில் வந்ததும் சாந்தி அசட்டுச் சிரிப்புடன், "இந்தா உன் பொம்மை. நான் திருடினேன்!" என்று சொல்லிக்கொண்டே பொம்மையை அவன் மரத்தட்டில் போட்டாள்.

தட்டைக் கீழே வைத்துவிட்டு தன்னை அறியாமலே சிறு குழந்தைபோல் அவன் ரெயிலுடன் ஓடினுன். வண்டி வேகமாகச் செல்லத் தொடங்கியது. சாந்தி, "அடேடே! விழப்போகிருயேடா, பைத்தியம்!" என்று கத்தினுள்.

பத்ரி மரத்தட்டு இருந்த இடத்திற்குத் திரும்பிவந்து அந்தப் பித்தளைப் பொம்மையைக் கையில் எடுத்தான். அது சாந்தியின் கை வேர்வை படிந்து உஷ்ணமாக இருந்தது.

"இதை என்றும் விற்பதில்லை" என்று திடப் பிரதிக்ஞை செய்துகொண்டான் அவன். வண்டி சென்ற திசையே வெகுநேரம் நோக்கியவாறு நின்றிருந்தான். கடைசியாக ஒரு பெருமூச்சு விட்டுத் திரும்பினுன். காலைக் கதிரவன் செம்மேகங்களைப் பிறிக்கொண்டு உதயமாகிக் கொண்டிருந்தான். பத்ரி மீண்டும் தட்டை தூக்கிக்கொண்டு கிலுகிலுப்பையைக் குலுக்க அதைக் கையிலெடுத்தான் ஆனுல் குலுக்க முடியவில்லை. அவன் கைகள் நடுங்கின.

ஆப்பிள் பழம்

ரவீந்த்ரநாத் மித்ர

திங்கட்கிழமை விடியற்காலே. குழந்தை புதா சீக்கிரமாகப் படுக்கையை விட்டு எழுந்து, "அப்பா, அப்பா, இன்னிக்குத் திங்கக்கிழமையாச்சே — இன்னிக்கு வாங்கிண்டு வரயாப்பா?" என்று தூங்கிக் கொண்டிருந்த தந்தையின் காதில் ரகஸியமாகச் சொல்லி எழுப்பினுன்.

கிழிந்த பாய் ஒன்றின்மேல் தூங்கிக்கொண்டிருந்த நடவரன், "வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று தூக்கந் தெளியாமலே பதில் சொன்னுன். குழந்தையின் முகம் மலர்ந்தது. அவன் வேகமாய் வெளியே சென்று பெரிய மனுஷர்விட்டுக் குழந்தை ஸ்ரீகாந்தனைப் பார்த்து, "அப்பா இன்னிக்கு வாங்கிண்டு வரேன்னு. சாயங்காலம் பார். காண்பிக்கிறேன்" என்ருன்.

அந்த ரகஸியமான வஸ்து என்னவென்ருலோ வேருென்றுமில்லே; ஓர் ஆப்பிள் பழந்தான். அன்ருெருநாள் தெருவில் ஸ்ரீகாந்தன் சிவப்புப் பழமொன்றைக் கடித்துத் தின்றுகொண்டிருப்பதைப் புதா வெகு நேரம் கவனித்த பின் ஆசையை அடக்க முடியாமல் வெளியே வந்து ஸ்ரீகாந்தனைப் பார்த்து, "என்ன தின்றேடா? சிரீகாந்தா" என்று கேட்டான். "ஆப்பிள்டா" என்று அழுத்தந் திருத்தமாய்ப் பதில் சொன்னுன் ஸ்ரீகாந்தன். "எனக்கு ஒரு துண்டு கொடுடா" என்று கெஞ்சினுன் புதா.

மீதியிருந்த பழத்தையும் ஸ்ரீகாந்தன் அவசரம் அவசரமாக உள்ளே தள்ளிவிட்டு, "உ ஊம்" என்ருன். பிறகு

கடித்து மென்று தின்றுவிட்டு, "எங்கப்பா வாங்கிக்கொடுத் தார். உங்கப்பா வாங்கித் தரத்துக்கென்ன?" என்றான்.

ஐந்நூறு ரூபாய் சம்பாதிப்பவன் பிள்ளை கேட்ட இந்தக் கடினமான கேள்விக்கு இருபத்திரண்டரை ரூபாய் சம்பளம் வாங்கும் குமாஸ்தாவின் மகனால் பதில் சொல்லமுடியவில்லை. அழுதுகொண்டே தந்தையிடம் சென்றான். நடவரன் அவசர அவசரமாய் அழுக்குக் குட்டை ஒன்றைத் தன் கிழிந்த சொக்காயின்மேல் போட்டுக்கொண்டு ஒன்பது மணி வண் டிக்குப் புறப்படத் தயாராயிருந்தான். அவனெதிரே புதா வந்து நின்று, "அப்பா, எனக்கு ஆப்பிள் ஒண்ணு வாங்கிண்டு வரயா?" என்று கேட்டான். "ஆகட்டும் அம்மா" என்று கூறிவிட்டு நடவரன் வெளியே சென்றான்.

ஆபீஸிலிருந்து திரும்பி ரெயில் வண்டியில் இறங்கித் தெருத் திருப்பத்தண்டை வந்துகொண்டிருக்கையில் நடவ ரன் புதாவைச் சந்தித்தான். இரவு பகல் இரண்டையும் ஒன் ருகப் பாவித்துவந்த புதாவுக்கு அன்றைத்தினம் தூக்கமே வரவில்லை. கண்ணை மூடிக்கொண்டு படுக்கையில் படுத்துக் கொண்டுதான் இருந்தான். ஆனால் சாயங்கால வண்டி 'கூ' என்று கத்திக்கொண்டே ஸ்டேஷனில் நுழைந்ததும் பொய்த் தூக்கத்தைவிட்டு எழுந்து சமையலறைப் பக்கம் ஒரு தடவை பார்த்துவிட்டு ஓரே முச்சில் தெருவை அடைந் தான். தகப்பனைப் பார்த்ததும் கையை நீட்டிக்கொண்டே, "ஆப்பிள் எங்கேப்பா?" என்று கேட்டான். நடவரன் "அடாடா, மறந்தே போய்விட்டேனே. நாளைக்குக் கட்டா யம் வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்றான்.

புதாவின் முகம் சின்னதாய்ப் போயிற்று. பெருமூச்சு விட்டு, "சரிதான்" என்றான். நடவரன் நிஜத்தைச் சொல்ல வில்லை. வழியில் ஆப்பிள் கடையண்டை வரும்பொழுது புதா கேட்டது ஞாபகத்திற்கு வந்தது. ஆனால் ஜேபியில் தம்பிடிகூட இல்லை. ஆபீஸ் சேவகனிடமும் நாலணு கடன் கேட்டுப் பார்த்துவிட்டான். நாளைக்கு எங்கிருந்து நாலணு அகப்படும் என்று ஒன்றும் தெரியாமல் விழிக்கும் நடவரன் பழைய பல்லவியைப் பாடி நம்பிக்கை இழந்த புதாவை ஆசுவாஸப்படுத்தினன்.

மறுதினமும் புதா மாலை நேரத்தை எதிர்பார்த்தவண் ணம் இருந்தான். இன்றைக்குக் கட்டாயம் ஆப்பிள் வந்து

விடும்; சந்தேகமே இல்லே. வாசல் கதவண்டை நின்றுகொண்டிருந்தவன் தூரத்தில் தந்தையைக் கண்டதும் ஓடி வந்து கையைப் பிடித்துக்கொண்டு, "ஆப்பிள் கொடுப்பா!" என்று கெஞ்சினுன். நடவரன் கணநேரம் முகத்தைச் சுளித்து. ஜேபியில் கையைப் போட்டு, "அடேடே, கீழே விழுந்துவிட்டாற்போலே இருக்கிறது" என்றுன். வேறெரு வழியும் இல்லே. ஆனல் இப்படிச் செய்ததும் நடவரனின் கண்களினின்று நீர் பெருக ஆரம்பித்தது.

புதா தந்தையின் கையை விட்டுவிட்டு எதிரே வந்து, "அது இருக்கட்டுமப்பா, அந்தப் பழம் எவ்வளவு பெரிசாக இருந்தது?" என்று கேட்டான்.

நடவரன் விரல்களே அகற்றிக் கற்பனே பண்ணிப் பழத்தின் அளவைக் காண்பித்தான்.

"அம்மாடி, அவ்வளவு பெரிசா? சரிதான். நாளேக்கு வாங்கிண்டு வருவையோல்லேயோ?" என்று கேட்டான் புதா

திங்கட்கிழமை சம்பள தினம். ஆகையால், "நாளேக்கு முடியாது அம்மா. திங்கட்கிழமை வாங்கிக்கொண்டு வருகிறேன். இரண்டு பழம் வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்றுன் நடவரன்.

புதா மிகவும் ஸந்தோஷத்துடன், "அவ்வளவு பெரிசாக — சிவப்பாக — ஊம்?" என்றுன்.

"ஆகட்டும் அம்மா" என்றுன் நடவரன்.

புதா துள்ளிக் குதித்துக்கொண்டே முற்றத்தண்டை வந்து, "அம்மா, அம்மா! அப்பா எனக்கு இரண்டு ஆப்பிள் வாங்கித் தரேன்னு. தெரியுமா, ரொம்பப் பெரிசு" என்றுன்.

* * *

கடைத் தெரு மூலேயில் இருந்த பழக்கடை ஒன்றில் இரண்டு பழங்களேப் பார்த்துப் பொறுக்கி எடுத்து விலே பேசி முடித்தபின், கடைக்கார ஸாயபுவைப் பார்த்து, 'இந்த இரண்டையும் தனியாக வைத்துவை. சாயந்திரம் திரும்பும்போது துட்டைக் கொடுத்துவிட்டு எடுத்துக் கொண்டு போகிறேன்" என்றுன் நடவரன்.

கடையிலுள்ள பழங்களுள் அவை இரண்டும் நேர்த்தியானவை. அந்தப் பழங்கள் இரண்டையும் குழந்தையின்

கையில் கொடுத்தால் அவன் முகம் எப்படி மலர்ந்து புன்னகை பூத்திருக்கும் என்பதைக் கற்பனை பண்ணிப் பார்த்துக்கொண்டபோது நடவரனது வாடி வதங்கின முகமும் பொலிவுற்று விளங்கியது.

மணி மூன்று அடித்ததும் சம்பளச் சீட்டு வாங்கிக் கொள்ளத் தலைமைக்குமாஸ்தாவிடம் சென்றான். அவர் சம்பளச் சீட்டை அவன்முன் எறிந்தார். சீட்டின் ஓரத்தில் வேலை பூர்த்தியாகாமல் இருக்கும்வரை சம்பளம் கொடுக்கப்படாது என்று எழுதப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் நடவரனுக்குத் தலையில் இடி விழுந்தாற்போல் ஆயிற்று. சிவப்புப் பென்ஸிலால் வரையப்பட்ட அவ்வாங்கில மொழிகள் அவன் இருதயத்தைப் பிளந்தன. கொஞ்சநேரம் ஒன்றும் பேச முடியாமல் மௌனமாக இருந்தான். பிறகு உடைந்த குரலில், "ஸார்!" என்று கூப்பிட்டான்.

தலைமைக் குமாஸ்தா, "நான் என்ன பண்ணக்கூடும்? துரை ரொம்பக் கறார் பேர்வழி என்று உமக்குத் தெரியாதா? வேணுமானால் துரையையே போய்ப் பாரும்" என்றார்.

யோசனையில் ஆழ்ந்தவனாய்ச் சம்பளச் சீட்டை எடுத்துக்கொண்டு நடவரன் துரையின் அறைக் கதவண்டை வந்து நின்றான். சேவகன் துரையினிடம் போய்ச் சொன்னதும் "கம் இன் (உள்ளே வா)" என்று கட்டளை பிறந்தது.

நடவரன் ஒரு பெரிய ஸலாம் செய்து, "ஸார்! என் சம்பளம் —" என்றான். துரை வால்டேரில் இருக்கும் தம் மனைவிக்குப் புதுவருஷ வெகுமதி அனுப்பும் காரியத்தில் ஈடுபட்டிருந்ததால், "அதெல்லாம் முடியாது. வேலையைச் சீக்கிரம் முடிக்காவிட்டால் எக்ஸ்க்யூஸ் (மன்னிப்பு) கிக்ஸ்க்யூஸ் ஒன்றும் கிடையாது போ" என்றார்.

நடவரன் அழுதுகொண்டே, "ஸார், நாளை முழுவதும் இரவு பகலாக 'வொர்க்' (வேலை) பண்ணிச் சரிப்படுத்தி விடுகிறேன்" என்று கெஞ்சினான்.

துரை கடிதம் வரைவதை நிறுத்தி, "அப்படியானால் நாளைக்கு மறுநாள் சம்பளத்தை வாங்கிக்கோ, மான்!" என்றார்.

"ஸார், ஸார். ஒரே ஒரு ரூபா. அதுகூட வேண்டாம்; அரை ரூபாயாவது கொடுக்கச் சொல்லுங்களேன்."

"நாட் எ பார்த்திங் (தம்படிகூடக் கொடுக்கமுடியாது)" என்று கூறிக்கொண்டே துரை எதிரே இருந்த இரண்டு பழக்கூடைகளின்மேலும் விலாசம் ஒட்டினார்.

நடவரன் பெருமூச்சு விட்டுக்கொண்டே வெளியே வந்து சம்பளச் சீட்டைத் தலைமைக் குமாஸ்தாவிடம் கொடுத்துவிட்டு, "போயும் பலனில்லை" என்று கூறினான். அவரிடம் ஒரு ரூபாய் கடன் கேட்கலாமா வென்று சற்று யோசித்தான். ஆனால் திடீரென்று எல்லோர் மேலும் வெறுப்பு ஏற்படவே அவ்வெண்ணத்தையும் ஒழித்தான். நேற்று முழுவதும் புதா, "திங்கட்கிழமை கட்டாயம் வாங்கிக் கொண்டு வருகிறாயா, வருகிறாயா?" என்று கேட்டதைத் தவிர வேறொரு ஞாபகமும் இல்லாமல் தெருவழியே செல்லலுற்றான்.

இத்தனை நாழிகைக்குப் புதா கட்டாயம் ஸ்டேஷன் ரோட்டில் அப்பாவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். அப்பாவைப் பார்த்ததும் ஓடிவந்து......அப்புறம்?

இவ்வாறு சிந்தனையில் ஆழ்ந்தவனாய்க் கடைத்தெருவின் திருப்பத்தண்டை தான் வந்து கொண்டிருப்பதையும் மறந்துவிட்டான். திடீரென்று கூடைக்காரன் ஒருவன் மேல் இடிக்கவே திடுக்கிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான். எதிர்ப் பக்கத்தில் அந்த ஆப்பிள் கடை. ரோட்டைக் கடந்து கடையருகிற் சென்று நின்றுகொண்டு அவ்விரு பழங்களையும் உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். மனக்கண்ணெதிரில் ஒரு குழந்தை தன் கையைப் பிடித்துக்கொண்டு, "அப்பா! ஆப்பிள்?" என்று கெஞ்சுவதுபோல் தோன்றிற்று.

இன்னது செய்கிறோம் என்று அறியாமல் நடவரன் அவ்விரு பழங்களையும் எடுத்து வைத்துக்கொண்டான்.

மறு விநாடி யாரோ, "திருடன், திருடன்" என்று கூவிக்கொண்டே தன் கரத்தைப் பற்றி இழுப்பதுபோல் இருந்தது. அப்புறம் ஸ்மரணையே இல்லை. மூர்ச்சை தெளிந்து எழுந்ததும் போலீஸ் கொட்டடியில் இருப்பதை உணர்ந்தான் நடவரன்.

* * *

ஐந்து மணியிலிருந்து புதா ஸ்டேஷன் ரோட்டில் தந்தையின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஆறரை

மணி வண்டி 'ஜிகு புகு' என்று சப்தித்துக்கொண்டே ஸ்டேஷனில் நுழைந்ததும் குழந்தையின் ஸந்தோஷத்தைச் சொல்லி முடியாது. பிரயாணிகள் பாதை வழியாக வர ஆரம்பித்தனர். புதா அவசரம் அவசரமாக முன்னே செல்ல லானுன். தூர வரும் ஒவ்வொருவரும் தன் தந்தைதான் என்று எண்ணி ஓடிவந்து பார்ப்பதும், இல்லை என்று தெரிந்ததும் திரும்பிப் போவதுமாய் ஒரு மணி நேரம் பார்த்து ரோட்டில் ஒருவரும் வராமற் போகவே முகம் வாடி வீட்டுக்கு வந்து, "அப்பா வரலேம்மா, அப்பா வந்தா எழுப்புகிருயா அம்மா?" என்ருன்.

"அப்புறம் ஒன்பது மணிக்கு ஒரு வண்டி இருக்கிறது. இன்றைக்குச் சம்பள தினம். சாமான் வாங்கிக்கொண்டு வர நாழியாகும். நீ தூங்குடாப்பா. அப்பா வந்ததும் எழுப்பு கிறேன்" என்று தாய் ஆறுதல் கூறினுள்.

இரவு புதா தன் கிழிந்த ஜேபியில் இரண்டு ஆப்பிள் பழங்களை அடைத்து வைத்துக்கொண்டிருப்பதுபோல் கனவு கண்டுகொண்டிருந்தான். அதே சமயத்தில் கடைத்தெருப் போலீஸ் இன்ஸ்பெக்டரும் ரிப்போர்ட் எழுதி முடித்துவிட்டு, நடவரனைத் திருட்டுக் குற்றம் செய்ததற்காகக் கோர்ட்டில் ஆஜராகும்படி ஆர்டர் எழுதிக்கொண்டிருந்தார்.



வளையற்காரன்

சாருசந்த்ர பானர்ஜி

"பம்பாய் வளையல்......பெட்டி வளையல்..." என்று கூவிக் கொண்டே சென்ற வளையற்காரக் கிழவனொருவன், ஒரு வீட்டு வாசல் திண்ணையில் சிறுமிகள் கூட்டமாய் உட்கார்ந்துகொண்டு பேசுவதைக் கண்டு அவ்வீட்டெதிரே நின்றான். கூட்டத்தின் நடுவில் ஓர் அழகிய பாலிகை தன் தளிர் போன்ற கரங்களை ஆட்டிக்கொண்டு மிகவும் ஸ்வாரஸ்யமாக மற்றவர்களுக்குக் கதை சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கிழ வளையற்காரன் பெட்டியைக் கீழே வைத்து விட்டுப் படிக்கட்டில் உட்கார்ந்தான்.

கதை சொல்லிக் கொண்டிருந்த சிறுமி அவனைப் பார்த்து, "வளையல்காரா, புதுத் தினுசு வளையல் ஏதாவது கொண்டுவந்திருக்கிறாயா என்ன? பெட்டியைத் திற பார்க்கலாம்" என்றாள்.

கிழவன் வளையற் பெட்டியைத் திறந்து பலநிற வளையல்களை வெளியே எடுத்தான்.

சிறுமி வீட்டினுள்ளிருந்து யாராவது தன்னைப் பார்க்கிறார்களோ என்று கவனித்துவிட்டுக் கிழவனை நோக்கி, "இரண்டு நாளைக்கு முன்னேதான் அம்மா எனக்கு வளையல் போட்டாள். இப்போது போடு என்றால் போடமாட்டேன் என்று கோபித்துக்கொள்வாள். நீ வளையலைப் பெட்டியிலே எடுத்து வைத்துவிடு. நான் வெறுமை பார்க்கலாம் என்று திறக்கச் சொன்னேன்" என்றாள்.

கிழவன் அவ்வளையல்களைப் பெட்டியில் வைத்துவிட்டு அதனுள்ளிருந்த ஒரு சிறு அட்டைப் பெட்டியிலிருந்து கருநீலமான வளையல் சிலவற்றை வெளியிலெடுத்துப் பாலிகையை நோக்கி, "அம்மணி, உன் சிவப்பு உடம்புக்கு இந்த நீல வளையல் ரொம்ப நல்லாயிருக்கும். நான் உனக்குச் சும்மாவே போட்டுவிட்டுப் போகிறேன். ஒன்றும் கொடுக்க வேண்டாம் எனக்கு" என்று கூறிச் சிறுமியின் மெல்லிய கைகளைப் பற்றி நோகாமல் வளையல்களைப் போட்டான்.

பெண், "வளையல்காரா, உனக்குப் பெண் இருக்கிறாளா ?" என்று கேட்டாள்.

கிழவனுடைய கண்களில் நீர் வந்து மறைத்தது; "உன்னைப் போலவே எனக்கு ஒரு பெண் இருந்தாளம்மா...... இரண்டே நாள் ஜுரத்தில் இறந்துபோய்விட்டாள்" என்று கூறிக் குட்டையால் தன் கண்களைத் துடைத்துக்கொண்டான் கிழவன்.

சிறுமி கிழவனுடைய கைகளைப் பற்றிக்கொண்டு, "வளையல்காரா! அழுகிறாயா என்ன ?" என்று கேட்டாள்.

கிழவன் மௌனமாகத் தலையசைத்து, சிறுமியின் கரங்களைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு, "உன் பெயர் என்ன, அம்மா ?" என்றான்.

"லக்ஷ்மி" என்று விடையளித்தாள் சிறுமி.

சற்று நேரம் லக்ஷ்மியுடன் பேசிவிட்டுக் கிழவன் வளையற் பெட்டியைத் தூக்கிக்கொண்டு கம்பீரமான குரலில், "பம்பாய் வளையல், பெட்டீ வளையல்" என்று விற்றுக் கொண்டே வீதி வழியே போய்விட்டான்.

* * *

மறுநாட் காலை பத்துமணி இருக்கும். தெருவில் கம்பீரமான அவனது கண்டத்வனி கேட்டது. உடனே லக்ஷ்மி தெருப்பக்கமாய் இருக்கும் ஜன்னற் கதவைத் திறந்து கொண்டு அவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

கிழவன் எங்கும் நில்லாமல் நேராக லக்ஷ்மியின் வீட்டை நோக்கி வந்தான். ஜன்னலண்டை லக்ஷ்மி இருப்பதைப் பார்த்ததும் கிழவனுடைய முகம் ஸந்தோஷத்தினால் மலர்ந்தது.

லக்ஷ்மி வெளியே வந்து கிழவனைத் திண்ணையில் உட்காரும்படி சொல்லிவிட்டு உள்ளே சென்று ஒரு கிண்ணம் நிறைய மோர் கொண்டுவந்து அவனிடம் கொடுத்தாள்.

கிழவன் அதை ஆவலுடன் பருகிவிட்டுத் தன் பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு பருத்த புஸ்தகத்தை வெளியிலெடுத்து லக்ஷ்மியின் கைகளில் கொடுத்தான். லக்ஷ்மி அதை ஆவலுடன் வாங்கிக்கொண்டு பிரித்துப் பார்த்தாள். கொட்டை எழுத்துக்களில் 'ராமாயணம்' என்று வரையப் பட்டிருப்பதைக் கண்டு ஸந்தோஷத்தை அடக்க முடியாமல் துள்ளிக் குதித்து, "வளையல்காரா, உனக்கு இந்தப் புஸ்தகம் ஏது?" என்று வினவினாள்.

கிழவன், "அம்மணி, இந்தப் புஸ்தகம் என் தகப்பனாருடையது; அவருக்கு நல்லா எழுதப் படிக்கத் தெரியும். நான் சின்ன வயசிலே விளையாட்டிலே காலம் தள்ளிவிட்டதனாலே எனக்கு எழுதப் படிக்கத் தெரியாமல் போய்விட்டது. என் தகப்பனார் இறந்த பிறகு நான் இந்தப் புஸ்தகத்தை ஜாக்கிரதையாக வைத்திருந்தேன். இப்போதுதான் அதற்கு நல்லகாலம் பிறந்தது. லக்ஷ்மி அம்மா படிக்க வேணும்; நான் கேட்கவேணும்" என்று அன்பு ததும்பும் குரலில் சொன்னான்.

அது முதல் கிழவன், ஒவ்வொரு தடவை வரும்போதும் லக்ஷ்மியின் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு அவளை ராமாயணம் படிக்கச் சொல்லித் தான் கேட்டுக் கொண்டிருப்பான். இம்மாதிரியே சில மாதங்கள் சென்றன.

உடம்பு சரியாக இல்லாததால் வளையற்காரக் கிழவன் ஒருமாதமாக லக்ஷ்மியைப் பார்க்கப் போகாமல் இருக்கவே அவனுக்குப் பைத்தியம் பிடித்ததுபோல் இருந்தது. உடம்பு சற்றுத் தேறினதும் புதுமாதிரியான வளையல்கள் சிலவற்றை எடுத்துக்கொண்டு மெள்ளத் தடியை ஊன்றிக்கொண்டே லக்ஷ்மியின் வீட்டை நெருங்கினான். வீட்டினுள்ளிருந்து மேள சப்தம் வருவதைக் கேட்டு ஆவலுடன் உள்ளே நுழைந்தான்.

வளையற்காரனைப் பார்த்ததும் லக்ஷ்மியின் தகப்பனார் ஸந்தோஷத்தோடு, "வா...வா. நீ இத்தனை நாளாக வராததனால் லக்ஷ்மி மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். இன்றைக்கு அவளுக்குக் கல்யாணம். நீ இங்கேயே இருந்து சாப்பிட்டுவிட்டுப் போ" என்று கூறினார்.

விழிகளிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகக் கிழவன் உள்ளே சென்று, மணப் பந்தலில் உட்கார்ந்துகொண்டிருக்கும் லக்ஷ்மியை அப்படியே பருகிவிடுவதுபோல் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

சற்றுநேரம் கழித்து, லக்ஷ்மியின் தகப்பனுர் அவனை அழைத்துக்கொண்டு வந்தார்.

லக்ஷ்மி பழையபடியே, "வளையல்காரா, இத்தனை நாளாக ஏன் வரவில்லை?" என்று கேட்டாள்.

கிழவன், "ஜுரத்திலே விழுந்துவிட்டேனம்மா. அதனுலேதான் வரமுடியவில்லை" என்று கூறித் தான் கொண்டு வந்திருந்த வளையல்களை அவள் கையில் இட்டு அவளுடைய அழகிய முகத்தைச் சற்று நேரம்வரை நோக்கிவிட்டு, "இந்த ஏழை வளையல்காரனுல் உனக்கு எதைக் கொடுக்க முடியும் அம்மா! இந்த இரண்டு ஜதை வளையல்தான்" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னுன்.

சாப்பிட்டான பின் கிழவன் லக்ஷ்மியுடன் சற்றுநேரம் வரை பேசிவிட்டு அவளிடம் விடைபெற்றுச் சென்றுன்.

* * *

இரண்டு மாதங்களுக்குப் பின் ஒரு நாள் லக்ஷ்மியைப் போய்ப் பார்க்கவேண்டுமென்ற ஆவலால் கிழவன் வளையல் பெட்டியைத் தூக்கிக்கொண்டு முன்போலவே, "பம்பாய் வளையல்.........பெட்டீ வளையல்........." என்று விற்றுக் கொண்டே லக்ஷ்மியின் வீட்டை அணுகினுன். ஜன்னலண்டை லக்ஷ்மியைக் காணவில்லை. ஜன்னற் கதவு மூடப்பட்டிருந்தது. உரத்த குரலில், "பம்பாய் வளையல்...பெட்டீ வளையல்......" என்று கூவினுன். படாரென்று ஜன்னற் கதவு திறக்கப்பட்டது. கிழவன் அங்கே லக்ஷ்மி முகம் வாடி நிற்பதைக் கண்டான்.


அவள் கிழவனை நோக்கி, "வளையல்காரா, நான் இனி மேல் வளையல் போட்டுக்கொள்ளக் கூடாதே!" என்றுள்.

கிழவன் ஏன் என்று கேட்பதற்குள் வாயிற் கதவைத் திறந்துகொண்டு லக்ஷ்மியின் தகப்பனுர் வெளியே வந்தார்.

அவர் கிழவனை நோக்கி, "லக்ஷ்மியின் தலை எழுத்து இப்படி ஆகிவிட்டதப்பா" என்று துயரத்துடன் மொழிந்தார்.

இதைக் கேட்டதும் கிழவன் வளையற் பெட்டியைத் 'தொப்' என்று கீழே போட்டுவிட்டு அப்படியே உட்கார்ந்து விட்டான். சற்று நேரம் கழித்துத் தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, பெட்டியைத் தோளில் மாட்டிக்கொண்டு, லக்ஷ்மியை ஒருதரம் நோக்கிவிட்டுக் கண்களைத் துடைத்த வண்ணம் வீதிவழியே சென்று மறைந்தான்.

அதற்குப் பின் அக்கிழ வளையற்காரனை யாருமே பார்க்கவில்லை.



கெட்ட பெயர்

ரவீந்த்ரநாத் டாகுர்

1

"க்ரிங் க்ரிங் —" ஸைகிளின் மணியோசை.

வீட்டு வாயில் எதிரே வந்து குதித்தார் இன்ஸ்பெக்டர் விஜய் பாபு. அரைக் கை வைத்த 'காக்கி' சொக்காய்; இடுப்பைச் சுற்றித் தோல் கச்சு. 'ஹாப் - பான்ட்' போட்டுக்கொண்டிருந்தார். நடையில் உத்தியோகத்திற்கு ஏற்ற மிடுக்கு. கதவுத் தாழ்ப்பாளைப் பலமாக அசைக்கவே அவருடைய மனைவி வந்து திறந்தாள்.

இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்தாரோ இல்லையோ அவள் சுறுசுறுவென்று ஆரம்பித்தாள்: "இனி என்னால் ஆகாது! ஒவ்வொரு நாளும் நடு ராத்திரி வரைக்கும் தூக்கம் இராமல், சாப்பாட்டை எலிக்கும் பூனைக்கும் விடாமல் ஜாக்கிரதையாக மூடி வைக்கவேண்டி யிருக்கிறது. எத்தனை திருடர்களைத் தேடிப் பிடித்துச் சாதித்து விட்டீர்கள்? எவனாவது ஸாது அல்லது ஸந்யாஸி அகப்பட்டிருந்தால் அவனை அடித்து ஹிம்ஸை செய்திருப்பீர்கள். ஓர் அநில் மித்தரை உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை! அவனும் உங்கள் கண்ணெதிரேயே தென்படுகிறான் அடிக்கடி; விரலைக் காட்டிவிட்டு மாயமாய் மறைகிறான். உங்கள் சாமர்த்தியத்தைப் பார்த்து ஊரார் ஏன் சிரிக்கமாட்டார்கள்? ஏதோ 'ஸர்க்கஸ் வேடிக்கையைப்போல அல்லவோ இருக்கிறது?"

“இதுவரை என்னிடத்தில் நல்ல மாதிரியாகத்தான் நடந்துவந்தான். சிறையிலிருந்து விடுதலையும் அடைந்து விட்டான். ஆனால் போலீஸுக்கு அறிவிக்காமல் வெளியே எங்கும் போகக்கூடாதென்று அவனுக்கு உத்தரவு. ‘அண்ணு! பயப்படவேண்டாம். இங்கே ஒரு முக்கியமான சபை கூடுகிறது. காரியத்தைக் கவனித்துவிட்டு இதோ வந்து ஆஜராகிறேன்’ என்று எனக்கு அன்று கடிதம் எழுதியிருந்தான். எங்கே அவர்கள் கூட்டம் கூடுகிருர்கள் என்பது ஒன்றுமே தெரியவில்லை. போலீஸுக்கு ‘டிமிகி’ கொடுக்கத்தான் இந்த வேலையெல்லாம்” என்ருர் இன்ஸ்பெக்டர்.

அவர் மனைவி ஸௌதாமினி, “இதைக் கேளுங்கள்; இன்று ராத்திரி நடந்த விசேஷத்தைச் சொல்லிவிடுகிறேன்! இதைக் கேட்டதும் நீங்கள் அயர்ந்து போவீர்கள்! என்ன தலைக்கிறுக்கு, என்ன குண்டு தைரியம் இருக்கவேணும் அவனுக்கு! ராத்திரி இரண்டு மணி; சாப்பாட்டை எடுத்து மூடிவைத்ததும் சற்றுக் கண்ணயர்ந்து விட்டேன். சட்டென்று கண்விழித்துக்கொண்டு பார்த்தபோது நீங்கள் தேடும் அந்த அநில் இங்கே வந்து எனக்கு நமஸ்காரம் செய்து, ‘அக்கா! அக்கா! இன்றைக்குப் பாயி போண்டா* இடும் நல்ல நாளாயிற்றே! கவனமில்லையா? உன் கையால் என் நெற்றியில் இட்டுக்கொள்ள வேண்டியே இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன். என் சொந்த அக்கா இத்தனை நாழிகைக்குச் சட்டக்கிராமத்தில் என்ன பண்ணுகிருளோ, யாரை அழவைக்கச் சூழ்ச்சி செய்கிருளோ? எப்படியோ இன்று என் நெற்றியில் பொட்டு வைத்துத்தான் ஆகவேண்டும் நீ; இல்லாவிட்டால் விடமாட்டேன்’ என்ருன். நடந்ததைச் சொல்லிவிடுகிறேனே. அவன் இந்தமாதிரி சொல்லும்போது எனக்கு ஒருவித இரக்கமும் அன்பும் அவன்பேரில் விழுந்தன. கூடப்பிறந்த தம்பியே பேசுவதுபோல் இருந்தது எனக்கு.

“‘அக்கா, இந்த மூன்று நாளாய் வயிற்றிற்குப் போதுமோ, போதாதோ, அகப்பட்டதைத் தின்று முள்ளிலும் புதரிலும் மறைந்து திரிகிறேன். உன் கையால் பொட்டு

---

*சகோதரனுக்கு நெற்றிப் பொட்டு இடும் ஒரு நோன்பு. அன்று முதலில் எழுந்தவுடன் சந்திப்பவர் வேற்று மனுஷ்யராயிருப்பினும் அவருக்குப் பொட்டிட்டால் சகோதரர்க்குச் சமமாவர்.

இட்டுக்கொண்டு உன் கையால் சமைத்த அன்னத்தைச் சாப்பிட்டுவிட்டு யார் கண்ணிலும் படாமல் ஓடிவிடுகிறேன்' என்ருன். நான் உங்களுக்கென வைத்திருந்த சாப்பாட்டை அவனுக்கு ஆதரவோடு பரிமாறினேன். 'இனிமேல் தலை காட்டாதே. அவர் வருகிற வேளையும் ஆயிற்று. சீக்கிரம் போய்விடு' என்றேன். 'பயம் ஒன்றும் இல்லை, அக்கா! என்னைக் கண்டுபிடிக்கத்தான் அவர் சீதல்பேடே போயிருக்கிருரே. திரும்பி வருவதற்கு மூன்று மணியாவது ஆகும். நான் நிதானமாகவே சாப்பிட்டுவிட்டு உன் பாததூளியையும் எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு போக அவகாசம் அள வற்றது இருக்கிறது' என்றதும், அவன் உங்களுக்காக மடித்து வைத்திருந்த தாம்பூலத்தில் ஒன்றை லபக்கென்று வாயில் போட்டுக்கொண்டு விட்டான். அப்புறம், 'இன்ஸ் பெக்டர் பாபு ஹவானு சுருட்டுப் பிடிக்கிருரே ; அதிலிருந்து ஒன்று கொடேன், அக்கா! நான் பிடித்துக்கொண்டே எங்க ளவர்கள் இருக்குமிடத்திற்குப் போவேன். இன்றைக்கு ஒரு கூட்டம் போடப்போகிருேம்' என்று சொல்லி உங்கள் 'ஆஸாமி' அகில் கொஞ்சங்கூடத் திகில் இல்லாமல் அந்த இடத்தின் பெயரைக்கூடச் சொல்லிவிட்டா னென்ருல்!" என்ருள்.

"அந்த இடத்தின் பெயரென்னவென்று சொன்ஞன் பயல்?"

"நீங்கள் இப்படிக் கேட்பதனுல், அவன் எனக்கு ரொம்ப வேண்டியவன் போலவும் என்னிடத்தில் அவன் எதையும் ஒளிப்பதில்லைபோலவும் அர்த்தமாகிறது. இத்தனை நாள் பழகியும் என்னை நீங்கள் நன்ருக அறிந்துகொள்ள வில்லையே! — அது எப்படியாவது போகட்டும். நான் உங் களுக்கு ரொம்பப் பிரியமான அந்த ஹவானு சுருட்டில் ஒன்றை அவனுக்குத் தந்தேன். அவனும் அதைப் பற்ற வைத்ததும் என் பாததூளியை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு நிம்மதியாய் அதைப் பிடித்துக்கொண்டே போய் விட்டான்" என்ருள்.

இன்ஸ்பெக்டர் உட்கார்ந்திருந்தவர் திடீரென எழுந்து, 'சொல்லுகிருயா இல்லையா: அவன் எந்தப் பக்கமாய்ப் போஞன்? எந்த இடத்தில் கூட்டம் கூடுகிருர்கள்?" என்ருர் ஆவேசத்துடன்.

ஸௌதாமினி எழுந்தாள். தலையை வக்கிரமாக வைத்துக்கொண்டு, "என்ன சொன்னீர்கள்? என்னை யாரென்று நினைத்தீர்கள்? உங்கள் வாயிலிருந்தா இந்த மாதிரிப் பேச்சு வருகிறது? உங்களுக்கு வாழ்க்கைப்பட்டதனால் நான் போலீஸாருக்கும் வேவுகாரியம் செய்யவேண்டுமா என்ன? நான் மட்டும் தவருக நடந்திருந்தால் நீங்கள் இத்தனை நாட்கள் என்னை நம்பிச் சும்மா இருந்திருப்பீர்களா? வீண் மிரட்டலெல்லாம் இங்கே பலிக்காது!" என்ருள்.

இன்ஸ்பெக்டருக்குத் தம் மனைவியின் குணம் நன்ருகத் தெரியும். அவள் மகா ரோஷக்காரி. பிடித்தால் ஒரே பிடிதான்; கொஞ்சங்கூட இறங்கமாட்டாள்.

முயற்சி வியர்த்தமாகிப் பெருமூச்சு விட்டுக்கொண்டு உட்கார்ந்தார் இன்ஸ்பெக்டர்.

"அடாடா! நல்ல சந்தர்ப்பம் கிடைத்தும் கைநழுவிப் போயிற்று" என்று சொல்லிக்கொண்டே அவர் நவாப் காலத்து ரீதியிலுள்ள தம் மீசையின் இருநுனியையும் கூராகத் திருகிவிட்டுக் கொண்டதுதான் மிச்சம். ஏமாற்றம் அடைந்ததால் நின்று நின்று அவர் 'புஸ் புஸ்' என்று மூச்சு விட்டார். இரண்டாந்தடவை தயார்செய்த 'கிச்சடி'* அவருக்கு ருசிக்கவில்லை.

இந்தப் பிரகாரம் நிறைவுற்றது கதையின் முதல் பரிச்சேதம்.

2

ஸௌது தன் புருஷனை நோக்கி. "என்ன, இன்றைக்கு ஒரு மாதிரியாக இருக்கிறீர்களே? கால் தரையிலேயே நிலைக்க மாட்டேனென்கிறதே. புதிதாக நடனம் கிடனம் ஏதாவது கற்றுக்கொண்டிருக்கிறீர்களா? டி. எஸ். பி., கிருபைக் கண் வைத்திருக்கிருர்போல் இருக்கிறது!" என்ருள்.

"வைக்காமல் என்ன?"

"என்ன! என்ன! சீக்கிரம் சொல்லுங்கள், அந்த நல்ல சமாசாரத்தை."

---

* ஒரு தின்பண்டம்.

"நிதாயி சக்ரவர்த்தி இருக்கிறானே, போலீஸ் ஸி. ஐ. டீ., — அநில் கூட்டத்தாரின் நடவடிக்கைமேல் 'நிகா' வைத்து எங்களுக்குச் சொல்லும்படி அவனை அனுப்பியிருக்கிறோம். மோசகாடிக் காட்டிலே இன்று அவர்களெல்லாம் ஒன்று கூடுகிறார்களென்ற செய்தி, அவனால்தான் தெரியவந்தது எங்களுக்கு. பெரிய காடு. முன்னதாகவே அதைச் சுற்றி வளைத்துக்கொள்ளப் பந்தோபஸ்து செய்துவிட்டோம். ஸர்வேயரைக்கொண்டு காட்டின் மூலை முடுக்கெல்லாம் நன்றாகப் பார்த்து வைத்துக்கொண்டாயிற்று. தப்பி ஓடுவதற்கு ஓர் இடங்கூட இல்லை" என்றார்.

"இதிலிருந்து உங்கள் மூளையில்தான் காலி இடம் ரொம்ப இருக்கிறதென்று தெரிகிறது. எத்தனையோ தரம் எல்லோரும் சிரிக்கும்படி ஆயிற்றே! மறுபடியுமா வேண்டியிருக்கிறது? இதோடு நிறுத்திக்கொள்ளக்கூடாதா?"

"ஸது! வரவர இப்படி ஏன் பேசுகிறாய்? நான் கிள்ளுக்கீரையா என்ன? இதைவிட நல்ல தருணம் வாய்க்குமா?"

"இதோ நான் சொல்கிறேன். என் பேச்சைக் கேளுங்கள். மோசகாடி என்றதெல்லாம் வெறும் மூட்டை. நம் வீட்டு அக்கம் பக்கத்தில் எங்கேயோதான் அவன் திரிகிறான். பாருங்கள் வேண்டுமானால், கடைசியில் உங்கள் மூஞ்சிக்கு நேரே துப்பிவிட்டு அவன் தலைமறையாதுபோனால். அவனா உங்கள் கையில் சிக்குவான்?"

"ஸது, நீ எப்படியாவது அவன் இருப்பிடத்தைக் கண்டுபிடித்துச் சொல்லிவிடு. எனக்கு ரொம்பச் சிரமம் இராதுபோகும். காரியமும் சுலபமாகவே முடிந்துவிடும்."

"இதோ பாருங்கள்: இந்த மூஞ்சி துடைக்கிற வார்த்தையெல்லாம் என்னிடத்தில் பலிக்காது. தமாஷ் பண்ணவேண்டுமானால் பட்டவர்த்தனமாய்ச் செய்யுங்கள். எத்தனையோ தரம் அந்தமாதிரி பண்ணியும் இருக்கிறீர்கள். இந்தக் கேலி புதிதாயிருக்கிறது. கட்டின பெண்டாட்டியை....." பேச்சு முடிவதற்கும் அவள் புடைவைத் தலைப்பில் கண்களை மூடுவதற்கும் சரியாக இருந்தது.

"ஸது, ஸது, நான் வேடிக்கையாக உன்னோடு பேசக் கூடாதா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம், போலீஸாரின் கேலி தெரியுமோ இல்லேயோ? நீங்கள் பேசும்பொழுது என் உடம்பெல்லாம் பற்றி எரிகிறது. பண்ணிவைத்த 'கிச்சடி'யில் துளிக்கூட வாயில் போட்டுக்கொள்ள மாட்டீர்களா?" என்ருள் ஸது.

"சாப்பிடுகிறேன். வேண்டிய நேரம் இருக்கிறது. ஏற்பாடெல்லாம் சட்டுப்பட்டென்று முடித்துவிட்டுத்தான் வந்தேன்."

"நிஜமாகச் சொல்கிறேன். ரகஸியமாக நீங்கள் செய்கிறது ஏதாவது என் காதில் விழுந்ததோ, அடுத்த நிமிஷம் அவர்களிடத்தில் 'வத்தி வைப்பது' என்னுடைய கடமை. தெரிந்துகொள்ளுங்கள்: முன்னுலேயே சொல்லிவிடுகிறேன்."

"அட இழவே! எங்கள் சமாசாரம் ஏதாவது காது விசேஷமாக உனக்கு எட்டிவிட்டதா என்ன?"

"பின்னே, உங்களோடு வாழ்க்கை நடத்தும்போது என் போன்றவர் காதையுந்தான் கூராக்கிக் கொள்ளவேண்டும்; கண்களேயும் நன்ருய்த் திறந்து வைத்துக்கொள்ளத்தான் வேண்டும்!"

"எப்படி எட்டியது? அதற்குமேல்?"

"அதற்கு மேல் சண்டிதாஸ் சொல்வதுபோல, செவியினுட் பாய்ந்தது மனத்தினுள் தெளிவாய்ப் பதிந்தென் உயிரினை வாட்டிடுமே."

"இந்த வாய் இராதுபோனுல் ஸது, உன்னைக் காக்கை தூக்கிக்கொண்டு போயிருக்குமே. நிஜமாகச் சொன்னதா அல்லது வேடிக்கையாகச் சொன்னதா? ஒன்றும் விளங்கவில்லே எனக்கு."

"இதை அறிந்துகொள்ளக்கூடிய புத்தியிருந்தால் இந்தப் போலீஸ் சேவகத்திற்கு வந்தே இருக்கமாட்டீர்கள். இதைவிட உயர்ந்த பதவி ஸர்க்கார் உங்களுக்கு அளித்து, ஊர் ஊராய் உலகத்தவர் நன்மைக்காகப் பெரிய பிரசங்கங்கள் செய்யச் சொல்லி வலேயை அல்லவா வீசி இருப்பார்கள்?"

"பேரிழவே! கடைசியில் ஒரு பெண்ணுல்தான் எல்லாம் கெடுகிறது. அதுவும் அந்தப் பெண் என் வீட்டிலேயே

இருக்கிருளென்றுல் அதைவிட வேறு என்ன வேண்டும்?'' என்ருர் இன்ஸ்பெக்டர்.

"நாய் பசி தாளாமல் குரைத்துக் குரைத்துச் சாகிறதே; தெரியவில்லையா உங்களுக்கு? அதைப் போய்த் 'தாஜா' பண்ணிவிட்டு வருகிறேன்."

இன்ஸ்பெக்டருக்கு ஆக்ரோஷமாக வந்தது. "அந்தச் சனியன் பிடித்த நாயை முதலில் சுட்டுக் கொல்லுகிறேனு இல்லையா பார்!" என்று எழுந்தார்.

ஸது கணவருடைய கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்; "வேண்டாம், அதன் ஜோலிக்குப் போகா தீர்கள்" என்ருள்.

"ஏன்?"

"உங்களைப் பார்த்தவுடன் அது வள்ளென்று மூஞ்சியைக் கடிக்க வரும். பொல்லாத நாயாயிற்றே! என் ஒருத்திக்குத்தான் அது அடங்கும்."

"ஸது, ஒரு சமாசாரம் எனக்கு வந்தது: அந்த அநில் இருக்கிருனே அவன் 'அகசியம்' நன்ருகப் பண்ணுவானும். எந்த ஜந்துவின் குரலையும் அப்படியே அபிநயிப்பானென்று சொல்லிக்கொள்ளுகிருர்கள். நித்தியம் ராத்திரி இரண்டு மணிக்குத் தவருமல் அவன் அந்த மாதிரிக் குரலில் உனக்கு ஏதாவது சமிக்ஞை செய்திருக்கவேண்டும், அல்லவா?"

ஸது இதைக் கேட்டுச் சீறி எழுந்தாள்; "ஏன்? கடைசியில் என்னிடத்தில்கூட ஸந்தேகம் வந்துவிட்டதா உங்களுக்கு? இதோ நீங்கள், உங்கள் வீடு......விட்டேன். என் அக்காவிடம் நான் போகிறேன். எனக்கு என்ன இருக்கிறது?" என்றதும் நகர்ந்தாள்.

"அடே! இதென்ன பெரிய சங்கடமாய்ப் போயிற்றே! வேடிக்கையாகச் சொன்னதற்கா உனக்கு இவ்வளவு ரோஷம் பொத்துக்கொள்கிறது? எங்கே போகிருய், ஸது? உன்னிடத்தில் தமாஷாகப் பேசக்கூட எனக்குச் சுவாதீனம் இல்லையா? வேறு எவளோடு தமாஷாகப் பேசுவது? வேறு எவளாவது இருந்தால் இத்தனை நாழிகைக்கு இந்த வீட்டில் அமர்க்களமன்ருே நடந்திருக்கும்?" என்று கூறியதும்

ஸதுவைப் போகவிடாமல் பலமாகப் பிடித்து உட்கார வைத்தார்.

கண்களைத் துடைத்துக்கொண்டே நின்றாள் ஸது.

"என்ன சொல்லிவிட்டேனென்று பிரமாதமாக அழுகிறாய்?"

"ஆமாம். இந்தமாதிரி நையாண்டிப் பேச்செல்லாம் நான் சகித்துக் கொள்ளமாட்டேன்!"

"சரி, சரி, போதும். இதோடு நிறுத்துவோம் சச்சரவை. உன் நாயை ஸாவதானமாகக் கவனி, போ. பிஸ்கட், கட்லெட் எவ்வளவு நிரப்பினால் என்ன? 'அதன் வயிற்றிற்குப் போதவே போதவில்லை' என்ற புகார்தான். ஒரு நாய்க்காக எதற்கு இவ்வளவு மனக்கஷ்டம்?" என்றார்.

"நீங்களெல்லாம் புருஷர்கள். உங்களுக்கு என்ன தெரியப்போகிறது? குழந்தை குட்டி பெற்றெடுக்காத பாவிகளுக்குத்தான் தெரியும் அந்தக் கஷ்டம். பாசம் அவர்களுக்குத்தான் ஜாஸ்தி; வளர்த்த பிராணியிடத்தில் உயிர். அதை ஒருநாள் பார்க்காமற் போனால் எனக்கு இருப்புக்கொள்வதில்லை. யாராவது அதை அடித்துவிடுவார்களோ என்ற திகில்தான் அதை இப்படிப் போற்றிப் போற்றி வளர்க்கிறேன், தெரியுமா?"

"ஆனால், ஸது, இதோ சொல்கிறேன்: இவ்வளவு ஆதரவைப் பெற்றால் எந்தப் பிராணியும் அதிக நாள் ஜீவித்திராது."

"இருக்கிறவரையில் நன்றாகத் தின்று ஜீவிக்கட்டுமே!"

விஜய் பாபு இளைப்பாறுவதற்கு எழுந்தார்.

இதற்கிடையில் போலீஸ் தளபலங்கள் ஓர் இடத்தில் கூடி வெவ்வேறு வழியாக மோசகாடியை நோக்கிச் சென்றன. இடம் வெகுதூரம். இரவில் புறப்பட்டால் பொழுது விடியும் சமயந்தான் போய்ச் சேரமுடியும்.

மறுநாள் மணி ஏழு இருக்கும். முகம் சுண்டி இன்ஸ்பெக்டர் தம் வீட்டில் வந்து இறங்கினார். அலுத்துப்போய்த் தொப்பென்று சோபாவில் சாய்ந்தார். "ஸது, மோசம்

போனேம். உன் வார்த்தை ஒன்றுகூடப் பிசகவில்லை. போலீஸார் காட்டை வளைத்துக்கொண்டார்கள். காட்டில் ஓர் ஆளைக்கூடக் காணவில்லை. 'அடிடா பிடிடா' என்று கூவி நாலுதிக்கும் ஆர்ப்பாட்டம் செய்தோம். 'சுட்டு விடுவோம். மரியாதையாக வெளியே வா' என்று பயமுறுத்தி ஏழு எட்டுத்தரம் துப்பாக்கி வெடியைக் கிளப்பினேம். ஒரு பதிலும் வரவில்லை. ஆள் இருந்தால்தானே! தேடாத புதர் கிடையாது. அப்போது பலபல வென்று உதயமாகிக் கொண்டிருந்தது. 'பிடியுங்கள் நிதாயியை! அந்தச் சோதாப் பயலை!' என்று எங்கோ கூச்சல் கேட்டது. உடனே நிதாயி இருந்த சுவடே தெரியவில்லை.

"ஒரு கடுதாசிமட்டும் கீழே விழுந்து கிடந்தது. அதைப் பிரித்துப் பார்த்தோம். 'ஆஸாமி பத்திரமாயிருக்கிறுன். அக்காவுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவியுங்கள். — இப்படிக்கு, அநில்' என்று அதில் எழுதியிருந்தது. என்ன கர்மம் இது! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதை மாதிரியாயிற்றே! இதில் உன் பெயர் கலந்திருக்கிறதே கடைசியில்......!" என்று இன்ஸ்பெக்டர் உரைத்தார்.

"கடைசியில் என்ன? போலீஸ்காரன் மனைவி நீங்கள் 'கோட்டை' விட்ட ஆஸாமியின் உடன்பிறந்தவளாக இருக்கக்கூடாதா? குடும்ப உறவினர்களுக்கெல்லாம் ஸர்க்கார் நேரில் பார்த்து முத்திரை போட்டிருக்கவேண்டும்போல் இருக்கிறதே! நான் வேறு எதுவும் சொல்லவில்லை...... இனிமேல் போய்ப் படுத்துக்கொண்டு தூங்குங்கள்" என்றுள் ஸது.

விஜய் பாபு தூங்கி எழுந்தபோது நல்ல பகல். குளித்துச் சாப்பிட்டானதும் அவர் தாம்பூலத்தை மென்றுகொண்டே ஸதுவை நோக்கிச் சொல்லலானுர்:

"அவன் செய்யும் ஜாலவேடிக்கையை என்னவென்று சொல்வேன்! நடுநிசியில் கும்பயோகத்தில் லயித்து அவன் அந்தரத்தில் உலாவுவதாகப் பலபேர் பிரசாரம் செய்கிறுர்கள். நேரில் தம் கண்ணுலேயும் இந்த அதிசயத்தைப் பார்த்ததாகச் சிலர் சொல்லிக்கொள்கிறுர்கள். இதனுல் ஊரரெல்லாம் அவனை ஒரு சித்த புருஷனுகப் பாவித்து ஸாக்ஷாத் சிவபெருமானுடைய அவதாரமென்றே நம்பிவிட்டார்கள். அவன்மேல் கைவைத்து வண்டவாளத்தை அறிவதற்கு ஹிந்துக்கள்

எவருமே முன்வரமாட்டார்கள். அவர்கள் தங்கள் வீட்டுத் திண்ணையில் அவனுக்காகச் சாப்பாட்டை வைத்து விடுகிறார்கள் — நித்திய நைவேத்தியம். காலையில் எழுந்து பார்க்கிறபோது அது போனவழியே தெரிவதில்லை. ஹிந்து போலீஸ் சேவகர்களோ அவன் இருக்கும் எல்லையைக்கூட மிதிப்பதில்லை. போலீஸ்காரன் ஒருவன் தைரியமாக அவனைப் பிடித்துவிட்டான் ஒரு சமயம். அது நடந்த ஒரு வாரத்திற்குள் போலீஸ்காரன் பெண்டாட்டி திடீரென அம்மை போட்டி இருந்துபோனாளாம். அதற்குமேல் அத்தாட்சி வேண்டுமா? அவன் ஜோலிக்குப் போக எவனுமே துணிவதில்லை.

"இந்தத் தடவை, மோசகாடிக் காட்டில் அவனைப் பற்றி யாதொரு துப்பும் தெரியாமற்போனபோது, போலீஸ் சேவகர்களெல்லாம், ஆஸாமி தங்களை ஒவ்வொருவராகத் தீர்த்துவிடுவானென்று எண்ணிப் பயப்பட்டார்கள். அதற்குச் சாக்ஷியாகச் சதுப்பான ஓர் இடத்தில் காலடி பதிந்திருந்தது, இரண்டுமுழ தூரத்திற்கு! போலீஸாருள் ஹிந்துக்களாயிருப்பவர்கள் அந்தப் பாதசின்னத்தின்மேல் அதிக பயபக்தியால் விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்கிறார்களென்றால் வேறு என்ன வேண்டும்? அவனைப் பிடிப்பது மிகவும் கடினமாய்விட்டது. முஸல்மான் போலீஸாரைக் கொண்டு பிடிக்கலாமென்று யோசனை செய்தேன். ஆனால் காலம் இருக்கிற அழகில் பெரும்போர் அல்லவா விளையும்? இதைச் சாக்கிட்டுப் பத்திரிகைக்காரர்கள் மோசகாடிக்கு நிருபர்களை அனுப்ப ஆரம்பித்துவிட்டார்கள். 'எவனுடைய காலடியாக இருக்கலாம்? ஓடிவிட்டவன் யாராக இருக்கலாம்?' என்றெல்லாம் கேள்விகளைப் போட்டார்கள். 'அவன் எப்படி மறைந்துபோயிருப்பான்? என்ன மாயம்?'—இவ்வாறே சில நாட்கள்வரை நாடெங்கும் அவனைப்பற்றி அறியும் மயக்கத்திலே எவரும் இருந்தனர். இதற்கிடையில் புறப்படும் விடுகதைகளுக்கோ அளவில்லை. ஏககாலத்தில் பத்து இடத்தில் அவனுடைய நிழல் தென்பட்டதாகவும், ஒரு ஜாகையில் அந்த மாயச் சித்தனுடைய தலைமயிரின் கொத்து அகப்பட்டு அதை ஒரு பக்திமானான கான்ஸ்டபிள் பார்த்து மெய்ம்மறந்து நின்றதாகவும் வதந்திகள் உலாவின. ஆனால் அது சணல் நாரில் செய்த பொய்ம்மயிர். அதைத் தெரிந்து கொள்ள எவனுக்குமே தைரியமில்லை. சில நாளைக்கெல்லாம்

நாலுபுறமும் அவனைப்பற்றி ஒரே அமளிகுமளி. மோசகாடியில் அவன் பாதம் பதிந்திருந்த இடத்தில் பெரிய கோவில் கட்டப் பணக்காரனான மார்வாடி ஒருவன் முப்பதினாயிரம் ரூபாய் தானம் செய்திருக்கிறான். அவனுடைய பரமானந்த சிஷ்யர்களுள் ஒருவர் ஜில்லா ஜட்ஜாயிருந்தவர். அவரிடத்தில் அநில் சிவஸம்ஹிதையைப் படித்துக்காட்டி வியாக்யானம் செய்வதாகக் கேள்வி. ஆஸாமி கள்ளனாயிருந்தாலும் நல்ல கல்விமானென்று தெரிகிறது. இந்தவிதமாக அவனைப் பார்த்தபேருக்கெல்லாம் பக்தியின் பெருக்கெடுத்தது. அவன் வரவரப் பட்டவர்த்தனமாகத் தலைகாட்டுவதற்கு அனுகூலமாயிற்று. அவனுக்கு விரோதமாகச் சாக்ஷிகளை ஜோடிப்பது முடியாத காரியம். அந்த அநில் பயல் ஒருவன்தான் எனக்கு இவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கிறான்.

"ஸது, இன்னும் ஒரு ஸங்கடம் என்னவென்று கேட்கிறாயோ? என்னுடைய மாமா பிள்ளை கிரிசன், ஹாதிபாந்தா பார்க்கனா போலீஸ் இலாகாவில் இன்ஸ்பெக்டர் வேலை பார்க்கிறான். கடமையைச் செய்யவேண்டி அவன் ஒரு குலீனப் பிராம்மணனுடைய பிள்ளையின் கைகளில் விலங்கிட்டானாம். அது முதற்கொண்டு அந்த ஊரார் யாவரும் அவனை ஜாதி ப்ரஷ்டம் செய்துவிட்டார்கள். இந்தப் பக்கம் கிரிசன் பெண்ணுக்கு விவாகமாகிற வயசு. வரன் வந்தால், அந்த இடத்தில் ஏதாவது கலகம் செய்து ஊரார் கெடுத்துவிடுகிறார்கள். அப்படி வரன் கிடைத்தாலும் கல்யாணம் பண்ணிவைக்கப் புரோகிதர் அகப்படுவதில்லை. வேறு கிராமத்திலிருந்து புரோகிதரைக் கொண்டுவந்தான். திடீரென்று முகூர்த்த தினத்தன்று அவரும் ஓட்டம் பிடித்தார். இப்போது கரையேறுவதற்கு ஒரு வழிதான் இருக்கிறது: பிருந்தாவனத்திலிருந்து சாமியார் ஒருவர் எதிர்பாராதவிதமாய் வந்து எங்கள் ஹெட் கான்ஸ்டபிள் விட்டில் தங்கியிருக்கிறார். அவரை உபசரித்து, ஒரு பெரிய பிராம்மண ஸந்தர்ப்பணையும் நடத்தினோம். இவ்வளவு செய்ததால் அவர் தாமே கல்யாணத்தை நடத்திவைப்பதாகச் சொன்னார். இப்போது அவரை ஊரார் கையிலிருந்து பத்திரமாகக் காப்பாற்றவேண்டும். ஸது, எனக்கு இந்தக் காரியத்தில் கொஞ்சம் ஸகாயம் பண்ணு."

"இதற்கு என்னைக் கெஞ்சுவானேன்? அது என் கடமையாகும். ஆஹா! கிரிசன் பெண் நம் மினுதானே? பாவம்! அவள் ஒரு தவறும் செய்யவில்லை. அவளுடைய

கல்யாணம் எப்படியாவது நிறைவேறுகிறது, பாருங்களேன். ...அந்தப் பிருந்தாவன பாபாஜி போன்ற சாமியார்களை எப்படிக் கவனிக்கவேண்டுமென்பதை நானும் கொஞ்சம் கற்றுக்கொள்கிறேன். வரவழையுங்கள் அவரை" என்றாள் ஸது.

பிருந்தாவன பாபாஜி வந்துவிட்டார்; மார்பளவு வழியும் தூவெண் தாடி, நாரதமுனிவரை நினைவுறுத்தியது. ஸௌதாமினி ஆர்வத்துடன் உள்ளம் குழைய அவரது காலிலேயே விழுந்து கிடந்தாள். அவள் இவ்வாறு விழுந்து விழுந்து சுச்ருஷை புரிவதைப் பார்த்து அக்கம் பக்கத்தவர்களுக்கெல்லாம் விநோதமாயிருந்தது. அனுபவம் நிறைந்த பெரிய பெண்டுகளெல்லாம் சிரிப்புத் தாங்கமுடியாமல், "ஸாது ஸந்நியாஸிகளிடத்தில் இவ்வளவு பக்தி உண்டாயிருக்கிறதே. இது எத்தனை நாளாகடீ ஸது?" என்றனர்.

ஸது, "காலம் வந்தால் தானாகவே பக்தியும் கிளம்பும். பாதத்தில் பணிந்ததும் சாமியார்கள் இளகிவிடுவார்கள். மினுவின் கல்யாணம் ஆகிறவரையில் காவல் புரியவேண்டும்" என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

மேளங்கள் கொட்டின. மங்கள ஓசைகளுக்கிடையே மணப்பெண்ணைச் சுமங்கலிகள் பந்தலில் கொண்டு நிறுத்தினர். யாதொரு தடங்கலுமின்றி விவாகமும் நிறைவேறியது. கல்யாணப் பிள்ளையும் பெண்ணும் பாபாஜியை நமஸ்காரம் செய்துவிட்டு உள்ளே செல்லும்போது பாபாஜி எல்லோருக்கும் ஆசி கூறிக் கல்யாணத்திற்கு வந்திருப்பவர்களைப் பார்த்து, "சபையோர்களே, இனிமேல் என் கதையைச் சொல்லிவிட்டுப் போகிறேன்: புரோகிதம் செய்வது என் தொழிலே அல்ல. என்னுடைய தொழில் எதுவென்பதை எல்லா இன்ஸ்பெக்டர்களும் கான்ஸ்டபிள்களும் நன்கு அறிவார்கள். நீங்கள் புரோகிதனுக்குத் தக்ஷிணை வழங்கும் சமயம் வந்துவிட்டது. அதுவரை நான் காத்திருக்க முடியாது. என்னை நீங்கள் அனுப்புவதற்கு முன்னால் நானே விடை பெற்றுக்கொள்கிறேன்" என்று கூறியதும் எல்லோர் முன்னும் தாடி மீசையைக் கழற்றி எறிந்துவிட்டு மூன்றே தாண்டில் கல்யாண மண்டபத்தினின்று வெளியேறி மறைந்து போனார். வாயைத் திறந்த வண்ணம் எல்லோரும் செயலற்று நின்றனர். விஜய் பாபுவினால் பேச முடியவில்லை.

கல்யாணத்திற்கு வந்தவர்களெல்லாம் சாப்பிட்டுவிட்டுத் தம் வீடுகளுக்குத் திரும்பினர். மணமகனும் மகளும் அந்தப் புரத்தில் இளைப்பாறிக்கொண்டிருந்தனர். ஸது தன் கணவனை நோக்கி, "என்ன, யோசனையில் ஆழ்ந்துவிட்டீர்களே? எப்படியோ காரியம் நடந்தேறிவிட்டது. ஸந்நியாஸி மறைந்து போனது ஒரு விஷயத்தில் சௌகரியமாய்ப் போயிற்று. தக்ஷிணை கொடுக்கவேண்டுமே, அது ஒழிந்தது. இனிமேல் கள்ளன் பின்னால் திரிவதைவிட மேலே நடக்க வேண்டிய சடங்குகளைக் கவனியுங்கள். அவனுக்கு வேவு பார்த்துச் சொல்லுகிறவளைப்பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?" என்றாள்.

"அந்த வெட்கக்கேட்டை நான் என்னவென்று சொல்வது? ஒருத்திக்குப் பதிலாக இப்போது தானாவுக்கு எதிரே இருபத்தைந்து பெண்களைப் பார்க்கலாம்; அவர்கள் கையில் பால் பழ நைவேத்தியந்தான். அவர்களுள் யாரென்று சொல்வது? கண்டுபிடிப்பது மிகவும் கடினம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இதென்ன! இத்தனை பெண்களா வருகிறார்கள், உங்கள் ஸ்டேஷன் வாசலில்? சுத்தமாக நன்றாக இல்லை. நீங்களே சாமியார் வேஷத்தில் அவர்களுக்குக் காட்சி தருகிறீர்களோ என்னவோ?"

"அதெல்லாம் இல்லை. அந்தப் பயலின் சாமர்த்தியத்தைக் கேட்டால் நீ திடுக்கிட்டுப் போவாய். ஒருநாள் கிஷன்லால் என்னிடம் வந்து, போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரே தெருவில் திடீரென ஒரு லிங்கம் முளைத்திருப்பதாக அறிவித்தான். போய்ப் பார்த்தேன். பெண்கள் கூட்டம் கூட்டமாக வந்து அந்தக் கல்லுக்குச் சந்தனம் பூசிப் பூவால் அலங்கரித்துப் பூஜை செய்துகொண்டிருந்தார்கள். சிலர் பிள்ளையிராத குறையினால், சிலர் புருஷன் தமக்கு அடங்கி இருக்கவேண்டுமென்று, சிலர் நான் ஒழிந்து போய்விடவேண்டுமென்று அவ்வாறு செய்துகொண்டிருந்தனர். அந்தக் கும்பலைக் கலைக்கப் போனாலோ பத்திரிகைகளெல்லாம், 'போய் விட்டது ஹிந்து தர்மம்! புனிதமான இடத்தில் போலீஸாரின் அட்டூழியம்!' என்று ஊளையிட ஆரம்பிக்கும்; ஹிந்து போலீஸ் சேவகர்களோ அதற்குத் தேங்காய் உடைத்துக் கற்பூரம் கொளுத்துகிறார்கள். இத

ஞல் கடைக்காரர்களுக்கு நல்ல வரும்படி. உண்டியில் போடுகிற காசெல்லாம் யாரை அடைகிறதென்பதைக் கவனிக்கலானேன். மறுநாள் பார்த்தபோது அந்த இடத்தில் உண்டியையும் காணேம்; அந்தக் கல்லேயும் காணேம்; அங்கே உட்கார்ந்திருக்கும் பைத்தியக்காரனைப் போன்ற மனிதனையும் காணேம். அவனைப்பற்றிப் பலபேர் பலவிதமாய் அதிசயமாகப் பேசிக்கொள்ளுகிருர்கள். பெரிய சங்கடம் என்னவென்ருல், ஹிந்து போலீஸ் சேவகர்கள்மீது அவர்கள் அஜாக்கிரதையாக இருந்ததற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டாலோ 'உண்ணுவிரதம்' செய்யப்போவதாகப் பயமுறுத்துகிருர்கள். போலீஸ் இலாகாவில் கிளர்ச்சி ஏற்பட்டால் நான் பெரிய இடத்திற்குத் தகுந்த சமாதானம் சொல்வதற்குள் என் பிராணனே போய்விடும். எதைச் சமாளிப்பது? இன்னும் ஓர் உபத்திரவம்: கான்ஸ்டபிள் சேதிலால் திடீரென்று ஒருநாள் தாணு வாயிலில் தொப்பென்று வந்து விழுந்தான். பங்கியடிக்கும் போலாநாத் என்ற ஸாதுவின் ஒற்றைக் கொம்புடைய ஆடு 'பாபா' எருதுபோல் உறுமிக்கொண்டே தன்னைக் கொந்தித் தள்ளிவிட்டதாகக் குய்யோ முறையோவென்று அழுதான். அவன் வேலையை ராஜிநாமா செய்துவிட்டுச் சாமியாராகப் போய்விட்டான்; அரசமரத்தடியில் உட்கார்ந்துகொண்டு தன்னுடைய கோஷ்டியுடன் கஞ்சா அடிக்கிறுன். வரவர அவன் கண்ணில் தென்படுவதே இல்லே. ஏனென்ருல் அவனுக்கு எத்தனையோ பெண்கள் உடந்தை. அவர்களை எல்லாம் அவன் வசியம் செய்துகொண்டான்."

ஸதுவுக்குச் சிரிப்பு வந்தது; "இதையெல்லாம் கேட்கும்போது எனக்கும் கொந்தளிப்பு வருகிறது" என்ருள்.

"இதோ பார்: என் நாசத்திற்கு வழி தேடாதே!"

"இல்லே, திகில்வேண்டாம். எனக்கு அத்தகைய செளபாக்கியம் இல்லேயே. ஸ்திரீயின் சமர்த்தைப் பொறுத்தது இல்வாழ்க்கை. தேசசேவையில் மட்டும் ஈடுபட்டால் அவர்களுடைய புத்தி முற்றும் பயன்படும். புருஷர்கள் எல்லாருமே முட்டாள்கள். எப்போதும் எங்களுக்குப் பேதை, அபலே என்ற பெயரைக் கொடுத்துவிடுகிருர்கள். அந்தப் பெயரின் மறைவில் நாங்கள் பதிவிரதைகளாக இருக்க முற்படுகிறேம். இதனுல் ஆண்பிள்ளேகளெல்லாம் மயங்கிப்

போகிறுர்கள். பேதைகளும் அபலைகளுமாகிய நாங்கள் இந்தப் புகழை, நாயின் கழுத்திலுள்ள சங்கிலியைப்போல் பூண்டிருக்கிறோம். நீங்களெல்லாம் எங்கள் பின்னுலேயே அதைப் பிடித்துக்கொண்டு அலைகிறீர்கள். உண்மையைச் சொல்வதில் என்ன தவறு? சமயம் வாய்த்தால் எங்களை ஏமாற்ற உங்களுக்கும் தெரியும்; உங்களுடைய கண்களில் பொடிதூவ எங்களாலும் ஆகும். எப்போதும் ஏமாந்து நிற்பதற்கு எங்கள் இனம் அவ்வளவு மட்டிகள் அல்ல. 'ஸது வைப்போல உண்டோ உலகத்திலே! (அதாவது அவ்வளவு ஸம்ஸாரத்திற்கு ஒத்தவள் ஸது) கொஞ்சங்கூட முகத்தைச் சுளித்துக்கொள்வதில்லை' என்ற நல்ல பெயரும் வாங்கியிருக் கிறேன்; என்ன குறைவு! வயிற்றிற்கு உணவிராமல் நம் தேசத்தவர் மடிகிறுர்கள்; மனிதனுக்குரிய கடமையைச் செய்கிறவனுடைய கைகளுக்குத் தொழுவிலங்கு பூட்டு கிறுர்கள். எங்களுடைய கடமை, சமையல் செய்யவேண்டி யது, வேலை செய்யவேண்டியது, புருஷன் மனம் கோணுமல் நடந்துகொள்ளும் கற்புடையவர்களாக இருக்கவேண்டியது. தவறி எங்களுக்குப் பிடித்த ஒரு காரியத்தைச் செய்துவிட் டால் குடி கெட்டுப்போய்விடுமே. படுகுழிதான் எங்களுக்கு இடம். அதினின்று மீள்வதேது? இதையெல்லாம் என் னுல் சொல்லாமல் இருக்க முடியவில்லை. எங்களை மூடியிருக் கும் மாறுவேஷத்தைக் களைந்து பார்த்தால் எங்கேயாவது களங்கத்தின் வடு தென்படாமற் போகாது. அந்த மாசுடன் மனப்புண்ணையும் காண்பீர்கள்.

"வெறும் கேளிக்கையினுல் மூண்ட ரணமல்ல அது. எத்தனையோ ஆடவரின் உயிரைப் போக்கியிருக்கிறோம். எங்களுடைய உயிரும் என்றைக்கோ அழிந்து விட்டது. நாங்கள் பிறந்தது துன்பச் சுழலில் சிக்கிக்கொள்ளவே. அந் தத் துன்பத்தை வெறும் ஸம்ஸார கஷ்டத்தின் மூலம் வெளி யிடமாட்டோம். நம் தேசத்தை மங்கச் செய்யும் குப்பை கூளங்களை அதேவிதத் துன்பத்தழலில் எரித்துவிட முயல் வோம். உலகத்தவர் எங்களை ஸதியென்று போற்றமாட் டார்கள். மானங்கெட்டவளென்றே தூஷணை செய்வார்கள். அந்தக் களங்கச் சுமையைச் சுமக்கவேண்டுமென்று உங்கள் ஸதுவின் தலையில் எழுதியிருக்கிறது. மனிதருள் சிறந்தவ ராஞல் நீங்கள் இதன் மர்மத்தை அறிந்துகொள்ள முடியும்" என்றுள்.

"உன் வாயிலிருந்து இந்தமாதிரி வார்த்தைகள் எவ்வளவோ நான் கேட்டிருக்கிறேன்; நம்முடைய ஸம்ஸார வாழ்க்கை அது போகிற வழியில்தான் போகிறது. நடுநடுவே மனத்திலுள்ளதை வெளியில் சொல்லி ஆற்றிக்கொள்ள வேண்டிய பிரயோஜனம் வருகிறது. என் கடமை அதைக் கேட்பதும் அப்புறம் கவலையின்றி ஹவானு சுருட்டைப் பிடிப்பதுந்தான்" என்றார் விஜய்பாபு.

"எது எப்படி இருந்தால் எனக்கென்ன? கடைசியில் என்னை நீங்கள் மன்னித்து விடுவீர்களென்று தெரியும். அந்த மாதிரி க்ஷமிப்பது ஓர் உண்மையான புருஷனுடைய லக்ஷணம். கிருஷ்ணபரமாத்மாவின் மார்பில் பிருகுவின் உதைபோல், உங்களுக்குள்ள அத்தகைய உயர்குணத்தின் முன்னே என் ஜபம் சாய்வதில்லை. அடங்கிப் போய்விடுகிறேன். முகஸ்துதிக்காகச் சொன்னதல்ல இது. போலீஸ் காரியங்களில் உங்களுக்கு இருக்கும் ஜாக்கிரதை வேறு எவருக்குமே இல்லை. ஆனால் என்னுடைய விஷயத்தைக் கண்மூடித்தனமாக நம்பிவிடுகிறீர்கள், அதற்கு வேண்டிய யோக்கியதை என்னிடத்தில் இராது போனாலும். அதன் பொருட்டே உங்களைப் பக்தியுடன் போற்றுகிறேன், எனக்குள்ள பக்தி, சாஸ்திர ரீதியாக உண்டாகாதபோதிலும்..."

"ஸது, இன்னும் என்ன? சொல்ல வேண்டியதெல்லாம் திருப்தியாகச் சொல்லி ஆயிற்றோ இல்லையோ? இனிமேல் உன் நாய்க்குச் சோறு போடுகிறதோ எதுவோ போய்க் கவனி. அது அதிகமாகக் கூவ ஆரம்பித்துவிட்டது; என்னைத் தூங்கவிடாதுபோல் தோன்றுகிறது. வேலையிலிருந்து ஓய்வு எடுத்துக்கொள்ளலாமா வென்றுகூட யோசிக்கிறேன்."

ஸது சிரித்தவண்ணம், "இன்ஸ்பெக்டர்தொழிலை விட்டுவிட்டு மரத்தடியில் சாமியார் வேஷம் போட்டுக்கொண்டு உட்கார்ந்துவிட்டால் வருமானமும் ஏராளமாக வந்து குவியும்; எனக்கும் அதில் பங்கு கிடைக்கும்" என்றாள்.

"எதிலும் நீ கவலையற்று இருப்பதுதான் எனக்குப் பிடிக்கவேயில்லை."

"அது என் ஸ்வபாவம். கொலையாளி, கொள்ளைக்காரன் இவர்களுக்காக நான் கவலைப்படவேண்டிய அவசியம்

என்ன? உங்கள் ஒருவரைப்பற்றிய கவனமே எப்போதும் எனக்கு. உலகத்தவர் உங்களைப் பார்த்து நகைக்கும்போது அவர்களோடு கலந்துகொள்ளாமல் வேறு என்ன செய்வது? தேசத்தவர் கண்ணீர் விடும்படி உங்கள் போலீஸ் எவ்வளவோ காரியங்களைச் செய்திருக்கிறது. இப்போதாவது நீங்கள் படும் சங்கடத்தைப் பார்த்துச் சற்றேனும் சிரித்தால் தானே ஜனங்களுடைய வேதனை அடங்கும்? இதற்குக் காரணபூதமான அநில் பாபுவை உங்களைத்தவிர எல்லோரும் கை எடுத்துக் கும்பிடுகிறார்கள். இப்படியிருக்க நான் மட்டும் கவலைப்படுவதுபோல் எப்படி நடிப்பது? சொல்லுங்கள்."

3

"ஸது, உன் காலடியில் வந்து விழுந்துவிட்டேன்; உன்னால்தான் ஆகவேண்டும்."

"என் காலடியில் என்றைக்குத்தான் நீங்கள் விழாது இருந்தீர்கள்? இதனால்தான் உங்களை எல்லாரும் பெண்டாட்டிப் பித்தன் என்று ஏளனம் செய்கிறார்கள். பெண்டாட்டிப் பித்தருள் இருவகை உண்டு. ஒரு சாரார், பெண்டாட்டி முறைத்துக்கொண்ட பிறகுதான் தம் தோல்வியை ஒப்புக்கொள்கிறார்கள். அவர்களே பேடிகள். மற்றவர் உண்மையில் ஆண்பிள்ளைகள்; தம் மனைவிமாரிடத்தில் யாதொரு சந்தேகமும் கொள்ளாமல் தோல்வியுறுகிறார்கள். அவநம்பிக்கை கொள்ளவே அவர்களுக்குத் தெரியாது. ஏனென்றால் அவர்கள் மேலான குணம் படைத்தவர்கள். பாருங்கள், என்னுடைய அதிர்ஷ்டத்தை. இஷ்டப்பட்ட போது உங்களை ஏமாற்றிவிட என்னால் முடியும்; நீங்களும் கண்ணை மூடிக்கொண்டு என்னை நம்பிவிடுவீர்கள்."

"ஸது, நீ சொல்லுகிற வார்த்தை முழுதும் இவ்வளவு வெளிப்படையாக இருக்கிறதே?"

"எல்லாம் உங்கள் மேலான குணத்தின் விளைவே, ஒரு படி ஏறிப் பேசத் தைரியம் வந்தது எனக்கு."

"இனிமேல் நடக்கவேண்டியதைப்பற்றிப் பேசு. இந்தப் பிரசங்கமெல்லாம் அப்புறம் ஆகட்டும். ஸர்க்கார் காரிய சம்பந்தமாக உன்னுடைய உதவியை நாடுகிறேன். இல்லாவிட்டால் என் மானம் நிலைக்காதுபோல் இருக்கிறது. இங்கே

எங்கேயோ சமீபத்தில்தான் ஒரு பெண், ஆஸாமிகளுக்குப் புலன் சொல்லி அவர்கள் தப்பித்துக்கொள்ளும்படி செய்கிருளென்று போலீஸாருக்கு நன்ருகத் தெரிந்துவிட்டது. அவள் சரியான சிறுக்கியாயிருக்கவேண்டும். இந்தப் பக்கத்தைச் சேர்ந்த விதவைப்பெண் எவளாகவாவது இருக்கவேண்டுமென்று கருதுகிருர்கள். எப்படியாவது அவள் இருப்பிடத்தை அறிந்து அவளை மெல்ல ஸ்நேகஞ் செய்துகொள்ள வேண்டும் நீ.''

"கடைசியில் என்னை உங்கள் வேவுத் தொழிலில் மாட்டிவிடப் பார்க்கிறீர்களா? சரி, அப்படியே ஆகட்டும். ஒரு பெண்ணைக்கொண்டு மற்ருெரு பெண்ணைப் பிடிக்கும் காரியத்தைச் செய்ய நான் உடன்படுகிறேன். இல்லாவிட்டால் புருஷர்களான உங்கள் மானம் போய்விடாதா? இரண்டே நாளில் எல்லா ரகசியமும் வெளிப்பட்டுப் போகிறது'' என்ருள் ஸது.

"நாளைக்குச் சிவராத்திரி; ஸித்தேசுவரிதலாவில் கோவில் இருக்கிறதே, தெரியுமா? அங்கே அநில் இரவைப் பாராயண ஜபாதிகளால் கழிக்க வருவானென்று சமாசாரம் வந்திருக்கிறது. பயம் கியம் என்பதே அவனுக்கு எள்ளளவும் இல்லை. அதோடு அவன் மிகவும் தார்மிகன் அல்லவா? நான் பிரஸ்தாபிக்கும் பெண்ணும் தாந்திரிக வழியில் மனைவி மாதிரி அவனோடு இருப்பாளாம்.''

"சரி. போலீஸாரெல்லாம் மறைவிலேயே இருக்க வேண்டும். நான் பிடித்துக் கொடுத்துவிடுகிறேன். ஆனால் ராத்திரி ஒரு மணிக்கு முன்னல் நீங்களெல்லாம் தலைகாட்டக்கூடாது. கலாட்டாச் செய்தீர்களானல் எல்லாம் அவலமாய்ப் போய்விடும்.''

* * *

அமாவாசை இரவு. ஒரே இருட்டு. மணி ஒன்று அடித்துவிட்டது. காலில் ஜோடு இராமலே இருவர் அந்தக் கறுக்கலில் சந்தடி செய்யாமல் இப்படியும் அப்படியுமாகத் திரிந்துகொண்டிருந்தார்கள். விஜய்பாபு கோயிற் கதவின் சமீபம் தயாராக இருந்தார். ஒருவன் கம்மின குரலில் ஜாடை செய்து அவரை அழைத்து, "அந்த அம்மாள் கோயிலுள்ளே இப்போது இருக்கிருள்; சந்தேகமே இல்லை.

அவள் பிரக்கியாதி பெற்ற யோகினியாகத்தான இருக்க வேண்டும். பகல் வேளையில் எவருடைய கண்களிலும் தென் படுவதில்லை. இரவு ஒரு மணிக்குமேல் நடராஜரும் அவளும் 'கலீர் கலீர்' என்று தாண்டவமாடுவதாகக் கேள்வி. இதை ஒரு சமயம் யாரோ ஒருவன் பார்த்துவிட்டானும்; கண் அவிந்துபோய் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாம். பாபு, கோயிலுக்குள் சென்று அந்த அம்மாள்மீது கைவைக்க எங்களுக்குத் தைரியமில்லை. எங்கள் பிள்ளை குட்டி பிழைக்க வேண்டும்; அந்தக் காரியத்தை மட்டும் செய்யமாட்டோம். தாணுவுக்குத் திரும்பிப் போய்விடுகிறோம். உங்களால் தனி யாகச் செய்ய முடிந்ததைச் செய்யுங்கள்" என்று கூறி விட்டு, மற்றப் போலீஸ் சேவகர்களுடன் அகன்றான்.

எங்கும் நிச்சப்தம். எவ்வளவு இந்தக் காலத்து மனுஷ்யராயிருந்தாலும் - அமானுஷிகமான விஷயங்களை நம்பாதவராயிருந்தாலும் - விஜய்பாபு பயப்படாமல் இருந்தார் என்று சொல்லமுடியாது. அவருடைய ஹ்ருதயம் திக் திக் கென்று அடித்துக்கொண்டது. உள்ளே பெண்குரல் ஒன்று

"த்யாயேந் நித்யம் மஹேசம் ரஜத கிரிநிபம் சாருசந்த்ராவதம்ஸம்" *

என்று பாடுவது கேட்டது.

விஜய்பாபுவுக்கு மயிர்க்கூச்செறிந்தது. என்ன செய்வதென்று சிந்தித்தார். மனோதிடத்துடன் சட்டெனக் கதவைப் பலமாக அறைந்தார். கதவு திறந்துகொண்டது. உள்ளே ஓர் அகல் விளக்கு மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண்டிருந்தது. சிவலிங்கத்தின் முன்னால் ஸது இரு கை கூப்பி உட்கார்ந்திருப்பதும், அங்கே வேறுபக்கம் சிலை வடிவம் போல் நிற்பதும் தெரிந்தன. மனைவியைப் பார்த்த பிறகே அவருக்குத் தைரியம் பிறந்தது. "ஸது, முடிவில் உன்னுடைய காரியந்தானா இவையெல்லாம்?" என்றார்.

"ஆமாம். நீங்கள் இத்தனை நாளாகத் தேடுகிற அந்தப் பெண் நானே! என்னை முற்றும் தங்களுக்கு அறிமுகப் படுத்தவே இங்கே வந்தேன். நமது தேசத்திலும் தெய்வ வசமாக எப்போதாவது இரண்டொரு மஹாபுருஷர்கள் தோன்றுகிறார்கள். அது உங்களுக்கும் தெரிந்திருக்கலாம்.

* மஹேசனை, வெள்ளிவரை நிகர்த்தானை அழகிய பிறை சூடினான் றன்னைத் தியானம் செய்கிறேன் நிதமும்.

அப்பேர்ப்பட்டவர்களை நிர்மூலமாக்குவதே முக்கியமான தொழிலாயிருக்கிறது உங்களவர்களுக்கெல்லாம். சுயநாட்டில் பிறந்த பெண்களான நாங்கள், தாய்நாட்டின் உண்மைப் புதல்வர்களை எங்கள் உயிரையும் லக்ஷ்யம் செய்யாது காப்பாற்ருமற் போனல், எங்களுடைய நாரீதர்மம் வீணே. உங்களுக்குத் தெரியாமல் பலவிதச் சூழ்ச்சிகளை இதுவரை புரிந்து வந்தேன். எவருடைய ஆதேசத்தை இதுகாறும் நான் புறக்கணிக்கவில்லையோ, அவர் இன்று இடும் கடினமான உத்தரவின்படி நான் நடந்தாகவேண்டும். எனக்குத் தெய்வம் போன்றவரை இன்று உங்கள் கையில் விட்டுவிட்டு ஒதுங்கி நிற்க வேண்டியது எனது கடமை. என்னைவிட அவரை ரக்ஷிக்கக்கூடிய ஒருவன் மேலே இருப்பதை உணர்வேன். இந்தச் சமூகம் என்னை எவ்வாறு நிந்திக்கப் போகிற தென்பதையும் அறிவேன். இந்த நிந்தனையை விருப்பத்துடன் வரவேற்கிறேன். பெண்டாட்டி இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் அவளை மீட்க அந்த மனுஷ்யர்மேல் வேறு குற்றம் சாட்டலாமென்றுமட்டும் நினைக்க வேண்டாம். அவரைக் கடைசிவரையில் பின்தொடர்ந்து அவர் அடையும் தண்டனையையே நானும் அடைவேன். நீங்கள் சுகமாயிருங்கள். உங்களுக்கு ஒரு பயமும் இல்லை. வேறு இல்லாள் உங்களுக்குக் கிடைப்பாள். என்மீது சற்றும் இரக்கம் கொள்ளாதீர்கள். என்னைவிட யார் மேலானவர்களோ அவர்களுக்காக நீங்கள் இளகியது இல்லை; அந்தக் கொடுமையைத் தாங்கிக்கொண்டு தூக்கிய சிரத்துடன் நான் விடைபெற்றுக் கொள்கிறேன். முடிந்தவரையில் உங்களுக்குப் பணிவிடைகள் செய்தேன், அன்பினுல்; முடிந்தவரையில் வஞ்சனையும் செய்தேன், கடமையின் பொருட்டு. இதை மனம் விட்டுக் கூற வேறு சமயம் எனக்கு வாய்க்காது" என்ருள்.

ஸதுவின் பேச்சைத் தடுத்து அநில் எழுந்து சொன்னுன்: "விஜய் பாபு! அகப்பட்டுக் கொள்ளவேண்டிய முடிவுடன் இங்கே நான் வந்திருக்கிறேன். இனி எனக்குக் கவலை எதுவும் இல்லை. என் காரியம் முடிந்துவிட்டது. ஸது சொல்வதைக் கேட்டுத் தாங்கள் மருளவேண்டாம். அவள் ஸாதாரணமான பெண் அல்ல. எங்கள் நாட்டில் பிறந்தவள்; அதுவும் தலைசிழான ஒரு ஸமூகத்தில். அவளை நான் நன்ருக அறிந்திருக்கிறேன். அதனுல் அவள் பதித்துரோகி என்பது அர்த்தமல்ல. அவள் களங்கமற்றவள்; உத்தமி.

நாங்கள் கொண்டிருக்கும் கடினமான விரதத்தில் காதலுக்கோ பாசத்திற்கோ இடமில்லை. அப்பெரும் பணியில் உயிரையும் உடைமையையும் தத்தம் செய்துவிடுகிறோம். எங்களுக்கும் ஸதுவுக்கும் உள்ள உறவைப்பற்றி உலகத்தவருக்கு ஒன்றுமே தெரியாது. தங்களுக்கு யாதொரு கெடுதலும் நேரிடாது. அவளை அழைத்துக்கொண்டு கோயிலின் கீழேயிருக்கும் சுரங்கவழியாக வீட்டிற்குத் திரும்புங்கள். நான் வேறு பக்கத்திலிருந்து இப்போதே வேணுமானால் போலீஸார் கையில் அகப்பட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் ஒன்று நான் உங்களுக்குக் கூறவேண்டியிருக்கிறது: அதாவது. என்னைக் கட்டிற்கு உட்படுத்த உங்களில் யாராலும் ஆகாது. ரவி டாகுரின் பாட்டு ஒன்று கவனத்திற்கு வருகிறது:

'ஆமாரே பாந்தபி தோரா, ஸேஇ பாந்தன் கி தோதேர் ஆசே?' " *

என்று வேறு தேசத்தவன் குரலில் எடுத்துப் பாடினான். கணீரென்ற அந்தச் சாரீரத்தினால் கோயிலின் சுவர் கிடுகிடுவென்று அதிர்ந்தது. வாயடைத்து நின்றார் இன்ஸ்பெக்டர் விஜய் பாபு. "இந்தப் பாட்டைக் கணக்கற்ற தடவை பாடியிருக்கிறேன். மீண்டும் பாடுவேன். அப்புறம் ஆப்கானிஸ்தானப் பாதைவழியே சென்றுகொண்டிருப்பேன், என் லக்ஷ்யத்தை நோக்கி. உங்களுக்கு மட்டும் இதைக் கூறினேன். இன்னும் பன்னிரண்டு தினங்களுக்குப் பிறகு பத்திரிகைகளில் பெரிய பெரிய எழுத்துக்களில், '**புரட்சிக்கார அநில் மறைந்துவிட்டான்**' என்று வெளியாகும். வந்தனம்; வருகிறேன்" என்றதும் அந்த இடத்தில் அவனைக் காணவில்லை.

விஜய் பாபுவின் கையிலிருந்து தட்டென்று 'டார்ச்சு' விளக்கு நழுவித் தரையில் விழுந்தது. தலையில் கையை வைத்துக்கொண்டு அந்த இடத்திலேயே உட்கார்ந்துவிட்டார். கோயிலுள் எரிந்த அகல் விளக்கும் வெகு நேரத்திற்கு முன்பே காற்று வீசியதால் அணைந்துபோய்விட்டது.

---

* என்னைச் சிறைப்படுத்தக்கூடிய தளைகூட உங்களிடம் இருக்கிறதா?

ஸ்வப்ன யாத்திரை

(உருவகக் கதை)

"வனபுல" *

சில்பியின் ஸ்வப்னம் சிதைந்தது.

அவன் வாழ்க்கையில் நீண்ட சாதனையின் விளைவான அந்தக் கற்சிலை, கங்குலும் பகலும் அவன் கனவிலும் நினைவிலும் உருக்கொண்ட ஓர் அற்புதப் பிரதிமை திடீரெனப் பிளந்துபோய்விட்டது! ஸ்தம்பித்தவனாய் இமையாக் கண்களுடன் அச்சிலையையே நோக்கினான் சில்பி. அதன் அழகே போய்விட்டது. எஞ்சி நின்றது வெறும் கல்லே! திடீரென உடைந்துவிட்டது சிலை.

ஏன் இவ்வாறு ஆகியது? யாருக்குத் தெரியும்? சில்பியின் முயற்சி, அவனுடைய ஸ்வப்னம் யாவும் எந்த மந்த்ர சக்தியால் இவ்வாறு அவலமாகினவோ, அதை யார் அறிவார்?

இரவும் பகலும் சலிப்பு இராமல் கடுமையாக உழைத்ததனால் அவனுடைய வாழ்வின் கனவு அவ்வழகிய வடிவாகச் சமைந்தது. வன்மையான ஒரு கல் அவனுடைய ஆருயிர்க் காதலியான மானஸியின் சாயலைக் கொண்டது. வேலை முடிந்ததும், சில்பி தன் கைத்திறனில் திருப்தி அடைந்ததைக் காட்ட ஒரு மூச்செறிந்து, 'தீர்ந்தது. இத்தனை நாள் சிரமம் வீணாகவில்லை' என்று நினைத்தான். ஆனால் அதனுடன்

* பலா இசாந்த் முகோபாத்யாயரின் புனைபெயர்

எல்லாம் முடிவடைந்தது. மானஸியின் மரணம்! அவளை மீண்டும் அடைவது எந்நாளோ?

சிலை பிளந்துபோய்விட்டது. மிகுதியாக இருந்ததெல்லாம் அதன் துண்டுகளே. வெறும் கற்குவியல்! சில்பி மெய்ம்மறந்து கண்கள் நிலைத்துப் போய்த் தன் கைவினைக்கு உற்ற அழிவையே நோக்கினான்.

*　　*　　*

அனுஜாவும், அபிஜித்தும் வந்து பார்க்கையில், சில்பி அதே நிலையில் இருந்தான். அனுஜா சில்பியின் ஸகோதரி; விதவை. பித்தனை தன் தம்பியைத் தாயின் அன்புடன் ஆதரித்து வந்தாள். உணவின்மேல்கூடக் கவனமிராதவன் அச்சில்பி. அவள், 'இதைத் தின்னடா' என்று சொன்ன பிறகே மயக்கம் நீங்கி, அவன் ஒரு வாய் போட்டுக்கொள்வான். அவளுடைய வற்புறுத்தலுக்கு இசைந்தே அவன் உயிர் வைத்துக்கொண்டிருந்தான்.

அபிஜித் சில்பியின் அண்டைவீட்டுக்காரன்; அனுஜாவின் காதலன். அவர்களைக் கண்டதும் சில்பி விதியே யென்று பேசத் தொடங்கினான்:—

"இதைப் பார் அக்கா! அபிஜித்-ஏன் இப்படி ஆயிற்று?"

அனுஜா எதுவும் சொல்லவில்லை. அபிஜித்மட்டும், "விடுதலை பெற்றுவிட்டாய். சில்பிக்கெல்லாம் அரசன் நீ. அரசர் அவையே உனக்குரிய இடம்" என்றான்.

சில்பி அவ்விடத்தைவிட்டு மெல்ல வெளியே அகன்றான்.

மானஸி அவனுக்கு வழி காட்டினாள். அரசவைக்கல்ல; மயானத்திற்கு!

*　　*　　*

மயானத்தில்......

அருகிலும், தொலைவிலும் சிதைகளில் ஈம ஒள்ளொளி சுடர்விட்டது. இருளைப் பிளந்துகொண்டு கண்ணோக்குச் செல்லும்வரை சிதையே......வெறும் சிதையே - நரரின், நாரியரின், நாட்டின், ஜாதியின், இதயத்தின் சிதை! சிலரது சிதையின் தீக்கொழுந்து வானத்தை அளாவியது. சிலரது

மழுங்கிக்கொண்டிருந்தது ; சிலரது அவிந்துகிடந்தது. அங்கே சுடலைப் பொடியை வாரி வீசும் காற்றின் வெறியாட்டம் !

மையிருளில் மெல்லிய சலசல வோசை நரக எல்லையில் ஓடும் வைதரணியாறு. இருள் நிலவும் அச்சுடுகாட்டில் சில்பி தன்னந்தனியே சுற்றி அலைகிறான். மானஸி இந்த இடத்தில் அகப்படுவாளா? மானஸி மரித்தாளா? அதைத் தான் சொல்ல யார் அங்கே? மானஸியும் மரிப்பாளா? மரித்தாலும் அவளைக் காண்பது அரிதாமா? குவையிருள் இதற்கு மறுமொழி தரவில்லை. மயானத்தில் சுடலைகள் எரிந்து அணைந்தன.

சட்டென இடுகாட்டை ஒரு பேய்ச்சிரிப்புத் திடுக்குறச் செய்தது. சில்பியும் மருண்டு ஒரு சுடலையை நோக்கினான். முறுவல் காட்டும் ஓர் உருவம் அவனண்டை ஏகியது. விரிசடைக் கோலம், தாடி மீசை தழைத்த பரந்த முகம், தழலெனத் திகழும் இரு கண்கள். விகடச் சிரிப்புடன் அது வந்தது. கழுத்தில் மலர்மாலை ; அம்மாலையின் ஊடே நச்சரவொன்று மழமழவென்று தன் உடலைச் சுருட்டிக்கொண்டிருந்தது. கப்பரை ஒரு கரத்தில், வேய்ங்குழல் மற்றொன்றில். முற்றும் அம்மணம். சில்பியின் அருகில் வந்ததுமே அவ்வுருவம், திசை நடுங்கும் கோரச் சிரிப்புடன் வெறிக் கூத்தாடத் தொடங்கியது. அதற்கு இணையாக ஓர் அதிசயப் பாட்டும் பாடியது.

“ தாங்கள் யாரோ? ” என்றான் வெருவிய சில்பி.

“ நானா? நன்றாகப் பார்? தெரிகிறதா யாரென்று ?”

“ இல்லை.”

“ ஹாஹாஹாஹா......” – பெரும் பயித்தியச் சிரிப்பு. கண்கள் விரியச் சில்பி அத்தொனியைக் கேட்டான்.

அது சொல்லியது :

“ நானே நீ......உன்னுடைய மற்றோர் உருவம் நான் ”

“ ஒன்றும் விளங்கவில்லை எனக்கு ” என்று சில்பி கூறினான்.

“ ஹாஹாஹாஹா ”—மீண்டும் அந்தப் பேய் நகைப்பே. சிரிப்பு ஓய்ந்ததும் திடுமென அது மீண்டும் பேசியது : “ மூன்றுக்குப் பின்னால் மற்றொன்று சேர்த்தால் வேறோர்

எண் ஆகும் ; குதிரையின் பின்னால் வேறொன்று சேர்த்தால் சேணமுமாகும் அது ! இந்த வேடிக்கை எப்படி இருக்கிறது? நண்பா, உன் பெயர் என்னவோ ? எனக்குத் தெரிந்தாலும், உன் வாயால் நீ அதைச் சொல்ல நான் கேட்கவேண்டும்—”

“என் பெயர் சித்ரகாரு. நான் ஒரு சில்பி —”

“அதற்குமேல் வேண்டாம் ; சில்பியா நீ ? நான் உன்னை ‘அல்பம்’ என்றால் பொய்யாகுமா ? ஹா ஹா ஹா......”

திக்பிரமித்துச் சில்பி அவ்வுருவையே நோக்கினான். மீண்டும் அது கூத்தைத் தொடங்கியது. கப்பரையில் குழலைத் தட்டித்தாளம்போட்டு ஆடியது சுழன்று சுழன்று. சிரித்தது இடி இடியென்று. அதன் கழுத்தில் தொங்கிய விஷநாகத்தின் விழிகளில் பூவின் மென்மை பூத்தது. மாலையிலுள்ள ஒவ்வொரு மலரும் தீயின் செம்பொறியைத் தெறித்தது.

திடீரென அதன் களியாட்டமும் வெறிப்பாட்டும் அடங்கின. சில்பியை விளித்து, “ ‘புட்பால்’ விளையாடிப் பழக்கம் உண்டா உனக்கு, வானவெளியில்? சூரியன் சந்திரன் என்னும் ‘புட்பால்’? சரி. நீ பெரியவனான பிறகு விளையாடுவாய்” என்றது.

அளவு கடந்த இரக்கத்துடன் அவ்வுருவம் சில்பியின் உடம்பைத் தடவிக்கொடுத்தது. நெருப்புக் கட்டிபோன்ற அதன் கண்களில் அன்பு கனிந்துகொண்டிருந்தது.

‘நீங்கள் யாரோ தெரியவில்லையே? பெயரைச் சொல்லுங்கள் ?’ என்று சில்பி வினவினான்.

“என் பெயர் யதேச்சை.”

“யதேச்சையா ?”

“ஆமாம்......எல்லாரோடும் எனக்குப் பேச்சுவார்த்தை உண்டு. உன்னோடுந்தான் - எத்தனையோ பிறப்புக்களாக. உன் மானஸியின் கண்களில்தான் இத்தனை நாட்கள் நான் புகுந்து கொண்டிருந்தேன். உளியைக்கொண்டு என்னைத் தான் காயப்படுத்தினாய் நித்தியம் - இதோ பார். ஹா ஹா ஹா......”

சில்பி பேசும் சக்தியை இழந்தான். கவனித்தான். உண்மையில் அதன் உடம்பெல்லாம் வெட்டுக் காயம் !

இது யார் ? சில்பியின் இன்னுயிரான மானஸியா ?

"என் மானஸியின் கண்களிலா மறைந்திருந்தீர்கள், இத்தனை நாளாக?"

இதற்குப் பதில் மறுபடியும் அந்த உன்மத்த நடனமும் வெறிப்பாட்டுமே!

அதன் ஆர்ப்பாட்டம் நின்றதும் சில்பி, "நான் சொல்வதைக் கேளுங்கள். என்னுடைய பிரிய மானஸி உமக்கு அறிமுகமா?" என்றான்.

அந்த உன்மத்தம் பதில் சொல்லியது: "உன்னை நான் அறிவேன். நீ இங்கே எதற்காக வந்திருக்கிறாய் சொல்லு. எனக்குத் தெரிந்திருந்தாலும், நீயே சொல்லி நான் கேட்க வேண்டும். ஹாஹாஹா —"

"மானஸியின் நினைவே என்னை இங்கே இழுத்து வந்தது."

"ஹாஹாஹா - மானஸியின் நினைவா? அம்பட்டச்சி சியாமாவின் பேத்தி செத்துப் போய்விட்டாளே; ராமமயனின் தம்பி காலமாய்விட்டானே; அவர்களுடைய சுடலை அதோ இன்னும் எரிந்து கொண்டிருக்கிறது......அணையவில்லை. அவர்களுடைய நினைவு உனக்கு வருத்தம் தரவில்லையா? மானஸியைப் பற்றித்தான் உன் கவனம் உன் துயரம் யாவுமோ, ஏண்டாப்பா?"

"அவள்மேல் நான் ஆசைகொண்டிருந்தேன்."

சில்பி இதைக்கூறியதும் பதிலுக்கு மறுபடியும் பாட்டை எடுத்துவிட்டது அவ்வுருவம். பாட்டுத் திடீரென நின்றது. "நான் இதைவிட்டு விலகவேண்டிய வேளை நெருங்கி விட்டது. என்னுடைய பாட்டின் பொருள் போகப்போக உனக்குப் புரியும்" என்றது அவ்வுருவம்.

"இந்த மாதிரி போகக்கூடாது...நீங்கள் போகக் கூடாது...என்னுடைய மானஸி எங்கே இருக்கிறாள்? அதைச் சொல்லிவிட்டுப் போங்கள். உங்களுக்கு அவள்தான் தெரியுமே? எங்கே இருக்கிறாள்?" என்றான் சில்பி.

"அவளை நீதான் கொன்றுவிட்டாயே! இரவும் பகலும் அவளை வதைத்து வதைத்துத் தீர்த்துவிட்டாய். அதனால்தான் அவள் இறந்துபோனாள்" என்றது உருவம்.

"அவளை இனி அடையவே முடியாதா நான்?"

"முடியாமற் போவானேன்? ஆனந்தலோகத்திற்குப் போ; சந்திப்பாய்."

"அது எங்கேயோ?"

"கண்டுபிடி." அப்புறம் என்னவோ யோசித்துவிட்டு, "சரி, இந்த மாலையைத் தருகிறேன்; கழுத்தில் அணிந்து கொள். ஆனந்தலோகம் உன் கண்களுக்குப் புலப்படும். இந்த மாலை வெகு நேரம் நிற்காது - சிறிது நேரத்திற்கெல்லாம் பக்ஷியாக மாறிவிடும். அப்புறம் காற்று—" என்றது அவ்வுருவம்.

மாலையைச் சில்பியின் கழுத்தில் போட்டுவிட்டு, கொம் மாளம் கொட்டிக்கொண்டே அவ்வதிசயத் தோற்றம் மயானத்தின் கருமையோடு கலந்துவிட்டது.

மயான தேவதை கொடுத்த மாலை கழுத்தில் ஏறிய வுடன் சில்பி ஆனந்தலோகத்தைப்பற்றி விந்தைக் கனவுகள் கண்டு தன்மயமானான்.

அதிசய உலகு அது!

"அந்த லோகத்தை அடையவேண்டுமானல் ஞான ராஜ்யத்தின் வழியாகப் போகமுடியும்" என்றது ஒரு குரல்.

வாரிப்போட்டது சில்பிக்கு. கண்டத்தில் இருந்த மாலை பக்ஷியாக மாறியது. பறந்துகொண்டே அது சொல்லிற்று, "வா என்னோடு" என்று.

* * *

அனுஜா போகிருள்....

தன் தம்பியைத் தேடிக்கொண்டு போகிருள். அந்தப் பித்தன் போன இடம் எங்கே? ஆதரவற்ற தம்பி சென்ற திக்கு—? சாப்பிடென்ருல்தான் சாப்பிடும், படுக்கப் பஞ்சணை போடாதுபோனுல் புழுதியில் துயில் கொள்ளும் குழந்தை போன்ற தன் ஒரே தம்பி! பிள்ளையை இழந்து சோகமுறும் தாயைப்போல் அனுஜா நெடு வழியின் கஷ்டத்தையும் மறந்தாள்.

அவளுக்குத் துணை அபிஜித். அபிஜித் சில்பியைத் தேடி அலையவில்லை - அனுஜாவைத்தான்! அனுஜா அவனுடன் வழி நடக்கும் வாழ்க்கைத் துணைவி. இருந்தும் அவனால் அனுஜாவைக் கண்டுகொள்ள முடியவில்லை!

பகல் போய் இரவு கழிந்ததும் மீண்டும் பகல். மீண்டும் இரவு. பூத்தன மலர்கள். உதிர்ந்தன சருகுகள். சந்திர சூரியர்கள் முளைத்துமறைந்தனர். வழியோ மாளாது நீண்டுகொண்டிருந்தது. இருவர் ஜோடியாகச் சென்றுகொண்டிருந்தனர்.

ஞானராஜ்யமோ வெகு தூரம்!

* * *

சில்பி ஞானராஜ்யத்தை வந்தடைந்தான். எல்லை இறந்த நாடு. கண்ணுக்கு எட்டியவரை அதன் திசை முடிவே புலப்படவில்லை. அந்நாட்டில், விண்ணைக் குடையும் மலைத் தொடர்கள் வானோடு உறவு கொண்டாடின. பேய்த்தேர் ஓடும் மணல் வெளிகள். திரை எழும் பெருங்கடல்கள். தாமரை அலரும் பொய்கைகள். அந்நாட்டில் முட்கள் நிரம்பிய இடமும் உண்டு. மலர்கள் சிந்திய இடமும் உண்டு. விடரகமும் காணலாம், பசும் புற்றரைகளையும் காணலாம். அங்கே எத்திசையும் சந்தடியே இல்லை. ஜனங்களின் நெருக்கமும் இல்லை.

ஒரு மரத்தடியில் சில்பி சிக்குப் படிந்த நூல் கற்றையிலிருந்து சிக்கலைப் பிரித்துக்கொண்டிருந்தான். ஆனால் கொஞ்சங்கூடச் சிக்குப் பிரியவில்லை. விரல்கள் நூலில் பாய்ந்து பாய்ந்து அவசமுற்றன. அவன்மூளை குழம்பிவிட்டது. இருந்தும் சளைக்கவில்லை அவன். சூரிய கிரணங்கள் அவனைச் சுற்றிலும் ஓடி விளையாடின. அவை சில்பியின் மனத்தைக் கவரவில்லை. சில்பி சிக்கறுப்பதிலேயே ஆழ்ந்திருந்தான். தொலைவில் சித்தாந்தசேகரர் காட்சி அளித்தார். அவர் ஒரு பெரிய அறிவாளி. தம் மனத்துள் இருந்த சிக்கை விடுவித்துக்கொண்டே வந்தார் அவர். உடம்பிலும் கையிலும், தலையிலும் பல் நிற நூல் வலைகள். நூல்வலையிலிருந்து சிக்கு எடுத்துக்கொண்டே சில்பியை அணுகினார். சில்பி வணக்கத்துடன் எழுந்து நின்றதும் அவர் புன்சிரிப்புடன் விசாரித்தார் :—

“ தாங்கள் யார்? இந்நாட்டிற்கு வந்து எத்தனை நாளாகின்றன? இதற்குமுன் தங்களை இங்கே பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை.”

" ஆனந்தலோகத்தைத் தேடப் புறப்பட்டேன். அந்த லோகத்தை அடைவதற்கு ஞானராஜ்யத்தின் வழியாகத் தான் செல்லவேண்டுமென்று சொன்னார்கள். இங்கே உத்தீபனுசாரியர் எனக்கு உபதேசம் செய்தார். " குவியல் குவியலாகக் கிடக்கும் இந்தச் சிக்கலான நூல்களை - (வாழ்க்கையின் பிதிர்கள்) எவனொருவன் பிரித்துவிடுகிறானோ அவனே ஆனந்தலோகத்தை அடையக்கடவன் " என்றார். அதனால் அவருடைய உபதேசப்படி, நான் இந்தச் சிக்கலை விடுவிக்க முனைந்துள்ளேன். எத்தனை நாள் ஆகும் இதைச் செய்துமுடிக்க? தங்களால் கூறமுடியுமா ?" என்றான் சில்பி.

சித்தாந்தசேகரரின் முகத்தில் சிரிப்பு உலவியது.

" அதற்கு ஒரு கால அளவுகூட உண்டா என்ன? அது வேலை செய்யும் ஆளின் ஆற்றலைப் பொருத்தது. எவ்வளவோ வருஷங்கள் ஆயின; எனக்கே இன்னும் குறையாய் நிற்கிறது. திகிலடைந்து போகவேண்டாம். அந்த வெள்ளை நூலைச் சிக்குப் பிரிப்பதற்குள் சோர்ந்துபோய் விட்டாயே! இன்னும் சிவப்பு, கறுப்பு, நீலம், பச்சை, மஞ்சள் பல வர்ணங்களில் சிக்கலான ஸமஸ்யைகள் இருக்கின்றனவே ; ஒவ்வொன்றின் ரகஸியத்தையும் வெளிப்படுத்திய பிறகல்லவோ ஆனந்தலோகம் தென்படும் !"

இதைக் கூறிவிட்டு, அவர் மெல்ல அகன்றார். தூரத்திலும், சமீபத்திலும் சித்தாந்தசேகரரைப்போல் பலபேர் தென்பட்டனர். எல்லோரும் நூலிலிருந்து சிக்கை விடுவிக்கத் திணறிக்கொண்டிருந்தனர் !

* * *

வேலைமேல் மனம் ஓடவில்லை சில்பிக்கு. அவன் பொறுமை எல்லையை மீறியது. கையும் காலும் அசதியினால் விழுந்து விட்டன கண்களைத் தூக்கம் அழுத்தியது வெள்ளை நூலில் படிந்த சிக்குப் பின்னும் சிக்கலாகிவிட்டது. சில்பி தனக்குள்ளேயே, "என்னால் இனிமேல் முடியாது. இதற்கு ஆரம்பத்தையும் காணோம், முடிவையும் காணோமே. எவ்வளவோ சிரமப்பட்டு நுனி அகப்பட்டது ; கொஞ்ச நாழிகைக்கெல்லாம் அது மறைந்துவிட்டதே! நான் சிக்குப் பிரித்த நூலில் திரும்பவும் சிக்கு விழுகிறதே ! இதற்கு என்ன செய்வது ? ஆனந்தலோகத்தைப் பற்றிச் செய்தி ஒன்றுமே தெரிய

வில்லையே! ஸந்தேகத்திற்கு மேல் ஸந்தேகம் முளைக்கிறது. இந்தச் சிக்கலில் ஏதாவது—" என்று சொல்லும்போது, திடீரென சில்பியின் சிந்தனைப்போக்குத் தடையுற்றது. எங்கோ இன்குரலொன்று,

'பறந்து சென்றது என் மனம் வண்டின் அஞ்சிறை படைத்து'

என்று இசைப்பது கேட்டது.

லக்ஷணமான ஓர் இளம்பாவை. பின்புறம் பச்சை மேலாடை பறக்க, உடலெங்கும் வழிந்தோடும் கூந்தல் அலையுடன் கைகொட்டிய வண்ணம் பாடிக்கொண்டே அவ்வழியே வந்தாள்.

சில்பி துரிதமாக நூல் கற்றையை எறிந்துவிட்டு எழுந்து நின்றான். "நீ யார்?" என்று அவளைக் கேட்டான்.

அவ்விளம் பாவை சில்பியைக் கடைக்கண்ணால் நோக்கி விட்டுச் சற்றே முறுவல் செய்தாள். அவன் கேள்விக்கு விடை அளிக்கவில்லை. பாணி கொட்டியவண்ணம் அவயவங்களைப் பல வளைவுகளில் குலுக்கிப் பாடிக்கொண்டே சென்றாள். பாட்டை முடித்த பிறகுதான் அப்பாவை சில்பியை நோக்கி, "பாடும்போது ஒருவருடன் பேசுவது தவறு. இது உமக்குத் தெரியாதா? உத்தீபனாசாரியர் உமக்கு இதைக் கற்றுக் கொடுக்கவில்லை போலும்!" என்றாள்.

சில்பி வியப்புற்று அவளையே பார்த்தான்.

கிறுகிறுவென்று ஒரு தடவை சுழன்றுவிட்டு, "என் பெயர் விளையாட்டு" என்றாள்.

"மன்னிக்கவேண்டும். நீ இப்போது பாடின பாட்டின் அர்த்தம் என்னவோ?" என்று சில்பி கேட்டான்.

"இதன் அர்த்தம் புரியாது தங்களுக்கு. அர்த்தத்தை அறிய நான் மூளையை உடைத்துக்கொள்ளும் வழக்கமில்லை. பாட்டின் அர்த்தம் எங்கேயாவது போகட்டும். தாங்கள் இங்கே உட்கார்ந்திருப்பதன் அர்த்தம் என்ன?"

"நான் ஆனந்தலோகத்துக்குப் போகும் வழியைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன். இந்தச் சிக்கலைப் போக்கி விட்டால்—?"

"ஹோ" என்று அவ்விளமைக்காரி நகைத்தாள். "சிக்கைப் பின்னும் சிக்கலாக்கிவிட்டீர்கள், அதை விடுவிக்கப் போய். காதலின் சிக்கலை ஒழிப்பதற்கு நித்தியம் ஒருத்தியை மணந்துகொள்வதுபோலத்தான்" என்ருள்.

சில்பிக்கு என்ன சொல்வதென்று புத்தியில் படவில்லை.

"இந்த நூலிலிருந்து சிக்கை எடுத்துவிட்டால் ஆனந்த லோகம் கிட்டுமென் உங்களுக்கு எந்த மேதாவி சொன்னுர்?"

"உத்தீபஞசாரியர்!"

"அதுவா, அதற்குச் சித்தப்பிரமை யாயிற்றே. அதன் பேச்சைக் கேட்டா ஏமாந்து போனீர், ஐயா! இது பைத்தியக்காரர்கள் வசிக்கும் இடம். பாவம், உங்களுக்கு இன்னும் அந்த நிலை வரவில்லைபோல் தோன்றுகிறது. சீக்கிரம் இந்த இடத்தைவிட்டு ஓட்டம் பிடியுங்கள்" என்ருள்.

"எங்கே போவது?"

"கண் எங்கே போகிறதோ...?"

இதைக் கூறிவிட்டு அவ்விளம்பாவை செல்ல முற்படுகையில் சில்பி அவளை மறித்து, "சற்று நில்லுங்கள். நீ எங்கே வசிக்கிருய்?" என்ருன்.

கோலாஹலச் சிறப்புடன் அவள், "அடையாளம் தெரியவில்லை. நான் உங்கள் மனத்துள்தான் குடிகொண்டிருக்கிறேன்?" என்ருள்.

"ஏது, இதற்குமுன் உன்னைப் பார்க்கவில்லையே என் உள்ளத்தில்?"

"பேஷ்......நன்ருகச் சொன்னீர். அன்று மயானத்தில் நடுநிசியில் பார்த்துக்கொண்டோமே......இதற்குள் மறந்துவிட்டீர்களா?" — பாவை உருண்டு உருண்டு நகைத்தாள்.

சில்பிக்கு வாயடைத்துவிட்டது.

"கடைசியில், இந்த இடத்தைவிட்டு ஓடிவிடும்படி சொல்லுகிருயே, அப்போது நீ என் கழுத்தில் இட்ட மாலைதானே பறவையாக மாறி இந்த நாட்டிற்கு வழி காட்டியது?" என்ருன் சில்பி.

"நானும், என் மாலையும் ஒன்று?"

இதை உரைத்ததும் அந்த மாயப்பாவை சட்டென மறைந்துபோனாள்.

* * *

சில்பி போய்க்கொண்டிருந்தான். நூலின் சுமையைப் பின்னாலேயே விட்டுச் சென்றான். அவன் மனம் எங்கோ அலைந்துகொண்டிருந்தது. அது எந்த இடமோ யாருக்குத் தெரியும்? ஆனால் இந்த ராஜ்யத்தில் அவன் அரைக் கணமும் தங்கமாட்டான்.

அவனுக்குத்தாகம் அதிகமாக எடுத்தது. தண்ணீர் எங்கே அகப்படும்? தண்ணீர்.........அதுதான் முக்கியம். பாலை வெளியில், கானல் நீரைக் கண்டதும் அதை நோக்கி ஆவலுடன் ஓடினான் சில்பி.

* * *

அனுஜாவும் அபிஜித்தும்.

நாட்கள் எத்தனையோ, மாதங்கள் எத்தனையோ, வருஷங்கள் எத்தனையோ அவர்கள் வழி நடந்துசென்றனர். இதோ ஞானராஜ்யம்! எங்கே, யாருமே தென்படவில்லையே? அனுஜா இன்னும் தன் தம்பியைத் தேடிப்பிடிக்கவில்லை. அபிஜித் இன்றளவும் அனுஜாவைத் தொடர்ந்துகொண்டு தான் இருக்கிறான். வழி நடப்பதற்கோ முடிவில்லை.

இன்னும் எவ்வளவு தூரம்—!

திடீரென அபிஜித்தின் மனம் பூரிப்பை அடைந்தது. தாகம், ஜலம் வேண்டுமென்று அனுஜா வாயைத் திறந்து கேட்டாள் அவனை.

ஆனால் ஜலம்—?

அதோ அருகிலேயே ஒரு கூவல் இருக்கிறதே, நாற்புறமும் பூஞ்செடிகள் சூழ. நீரை மொள்ளுவதற்குத்தான் யாதோர் உபாயமும் இல்லை. அபிஜித் அனுஜாவைக் கூவலின் கரையில் உட்கார வைத்துவிட்டு, "குடம் ஏதாவது தேடி எடுத்துக் கொண்டு வருகிறேன். அதுவரை நீ இங்கேயே இரு" என்ற

தும் புறப்பட்டான். அனுஜா உட்கார்ந்திருந்தாள். அபிஜித் போய்விட்டான். அவன் திரும்பவே இல்லை. எங்கே போயிருப்பான்? தாகத்தினால் தொண்டை வறண்டுவிட்டது அனுஜாவுக்கு. திடீரென அவள், "ஐயோ...பொறுக்க முடியவில்லையே தாகம். எனக்கு யாராவது குடிக்க ஜலம் தரமாட்டீர்களா இங்கே?" என்று கூவினாள். கேணியின் உள்ளிருந்து சந்தனம் பூசிய கோலத்துடன் பூமாலை உடலில் இலங்க ஒருவர் வெளியே வந்தார். அனுஜாவைப் பார்த்து, "தெள்ளிய நீர் வேண்டுமானால் வா என்னுடன்" என்றார்.

"எவ்வளவு தூரம்?"

"இந்தக் கேணியினுள்தான். அஞ்சவேண்டாம். வா என்னுடன்."

"என் துணைவர் இன்னும் திரும்பவில்லையே, எப்படி வருவேன்?"

"ஆனால் இங்கேயே காத்துக்கொண்டிரு. நான் போகிறேன்."

"தயை கூர்ந்து கொஞ்சம் ஜலம் கொண்டு தருவீர்களா?"

"இந்த ஜலத்தை எடுத்து வரவே கூடாது."

"சரி வருகிறேன்."

அனுஜா அவரைத் தொடர்ந்தாள்.

* * *

அபிஜித் திரும்பிவந்தான். அனுஜாவைக் காணவில்லை. சற்றுத் தொலைவில் சித்தாந்தசேகரர் சிக்கு அறுத்துக் கொண்டிருந்தார். அபிஜித் அவரை அண்டி, "இங்கே ஒரு பெண்மணி இருந்தாள். அவள் எங்கே சென்றாள் தெரியுமா உமக்கு?" என்றான்.

'தெரியுமே; அவளை இங்கே கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமல்ல. தர்மக்கேணியுள் நுழைந்துவிட்டாள்."

"தர்மக்கேணியா? அப்படி ஒன்று இருக்கிறதா என்ன?"

"அந்தக் கேணி இதோ உம் எதிரேயே இருக்கிறது. எதையும் நம்பிவிடும் கபடற்ற ஆத்மா யாராவது, பொறுக்க முடியாத தாகத்தினுல் ஜலத்துக்காகக் கூவும்போது, கேணியுள் வாழும் ஒன்று வெளியே வந்து நல்ல ஜலம் தருவதாக ஆசைகாட்டி உள்ளே அழைத்துக்கொள்ளும். ஒரு பெண் மணியை இப்போதுதான் அது உள்ளே அழைத்துச் சென்றதைப் பார்த்தேன்."

அபிஜித் : நீர் பார்த்துக்கொண்டுதானே இருந்தீர்; அதை ஏன் தடுக்கவில்லை?

சித்தாந்தசேகரர் : தடுத்து என்ன லாபம்? அப்படிச் செய்தால் விபரீதமே விளையும். என்னுடைய நண்பர் உறவினர் எத்தனையோ பேர் அந்தத் தர்மக்கேணியில் விழுந்துவிட்டதைப் பார்த்திருக்கிறேன். இந்த ஞானராஜ்யத்தில் சிலர் அந்தக் கேணியுள்ளேதான் கிடக்கின்றனர். அந்த ஜலத்தின் மேல் மோகம் பிறந்தவர்களுக்கு அப்புறம் கதிமோக்ஷமே இல்லை. மீண்டும் ஞானராஜ்யத்திற்கு வர அவர்களால் வெளியேறவே முடியாது.

அ: நீர்மட்டும் அந்தக் கேணியுள் விழாமல் இருப்பதேன்?

சி: நான் நாஸ்திகன் அல்லவா?

அ: என்ருல் அதனுள் செல்லமுடியுமா?

சி: வேட்கை மூண்டு தண்ணீரை வேண்டிக் கூவுங்கள். நீர் தகுதியுடையவராயிருந்தால் அவர்களே வந்து உம்மை மரியாதையுடன் உள்ளே அழைத்துச்செல்வார்கள்.

அ: நானே அதனுள் குதித்துவிட்டாலோ?

சி: (சிரித்துவிட்டு) அது முடியாத காரியம். அதனுள் சிறிது தொலைவு சென்றதும் தாழிட்ட கதவொன்று தென்படும். எதையும் நம்பாத நாஸ்திகனுக்கு அந்தக் கதவு என்றென்றும் அடைபட்டே கிடக்கும்.

இதை உரைத்ததும் சித்தாந்தசேகரர் அகன்ருர்.

* * *

அபிஜித் தன்னுல் முடிந்தவரை முயன்றுபார்த்தான். உரத்த தொனியில் வேட்கையைத் தணித்துக்கொள்ள,

"தண்ணீர்" என்று கத்தினன். கேணியிலிருந்து யாருமே வரவில்லை.

கேணியுள் குதித்தான். அவனுல் உள்ளே போகவும் முடியவில்லை, வெளியே வரவும் இயலவில்லை. எவ்வளவோ சிரமப்பட்டுப் பார்த்தான். ஆனுல் அந்தத் தர்மக்கேணியின் கவாடம் அவன் வரைக்கும் சார்த்தப்பட்டே இருந்தது.

அனுஜா திரும்பிவரமாட்டாளா? ஏனோ இப்படி?

* * *

பிரமைபிடித்த சில்பி சென்றுகொண்டிருந்தான்.

நாளுதிசையும் நிராசையென்னும் பாலை. கானல்நீர் ஒரு மாயப் பொய்கையாகத் தோற்றியது. வேட்கை மீறிய சில்பி அதை நோக்கியே சென்ருன். தாகமோ அடங்கவில்லை. உடலின் வன்மையோ குன்றிவிட்டது!

சுடுமணலின் எரிக்கும் உணர்ச்சி. சூருவளியின் உன் மத்த தாண்டவம். கானல் நீரின் மாயாஜாலம். சில்பியின் சிகை விரிகோலமாயிருந்தது. நடை தடுமாறியது. கண்களில் தீவ்ர ஜ்வாலை. இதயத்துள் தணியாத வேட்கை. நாக்கு உலர்ந்துபோய்விட்டது. தீனக்குரலில் அலறல்!

"எங்கே?......எங்கே? எங்கே......?"

அதோ இன்னும் சிறிது தூரத்தில் கண்ணுக்கினிய பசுமையான கானம். அருவியின் மெல்லொலி கேட்பது போன்ற பிரமை. கானல்நீரைப் பிடிக்க ஓடி ஓடித் துவண்டு விழுந்தான் சில்பி. நினைவற்ற அவன் உடல் பொரியும் மண லில் கிடந்தது.

தூரமுமாய் ஸமீபமுமாய்க் கானல்நீர் தோற்றுவிக்கும் கனவின் காட்சிகள்! மெல்லக் மெல்லக் கானல்நீர் அழகிய பெண் உருவம் கொண்டது.

அவள் சில்பியிடம் மெல்ல நகர்ந்துவந்தாள்.

"எழுந்திரு, நான் வந்துவிட்டேன்" என்ருள்.

* * *

தர்மக்கேணியின் உட்புறம். நாற்புறமும் அடைபட்டுக் கிடந்தது. ஒளி நுழையச் சிறிதும் வழி இல்லை. தூபப்புகை

கப்பியிருந்தது. அங்கு வேள்வித்தீயில் கொழுந்து எழுந்தது. ராசிராசியாக வாடி அழுகும் மலர்களின் சவதேகங்கள். இவ்விடத்திய தார்மிகர்கள் யாவரும் குருடர்கள். ஒருவர் கையை யொருவர் பிடித்துக்கொண்டு திரிபவர்கள். விதவித மான வடிவினர். உச்சிக் குடுமியுடையவர்; தாடி மீசை உள்ளவர்; ஜடையின் கோலம் பூண்டவர்; வழுக்கைத் தலையினர்; வெண்ணிறத் துகிலினர்; அம்மணச் சாமிகள்; துவராடையினர்.

சிங்கமூரும் தேவியின் கழலடியில் அனுஜா குப்புற விழுந்து கிடந்தாள். தூய்மையின் பிரதிபிம்பமான ஒரு நாரி பக்கத்தில் தெய்விகப் பாட்டு இசைத்தாள். அவள் பெயர்தான் **நம்பிக்கை.** அவ்வழகிய பாட்டின் ஸ்வரமே **தர்மலோக**த்தவரின் தாரக மந்திரம். அந்த ஒரு மந்திரத்தைப் பல்வேறு மொழிகளில் பாடினர் அனைவரும். இருளில் நட மாடும் குருடர்களின் பிரார்த்தனை! அனுஜாவும் குருடாகிவிட் டாள். "என் தம்பியைத் திருப்பிக்கொடு" என்று அவளும் பிரார்த்தித்தாள். ஆனால் அவளுடைய தாகம் இன்னும் அடங்கவில்லை. அபிஜித் வருவானென்று காத்திருந்தாள்.

* * *

பரந்த பாலைவெளியில் சிறு புள்ளியாக அபிஜித் அலைந்து கொண்டிருந்தான். அனுஜாவைப்போல் அல்ல அவன். எதிலும் நம்பிக்கை இல்லை அவனுக்கு. தர்மராஜ்யத்தில் அவனுக்கு இடம் இல்லை. சில்பியைப்போல் அவன் கனவு காண்பவனும் அல்ல. அவன் எதிரே கானல்நீர் எந்த உருவத் திலும் தோன்றவில்லை, சாதாரண மானிடன் அவன். சில்பி அவனுடைய நண்பன். சில்பியின் பைத்தியக்காரத் தனமே அபிஜித்தைக் கவர்ந்துவிட்டது. அனுஜாவை வாழ்க் கைத் துணைவியாகக் கொள்ள விரும்பினான். ஆனால் அவள் அவனுக்குக் கிடைக்கவில்லை. யாருமே அவனுக்கு வாழ்க் கைப்படவில்லை!

நிராசையெனும் பாலை வெய்துயிர்த்தது. என்ன செய்வ தென்று விழித்தான் அபிஜித். வாழ்வே கசத்துப்போகும் சமயம் விசித்திர சாமான்கள் விற்கும் ஒருவனை வழியில் சந்தித்தான். அவனைக் கண்டதும் அபிஜித்திற்கு உயிர்மேல் ஆசை பிறந்தது.

"யாரப்பா நீ?"

"நான் பலசரக்கு விற்பவன்."

அ: விற்பனைசெய்பவனா? இந்தப் பாலை வெளியில கூடவா விற்பனை செய்கிறாய்?

சாமான் விற்பவனின் பெயர் **விசனம்.**

வி: ஐயா, இந்த இடத்தில்தான் ரொம்ப விலை ஆகிறது.

அ: என்னென்ன சாமான்கள் வைத்துக்கொண் டிருக்கிறாய்?

வி: எந்தவிதம் வேண்டுமோ அந்த விதமெல்லாம். உங்களுக்கு எது தேவை?

அ: இரண்டொரு சாமானின் பெயரைச் சொல்லு?

வி: சீட்டு, ரங்கு, பாட்டு, கூத்து, சாராயம்.

அ: சாராயமா?

வி: இருக்கிறது.

அ: அதை வாங்கக காசு இல்லையே கையில்?

வி: என்னிடத்தில் வருபவர்களெல்லாம் முன்பணம் எப்பொழுதோ கொடுத்திருக்கிறார்கள். உரிய இடத்தில் தகுந்த சமயம் பார்த்துக் காசு எங்களுக்குக் கிடைத்துவிடும்.

அ: (ஆவலாக) ஆனால் கொடு சாராயத்தை.

* * *

வெகுகாலத்திற்குப் பிறகு அனுஜாவும் அபிஜித்தும் சந்திக்க நேரிட்டது.

அனுஜா குருடி. அபிஜித் குடியன்.

ஒருவரை யொருவர் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

* * *

ஆனந்தலோகம். திசை யெங்கும் ஒளியின் நடனம். அங்கே மலர்களுக்கு எண்ணிக்கையே இல்லை. சிரிப்பும்

களிப்புமே எங்கும். இசையின்வெள்ளம் பாய்ந்தோடியது. இன்பத்திற்கு ஓர் எல்லே இல்லே. காதலர் கூடி மகிழும் பெருஞ்சந்தை. அழியாத இளமையை அங்கே காணலாம்.

தனிமையான சம்பகச் செடியின் நிழலில், சில்பி கானல் நீரென்னும் அரம்பையின் செவிகளில், "உன் அழகைக் காண இரு கண்கள் போதாவே" என்று மெல்ல உச்சரித்தான்.

* * *

சில்பி செதுக்கிய அக்கற்சிலே...?

அது உடைந்தது உடைந்ததே! அதன் துண்டுகள் சிதறிக் கிடந்தன.

பிளந்துபோன அதன் அவயவங்களேப் பாசி மூடிக் கொண்டது.



சிறைப் பறவைகள்

ஸாதனு கர்

ஒரு சித்திரை மாதத்துப் பகல். அரசியல் கைதிகள் நிரம்பிய சிறைக்கூடம். கைதிகள் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். அவர்களுடைய உணவு வெறும் களியே! சிறை மதிலுக்குள் ஒரு பெரிய அரச மரம். காற்றில் அதன் இலைகள் சல சல வென்று ஒலித்தன. மரத்தில் பக்ஷிகளின் கூட்டம். கிளைக்குக் கிளை தாவி ஒன்றையொன்று கூவி அழைத்தன. நடுநடுவே சுழல் காற்று வீசும்போது பலபல வென்று கீழே உதிர்ந்தன பழுத்த இலைகளெல்லாம். அணிற்பிள்ளைகள் குறுக்கும் நெடுக்கும் சுறுசுறுப்பாக ஓடித் திரிந்தன. சிறைக்கூடத்தில் கைதிகள் ஒவ்வொருவர் எதிரேயும் பித்தளைத் தாலங்களில் களி பரிமாறப்பட்டிருந்தது. பிளவு பட்டதும், விளிம்பில்லாததும், சொட்டை விழுந்ததும், கலாயிப் பூச்சுப் போனதுமாய் இருந்தன தாலங்கள்.

பூபேன் கோஸ்வாமி களியை வாயில் குழைத்துக்கொண்டே பக்கத்தில் இருக்கும் தோழனைப் பார்த்து, "ஏன் சும்மா உட்கார்ந்துகொண்டு இருக்கிறாய்? கண்களை மூடிக்கொண்டு தள்ளு உள்ளே" என்றான்.

காலோடு கை விலங்கினால் பிணைக்கப்பட்டிருக்கும் சக்ரவர்த்தி, களி உருண்டையை வாயில் போட்டவண்ணம் திரும்பி, "வாயை மூடிக்கொண்டா இருக்கிறாய்? இப்பேர்ப்பட்ட உணவைத் தின்னக் கொடுத்துவைக்கவேண்டுமே; மனசாகவில்லையா? சே! மடமட வென்று எடுத்துப்

போட்டுக்கொள் வாயிலே. ராஜாவின் விடுதியில் விருந்தாளியாக வந்திருக்கிருய். ராஜபோஜனத்தை வெறுப்பது அவமரியாதையாகும், அமல்!'' என்ருன்.

சிறைவாசத்திற்குப் புதியவஞன அமலுக்குக் களி போன்ற உணவு சற்றும் ருசிக்கவில்லே. களியோடு தொட்டுக் கொள்ள நீர்போன்ற ஒருவிதக் கீரைக் குழம்பு. அதன் நிறம் கரியை அறைத்துவிட்டாற்போல் இருந்தது. அவன் சிறை புகுந்து ஏழெட்டுத் தினங்களுக்கு மேல் ஆகவில்லே. சாப்பிடாமல் பட்டினி கிடந்தான்.

அரசியல் கைதிகளுக்கு உணவு பரிமாறுபவன் ஒரு ஹிந்துஸ்தானிக்காரன். அவன் சாதாரணக் கைதி. வேடிக்கையான பேர்வழி. அவனும் அவர்களோடு சேர்ந்து கொண்டு அமலேப் பார்த்து, "மாமியார் வீடு ஐயா! இது மாமியார் வீடாச்சே......சாப்பிடுங்கோ சும்மா" என்ருன். பேசும்போது அவன் வாயிலிருந்து எச்சிலின் திவலே நாற்புறமும் வர்ஷித்தது. அவன் அணிந்திருந்த உடையோ சொல்ல வழங்காதபடி அழுக்கேறியிருந்தது. குடலேக் குழப்பியது அவன் உடலினின்று வீசும் துர்க்கந்தம். ஓக்காளம் வரவே அமல் மூக்கைக் கெட்டியாக மூடிக்கொண்டான்.

சக்ரவர்த்தி சிரித்துவிட்டு, "உம்......என்ன பண்ணுவது? வைகுண்டத்திற்கு வந்திருக்கிருேம். ஸாக்ஷாத் ஸ்ரீதேவி தன் திருக்கரத்தால் பரிமாறும்போது நாக்கிலிருந்து உனக்கு ஜலம் சொட்டவில்லேயா?'' என்றதும், ஹிந்துஸ்தானிக் காரனேப் பார்த்து, "உனக்கு என்ன இனும் வேண்டும்? மோதிரமா, கைக்கடிகாரமா? அல்லது தங்கச் சங்கலியா? எது சொல்லடா?'' என்ருன்.

இதைக் கேட்டதும் அங்குள்ளவர் அனேவரும் கொல்லென்று நகைத்தனர். ஹிந்துஸ்தானிக் கைதி தன் பெரிய பற்களேக் காட்டி இளித்தான்.

* * *

சிறையினுள் வேருெரு பக்கம். கொஞ்ச நாழியாகவே அங்கே சந்தடியாயிருந்தது. வரவர அது அதிகமாகவே கைதிகள் இரண்டொருவர் ஆவலே அடக்க முடியாமல் என்ன நடக்கிறதென்று கவனிக்க எழுந்துவந்து பார்த்தனர். மனித

னுயரமுள்ள மதிலுக்குப் பின்னால் சாதாரணக் கைதிகளின் விடுதி. அங்கே நடக்கும் விஷயம் எதுவும் வெளியி லிருந்து பார்ப்பவர்களுக்குத் தெளிவாகப் புலப்படாது. ஏக கலட்டாவாக இருந்தது அந்த இடத்தில். கீரைச் சட்டினி எடுத்துவரும் மற்றொரு கைதி முணுமுணுத்துக்கொண்டே சாப்பாட்டு விடுதியில் நுழையும்போது பாராக்காரன் அவ னைக் கூப்பிட்டு, "ஏய் பாதுஸிங்க், என்ன கலாட்டா அங்கே?" என்று விசாரித்தான்.

அந்தக் கைதி மூஞ்சியைக் கோணிக்கொண்டு கிறுக்கா கவே, "கொள்ளை அடிக்கச்சே தோணலே, இங்கே வந்து ஜபர்தஸ்து பண்ணால் நடக்குமா? அந்தத் தடிப்பயலுக்குக் கிட்டிக்கிச்சு இன்னிக்குக் கேடுகாலம்!" என்றான்.

"யார்......பத்தாம் நம்பரா? என்ன செய்தான்?"

"என்னவா? குழம்பிலே கரப்பான் பூச்சித்தலையாம், பல்லி வாலாம், அவன் தலைகூடவாம். மாப்பிள்ளேன்னு நினைச்சுக்கிட்டான் தன்னை. நல்ல சாப்பாடு வேண்டுமாம்... கொடுத்து வச்சிருக்கான் பார்!"

அமல் திடுக்குற்று, "கரப்பான் பூச்சியா...குழம்பில்?" என்றான்.

கோஸ்வாமி சிரித்தான்: "கரப்பான் பூச்சிதானே! அது எவ்வளவோ மேலாச்சே. தவளை, பாம்பு இன்னும் என்னென்னவோ இருக்குமே!" என்றான்.

"சே, நாயினும் கடைகெட்டவர்கள் நாம்" என்று தனக்குள் குமுறினான் நரேன் தே. ஆள் ஒல்லி. வசீகர மான தோற்றம். உடம்பு மிகவும் இளைத்திருந்தது. முகத்தி லும் கண்களிலும் சலிப்பின் அடையாளம். அவனுக்கு ஆவேசம் வந்தது. ஆக்ரோஷத்தினால் அவனுடைய சொற் கள் தடுமாறின.

சக்ரவர்த்தி திரும்பிப்பார்த்தான் நரேனை. அவன் வந்து இரண்டு மாதங்களாயின. ஆசாமி ரொம்ப அழுத்தம்; வாயினின்று வார்த்தையே வராது. அவன் சிரித்து யாரும் பார்த்ததில்லை. எதன் பேரிலும் விருப்பம் இராதவன்; தலை யைத் தொங்கப்போட்டுக்கொண்டு ஸதா எண்ணமிட்டுக்

கொண்டிருப்பான். எவ்வளவுதான் வார்த்தைக்கு இழுத்தாலும் பேசமாட்டான். அப்பேர்ப்பட்டவனிடம் ஒரு மாறுதல் தென்படவே சக்ரவர்த்திக்கு வியப்பாய் இருந்தது.

அமல் உக்கிரத் துவனியில், "இப்படி யிருந்தால் அதை எப்படிச் சாப்பிடுவது? பூபேன் அண்ணு" என்ருன்.

சக்ரவர்த்தியும் கோஸ்வாமியின் தோரணையில், "என்ன செய்வது? கையிலே எடுத்து வாயில் போட்டுக்கொண்டு உள்ளே நகர்த்து. அப்பா, நீ குழந்தை. உனக்கு அப்படித்தான் இருக்கும்" என்ருன். பரிதாபத்தின் சின்னம் அவன் முகத்தில் உலாவியது. "இப்படி எத்தனை நாட்கள் சாப்பிடாமல் ஜீவித்திருப்பாய்? அமல்! நீ வந்து இன்னும் ஒரு வாரங் கூட ஆகவில்லையே, இன்னும் கிடக்கவேண்டுமே வருஷக் கணக்காக. சாப்பிடாமல் இருந்தால் உனக்குத்தான் நஷ்டம். இவர்களுக்கு ஏன் உறைக்கப்போகிறது? பேசாமல் களியை விழுங்கிவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டு வீட்டைப்பற்றி நினைத்துக்கொள்: அம்மாவின் கையால் சமைத்துப் போட்டதையும், உன் தங்கை ஆதரவாகப் பரிமாறினதையும். இந்தக் கரப்பான் பூச்சி பல்லிவால் யாவும் சகித்துவிடும் தானுகவே, போகப் போக" என்ருன்.

சக்ரவர்த்தி அதிநாகரிகத்தில் ஆங்கிலத் துரைமாரைப் போல் வாழ்ந்தவன். ஹாஜ்ரா பார்க் அருகில் நவநாகரிக ரீதியில் அமைந்த பெரிய வீடு அவனுக்கு. தாய் தந்தையரின் செல்வப்பிள்ளை.

களியைச் சாப்பிட்டானதும் கொஞ்ச நேரம் இளைப்பாறுதல். சிறையில் தனக்கு இட்ட வேலையைச் செய்யச் சக்ரவர்த்தி எழுந்துபோகும்போது திடீரென அவனைக் கூப்பிட்டான் பாராக் கொடுக்கும் போலீஸ்காரன்:

"அதோ பாருங்கள் அந்தப் பக்கம்!"

* * *

மாடி வராந்தாவில் இரும்புக் கிராதியிட்ட ஓர் அறை. எல்லோருடைய கண்களும் அத்திசையே திரும்பின. ஆட்கள் வெளிப்பக்கம் போவதும் வருவதுமாக இருந்தனர். அவர்களுடைய நிழல் குறுக்கும் நெடுக்கும் சென்றது. தொலைவில் ஸெண்ட்ரல் டவர் - சிறையின் முக்கிய ஸ்தானம். தோலை உரித்த ஆட்டுக் குட்டியைப்போல் சுவர் ஓரமாகத்

தொங்கிக்கொண்டிருந்தான் பத்தாம் நம்பர் கைதி. கை கால்கள் கட்டப்பட்டிருந்தன. திறந்த உடம்பு, முக்கால்வாசி அம்மணம். ஸார்ஜெண்ட், சூபரின்டெண்டெண்ட், ஜெயில் டாக்டர் யாவரும் தயாராக நின்றிருந்தனர். சிப்பாய் இரண்டடி எட்டியிருந்தான். உத்தரவு பிறந்தது, "ஐம்பது அடி" என்று.

சிப்பாய் எண்ணிக்கொண்டிருந்தான், "ஒண்ணு இரண்டு" என்று. பளார் பளார் என்று விழுந்தன கைதியின் உடம்பில் அடிகள். 'பாட்டன்' வெயிலில் பளபளவென்று அடிக்கடி தலையைத் தூக்கியது; ஸர்ப்பம் படமெடுத்துச் சீறுவதுபோல் அடிக்கடி கைதியின் உடலை நோக்கிப் பாய்ந்தது. வேடிக்கை பார்க்கிறவர்களைக் கிட்டே அண்டவிடாமல் சிப்பாய் அதட்டிக்கொண்டே இருந்தான். கைதியின் உடல் சற்றைக் கொருதரம் நெளிந்தது. அவன் நோவு தாளாமல் தன் கையையே வெடுக்கெனக் கடித்துக்கொண்டு கூச்சலிட்டான். சிறை உத்தியோகஸ்தர்களை வாயில் வந்தபடி சரமாரியாகத் திட்டினான். வார் வாராக உடம்பில் தழும்புகள். உதடு துடித்துக்கொண்டே இருந்தது. பிரம்படியும் விழுந்து கொண்டே இருந்தது. பளார்..."உம்...ஐயோ!" என்று கூவித் தனக்குள்ள பலத்தை யெல்லாம் உபயோகித்துத் தன் கையிலுள்ள சதையைக் கடித்து வெளியில் இழுத்தான். அடியும் ஓயவில்லை. அவன் வைவதும் நிற்கவில்லை. பற்களை நறநறவென்று கடித்து உறுமினான். சிறைக் கிராதியின் வழியாக இந்தக் காட்சியை எல்லோரும் கவனித்தனர். அமல் ஸ்தம்பித்துவிட்டான். கோஸ்வாமி அவனைத் தள்ளி, "அமல்" என்றான். திரும்பிப் பார்த்ததும் அவன் முகம் சுண்டிவிட்டது. கண்களில் நீர் ததும்பியது. கோஸ்வாமி அவனை முதுகில் தட்டிக் கொடுத்து, "அசடே, இதற்கா வருத்தப்படுகிறாய்? ஆண்பிள்ளை அல்ல நீ? சீ, எப்பேர்ப்பட்டவனுடைய தம்பி நீ! இந்த மாதிரி எவ்வளவோ இந்தக் கண்ணால் பார்த்துச் சகித்துக்கொள்ளவேண்டுமே? முதலில் ஆத்திரமே வரும். அப்புறம் ஸஹஜமாய்விடும்" என்றான்.

அவர்களின் சிறைக் காவலன் மிகவும் நல்லவன். அவனுக்கு அவர்களிடத்தில் சற்று அனுதாபம் உண்டு. "இளம் பிள்ளை. ஏனப்பா இந்தக் கோஷ்டியில் கலந்துகொண்டாய்? இப்படி யெல்லாம் கஷ்டப்படுவானேன்? வீட்டிலே சௌக்கியமாய் இருக்கலாமே. சரியான உணவு தர எங்களுக்கு

என்ன அதிகாரம் இருக்கிறது, ஐயா? மேல் அதிகாரிகள் தான் ரொம்பவும் பிசுனரித்தனம் செய்கிறார்கள். இதை யாருக்கும் சொல்ல வேண்டாம், பாபு. சரியான அளவைக் காட்ட கண்ட கீரையையும் அவர்களே கலந்து அடிக்கிறார்கள். சரியான சாப்பாடு இல்லையென்று முறையிட்ட பிறகே ரொம்பப் பேருக்கு நல்ல உணவு கிடைக்கிறது" என்றான்.

அந்தப் பக்கம் கைதி அனுபவிக்கும் பிரம்படியும் ஓய்ந்தது. சிப்பாய் 'பாடனை'க் கழற்றி எறிந்தான். அவனுடைய உள்ளங்கையே வலித்தது; மறத்தும் போய்விட்டது. கைகளைத் தேய்த்து உணர்ச்சி வரவழைத்துக்கொண்டான்.

கைதி ஆசப்பிராஸம் ஒடுங்கிக்கிடந்தான். அவன் உடல் சப்பையாகிவிட்டது. வாயில் நுரை தள்ளியது. நடு நடுவே வலி தாளாமல், "உம்......உம்" என்று ஆழ்ந்து மூச்சுவிட்டான். எரிப்பந்தம்போல் கண்கள் ஜ்வலித்தன. சூபரின்டெண்டெண்ட் குரூரத்வனியில் மறுபடியும் உத்தரவிட்டான், "கொடு இன்னும் பத்து அடி" என்று. சிப்பாயின் கை வேலை செய்யவில்லை. சற்றுத் தயங்கி நிற்கவே, "ஏண்டா நிற்கிறாய்?" என்றது அந்தக் கொடூரக்குரல். அவன் என்ன பண்ணுவான்? கடமையைச் செய்ய மீண்டும் அடிக்க ஆரம்பித்தான்.

* * *

இந்தப் பக்கம் பாராக்காரன் இவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தான்: "அவன் திட்டினதால் துரைக்குக் கோபம் வந்துவிட்டது. அதுதான் மேலும் அடிகள்."

"ஊம்?" — கோஸ்வாமியின் கம்பீரமான குரலினால் சிறைக்கூடம் கிடுகிடுவென்று அதிர்ந்தது: "பாவம், வசவு பொறுக்க முடியவில்லை துரைக்கு" என்றான் ஏளனமாக. அமலின் வாயினின்று வார்த்தையே வரவில்லை. 'அடி தாளாமல் வைததற்கா மேலும் அடிகள்? என்ன அநியாயம்' என்று எண்ணினான்.

சக்ரவர்த்தி மங்கிய சிரிப்புடன், "நாம்கூடக் கைதிகளே; நாளைக்கு இதே கதிதான் நமக்கும். அவர்கள் அடிக்கவேண்டியது, நாம் அடிபடவேண்டியது கிரமம். கோஸ்வாமீ! இந்த நிலை என்றென்றும் மாறாமல் இப்படியே உலகில் நிற்குமோ? நம் எதிர்ப்பு இயக்கம் யாவும் வீணாகிவிடுமோ?" என்றான்.

தலையை உலுக்கிக்கொண்டு நரேன் தே எழுந்தான். அவனுடைய பெரிய கண்கள் புலியினுடையவைபோல் பிரகாசமாயின. என்னவோ பேசப்போய், வெடுக்கென உதடுகளைக் கடித்துக்கொண்டான்; வெளிக்கு வரமுடியா மல் உள்ளுக்குள்ளே கொதித்துக் கொண்டிருந்தது ஆத் திரம். தன் வேலையாகப் போகும்போது கோஸ்வாமி சக்ர வர்த்தியைப் பார்த்து, “கவனித்தாயா நரேனை?” என்றான். சக்ரவர்த்தி சிந்தையில் ஆழ்ந்தவனாய், “ஒன்றும் புரிய வில்லையே? இன்றைக்கு ஏன் இவ்வளவு ஆக்ரோஷத்துடன் இருக்கிறான்? ஏதாவது நடக்குமோ என்று பயமாயிருக் கிறது” என்றான்.

* * *

கீழே, நீண்ட பெரியதோர் கூடம். கைதிகள் வேலை செய் யும் இடம். காலையிலும் மாலையிலும் இரண்டு மணி காலம் வேலை. அரிசியிலிருந்து கல்லைப் பொறுக்குதல்,கயிறு திரித்தல், பாய் முடைதல். சிறை வாழ்க்கையில் நேரிடும் கடுமையான பந்தங்களுக்கு ஈடுபட்டு உழைக்க எல்லோரும் ஒன்று கூடினர். அங்கேதான் சற்று வேடிக்கையும் சிரிப்புமாய் இருக்க முடியும். நாள் முழுதும் சிறையில் உழல்வதால் குமுறும் வேதனை சற்று ஆறுவதற்கு அனுகூலமாயிருந்தது. ஜன்னல் வழியாக உள்ளே வளைந்து விழுந்தது சூரிய வெளிச் சம். மேலே உள்ள சாளரங்களில் கீச்சிட்டன சிட்டுக்குருவி கள். கைதிகள் அரிசி கொழிக்கும்போது அவை கீழே பறந்து வரும். கைதிகள் பிடிபிடியாய் அரிசியைக் கீழே இறைப்பார் பார்கள். குருவிகளும் அஞ்சாமல் இறக்கையை அடித்துக் கொண்டே கொடுக்கென்று அரிசியைக் கொறிக்கும். இந்தக் காட்சியைக் கவனிப்பதில் சிறையின் கஷ்டத்தைச் சற்று மறந்திருப்பார்கள்.

ஆசு கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்திருந்தான். வெளிப்பக்கமாகத் திரும்பிப் பார்த்து, “கோஸ்வாமி! அதோ போகிறது யார் பார்” என்றான். மற்றொருவன் குத்த லாக, “பாருல் பானர்ஜியாக இருக்கலாம்” என்றதும் கண் ணடித்தான்; பக்கென்று வெடித்து வரும் சிரிப்பை அடக் கிக் கொண்டான். எல்லோரும் எழுந்து கவனிக்கவே அமலும் ஆவலைத் தணிக்க முடியாமல் எழுந்து பார்த்தான். சற்றுத் தொலைவில் கல்பாவிய பாதை வழியே ஓடிந்து

வீழ்ந்து விடுவதுபோல் ஒரு பெண் சென்றாள். அவள் பின்னால் கறேலென்று கழுக்காளிபோல் தட்டுமஸ்தான ஸாந்தாலிக் காவற்காரி. கோஸ்வாமி ஜன்னலில் தலையை முட்டிக்கொண்டு அத்திசையே நோக்கினான். பெண்மணியும் அவன் பக்கமாகத் திரும்பிச் சிரித்துக் கையை ஆட்டினாள். பின்னால் வரும் அரக்கி அதட்டிக்கொண்டே இருந்தாள். ஆனால் பாருல் தன் சேஷ்டைகளை விடவில்லை. ஏதோ பேசவும் பேசினாள் கோஸ்வாமியைப் பார்த்து.

ஆசு கோஸ்வாமியை முதுகில் தட்டிக்கொடுத்து, "லக்கி சாப் (அதிர்ஷ்டசாலிடா)" என்றான். சக்ரவர்த்தியின் கால் கட்டப்பட்டிருந்ததால் அவனால் அங்கே நடப்பதைக் கவனிக்கச் சட்டென எழுந்திருக்க முடியவில்லை. விதியே என்று கயிறு திரித்துக்கொண்டிருந்தான். நரேன் தே உட்கார்ந்திருந்தான்.

இதுவரை வேலை செய்யும் இடத்திற்கு வர அவன் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் உள்ளே செல்ல உத்தரவு கிடைத்துச் சில தினங்கள் ஆயின. பழைய மௌனம் இன்னும் கலையவில்லை. அவனுடைய திடம் சற்றும் குலையவில்லை. எதன் பேரிலும் அவன் கண்களைச் செலுத்தவில்லை.

ஆசுவின் பேச்சைக் கேட்டதும் சக்ரவர்த்தி சிரித்துவிட்டான். "எனக்குப் பொறுக்கவில்லை, ஆசு வீணாவுக்கு நடந்த கதி தெரியுமோ இல்லையோ உனக்கு? கோஸ்வாமி! என்ன சமாசாரம் தெரியவில்லையே, நாம் அறியவேண்டும் எப்படியாவது" என்றான். எல்லோர் முகத்திலும் கலவரம். இந்தக் கோஷ்டியின் காரியதரிசி கோஸ்வாமி. ரகஸியமாக கடிதப் போக்குவரத்து நடத்துபவன் அவனே. வெளியில் நடக்கும் சமாசாரங்களை அறிவது, பெண் கைதிகள் இருக்கும் விடுதியோடு தொடர்பு வைத்துக்கொள்வது இவை யாவும் அவனுடைய ஜோலிகள். அந்தப் பக்கம் பாருல் பானர்ஜி சென்றுகொண்டிருந்தாள்.

கோஸ்வாமி பேச ஆரம்பித்தான்: "கேள்வி: நேற்று மத்தியான்னம் சூபரின்டெண்டெண்டை விளக்குமாற்றால் வீணா நன்றாகப் புடைத்தாளாம். துஷ்டன், பெண்கள் மத்தியான்னம் குளிக்க வரும்போதெல்லாம் அந்த இடத்திலேயே நின்றுகொண்டிருப்பானாம். லீலாவை அன்று விரஸமாக நடத்தினானும், ஏதோ விஷயத்தை அவளிடமிருந்து கிரஹிக்க.

அவள் லேசானவளல்ல! உயிர் போவதா யிருந்தாலும் அவள் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வராதே! அதனுல் தான் பாவம், அவளை அதிகக் கட்டுக் காய்தாவில் வைத்திருக் கிருர்கள். மறுபடியும் என்னவோ அவளுக்கு ஈரலில் வியாதி கண்டிருக்கிறதாம்" என்ருன்.

வெளியே மணி அடித்தது. பாராக்காரன் வந்து "போங்கோ வெளியே பாபு, போங்கோ" என்ருன்.

ஒரு கைதி, "அந்த அறைக்குச் சென்று ஏதாவது புஸ்தகம் படிக்கலாமென்ருல் அதையும் பூட்டிவிட்டார்கள். இந்த நாலைந்து மணி காலத்தை நாங்கள் எப்படிக் கழிப்ப தென்று அவர்கள் மூளைக்கு ஏறினுல்தானே! வாருங்கள்; எந்தப் பொந்திலாவது சற்று நிம்மதியாய்ச் சுருட்டிக்கொள்ள லாம்" என்ருன்.

நாலைந்து பாராக்காரர்கள் கைதிகள் இருக்கும் அறையி னுள் நுழைந்தனர். அவர்களுள் ஒருவன் வயதானவன். பெருமூச்சு விட்டுக்கொண்டே, "ரொம்ப நிம்மதிதான் உங்கள் பாடு. எங்கள் தலையில் எழுதியிருக்கிறதே துப்பாக் கியைச் சுமந்துகொண்டே திரியவேண்டி. சற்று உட்கார அவகாசம் ஏது? 'லீவு' கேட்டால் கொடுக்க முடியா தென்கிருர்கள். என் மகன் படுகட்டையாய்க் கிடக்கிருன். வீட்டில் ஒரு பெண்பிள்ளை; அவளால் முடியுமா, நீங்களே சொல்லுங்கள்? இந்த வேலையுமாச்சு மண்ணுங்கட்டியு மாச்சு! விட்டுவிட்டுப் போய்விடலாமென்ருலோ வயிறு ஒன்று இருக்கிறதே. இந்தக் கிழ வயதில் வேறு எங்கே வேலை கிடைக்கப்போகிறது?" என்ருன்.

*　　　*　　　*

கோடைக்காலம். பகற்பொழுது வளர்ந்துகொண்டே இருந்தது. படைபடைக்கக் காய்ந்தது வெயில்; குப்குப் பென்று வெம்மையாகக் காற்று வீசியது. அமலுக்குப் படுக் கப் பிடிக்கவில்லை. வேர்த்துக் கொட்டியது. கைதிகள் இருந்த அறையில் ஒரே சாளரம். அனல் உள்ளே. ஏழெட்டு நாளா யிற்று, அமல் க்ஷவரம் செய்துகொண்டு. சொள்ளென்று தினவு பிடுங்கியது தாடையில். சிறை உடையில் ஒட்டிக் கொள்ளும்படியான அழுக்கு. தன் பேரிலேயே அவனுக்கு வெறுப்பு மூண்டது. குளிக்கக் குழாயண்டை எழுந்து சென் ருன். தொட்டியில் கசண்டாக ஜலம் தேங்கியிருந்தது.

காக்கை குளிப்பதுபோல் பேருக்கு உடம்பில் நீரை வாரி இறைத்துக்கொண்டான். மத்தியான்னம் அந்த வெயிலில் குளிப்பவர்கள் யாவரும் அந்தத் துளியளவு ஜலத்தில்தான் சுத்தம் செய்துகொள்ளவேண்டும். அவ்வளவு 'கறுக்'கான ஏற்பாடு சிறையில். குளித்தவுடன் அமலுக்குக் 'கொர்' என்று வயிறு பசியினுல் கூவ ஆரம்பித்துவிட்டது. சரியாகச் சாப்பிடாததால் வந்த விளைவு. வெகுதூரத்தில் வெளியே இருக்கும் தன் வீட்டார், வாய்க்கு ருசியான உணவுகளை அனுப்புவார்களென்று எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. எத்தனை வருஷங்கள் இங்கேயே அழுகிச் சாகவேண்டுமோ அவனுக்கே தெரியாது. ஏனென்ருல் அவன் பந்தோபஸ்துக் கைதி. அம்மா, தங்கை, தம்பி யாவரும் என்ன கஷ்டப் படுகிருர்களோ? இதே ஏக்கம் அவனுக்கு.

இங்கிருந்து திடீரென தன் வீட்டிற்குப் போக முடியாதா? அது எப்படி முடியும்? அவனுடைய மனத்துள் ஒரு பறவை படபடவென்று இறக்கையை அடித்துக்கொண்டது, வெளியுலகிற்குப் பறந்து செல்ல ஒரு குற்றத்தையும் செய்யவில்லை அவன். விடுமுறையைக் கழிக்க வீட்டிற்கு வந்தான். அவனுடைய அண்ணன் வெடிகுண்டு வழக்கில் மாட்டிக் கொண்டான். அமலுக்கும் தெரியும் அவனுடைய கூட்டாளிகளில் சிலரை. வீட்டைச் சோதனை போடுவார்களென்று பயந்து அவன் சில முக்கியமான கடிதங்களை மறைக்கப் போன சமயம் அகப்பட்டுக்கொண்டான். ஸி. ஐ. டியைச் சேர்ந்தவர்கள் அவனும் சதியில் கலந்தவனென்று ஜோடனை செய்து குற்றவாளி யாக்கினர். காலேஜ் படிப்பும் அரைகுறையாக நின்றது. பிற்கால வாழ்விற்கும் பங்கம் விளைந்தது இதனுல். இதைப்பற்றிச் சிந்திக்கும்போது குபீரென ரத்தம் அவன் மூளையில் சென்றது. உடலெங்கும் ஒரே கொதிப்பு. சுவரைப் பிளந்துகொண்டு வெளியுலகில் நீல ஆகாயத்தின்கீழ் யதேச்சையாக உலவ அவன் மனம் துடிதுடித்தது.

வெளியே தாழ்வாரத்தில் பாராக்காரர்கள் பாடிக்கொண்டும் பெரிதாகக் கொட்டாவி விட்டுக்கொண்டும் நடப்பதும் பாராக் கொடுப்பதுமாய் இருந்தனர். பாரா மாற்றிக் கொள்ள ஆள்வரும்வரையில் சிடுசிடுவென்று அவர்கள் முகம் தோன்றியது. விடுபட்டதும் சாந்த மூர்த்திகளாகவே விளங்கினர். அவர்களும் மனிதர்கள்தாமே? சந்தடியற்ற பகல் வேளை நள்ளிரவைப்போல் பயங்கரமாயிருந்தது.

திடீரென ஓரிடத்தில் கூச்சல் கேட்டது. ஒரே நிமிஷத்தில் காராக்ருஹம் முழுவதிலும் அமளிகுமளி. பாராக்காரர்கள் அவசரமாகத் துப்பாக்கிகளை ஏந்தி நின்றனர். சிறையின் பெரிய கண்டாமணி 'டணங் டணங்' என்று ஒலிக்கத் தொடங்கியது. திபுதிபுவென்று பலர் ஓடுவதும், இன்னும் கலவரமான சப்தங்களும். அந்த விடுதியின் பக்கந்தான் அமலின் நோக்கம். என்ன நடந்ததோ? அமலுடைய இதயம் திக்திக்கென்று அடித்துக்கொண்டது. போலீஸ், சிப்பாய்கள், சிறை உத்தியோகஸ்தர்கள் யாவரும் தபகுபலாய் வருவது 'பூட்ஸ்' ஓசையிலிருந்து தெரியலாயிற்று. ஜண ஜண வென்று பெரிய வாயிற் கதவுகள் திறக்கும் அரவம். ஏதோ ஒரு ஸ்நாந அறையின் தாழ்ப்பாள் கழன்று கிடந்தது. அப்புறம் தேடு, பிடி ஆளை; வழியில் குறுக்கிட்டவர்களுக்கெல்லாம் பூட்ஸ்கால் பிரயோகம். அமலுக்கும் உதையில் பங்கு கிடைத்தது. ஒவ்வொரு மூலை முடுக்கிலும் ஆராய்ந்து பார்த்தனர். நீளமூஞ்சித் துரை ஒருவன்கையில் அமல் சிக்கிக்கொண்டான். தான் செய்யும் காரியம் நியாயமா அநியாயமா என்பதையும் மறந்துவிட்டு அமல்மீது 'பாடனை' வீசி இரண்டு அடி கொடுத்தான். அதோடு நில்லாமல், "நீ இங்கே எப்போ வந்தே? இதற்குமுன் எந்தச் சிறையில் இருந்தே?" என்று கேட்டான். சிறைக்காவலன் அமலைப் பற்றிச் சொன்னதும் துரையின் முகம் பின்னும் விகாரமுற்றது. "ஓ! அந்தத் திருட்டுப்பயலின் தம்பியா?" என்று அலக்ஷ்யமாக அமலை எட்டி உதைத்தான். "இவன்மேல் ஒரு கண் இருக்கட்டும்" என்று பாராக்காரச் சிப்பாய்க்கு உஷார்ப் படுத்திவிட்டுச் சென்றான். அமலுக்கு எரிச்சலாக வந்தது. இதையெல்லாம் சகித்துக்கொள்வதைவிட வேறு வழி? சில நாழிகை வரையில் திமிலோகப்பட்டது. நாற்புறமும் உதையும், குத்தும், பிரம்பால் அடிக்கும் ஓசையும். அப்புறம் எல்லோரும் கீழே இறங்கிவருவது தெரிந்தது.

வேலை செய்யும் இடத்திலும் கைதிகளின்மீது கடுமையான காவல். ஒவ்வொரு பாராக்காரன் முகத்திலும் சுருக்கம். மேல் அதிகாரிகளின் உபத்திரவம் அவர்களாலும் தாங்க முடியவில்லை. எவர் வாயும் அடைத்துக் கிடந்தது. நரேன் தேயைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அவனைச் சோதித்துப் பார்க்கையில், நிஜார் ஜேபியில் இரும்பை அறுக்கும் அரமும், கூரான முனை உள்ள கத்தியும் அகப்பட்டன.

துயர் நிரம்பிய குரலில் அமல் சக்ரவர்த்தியைப் பார்த்து, "ஏனே இந்தக் காரியத்தை அவன் செய்தான்?" என்றான்.

சக்ரவர்த்தி தயங்கித் தயங்கி, "நான் முன்பே சந்தேகப்பட்டேன்; பத்து வருஷம் அடைபட்டுக் கிடந்தால் யாருடைய மூளைதான் குழம்பிப் போகாது!" என்றான்.

மற்றொரு கைதி, "என்ன தண்டனை விதிப்பார்களோ?" என்று கேட்டதற்குக் கோஸ்வாமி முகம் வாடி, "தனி 'ஸெல்'லில் அடைத்துவிடுவார்கள்" என்று ஒரு பெருமூச்செறிந்து, "பெரிய ஜமீன்தாரரின் பிள்ளை. ஒரு ஜில்லா கலெக்டரின் பெண்ணை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதாயிருந்தது. கடைசியில் எல்லாம் பாழாகிவிட்டது. இந்தத் தேசப்பித்தம் அவனைப் பிடித்துக்கொண்டது" என்றான்.

சக்ரவர்த்தி கோபத்தினால் துள்ளி, "பெண்ணைக் கொடுக்க இருந்த அந்தப் படுபாவிதான் இவனை சிறையில் மாட்டிவிட்டான்! என்ன 'டிராஜெடி' பாருங்கள்! உடனே தன் பெண்ணைச் சீமையிலிருந்து வந்த ஒருவனுக்குக் கட்டிக் கொடுத்துவிட்டான்!" என்றான்.

"ஐவியைத்தானே சொல்லுகிறாய்?"

"ஆமாம், என்னுடைய தங்கையுடன் அவள் எம். ஏ., வரை படித்தாள். எனக்கு வந்த கடிதத்திலிருந்து அது தெரிய வந்தது; பெரிய மனுஷ்யர்கள் அவர்களெல்லாம். இந்தக் காலத்துப் பெண்; அதோடு படித்தவள். நரேனைப் போன்றவர்கள் அவள் மனத்துள் எத்தனை நாழிகை நிலைத்திருப்பார்கள்?"

பணி மற்றொரு கைதி; நோயாளி. வயிற்றைப் பிடித்துக்கொண்டே இவர்கள் பேசுவதைக் கேட்க நெருங்கினான். ஆனால் இரண்டு அடி அவனால் எடுத்துவைக்க முடியவில்லை. "ஐயோ! என்னவோ குத்துகிறதே என் வயிற்றிலே...முடியவில்லையே" என்று அலறினான்.

ஆசுவும், "எனக்கும் வயிற்றில் என்னவோ சங்கடப்படுத்துகிறது" என்றான்.

"இரவெல்லாம் நீ விழித்துக்கொண்டே என்னவெல்லாமோ யோசனை பண்ணுகிறாய். அதனால்தான் அஜீர்ணம்" என்றான் பணி. "இன்னும் ஒரு முக்கிய ஸமாசாரம்: காலையில் தான் எனக்கு எட்டியது. டிக்ஸன் வரானும்" என்றான் சக்ரவர்த்தி. "பாவி, வாஸ்தவமாகவா வரான்? உயிரை வாங்கி விடுவானே. இன்னும் யாருக்குக் கேடு காலமோ? சந்தேகம் யார்பேரில் விழுகிறதோ அவனை உருக்குலைத்துவிடுவானே... தெய்வமே!" என்றான் மற்றோர் அரசியல் கைதி.

அமல், "ரொம்ப அடிப்பானா அவன்?" என்று கேட்டான். "அடிப்பானா -" என்று ஆசு அதிசயத்துடன் அமலைப் பார்த்து, "யோசிக்கவே மாட்டான். அந்தத் தடவை அவன் நம் காதைக் கிள்ளியது கவனம் இருக்கிறதா உனக்கு? பஞ்சு அண்ணா!" என்றான்.

கோஸ்வாமி சிரித்தான்; "இதோ என் நெற்றியில் வடு இருக்கிறதே; அதைவிட வேறு அத்தாட்சி வேண்டுமோ அவனுடைய கைத்திறமைக்கு?" என்றான்.

எல்லோர் முகத்திலும் வேதனையும் திகிலும் குடிகொண்டன.

"நாங்கள் மூன்று பேர் ஹிஜ்லிச் சிறையில் இருக்கும் போது - இரண்டு வருஷங்களுக்கு முந்திய ஸமாசாரம் - அங்கே ஒரு பாராக்காரன் ரொம்பக் கிறுக்குப் பிடித்தவன். ஒரு நாள் மத்தியான்னம், சமயம் பார்த்து அவனை நாங்கள் மடக்கிக்கொண்டு நன்றாகப் புடைத்தோம்; அப்போது சாப்பாடு எடுத்துக்கொண்டு எதிரே வரும் இரண்டு சிப்பாய்கள் நாங்கள் செய்வதைப் பார்த்துவிட்டார்கள். அப்புறம் என்ன? டிக்ஸன் எங்களை விசாரிக்கச் சிறைக்கு வந்துவிட்டான். எங்களைச் சித்திரவதை செய்தார்கள்; உமாநந்தன் வதை பொறுக்கமுடியாமல் மூர்ச்சித்துவிட்டான்" என்றான் ஆசு.

இதைக் கேட்டுக் கைதிகள் உரக்கச் சிரிப்பதற்குக்கூடப் பயந்தனர்.

சக்ரவர்த்திமட்டும் உல்லாஸமாகப் பாடிக்கொண்டிருந்தான்:

"ஏதோ தின் யே பஸேசிலாம்
பதசேயே ஆர் கால குனே
தேகே பேலேம் பால்குனே."*

*　　　*　　　*

சிறையிலுள்ள கைதிகளின் அறைகள் யாவும் மூடிக் கிடந்தன. வெளியே ஒரே வெயில். திசைமுடிவு வரையில் பரந்திருக்கும் வயல்களில் அறுவடையான தானியக் கதிர்கள் தரையில் புரண்டுகிடந்தன. பனை மரங்கள் இரண்டொன்று திக்கற்றுத் தலையில் வெயிலை ஏந்திக்கொண்டு நின்றன. ஸாந்தாலிச் சிறுவர்கள் நிழலில் மாடுகளை மடக்கிவிட்டு, விளையாடிக் கொண்டிருந்தனர். சிறையின் வெளிப்புறத் தாழ்வாரத்தில் காவற்காரர்கள் சிலர் தூங்கி விழுந்துகொண்டும் உலாவிக்கொண்டும் இருந்தனர். சுர்ரென அவர்கள்மீது வெயில் பாய்ந்து கொண்டிருந்தது. மெல்லக் கதிரவனின் சினம் அடங்கி, அந்தி வேளையும் நெருங்கிற்று. அந்த ரம்யான வேளையில் அறையினுள் அடைபட்டுக் கிடக்க அமலுக்குப் பிடிக்கவில்லை. டிக்ஸனுடைய பயங்கர உருவத்தின் கவனமே அவனுக்குள்ள சிறிது அமைதியையும் கெடுத்துவிட்டது.

செருக்குடன் 'பூட்ஸ்' அணிந்த கால் வரும் பேரிரைச்சல். மாடிப்படிகள் கிடுகிடு வென்று அதிர்ந்தன. இரவு; கைதிகள் நித்திரை செய்துகொண்டிருந்தார்கள். எவருக்கும் தூக்கம் இன்னும் நன்முக வரவில்லை. டிக்ஸன்தான் வருகிருனே அல்லது பாராக்காரர்கள் மாறுகிருர்களோ, ஒன்றும் நிச்சயமாகத் தெரியவில்லை. பின்னுல் வரப்போகும் விபத்தின் அறிகுறியாக அமலின் இதயம் படபடத்தது. ஆனுல் சற்று நேரத்திற்கெல்லாம் எல்லா ஓசையும் அடங்கிவிட்டது. இரண்டொருவர் குறட்டை விடும் சப்தம்மட்டும் கேட்டது. 'டங் டங்' என்று எங்கோ மணி அடித்தது. பன்னிரண்டு! நடுநிசி......பெருமூச்செறிந்து அமல் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான்; உலகெங்கும் வெண்ணிலவின் வெள்ளம் பரவியிருந்தது. வெளியில் இயற்கையின் அழகிய தோற்றம் ஸ்வப்னத்தில் காண்பதுபோல் திகழ்ந்தது. சாலமலரினது நறுமணத்தின் வாடையை மெல்லிய தென்றல்

---

* இத்தனை நாட்கள் காத்துக்கொண்டிருந்தேன் வழியை நோக்கி, நாட்களைக் கணக்கிட்டுக்கொண்டே. ஒரு பங்குனியில் (இளவேனிலில்) கிடைத்தது எனக்கு உன் தரிசனம்.

ஏந்தி வநதது. தூரத்திலுள்ள ஸாந்தாலிக் கிராமத்திலிருந்து மத்தள வோசையும் பாட்டும் தெளிவாகக் கேட்டன.

சிறையில் வாடும் அமலின் மனம் இன்பக் கனவு கண்டது. திடீரெனப் பாருல் பானர்ஜியும் கோஸ்வாமியும் அவன் மனத்திரையில் வந்து தோன்றினர். உடனே தன் வீட்டு நினைவுகள் ஒவ்வொன்ருக வந்தன : இதேமாதிரி ஒரு சித்திரை மாதம்; ஒரு வனபோஜனத்திற்குப் போயிருந்த சமயம். அப்போது கவலையற்ற வாழ்வு. ராஞ்சி மலையடிவாரத்தில் ஒரு மாந்தோப்பில் அவர்கள் கூடாரம் போட்டுக் கொண்டு தங்கியிருந்தனர். கூடவந்தவர்கள் எத்தனையோ பேர். பாட்டும் கதையுந்தான். அங்கே அமலாவென்ற ஒரு கறுப்பு நிறமான பெண்ணைச் சந்திக்க நேரிட்டது. அமலுடைய பெயருக்கும் அவளுடைய பெயருக்கும் உள்ள ஒற்றுமை பல வேடிக்கை தமாஷ்கள் நிகழ்வதற்கு அனுகூலமாயிருந்தது. அமலா உண்மையில் அமலின் ஆருயிர்க் காதலியாகவே மாறினுள்....

“ஹுஜுர்”—அமலின் இன்பக் கனவுகள் சட்டெனச் சிதறின. திடுக்கிட்டு எழுந்திருந்தான். பாராக்காரனுடைய விகாரமான குரல்.தூங்கிக்கொண்டிருக்கும் அவனும் டிக்ஸன் வந்துவிட்டதாகக் கனவு கண்டு இப்படி அலறிப்போட்டுக் கொண்டானே?

அடுத்த அறையிலிருந்து ஆசு, “பயல் கழுதை மாதிரி கத்துகிருனே!” என்ருன்.

தூரத்தில் ‘ஸென்ட்ரல் டவரி’லிருந்து சற்றைக்கொருதரும் பாராக்காரர்கள் பேசும் சப்தம்: “12” என்று கூப்பிடுவதும், “ஆஜர்” என்று அவர்கள் பதில் கொடுப்பதும் கேட்டன. பாதி ராத்திரி...ஒவ்வொரு சிறைக் கூடமாக வந்து ஆபீஸர் பாராக்காரர்களை, எல்லாம் சரியாக இருக்கிறதா என்று கேட்பதும், அவர்கள், “ஹுஜுர்” என்று வணக்கமாகப் பதில் தருவதுமாயிருந்தனர்.

தூக்கம் வரவே இல்லை அமலுக்கு. மணிக்குமேல் மணி அடித்தது. கபகபவென்று எரிச்சல் எடுத்தது கண்களில். எத்தனை நாழிகை படுத்துக்கொண்டே இம்மாதிரியெல்லாம் சிந்தனைசெய்வது? முள்ளைப்போல் குத்தும் பாய். போர்த்துக்

கொள்ளச் சுரசுரப்பான கம்பளி. கருங்கல் பாவிய தரை. தூங்கியும் சுகமில்லை. முதுகு பிடித்துக்கொள்ளும். ஒவ்வோர் இரவும் இதே கஷ்டந்தான். இரண்டு அடித்தது, சிறைச்சாலைக் கடிகாரத்தில். இரவு இன்னும் ஆழ்ந்து விளங்கியது. தன்னையும் மீறி அமலுக்குக் கண்களை அழுத்தியது. குழப்பமான கனவு கண்டான், அம்மா வந்து நிற்பதுபோலவும், பாருல் பானர்ஜியும் கோஸ்வாமியும் எங்கோ செல்வது போலவும். கனவுக்குத்தான் தலையும் இல்லை காலும் இல்லையே!

துடும் - டுப்.

- சட்டெனத் துயில் கலைந்தது. அடுத்த அறையிலிருந்து சக்ரவர்த்தி வெறுப்புத் தோய்ந்த குரலில், "இதென்ன இழவு! இரவில்கூட இந்த மாதிரி சப்தம் செய்து நம்மைத் தூங்க விடமாட்டார்கள்போல் இருக்கிறதே! எதற்காக இந்த வேட்டு?" என்று கத்தினன்.

மறுபடியும் நிச்சப்தம். அமல் எழுந்திருந்து முகத்தில் ஜலம் விட்டு அலம்பிக்கொண்டான். திரும்பவும் தூங்கப் பிரயத்தனப்பட்டான். மீண்டும் வெளியில் சை சை யென்று பூட்ஸின் சப்தம். "தூங்கினுற்போலத்தான்" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான் அமல். பாராக்காரர்கள் மாறும்போது ஏற்பட்ட சப்தம். புதுப் பாராக்காரனுக்கு ஒரு கால் நீளம். இழுத்து இழுத்து நடப்பதால் அதிகமாகப் பூட்ஸின் சப்தம் கேட்டது.

கைதிகள் பேசிக்கொள்வது ஒன்றுமே அந்தப் பாராக்காரனுக்குப் புரியவில்லை. அவன் மற்றொரு பாராக்காரனுடன் மெதுவான குரலில் பேசிக்கொண்டிருந்தான்: "லீவு கொடுக்கமாட்டாங்களாமே. போன ஆவணி மாசம் நான் ஊருக்குப் போனதும் கல்யாணம் பண்ணிக்கொண்டேன். இரண்டு நாள்கூட பெண்சாதி முகத்தைப் பார்க்கவில்லை. லீவு ஆகிவிட்டது. திரும்பி வந்துவிட்டேன். வேலையை விட்டு விடட்டுமா? என்ன உன் யோசனை?"


மற்றவன் அவனைத் தாஜாப்படுத்த, "வேலையென்று வந்துவிட்டால் லீவ் கிடையாதுதான்! வேலை போய்விட்டால் வயிற்றுக்கு என்ன செய்வாய்? பெண்டாட்டியைக் கட்டிக்கொண்டிருக்கிறுய்; அதையெல்லாம் யோசி" என்றுன்.

இருண்ட சிறைக்கூடம். விளக்கே இல்லையென்றால் படிப்பதற்கு எங்கிருந்து அகப்படப்போகிறது புஸ்தகம்? அமல் எழுந்து உலாவ ஆரம்பித்தான்; ராத்திரி மணி மூன்று. மறுபடியும், "எட்டாம் நம்பர் பாரா" என்ற கூப்பாடும், "ஆஜர்" என்ற பதிலும்.

அமல் சிரிக்காது வேறு என்ன செய்வான்? காவற்காரன் பாவம், அவனுந்தான் தூக்கமிராமல் கழுதை மாதிரி சிறையைச் சுற்றித் திரிகிறான். நடுநடுவே அவனையும் மீறிக் கண்ணயர்ந்துவிடுகிறான். சட்டென விழிப்பு ஏற்படுகிறது. 'ஆஜர்' என்று குரல் கொடுக்கிறான். வாய்பிளக்கக் கொட்டாவி விட்டு மீண்டும் தரையில் பூட்ஸ் காலைத் தேய்த்துக்கொண்டே நடக்கிறான். இதேமாதிரி நித்தியம்....

அமலுக்கு அவர்கள்மீது இரக்கம் வந்தது. அவர்களுக்கும் இன்ப துன்பங்கள் உண்டல்லவா? மனிதர்தாமே!

ஆபீஸர் வந்து விடுவானோ வென்று அவர்களுக்கும் எரிச்சல். அடிக்கடி அலறிப்போட்டுத் துப்பாக்கியைத் தோளில் வைத்துக்கொண்டு விறைப்பாய் நிற்கிறார்கள்! வெண்ணிலவு பொழியும் இரவு. இளவேனிற் காலம். அவர்கள் சுதந்திர ஜீவன்களாயிருந்தும், வெளியுலகின் சுகங்களை அனுபவிக்க முடியாமல் சிறையில் அழுந்திக் கிடக்கின்றனர். அவர்கள் ஓர் இடத்தில், அவர்களுடைய மனைவி மக்கள் வேறோர் இடத்தில்! நித்தியம் துப்பாக்கியைத் தோளில் சுமந்துகொண்டு திரிவதுதான் அவர்கள் கண்ட சுகம்! அவர்கள் அல்லவோ உண்மையில் கைதிகள்!



முடிவில் காதல்

ஜலதர் ஸேன்

இச்சாமதி நதிக்கரையில் ஒரு சிறு கிராமம். அது செம்படவர்களின் இருப்பிடம். வாதாஸி என்பவள் ஒரு செம்படவனின் பெண்.

அவள் பிறந்த வேளை, குடும்பம் முழுதும் க்ஷீணதசை அடைந்து எல்லோரும் மாண்டுபோயினர். வாதாஸியின் பாட்டி ஒருத்திதான் எஞ்சி நின்றாள்.

இந்தச் செம்படவர் வகுப்பில், பெண்களுக்கு வயது அதிகமாகியும் கல்யாணம் நடக்காமல் இருப்பது ஸர்வ சாதாரணம். இதை அவர்கள் ஒரு குறையாகக் கருதுவதில்லை. கிழவியும், "என்ன அவசரம் வாதாஸிக்கு" என்று காலம் போக்கினாள்.

ஹரி ஹால்தாரின் மகன் ஸ்வரூபன் அதே ஊர்தான். நல்ல தேகக்கட்டு அமைந்த அந்த யுவகன் மகா தீரசாலி. வாதாஸிக்கு அவனே தகுந்தவன். படகு ஓட்டி ஜீவனம் செய்பவன். எப்பேர்ப்பட்ட புயலிலும் அவன் படகை ஓட்டுவான். கிழவிக்கு அவன் பேரில்தான் கண். சிறு வயதாய் இருக்கும்போது வாதாஸியும் ஸ்வரூபனும் ஒன்றாக ஓடி விளையாடினவர்கள். இதனாலேயே அவர்களுக்குப் பரஸ்பர அன்பு இருந்தது. ஹால்தாரும் ஒருநாள் கிழவியிடம் வாதாஸியைத் தன் மகனுக்குக் கொடுக்கமுடியுமா என்று கேட்டான். கிழவி உள்ளம் பூரித்து, "ஆகா அப்படியே" என்று சம்மதித்தாள். இவ்வளவு ஆகியும் விவாகத்திற்குத் தடங்கல் ஏற்பட்டது.

கிராம தேவதைக்கு நான்கு ஐந்து வருஷமாகக் காப்புக்கட்டி உத்ஸவம் நடத்துவது நின்றுவிட்டது. அந்தக் குற்றமோ என்னவோ ஊர் முழுவதும் திடீரென்று வாந்திபேதி கண்டு ஊரைத் துடைத்துக்கொண்டு போய்விட்டது! ஹால்தாரும் அவனுடைய மனைவியும் இந்த நோய் கண்டு மாண்டனர்.

இது நடந்து வருஷங்கள் இரண்டாயின. வாதாஸி மத மதவென்று வளர்ந்து பதினறு வயதை எட்டிவிட்டாள். கிழவிக்குச் சரீரத்தில் பலம் ஒடுங்க ஒடுங்கத் தன் பேத்தியைப் பற்றிய கவலை அதிகரித்து, 'வாதாஸிக்கு வயதாகிறதே. இவளை யார் கட்டிக்கொள்ளப் போகிறார்கள்? பாவம், ஹால் தார் இறந்துவிட்டார். ஸ்வரூபன் இவளை மணக்க இஷ்டப்படு வானே?' என்று எண்ணுவாள். ஆனல் அவள் ஸ்வரூபனை மட்டும் நம்பி இருந்தாள். வாதாஸி தினமும் தவருமல் மீன் களைக் கூடையில் வைத்துத் தலையில் சுமந்து படகுத் துறைக் குச் சென்று விற்று வருவாள். இந்தச் சம்பாத்தியத்தைக் கொண்டே கிழவியும் அவள் பேத்தியும் காலம் கழித்துவந்த னர். கிழவி தன் பேத்தியைக் கூப்பிட்டு அவளுடைய கல்யாணப் பேச்சை எடுத்தபோது, "ஆயா, எனக்கு எல்லாம் தெரியும்; நான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிற தில்லை. அப்பா அம்மா எல்லோரும் போய்விட்டார்கள். நானும் ஒரு நாள் போகவேண்டியவள்தானே" என்று கிழவி யின் வாயை அடக்கிவிட்டாள் பேத்தி.

இதைக் கேட்டதும் கிழவி திடுக்கிட்டு, "இதென்னடீ நீ பேசுவது? ஊரார் உன்னை ஜாதிபலி போடுவாங்களே; உனக்குக் கெட்ட பெயர் வரும். ஸ்வரூபனும் உன்னைக் கட்டிக்க இருக்கச்சே......" என்று கூறுவாள்.

"ஆயா! ஊரார் திட்டினல் திட்டட்டும். எனக்குப் பயம் இல்லை. நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளமாட் டேன்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள் பேத்தி. இதனல் கிழவிக்கும் வாதாஸிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. ஊராரால் இவளுடைய விசித்திர மனப்போக்கை அறிய முடியவில்லை.

வாதாஸி படகுத் துறைக்குச் சென்றிருந்த சமயம், கிழவி ஸ்வரூபனைச் சந்தித்து, "உன்னைத்தான் நம்பி இருக் கிறேன். வாதாஸியின் பிடிவாதத்தை நீதான் திருப்ப

வேண்டும்" என்று கண்ணீரும் கம்பலையுமாகச் சொல்லிக் கொண்டாள்.

ஸ்வரூபன் ஒரு நாள் படகைக் கரையில் கட்டிவிட்டுத் தன் குடிலை நோக்கி ஒரு மூங்கில்தோப்பு வழியாகச் சென்று கொண்டிருந்தான். எதிரே வாதாஸி தலையில் மீன்கூடையுடன் வருவதைப் பார்த்து அவன் அவளை அணுகி உருக்கத்துடன், "வாதாஸி, இதோ பார்: நான் தனியாக இந்த உலகத்தில் இருக்கிறேன். எனக்குச் சோறு ஆக்கிப் போடுவதற்கு யாருமே இல்லை. உன்னை நான் சிறுவயதே பிடித்து நேசித்து வருகிறேன். என்னை நீ ஏமாற்றக்கூடாது, பெண்ணே! உன்மேல் நான் உயிராக இருக்கிறேன். என்னைக் கட்டிக் கொண்டால் உனக்கு மெத்த சுகம். நான் உனக்கு அடிமையாய் இருப்பேன். வாதாஸி, என் மனம் குளிரும்படி செய்வாய். உன் உருவம் என் கனவிலும் நினைவிலும் வந்து நிற்கிறது" என்று கூறும்போது அந்த வசனங்கள் வாதாஸியின் கண்களிலிருந்து நீரை வரவழைத்தன.

வாதாஸி மட்டும் தன் மனத்தை மாற்றவே இல்லை; "உன்னைக் கட்டிக்கொள்வதில் எனக்கு யாதொரு தடையுமில்லை. உன்னுடன் நான் குடித்தனம் பண்ண வந்துவிட்டால், என் ஆயாவை யார் பார்த்துக்கொள்வது? அவள் வேறு ஒருவன் ஆதரவில் இருக்க நான் சகியேன். அவள் ஆயுள் இருக்கும்வரை நான் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன். நீ எனக்காகக் காத்திராதே. வேறு பெண்ணைப் பார்த்துக் கட்டிக்கொள். என்னிடம் நீ இதைப்பற்றிப் பேசுவாயானால் நான் அப்புறம் உன் முகத்தில் விழிக்கமாட்டேன்" என்று வெள்ளையாகக் கூறிவிட்டுத் தோப்பில் மறைந்தாள்.

ஸ்வரூபன் பிரமித்துப்போய் வாதாஸி சென்ற திக்கையே பார்த்துக்கொண்டு நின்றான். என்னவோ மனச் சஞ்சலத்துடன் வீட்டை நோக்கிப் போகும் ஸ்வரூபன் துறைக்குத் திரும்பிப் படகை அவிழ்த்துக் கூலிக்காக எதிர்க் கரை வரை ஓட்டிச் சென்றான்.

வாதாஸி பிரதிதினமும் பண்டங்களை எடுத்துக் கொண்டு படகுகள் தங்கும் இடங்களுக்குச் சென்று மீன் விற்றுக் காசு கொண்டுவருவாள். அக்கரைக்கோ, வேறு

இடங்களுக்கோ போகவேண்டியிருந்தால் முதல் முதலில் ஸ்வரூபனது படகிலேதான் செல்வாள். அவன் அவளை அணுகி அடிக்கடி கல்யாணத்தைப்பற்றிப் பேசுவதனால் அவள் அவனுடைய படகில் செல்லாமல், மறைவாகவே கால் நடையாக வேறு வழியாக ஆற்றில் ஆழமில்லாத இடத்திலே கணுக்கால் ஜலத்தில் நடந்து செல்வாள். ஒருதரம் அவள் இம்மாதிரி தன்னைக் கடந்து செல்வதைப் பார்த்து, ஸ்வரூபன் அவளிடம், "வாதாஸி, உன் இருதயம் கல்லா என்ன? நான் கஷ்டப்படுவது உனக்குத் தெரியவில்லையா? எனக்குப் பயந்தா நீ இவ்வளவு சிரமப்பட்டுச் செல்கிறாய்?" என்று உள்ளுறச் சொன்னான். அதற்கு அந்தப் பிடிவாதக்காரி பதில் சொன்னால்தானே!

ஒவ்வொரு நாளும் ஸ்வரூபன் மட்டும் தன் படகில் ஏற வருபவர்களில் வாதாஸி இருக்கிறாளா வென்று ஆவலுடன் கவனிப்பான். அதனால் ஆசாபங்கம் ஏற்பட்டதே ஒழிய வேறில்லை. அவன் மனம் மாத்திரம், "வாதாஸி...வாதாஸி" என்று அடித்துக்கொண்டே இருந்தது.

சிற்சில சமயம் அந்தி நேரங்களில் தான் கூலிக்குப் படகு ஓட்டுவதையும் நிறுத்திவிட்டு அவன் என்ன என்னவோ ஆகாயக் கோட்டை கட்டுவான், பாவம்! 'என் வாதாஸியை நான் எப்படி வசப்படுத்திக்கொள்வது? அவளுக்கு எதன் பேரில் ஆசை?' - இப்படியெல்லாம் எண்ணுவான். ஏதாவது ஒரு காற்று, நீரை அலப்பிச்சென்றால் வாதாஸிதான் வருகிறாளோவென்று திடுக்கிட்டுப் பார்ப்பான்.

ஒருநாள் மத்தியான்னம் இருள் கவிந்து வானம் சினந்து ஒரு புயல் கிளம்பிற்று. ஆற்றுநீர் கருநீலமாகத் தோற்றியது. வெள்ளலைகள் மடிந்து வருவது நமன் சிரித்துப் பற்களைக் காட்டுவதுபோல் இருந்தது. படகைக் கரையோரமாக ஜலத்தில் தாழ்ந்திருக்கும் ஒரு மரத்தில் கட்டிவிட்டு, ஸ்வரூபன் தன் குடிலை வந்து அடைந்தான். அதே சமயம் "ஸ்வரூப்" என்று தன்னை யாரோ கூப்பிடுவதைக் கேட்டான். காதை வைத்து ஊன்றிக் கவனித்தான். மறுபடியும் அந்த இனிய குரல் "ஸ்வரூப்" என்று அழைத்தது.

பழக்கமான அந்தக் கண்டத்வனி! இந்த மாதிரி அவள் தன்னைக் கூப்பிடுவாள் என்று வருஷக்கணக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால் அந்தச் சுபக்ஷணம் வந்துவிட்

டதா என்ன? இந்தப் புயல் அடிக்கும் வேளையிலா வாதாஸி வருவாள்? சே சே, இது வாதாஸியாக இராது. காற்றின் ஒரு மூச்சாக இருக்கலாம்? இது என்ன பிரமை? காதலின் மந்திரசக்தியை யாரால் அறிய இயலும்?

"ஸ்வரூப்...நீ வீட்டில் இருக்கிறாயா?" என்றது மறுபடியும் அதே குரல். இந்தத் தடவை ஸந்தேகம் இல்லை; நிச்சயமாக வாதாஸியின் குரல்தான். ஸ்வரூபன் சட்டென்று எழுந்திருந்து வாசலை அடைந்தான். எதிரே வாதாஸி தலையில் பாரமான கூடையை வைத்துக்கொண்டு நின்றிருந்தாள்.

ஸ்வரூபன் அவளுடைய தலையிலிருந்து கூடையை இறக்கி அவளை உள்ளே அழைத்துச் சென்றான். வாதாஸி, "ஸ்வரூப், என்னை அக்கரைக்குக் கொண்டுவிட முடியுமா? எதிர் ஊர் ஜமீன்தார் வீட்டிற்கு இந்த மீன்களைக் கொண்டு செல்லவேண்டுமே" என்றாள்.

"அக்கரைக்கா? இந்த வேளையில் எப்படிச் செல்ல முடியும்? படகு கவிழ்ந்துவிடுமே! வாதாஸி, உனக்குச் சித்தப்பிரமையா என்ன?"

தான் சொன்னது ஸ்வரூபனுக்குக் கேட்கவில்லையோ என்று சந்தேகித்தவளாய் மீண்டும் அவள், "ஸ்வரூப், என்னை அக்கரைக்குக் கொண்டு செல்" என்றாள்.

"வாதாஸி, உன்னை அக்கரைக்கு அழைத்துச்செல்ல வேண்டியே நான் பகலும் இரவும் பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். நீதான் வராமல் ஒளிந்து திரிகிறாய். எனக்கு மட்டும் பூர்ண ஆசைதான் உன்னை அக்கரைக்குக் கொண்டுவிட; புயல் சற்று ஓயட்டுமே!" என்றான் ஸ்வரூபன்.

"ஸ்வரூப்! எது வந்து நேரினும் என்னை நீ அக்கரைக்கு அழைத்துச் செல்" என்று கூறி வாதாஸி ஸ்வரூபனது முகத்தையே நோக்கினாள்.

"பைத்தியமே! இந்தக் கடும் புயற்காற்று மழையில் நதியைக் கடப்பது கஷ்டம். படகு சுழலில் சிக்கிக்கொண்டு விட்டால் ஸர்வநாசம். நீ இங்கேயே இரு! நான் சாமான்களை அவர்களிடம் சேர்த்துவிடுகிறேன்; பயப்படாதே" என்றான் ஸ்வரூபன்.

"அது முடியாது, ஸ்வரூப்! எனக்காக நீ உயிரைத் துறக்க வேண்டாம். நானும் உன்னுடன் வருகிறேன் வா... தாமதம் செய்யவேண்டாம். இன்னும் இருட்டிக்கொண்டு வருகிறது" என்றாள் வாதாஸி.

"ஆனால் நீ துணிந்துவிட்டாயா? சரி புறப்படு" என்று கூறி ஸ்வரூபனும் துறைக்குச் சென்று படகை அவிழ்த்தான். இருவரும் அதில் ஏறிக்கொண்டனர். படகு விடுவதற்குமுன் ஒருதரம் வாதாஸியைப் பருகிவிடுவதுபோல் ஸ்வரூபன் நோக்கினான். "வாதாஸி! நீ என் அருகிலேயே வந்து உட்காரு. ஒரு வேளை படகு நிலைக்காமல் கவிழ்ந்தால்...? இதோ உனக்காக யமனை நோக்கிச் செல்கிறேன். நீ மாத்திரம் எனக்கு உறுதி கொடுக்கமாட்டாயா, என்கண்ணே?" என்றான் அந்தத் தீரன். உண்மையாகவே ஸ்வரூபன் புயலோடு போட்டி போடவே செய்தான். "அதோ அலை வருகிறது. படகை இந்தப் பக்கம் திருப்பு" என்று உஷார்ப்படுத்திக்கொண்டே வந்தாள் அந்தத் தீரச்சிறுமியும். எதிரே முறைக்கும் மரணத்தினை, வாதாஸியின் அழகிய முகத்தைக் கவனிப்பதில் மறந்துபோனான் ஸ்வரூபன்.

காற்று இன்னும் மும்முரமாக அடிக்க ஆரம்பித்தது. எப்படியோ அக்கரையை அடைந்தனர்.

"ஸ்வரூப், நீ இங்கேயே இரு; நான் சாமான்களைச் சேர்த்துவிட்டுச் சடுதியில் திரும்பி விடுகிறேன். புயல் ஓய்ந்ததும் நாம் இருவரும் படகில் திரும்பிச் செல்வோம்" என்று கூறியவண்ணம் கூடையை தலையில் வைத்துக்கொண்டாள் வாதாஸி.

"உன்னை இந்த மாதிரி வேளையில் தனியாக விட்டு விட்டா நான் செல்வேன்? நீ வருகிற வரையில் இதே படகில் வருஷங்கள் நூறானாலும் காத்திருப்பேன்" என்று அவன் சொல்லும்போது முகத்தில் குறும்புச் சிரிப்பு விளையாட வாதாஸி, "ஸ்வரூப், ஒரு வேளை நான் வராமற் போனால்......?" என்றாள்.

"ஸ்வரூபன் உனக்காக ஆயுள் பரியந்தம் உட்கார்ந்து கொண்டிருப்பான். உன்னைத் தவிர வேறு யாருக்கும் இந்தப் படகை ஓட்டமாட்டான்" என்று ஓர் அபூர்வ உணர்ச்சியுடன் விளம்பினான். இந்த வசனங்கள் வாதாஸியின் மனத்

தையும் உடலையும் சிலிர்க்கச் செய்தன. அவள் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். "ஆனால் நீ படகிலேயே இரு. நான் ஓடி வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு அகன்றாள். அவள் சென்ற திசையையே கண் கொட்டாமல் ஸ்வரூபன் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் மனத்தில் எவ்வளவோ எண்ணங்கள் இறகு முளைத்துச் சென்றன. அவனுடைய நாபியிலிருந்து ஒரு பெருமூச்சு வெளிக்கிளம்பியது.

பொழுது சாய்ந்ததும் மேகங்கள் அடர்ந்து உலகமே இருட்டாகத் தோன்றியது. திக்கு திகந்தம் ஒன்றும் புரியாமல், எது ஆறு, எது வானம், எது கரை என்று சொல்ல முடியாதபடி இருந்தது. தூரத்தில் பிரவாகம் வரும் பேரொலி. வாதாஸி திரும்பிப் படகை வந்து அடைந்தாள்.

"ஸ்வரூப், இன்னும் மேகங்கள் அதிகமாகிக்கொண்டு வருகின்றனவே. நாம் திரும்பிப் போகமுடியுமா? ஆபத்து நேரிடுமோ?" என்றெல்லாம் சஞ்சலம் கொண்டாள்.


"என் கண்ணே! ஒரு பயமும் இல்லை உனக்கு, ஸ்வரூபன் இருக்கும்வரை. அதோ எதிரே கரை தெரிகிறது; பரவாயில்லை.. ...சற்றுத் துடுப்பைப் பலமாக ஓட்டினால் ஆபத்தினின்று தப்பி அக்கரையை அடையலாம்."

ஆனால் வாதாஸியின் முகத்தில் மட்டும் திகில் அகன்றபாடில்லை. அவள் படகின் ஒரு மூலையில் உட்கார்ந்த வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவளுடைய நிலைமையைப் பார்த்து, "வாதாஸி, என் அருகில் வந்து உட்காரு. அப்போதுதான் எனக்கு உத்ஸாஹம் வரும்" என்றான் ஸ்வரூபன். அவன் துடுப்பை வேகமாக ஓட்டும்போது அது மளக்கென்று உடைந்துவிட்டது. எதிரே குபுகுபு வென்று ஜலராசி பொங்கி வந்துகொண்டிருந்தது. படகும் நிலைக்காமல் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. இந்தப் பயங்கரத்தைக் கண்ட வாதாஸியின் சரீரம் அரசிலைபோல் நடுங்கிற்று. அப்போது ஸ்வரூபன், "வாதாஸி, நாம் போய்விட்டோம். யாராலும் நம்மைக் காப்பாற்ற முடியாது. அதோ சுழற்காற்று வந்துவிட்டது" என்று கூவினான்.

வாதாஸி எழுந்து நின்று, “பயப்படாதே, என் ஸ்வரூப்! சாவதற்குப் பயப்படாதே. நாம் இருவரும் கெட்டியாகக் கட்டிக்கொண்டு இறப்போம். இன்றுதான் நமக்குக் கல்யாண தினம். அலைகள் மங்களம் பாடுகின்றன. ஸ்வரூப்! என்னை அணைத்துக்கொள்” என்று கூறி வாதாஸி ஸ்வரூபனை இறுகத் தழுவிக்கொண்டு கண்களை மூடிக்கொண்டாள். ஸ்வரூபனும் அவளைக் காதலின் மிகுதியால் மார்போடு அணைத்துக் கொண்டான். துரும்புபோல் நடுங்கும் அவர்களுடைய படகு கடுவளியின் விசை தாளாமல் இச்சாமதி ஆற்றினுள் மூழ்கி மறைந்தது; அதனுடன் ஸ்வரூபனும், வாதாஸியும்....

* * *

இன்னும் வதன்கஞ்ஜிலுள்ளவர்கள் இந்த அதிசயத்தைப்பற்றிப் பேசிக்கொள்கிறார்கள். இவர்கள் மறைந்து போன இடத்திற்கு நேராக உள்ள துறைக்கு ‘ஸ்வரூப் காட்’ என்ற பெயர் வழங்குகிறது.



கற்பனையும் வாஸ்தவமும்

காஞ்சனமாலா தேவி

1

பரீக்ஷைகள் யாவும் முடிந்துவிடவே, கோடை விடுமுறையைக் கழிக்கக் கல்கத்தாவிலிருந்து புரிக்குப் பிரயாணமானேன். அவ்வூர்க் கடற்கரை அழகிற்குப் பேர்போனது. விசாலமான ஸமுத்ரதடத்தில் யதேச்சையாக உலாவலாம்; நம்மை யாரும் கேட்பார் இல்லை. மணலில் படுத்தவண்ணம் அங்கே ஒருநாள், கலாசாலை மாணவர்களுக்கு இயல்பான மனக்கோட்டைகளைக் கட்டிக்கொண்டிருந்தேன். எதிரே அலையின் நுரைகள் சிதறிப்போவதுபோல் என்னுடைய கற்பனை ஸ்ருஷ்டிகளும் இடந்தெரியாமல் அழிந்துபோய்க் கொண்டிருந்தன. பக்ஷி தன் இறகை மூடிக்கொள்வதுபோல் இருளும் கடற்கரையைக் கவிந்துகொள்ளலாயிற்று. பொழுதுபோவதே எனக்குத் தெரியவில்லை. பரீக்ஷையின் தொல்லையிலிருந்து விடுபட்ட எனக்குப் பொழுதைப்பற்றி என்ன அக்கரை? ஸமீபத்தில் ஒரு சவுக்கந்தோப்பு. அது இருளின் களஞ்சியமாக விளங்கியது.

அப்போது, "மாமா!...எங்கே மாமா இருக்கிறாய்?" என்று யாருடைய அழுகைக் குரலோ கேட்டது. நான் திடுக்கிட்டேன். குரலின் தீவ்ரத்வனியிலிருந்து அது ஒரு சிறுவனுடையதென்றே தோற்றியது எனக்கு. இருளைக் கீறிக்கொண்டு என்னுடைய கண்கள் நாற்றிசையும் கவனித்தன.

ஏதாவது புலப்பட்டால்தானே? வரவர ஸமுத்ர அலைகளின் இரைச்சல் அதிகரித்துக்கொண்டே வந்தது. அதனுடன் சவுக்கு மரங்களின் கிளைகளூடே காற்றுப் பாய்ந்து செல்வதால் உண்டாகும் 'உய்......ய்...ய்' என்ற சப்தம். அமாவாசைக் கறுக்கல். எனக்கே இயற்கையின் தோற்றமும் ஆரவாரமும் அச்சத்தைத் தரத்தக்கனவா யிருந்தனவென்றால் வழி தப்பி அலையும் அந்தச் சிறுவனுக்கு எப்படி இருக்கும்? மீண்டும் அதே அழுகைக்குரல்: "மாமா...நீ எங்கே?...ஊம் ...ம்...ம்..."

சப்தம் வரும் திக்கை அறியவிடாமல் காற்றின் அலையொன்று அதை எங்கோ அடித்துக்கொண்டு போயிற்று. இருளில் குருட்டு வழியாகச் சிறிது தூரம் சென்றேன். கடைசியில் ஒரு சவுக்கு மரத்தடியில் சிறுவன் ஒருவன் தேம்பித் தேம்பி அழுதவண்ணம், "மாமா மாமா" என்று கூவிக்கொண்டிருப்பது தெரிந்தது. பையன் என்னைக் கண்டு பேயோவென்று மருண்டு போகாதபடி மெதுவாகவே அவனை அணுகி, "பையா! அழாதே. நான் உன்னை உன் அம்மாவிடம் கொண்டு சேர்க்கிறேன். வா என்னோடே" என்று அவனைச் சாந்தப்படுத்தி அழைத்துச் சென்றேன். கடற்கரையைக் கடந்ததும் பெரிய ரஸ்தா. அங்கே பிரகாசமாக எரியும் மின்சார விளக்குக் கண்கூசும்படியாக இருந்தது.

அப்போது இரைக்க இரைக்க ஒருவர், "பன்னக், பன்னக்" என்று அலறிக்கொண்டே ஸமுத்ரத்தை நோக்கிச் செல்வது தெரிந்தது. அவர்தாம் அச் சிறுவனின் மாமா என்று கண்டுகொண்டேன். இதற்கிடையில் பையனும், "மாமா, மாமா, இதோ இருக்கிறேன்" என்று பதில் குரல் கொடுக்கவே அவர் எங்களை நெருங்கினார். தொலைந்துபோன அச்சிறுவனைக் கண்டதும் அவர் அவனைச் சேர்த்துக் கட்டிக் கொண்டார்.

சற்று முன் அல்லித்தண்டுபோல் இருந்த அந்தப் பையனுடைய கரங்களில் கொஞ்சம் கொஞ்சமாகச் சூடு உண்டாயிற்று. கடைசியாக உரியவரிடத்தில் சிறுவனைச் சேர்ப்பித்து விட்டோமென்ற பூரிப்பை அடைந்தேன். நாழிகை யாகி விட்டதால் பெரியவரிடம் விடை பெற்றுக்கொண்டு என் விடுதிக்குச் சென்றேன். போனதும் இரண்டு வாய் அள்ளிப்

போட்டுக்கொண்டு படுக்கையில் போய்ப் படுத்தேன். நித்ரா தேவி எனக்குப் பூர்ண அனுக்ரஹம் செய்தாள்.

2

கரபி!...என்ன அழகான பெயர்! நம் நாட்டில் இம் மாதிரிப் பெயர் யாராவது வைக்கிறார்களா?

ஜனசந்தடியற்ற அதே கடற்கரை. அன்று நான் மணலில் சாய்ந்துகொள்ளும்போது மணலில் மறைந்திருந்த ஒரு வஸ்துவின்மீது என் கை பட்டது. எடுத்துப் பார்க்கையில் அது ஒரு புஸ்தகம். இது என்ன விந்தை! மனுஷ்ய நடமாட்டம் இல்லாத இந்தப் பக்கத்தில் புஸ்தகத்தை யார் வைத்திருப்பார்கள்? சுற்றிலும் பார்த்தேன், யாராவது இருக்கிறார்களோ வென்று. ஆனால் கண்ணுக்கெட்டியவரையில் யாரையும் காணவில்லை. புஸ்தகம் நேர்த்தியான மொரோக்கோவில் பைண்டு செய்யப்பட்டிருந்தது.

'ஒளியும் நிழலும்' என்று அட்டையில் பொன் அக்ஷரங்களில் பொறிக்கப்பட்டிருந்தது. புஸ்தகத்தைத் திறந்து பார்க்கையில், "கரபி" என்ற கையெழுத்து என் கண்களைக் கவர்ந்தது. ஆஹா! என்ன நேர்த்தியான ஹஸ்தலேகனம்! ஸஹஜமாகப் பெண்மணிகள் உருண்டை வடிவமாகத்தான் எழுதுவது வழக்கம். ஆனால் இந்தப் பெண்மணி எழுதின அக்ஷரங்கள் யாவும் கூராக நிற்கும் ஈட்டியின் நினைவையே மூட்டின. கரபி என்ற பெயர் என் மனத்தைத் துளைத்துக்கொண்டேயிருந்தது. இவள் யாரோ? எந்த ஜாதியோ? ஒன்றும் தெரியவில்லை எனக்கு. புஸ்தகத்தின் சொந்தக்காரியைப்பற்றி என்னவெல்லாமோ அறிய என் மனம் சூன்யத்தைத் தாவ யத்தனித்தது. ஆனால் மனக்கொடி எதைப் பற்றி நிற்கும்? ஆதாரமெல்லாம் அந்த ஒரு புஸ்தகமே; கவித்வம் நிறைந்த அந்த ஒரு பெயரே! புஸ்தகத்திலுள்ள விஷயங்களைப் பார்க்க அதைப் புரட்டி இங்கோர் இதழ் அங்கோர் இதழாகப் படிக்கலானேன். அதிலுள்ள அபூர்வ காவியத் துணுக்குகளைக் கொண்டு அந்தக் கரபியை ஓர் உருவமாக மனத்திடை ஸ்ருஷ்டி செய்து கொள்ளலானேன். வாஸ்தவமான கரபிக்கும் என் கற்பனையில் கண்ட கரபிக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கலாம்; ஆனால் எனக்கொரு திருப்தி. என் கற்பனை படைத்திருக்கும்

'கரபி' அழிவற்றவள்; என்றென்றும் யௌவனம் வாய்ந்தவள்; நிகரற்ற அழகுடையவள்.

"மனப்பால் குடிக்கிறான் இவன்" என்று என்னை அசட்டை செய்யாதீர்கள். இம்மாதிரியான அனுபவம் ஒரு சிறுகதையில்தான் ஏற்படும் என்றும் எண்ணாதீர்கள். என் கற்பனை வாஸ்தவமாகவும் ஆகலாம். யார் கண்டார்கள்? எவனுக்குத் தன் ஸ்வப்னலோகம் வாஸ்தவ உலகுடன் ஒற்றுமைப்படுகிறதோ அவனுக்கே எல்லையற்ற இன்பம் கைகூடுகின்றது. என்னுடைய அதிர்ஷ்டத்தையும் பரீக்ஷித்துப் பார்த்துவிடுகிறேனே!

3

பூரிக் கடற்கரை. நான் 'கரபி'யின் புஸ்தகத்தைத் தன்மயமாகப் படித்துக்கொண்டிருந்தேன். அவளுடன் நேரில் ஸம்பாஷிப்பது போன்ற சுகத்தை அடைந்தேன். நீலக்கடலை அடிக்கடி நோக்கினேன். நெடுவானை அடிக்கடி அண்ணாந்து பார்த்தேன். "என்ன கண்டிட்டாய்?" என்று கேட்டால், "கரபியின் ஆழமான மனத்தைத்தான்" என்பேன். உங்களுக்கு இதெல்லாம் ஒரு பித்தனுடைய பிதற்றல்களாகவே தோற்றும். இருக்கட்டும்......

இப்படிப் பாவலோகத்தில் ஆழ்ந்திருக்கையில் பின்னால் தூரத்தில் யாரோ இருவர் பேசிக்கொண்டு வரும் சப்தம் கேட்டது. அதனுடன் என் கற்பனையின் கட்டிடமும் கலகலத்தது. திரும்பிப் பார்த்தேன். அன்று கடற்கரையில் சந்தித்த சிறுவனும் பெரியவரும் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்கள் என்னை நெருங்கியதும் நான் பெரியவருக்கு வந்தனம் செய்தேன். சிறுவன் பெரியவரைத் தொட்டு, "இவர்தான், மாமா, பீச்சில் என்னை உங்கிட்டே கொண்டுவிட்டார்" என்றான். இருவரும் மணலில் உட்கார்ந்தார்கள். நானும் பெரியவரும் வெகு நேரம்வரை பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். பையன் கிளிஞ்சில்கள் பொறுக்கிக்கொண்டிருந்தான்.

அந்திவானம் மங்கிக்கொண்டே வந்தது. நான் பெரியவருடன் பேசிக்கொண்டிருந்தபோதிலும் என் நினைவெல்லாம் கரபியின்மீதுதான். என் இன்பக்கனவிற்கு இப்படித் தடங்கல் ஏற்பட்டதைப்பற்றி எனக்குச் சற்று வருத்தந்தான். ஆனால் என்ன பண்ணுவது?

கற்பனை[illegible]

சிறுவன் ஜேபிநிறையக் கிளிஞ்சில்களை அடைத்துக் கொண்டு பெரியவர் அருகில் வந்து உட்கார்ந்து உடனே மணலில் வீடு கட்ட ஆரம்பித்துவிட்டான். [illegible] துறுப்பான முகம் அவனுக்கு! பரந்த [illegible] னுடைய ‘கரபி’யின் முகமும் இப்படித்தான் இருக்[illegible]

நேரமாகவே, பெரியவர் என்னைப் பார்த்துக் கைகூப்பி, “நீங்கள் எங்கள் விட்டுக்கு வரவேண்டும். உங்களைப் பார்க்க எல்லோரும் ஆவலாயிருக்கிறார்கள். பன்னக்கைக் காப்பாற்றினவருக்கு விருந்து உபசாரம் பண்ணவேண்டுமாம்” என்று கூறிச் சிறுவனைநோக்கி, “ஏண்டா பன்னக்! நீ கூப்பிட்டால் தான் இவர் வருவார்” என்றார். வெட்கத்தினால் சிறுவன் தன் தலையைத் தாழ்த்திக்கொண்டான்.

“இன்றைக்கு வேறோர் இடத்தில் அலுவல். மன்னிக்க வேண்டும். நாளைக்கு வருகிறேன், கட்டாயமாக” என்று தட்டிக் கழித்தேன். பெரியவரும் பையனும் என்னிடமிருந்து எப்படியோ உறுதிமொழி வாங்கிக்கொண்டு விடைபெற்றுச் சென்றனர். “அப்பாடா!” என்று பெருமூச்சு விட்டேன். பிராணவாயு நிரம்பிய கடற்காற்றை இருமடங்காக உட்கொண்டேன். என் மனப் பறவை கற்பனைக் கூட்டை இன்னும் பலமாகக் கட்ட ஆரம்பித்தது. சில்லென்று ஓர் அலை என் காலைத்தொடவே எனக்கு இகலோக ஸ்மரணை வந்தது. என்னெதிரே பையன் செய்துவைத்த மணற் கோட்டையை அலை எப்பொழுதோ அடித்துக்கொண்டு போய்விட்டது. பசி வயிற்றைக் கிண்டவே என் மனக்கூடும் சூன்யத்தில் கலந்தது.

அன்று, நான் தங்கியிருக்கும் விடுதிக்கு வந்ததும் என் அறைக்கு வெளியேயுள்ள தபால் பெட்டியில் எனக்காக மூன்று கடிதங்கள் காத்துக்கொண்டிருந்தன. முதலில் பிரித்த கடிதத்தில் அம்மா எனக்கு எழுதியிருந்தாள்.

“ஆசிர்வாதம்:

உனக்காக ஓர் அழகான பெண்ணைப் பார்த்து வைத்திருக்கிறேன். பெரிய இடம். வேண்டிய சீர் செய்யக்கூடியவர்கள். இந்தத் தடவையாவது என் வார்த்தையைத் தட்டாதிருப்பாய் என்று நம்புகிறேன். இப்படியெல்லாம் உடம்பைப் பாழாக்கிக்கொண்டு ஊர் திரியாதே? ஒரு நாட்டுப் பெண் இராது வீடு வெறிச்சென்று இருக்கிறது. இந்தக்

கண் மூடிக்கொள்ளுமுன் ஒரு பேரனை மடியில் எடுத்துக் கொஞ்சிப் பார்க்க வேண்டாமா? அப்பாவும் கடுதாசி போட்டிருக்கிருர். பிடிவாதம் பண்ணுமல் விடு வந்து சேர்.''

மிகுதியும் படிப்பதற்குள் எனக்கு அசிரத்தை ஏற்பட்டு விட்டது. அம்மாவின் யோசனைகள் எனக்குச் சற்றும் பிடிக்க வில்லை. மரப்பாச்சிப் பொம்மையை யார் கல்யாணம் செய்து கொள்வார்கள்? நானே இந்த மாதிரிப் பெண்களைச் சுத்த மாக வெறுப்பவன். அழகிய கவிதைகளைச் சொல்லிக் காதலை வெளிக் காட்டும்போது பேந்தப் பேந்த விழிக்கும் இந்தக் களிமண் மூளைகளை யார் வேண்டினுர்கள்?

சாப்பிட்டுவிட்டு மற்ற இரு கடிதங்களையும் படித்தேன். ஒரு கடிதம் அப்பா எழுதியது.

"உனக்கு ஆனிமீ 23-ஆம் தேதி கல்யாணம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்ச நாட்களே இருக்கின்றன. நாட்டுப் பெண்ணுக்கு நகை பண்ண வேண்டுமாம். உன் அக்காள் சொல்கிருள். சம்பந்தி உன் பேருக்கு அடுத்த வாரம் ரூ. 2000-க்குச் செக் ஒன்று அனுப்பி வைப்பார். அதைப் பெற்றுக்கொள். பணம் ஜாக்கிரதை. உனக்கு வேண்டியவற்றையும் வாங்கிக்கொள். அடுத்த வாரமே கல்கத்தாவுக்குத் திரும்பவேண்டும், தெரிகிறதா?''

"இதென்ன பெரிய மிரட்டலாயிருக்கிறதே. இந்த அப்பாமார்களே இப்படித்தான்: பையன்களுடன் கலந்து எதையும் செய்கிறதில்லை. கடைசியில் வருகிற தரித்திரத் தோடு யார் மன்ருடுவது? நான் பெண்ணைப் பார்க்க வேண்டாமா?'' என்றெல்லாம் அப்பாவை எனக்குள்ளேயே சபித்தேன்.

"சுத்த நாட்டுப்புறம்'' என்று முணு முணுத்துக் கொண்டே மூன்ருவது கடிதத்தின் கவரை உடைத்தேன். ஒரு போட்டோவும் கடிதமும் விழுந்தன. சட்டென்று படத்தை எடுத்துப் பார்த்தேன். பார்த்துக்கொண்டே இருந் தேன். கடிதம் யாருடையதென்றுகூட நான் கவனிக்க மறந்து விட்டேன். என்னுடைய மயக்கம் தெளிந்ததும் படித்துப் பார்த்தேன். நரேன் எழுதியிருந்தான். சிறு வயது முதற்

கொண்டு அவனும் நானும் அன்னியோன்னியமாகப் பழகிய வர்கள்.

"அடே, உன்பாடு ஜோர்தான். ரொக்கமாக இரண்டாயிரமும் ராணிபோலப் பெண்ணும். அவளுடைய போட்டோவை இதோடு வைத்து அனுப்பியிருக்கிறேன்; எங்களுக்கெல்லாம் திருப்திதான். வந்த லக்ஷ்மியை அலக்ஷியம் செய்யாதே. அப்படிச் செய்தால் கடைசியில் வருந்த நேரிடும்."

நரேனுவது அப்பெண்ணின் படத்தை அனுப்பினனே! பிழைத்தேன்... பெண் நான் பயந்தபடி அவலக்ஷணமல்ல ......ஆஹா! அந்தக் கண்கள் என்ன வசீகரமாயிருக்கின்றன! சிவப்போ மாநிறமோ?......அது எப்படித் தெரியும், போட்டோவில்? ஸ்டுடியோ வெளிச்சத்தில் எல்லாம் வெளுப்பாகவே தோன்றும். பரவாயில்லை. ஆனாலும் என் கற்பனை ஸுந்தரி 'கரபி' ஆகமாட்டாள் இவள்.

4

அடுத்த நாள் மாலை. என் கடற்கரை நண்பர் வீட்டிற்குச் செல்லப் புறப்பட்டேன். அன்று காலையில் நல்ல மழை பெய்ததால் பூமி குளிர்ந்து ரம்யமாக விளங்கியது. அவர் சொன்ன அடையாளத்தை வைத்துக்கொண்டு ஒரு பங்களாவினுள் நுழைந்தேன். வாயிற்புறத்தில் புஷ்பபாரத்தைத் தாங்க முடியாமல் கொடிகள் சாய்ந்து கிடந்தன. காலையில் பெய்த மழைநீரினுலும், மாலை மஞ்சள் வெயிலினுலும் இலைகளும் பூக்களும் பளபளத்தன. அங்குள்ள அழகிய 'பெர்ன்ஸ்' களிடையே நான் கண்டதென்ன? மங்கிய நிலவில் கவிஞன் கண்ட அழகுத் தெய்வத்தை அன்று பகல் ஒளியில் தெளிவாகக் கண்டு மயல் பொங்கி நின்றேன். இந்தப் பாவைதான் என் கனவில் வரும் 'கரபி'யோ? மனப்பறவைதான் ஒரு கட்டுக்கும் அடங்குவதில்லையே!

அதே ஸமயம், 'பிச்சு மாமா வந்திருக்கிருர்" என்று கத்திக்கொண்டே சிறுவன் உள்ளே ஓடிப்போய்த் தெரிவித்தான். மின்னல் மறைவதுபோல் இளநங்கையும் எங்கோ காணுமற் போய்விட்டாள். என் சுகஸ்வப்னத்தின் தலையில் இடி விழுந்தது.

புன்சிரிப்புடன் பெரியவர் வெளியே வந்து என்னை எதிர்கொண்டழைத்தார். ஹாலுக்குள் சாமான்கள் தாறுமாறுகச் சிதறிக் கிடந்தன. அவர்கள் எங்கோ பிரயாணத்திற்குச் செல்ல ஆயத்தமாவதுபோல் தோன்றிற்று. எனக்கு ஒரு மாதிரியாகிவிட்டது, நான் அவர்களைக் காண வரும்போது அவர்கள் போய்விடுகிறுர்களே என்று. பெரிய பெரிய 'ஸூட் கேஸ்'களில் வேலையாட்கள் 'லேபிள்' ஒட்டிக்கொண்டிருந்தனர்.

இதையெல்லாம் திடுக்கிட்டு நின்று நான் கவனிப்பதைப் பார்த்துப் பெரியவர், "நீங்கள் ஏன் இங்கேயே நிற்கிறீர்கள்? உள்ளே வாருங்கள்" என்று சொல்லி, "கரபீ, யார் வந்திருக்கிறுர் பார்!" என்று யாரையோ அழைத்தார்.

என் இருதயம் திக்குத்திக்கென்று அடித்துக்கொண்டது. எந்த ரூபவதி ஆவிர்ப்பாவமாகப் போகிறுளோ வென்று கவனிக்கச் சற்று என்னைச் சமாளித்துக்கொண்டு, "கரபீ என்பது யார்?" என்று கேட்டேன்.

"அவள்தான்...என்னுடைய தங்கையின் பெண். பன்னக் அவளுடைய தம்பி. அவள் சற்றுக் கூச்சப்படுபவள். நீங்கள் தாராளமாய் வரலாம்" என்றுர் அவர்.

ஸங்கோசம் நீங்கினவனுய் நானும், "ஆனால் நீங்கள் பூரியைவிட்டுப் போய்விடப் போகிறுற்போல் இருக்கிறதே?" என்றேன்.

"நான் சொல்ல மறந்து விட்டேன். நம் கரபிக்குக் கல்யாணம். பிள்ளையாண்டான் கல்கத்தாவில் படிக்கிறுன். கல்கத்தாவில்தான் நடக்கிறது. உங்களுக்குப் பஹரம்பூர் கிரிஜாநாத் ராய் தெரிந்திருக்குமென்று எண்ணுகிறேன். அவர் பிள்ளைக்குத்தான். ஒன்று மறந்தே போய்விட்டேன். உங்கள் பெயரையும் விலாசத்தையும் கேட்கவே இல்லை நான். எவ்வளவு மறதி பாருங்கள்" என்றுர்.

நான் என்ன பதில் சொல்லுவது? முதலில் கரபி இன்னவள் என்று தெரிந்ததும் எனக்கு வந்த பூரிப்பைச் சொல்லி முடியாது. ஆனால், "அவளுக்குக் கல்யாணம்" என்று அவர் சொல்லும்போது என் குதூகலமெல்லாம் பறந்தோடிவிட்டது. என்னைச் சுற்றி இருளைக் கண்டேன். 'சே. இனிமேல் அந்தப் புஸ்தகத்தை நாம் வைத்துக்கொள்ளக்

கூடாது. அவள் இனி யாருக்கோ வாழ்க்கைப்படப்போகிறுள்' என்ற உறுதிக்கு வந்துவிடும் ஸமயம், இதென்ன இன்னும் ஒரு வார்த்தை : — " பஹரம்பூர் கிரிஜாநாத் ராயின் பிள்ளைக்கு. கல்கத்தாவில் படிப்பவன்......"—கிரிஜாநாத்தின் பிள்ளை நான்தானே! அப்படியானுல் கரபி-என் கற்பனையில் கண்ட கரபி - இப்போது எனக்கு உரியவளா ? என்ஞல் நம்ப முடியவில்லை. எங்கேயாவது கற்பனை வாஸ்தவமாகுமா ? பூங்கொடி யிடையே நான் கண்ட பாவை என் வாழ்க்கைத் துணைவியா ? இதோ நிற்பவர் அவள் மாமாவா ? அபரிமித மான ஆனந்தத்திஞல் என் தலை சுழன்றது.

லக்ஷத்தில் ஒருவனுக்குத்தான் இம்மாதிரிக் குருட்டாந் தசையாகக் கற்பனை வாஸ்தவமாக மாறுகிறது!

உல்லாஸ வேளை

———: (o) :———

" எஸ். வி. வி " எழுதிய

ஹாஸ்ய நூல்

பேதர்வெயிட் காகிதம் : : உயரிய கலிகோ பைண்ட்

பொருளடக்கம்

விலை ரூ. 2—8—0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

தோட்டியை மணந்த அரசகுமாரி

தி. நா. சுப்பிரமணியன்
எழுதியவை

(சரித்திர சம்பந்தமான கதைகள்)

பொருளடக்கம்

பவழ மாலை

முதலிய கதைகள்

★

("ஹநுமான்" உதவி ஆசிரியர்)
பி. எம். கண்ணன்
எழுதியவை

பொருளடக்கம்

ஆண்டிக் காகிதம் :: கலிகோ பைண்ட்
ரூ. 1—6—0
(சாதா பைண்ட் :: ரூ. 1—2—0)

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை